


ஸ்டெல்லா புரூஸ்

# அகால மனிதன்

# அகால மனிதன்

ஸ்டெல்லாபுரூஸ்

கலைஞன் பதிப்பகம்
19 கண்ணதாசன் சாலை
தியாகராய நகர்
சென்னை – 600 017

★ சென்னை மாவட்ட கிளை நூலகம் ★
கொளத்தூர், சென்னை 99.

**Rs . 65 - 00**

**AKAALA MANITHAN**

by

STELLA BRUCE ©

First Edition : 2003

Published by
**KALAIGNAAN PATHIPAGAM**
19 Kannadhasan Salai
T.Nagar, Chennai - 600 017.

37451

5454657

Typeset at
Chitra Laser Printers
Chennai - 600 015.

Printed at
Sakthi Printers
Chennai - 600 021.

பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | அகால மனிதன் | 5 |
| 2. | ஜென்ம பூமி | 72 |
| 3. | அவர்களின் உலகம் | 100 |
| 4. | பூதம் | 116 |
| 5. | முதல் கதை | 133 |
| 6. | கடற்கரையை நோக்கி என்னுடைய நாட்கள் | 148 |
| 7. | செல்லத்துரை வாத்தியாரும் பம்பாய் கரை வேட்டியும் | 162 |
| 8. | ரத்னவேல் பாண்டியனும் மாரீஸ்வரனும் | 181 |
| 9. | வீடு திரும்பாதவன் | 195 |

# ஆசிரியரின் இதர நூல்கள்

| | | |
|---|---|---|
| கற்பனைச் சங்கிலிகள் | ஸ்டெல்லாபுரூஸ் | 30.00 |
| வெகு தூரத்தில் மனம் | ” | 30.00 |
| உள்ளே எரியும் சுடர் | ” | 32.00 |
| மீண்டும் அந்த ஞாபகங்கள் | ” | 36.00 |
| அது ஒரு நிலாக்காலம் | ” | 40.00 |
| தெருவில் ஒருவன் | ” | 25.00 |
| மூன்றாம் பிறைகள் | ” | 50.00 |
| அது வேறு மழைக்காலம் | ” | 32.00 |
| காதல் சிகரங்கள் | ” | 30.00 |
| எல்லா சாலைகளும் குற்றங்களை நோக்கி | ” | 34.00 |
| வித்தியாசமான காலம் | ” | 30.00 |
| சூரியன் மிக அருகில் | ” | 30.00 |
| என் வீட்டுப் பூக்கள் | ” | 35.00 |
| மாய நதிகள் | ” | 75.0 |

37451
6454657

# 1. அகால மனிதன்

முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு சென்னை வந்து திருவல்லிக்கேணியில் லாட்ஜ் அறை ஒன்றில் தங்கியிருந்த நேரத்தில் நாதமுனி அய்யர் எனக்கு அறிமுகமானார். மூன்று வருடங்கள் லாட்ஜ் வாழ்க்கைக்கு அனுபவமாகிப் போயிருந்த 1968-ல் நாதமுனி அய்யர் இரண்டு பேர் தங்கிக் கொள்கிற என்னுடைய அறைக்கு அறை நண்பராக வந்து சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது 68. சிறிய தனியார் நிறுவனம் ஒன்றில் கணக்குப் பிரிவில் பல வருடங்கள் பணியாற்றிவிட்டு சில வருடங்களுக்கு முன்பாக வேலையில் இருந்து ஓய்வு பெற்றிருந்த நாதமுனி அய்யருக்கு ஒரு மகனும் இரண்டு மகள்களும் கல்யாணமாகி அவரவர் குடும்பத்துடன் சென்னையிலேயே வேறு வேறு பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். நாதமுனி அய்யரின் மனைவி ஐந்து வருடங்களுக்கு முன்பு காலமாகிவிட்டிருந்தார்.

தொடர்ந்து இரண்டு வருடங்கள் மாநிலக் கல்லூரியில் முதுகலைப் படிப்புப் படித்துக்கொண்டிருந்த புகழேந்தி என்ற இளைஞர்தான் அதுவரை எனக்கு லாட்ஜில் அறை நண்பராக இருந்தார். படிப்பு முடிந்து புகழேந்தி அவருடைய சொந்த ஊரான பட்டுக்கோட்டைக்குச் சென்றுவிட்டபின், அந்த இடத்திற்குத்தான் நாதமுனி அய்யர் வந்து சேர்ந்தார். அப்போது 27 வயது நிரம்பிய இளைஞனாக இருந்த எனக்கு எழுபது வயதை நெருங்கிக் கொண்டிருந்த மனிதர் அறை நண்பராக வந்தது கொஞ்சம் வினோதமாக இருந்தது.

இத்தனைக்கும் இளம் வயதிற்கு உரிய கட்டுப்பாடு இல்லாத, காலக்கெடுபிடிகள் எதுவும் அற்ற உல்லாசமான

வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கும் சராசரி இளைஞன் கிடையாது நான். இளம் வயதுக்கு உட்பட்டு வராத தீவிர ஒழுங்கு, பிசகுகள் இல்லாத ஒரு நியதி - என்னுடைய அன்றாட லாட்ஜ் அறை வாழ்க்கையிலும் கச்சிதமாக அமைந்திருக்கும். இளைஞர்களுடன் இணைந்து கொண்டு சாலைகளில் சுற்றித் திரிகிற எந்தப் பருவ நடைமுறையும் கிடையாது என்னிடம். ஆனாலும் இளைஞராக இல்லாத நாதமுனி அய்யர் அறை நண்பராக வந்து சேர்ந்தது எனக்கு ஓர் 'அறைமுரண்பாடாக' இருந்தது.

அது 1968-ஆம் வருடத்தின் அக்டோபர் மாதத்து முதல் வாரம். நாதமுனி அய்யரின் 35 வயது நிரம்பிய மகன் தியாக ராஜன், லாட்ஜ் மானேஜரிடம் இரண்டு மாத வாடகையை அட்வான்ஸாகக் கொடுத்துவிட்டு நாதமுனி அய்யரை என்னுடைய அறைக்கு அழைத்து வந்து அறிமுகம் செய்து வைத்தபின் மரபுக்காக என்னுடன் சில நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தார். பிறகு ''என் ஃபாதரை கொஞ்சம் பார்த்துக் கோங்கோ...'' என்று சொல்லி விடை பெற்றுச் சென்றார். அது கொஞ்சம் இருட்டத் தொடங்கியிருந்த சாயந்தர நேரம். இரண்டு பேர் தங்கிக் கொள்கிற அந்தச் சின்ன அறையில் மகன் கிளம்பிச் சென்றுவிட்ட பிறகு புதிதாக ஜெயில் அறைக்கு வந்து சேர்ந்த கைதியைப் போல நாதமுனி அய்யர் கனத்த தனிமை உணர்வோடு வெறிக்க வெறிக்கக் கூரையைப் பார்த்தபடி ரொம்ப அந்நியமாக உட்கார்ந்திருந்தார்.

என் அறைக்கு புது அறை நண்பராக வந்து சேர்பவர் ஓர் இளைஞராக இருக்கும் பட்சத்தில் அவர் வேலை பார்க்கும் இடம், அவரின் கல்வித் தகுதி, அவருடைய சொந்த ஊர் போன்ற விஷயங்களையெல்லாம் உடனே மிக இயல்பாக அவரிடம் விசாரித்து அந்தத் தடங்களில் சகஜமாக அமர்ந்து பேச்சை ஆரம்பித்துவிடலாம். அந்த இளைஞரும் அதே சகஜமான அறிமுகத்துடன் அவரைப் பற்றிய விபரங்களை



என்னிடம் பரிமாறிக்கொள்ள முடியும். அந்த இயல்பான பரிமாற்றம் நாதமுனி அய்யரோடு உடனே ஏற்பட சாத்தியம் இல்லாமல் இருந்தது. ஏதோ - ஒரு வேற்றுமையான சூழ்நிலையால், இந்த வயதில் நாதமுனி அய்யர் இப்படி லாட்ஜில் தங்குவதற்கு வந்திருக்கிறார். அவரிடம் போய் எந்தக் கேள்வியைக் கேட்க... முகத்தை எப்படி வைத்துக் கொண்டு கேட்க... அதனால் நாதமுனி அய்யரை உடனே நானாக எந்தக் கேள்வியும் கேட்காமல் பேசாமல் இருந்து விட்டேன். அவராகவும் உடனேயே அவரைப் பற்றின எந்த விபரங்களையும் என்னிடம் பேசிவிடவில்லை. நாட்கள் செல்லச் செல்லத்தான் அவராகவே அவரைப் பற்றிய, அவருடைய குடும்பத்தைப் பற்றிய சிற்சில விபரங்களை சின்னச் சின்ன பேச்சுக்களில் கொஞ்சம் கொஞ்சமாக அவ்வப்போது எனக்குத் தெரிவித்துக்கொண்டிருந்தார்.

## 2

நாதமுனி அய்யரின் மகன் தியாகராஜன் மனைவி யோடும் இரண்டு சிறு பெண் குழந்தைகளோடும் பழைய மாம்பலத்தில் சின்ன வாடகை வீடு ஒன்றில் வாழ்ந்து கொண்டிருந்தார். தியாகராஜன் பாரிமுனை அரண்மனைக்காரத் தெருவில் இருந்த வங்கி ஒன்றில் வேலை பார்த்து வந்தார். வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டிராத காலம் அது. வங்கி வேலையும், அந்த வேலையில் கிடைக்கும் சம்பளமும் பெரியதாகப் பேசப்படாத நேரம் அது. அதனால் நாதமுனி அய்யரின் மகன் தியாகராஜன் அப்போது நல்ல வசதியான பொருளாதாரத் தளத்தில் இருந்தார் என்று சொல்ல முடியாது. அவரின் மனைவியும் வேலை எதற்கும் செல்லாத ஒரு சாதாரண இல்லத்தரசி. அந்தக் காரணங்களால் அப்போது தியாகராஜன் மிக எளிமையான வாழ்வை வாழ்ந்து கொண் டிருந்த ஒரு கீழ்நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவராக மட்டுமே

இருந்தார். நாதமுனி அய்யர் அதையும் விட மிக மிக சாதாரணமான பொருளாதாரப் பின்னணிகளில் அவருடைய வாழ்வைக் கடந்து வந்தவர். இருந்தும் ஏதோ காரணங்களால் நாதமுனி அய்யருக்கு மகனோடும் மருமகளோடும் சேர்ந்து வாழ்ந்த வாழ்க்கை மனதிற்குக் கொஞ்சம் ஒவ்வாததாகப் போயிருந்தது.

அதுவும் மனைவி இறந்துவிட்ட பிறகு மகனின் குடும்பத்தோடு வாழ்ந்த வாழ்க்கை அவருக்குக் கசந்தே போய்விட்டது. ஒவ்வாத அந்த வாழ்க்கையின் சம்பவங் களையோ, அனுபவங்களையோ நாதமுனி அய்யர் எனக்கு விலாவாரியாக - விபரமாக எதையும் தெரிவித்துவிடவில்லை. நானும் விஸ்தாரமாகக் கேள்வி எதையும் அவரிடம் கேட்க வில்லை. பூடகமாக விஷயங்கள் தெரிந்துவிட்டபிறகு விலா வாரியான விபரங்கள் எதற்கு? இதோ இருக்கும் பழைய மாம்பலத்தில் மகன் குடும்பத்தோடு இருக்கின்றான். அவனுடன் இருக்காமல், எழுபது வயதை நெருங்கி விட்டிருக்கும் முதுமையில், மனைவியையும் இழந்துவிட்ட ஒரு மனிதர் திருவல்லிக்கேணியில் ஒரு லாட்ஜில் வந்து தங்கி இருக்கிறார்; அவரிடம் போய் எந்த விபரத்தை விசாரித்துக் கொண்டிருப்பது... அதற்கும் மேல் நாதமுனி அய்யரிடம் சின்ன விபரம் எதையும் விசாரிப்பதேகூட ஒரு துயரமாக இருந்தது எனக்கு. என்னதான் பரிவோடும் கனிவோடும் கேட்டால்கூட அது அவருடைய உள்மனசின் ஏதோ ஒரு காயத்தைக் கிளறுவதாகத்தானே இருக்கும்... அது மேலும் ஒரு வலி இல்லையா நாதமுனி அய்யருக்கு... மேலும் அதிக துக்க மில்லையா அவருக்கு அது...

நாதமுனி அய்யரின் உள் மனதில் வலியும் துக்கமும் இருந்தது அவருடைய இறுக்கமான வெளித் தோற்றத்தில் நன்றாகவே தெரிந்தது. இது இல்லாமல் மற்றொரு புதிய



கோணத்திலும் இறுக்கம் அவரிடம் லாட்ஜிற்கு வந்த புதிதில் அதிகமாகி இருந்தது. பல வெளியூர்களில் இருந்து வேலை தேடியும், அல்லது வேலை கிடைத்தும் சென்னை வருகின்ற இளைஞர்கள் மட்டுமே நிறைந்தது நான் தங்கியிருந்த லாட்ஜ். சென்னை திருவல்லிக்கேணியில் இருந்த எல்லா லாட்ஜ்களின் பொதுவான அம்சமும் இதுதான். சின்னச் சின்ன அறைகளை மாத வாடகைக்குத் தரும் இந்த லாட்ஜ்கள் எல்லாம் அநேக மாக இளைஞர்களின் உலகமாகவே இருந்தன. ரொம்ப அபூர்வமாக எப்போதாவது நடுத்தர வயதைக் கடந்த ஒரு சிலர்; அவர்கள் வேலை பார்த்துக்கொண்டிருக்கும் ஊர்களில் இருந்து திடீரென சென்னைக்கு மாற்றலாகிவிடும்போது, உடனே அவர்களால் அவர்களின் குடும்பத்தை அழைத்து வரமுடியாமல், தாங்கள் மட்டுமே கிளம்பி வரவேண்டிய சூழ்நிலையில் இரண்டு மூன்று மாதங்கள் இந்த மாதிரியான லாட்ஜ்களில் வந்து தங்கியிருந்துவிட்டுப் போவார்கள். மற்றபடி வயதானவர்கள் வந்து இப்படிப்பட்ட லாட்ஜ் அறைகளில் தங்குவது என்பது அரிய விஷயம்.

அந்தச் சூழ்நிலையில், எழுபது வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் நாதமுனி அய்யர், அதுவும் சென்னை நகரத்தைச் சேர்ந்தவர் வந்து இந்த லாட்ஜ் உலகத்தில் தங்கி இருக்கிறார் என்றால் - என்ன மாதிரியான விகற்ப சந்தர்ப்பமாக இருந்திருக்கும் அது... அந்த தர்மசங்கடத்தில் நாதமுனி அய்யர் நிறையவே இறுக்கமடைந்திருந்தார்... ஒருவிதமான கூச்சமும் இருந்தது அவரிடம். அதனால் அவர் லாட்ஜில் தங்கியிருந்த இளைஞர்கள் யாரோடும் எந்தப் பேச்சும் வைத்துக் கொள்ளாமல் ஒதுங்கியே இருந்தார். அதேபோல் - லாட்ஜில் இருந்த இளைஞர்களும் நாதமுனி அய்யரிடம் என்ன பேசுவது? எப்படிப் பேசுவது என்று தெரியாமல் அவரிடம் இருந்து அநேகமாக விலகியே இருந்தார்கள்...

## 3

நாதமுனி அய்யருக்கு இளைஞனான என்னிடம் பேசவும் பழகவும் கூச்சமும், ஒருவித தர்மசங்கடமும் ஆரம்பத்தில் மிக அதிகமாக இருந்தது. 'அறை நண்பன்' என்ற தவிர்க்க முடியாத சம்பிரதாயத்திற்காக மரபு சார்ந்த சின்னச் சின்னப் பேச்சுக்களை என்னிடம் அவர் அவ்வப்போது வைத்துக் கொண்டிருந்தார். நான் சாப்பிட்டாயிற்றா என்று கேட்பார். எங்கே சாப்பிட்டேன் என்று விசாரிப்பார். அப்போதும் நான் காலையில் தினமும் 'ஹிண்டு' பேப்பர் வாங்குவேன். பேப்பரை நான் காலையில் படித்து முடித்து மேஜையில் அதை வைத்துவிட்டால்கூட நாதமுனி அய்யர் இயல்பாக எடுத்து என் பேப்பரைப் படிக்க ஆரம்பித்துவிடமாட்டார். மரியாதைக்கும் பணிவுக்கும் உரிய தேர்ந்தெடுத்த வார்த்தைகளால் என்னிடம் அனுமதி கேட்டு வாங்கித்தான் என் பேப்பரை அவர் படிப்பார்.

என் அறைக்கு வந்து சேர்ந்து கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் ஆனபிறகுதான் பேப்பரை என்னிடம் கேட்டு வாங்காமல், அவராகவே இயல்பாக எடுத்துப் படிக்கின்ற சகஜநிலைக்கு நாதமுனி அய்யர் வந்தார். மற்றபடி - என்னுடைய சொந்த ஊர் எது? என்ன வேலையாக சென்னை வந்து லாட்ஜில் தங்கியிருக்கிறேன் போன்ற தகவல்களையெல்லாம் மேலும் ஒருசில வாரங்கள் சென்ற பின்தான் நாதமுனி அய்யர் சிறிது சிறிதாக என்னிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார். இத்தனைக்கும் அவருடைய இறுக்கத்தை அகற்ற அவர் வந்து சேர்ந்த சில நாட்களிலேயே நான் என்னுடைய இயல்பில் என்னால் இயன்றவரைக்கும் முயன்று பார்த்திருக்கிறேன். உதாரணத்திற்காக ஒரே ஒரு முயற்சியை மட்டும் இங்கே சொல்கிறேன்.



என்னுடைய அந்த 27 வயது அனுபவத்தில் 'நாதமுனி' என்ற பெயரை மட்டும் அதற்கு முன் எங்கேயுமே கேள்விப் பட்டதில்லை. அதை நாதமுனி அய்யரிடம் அவர் வந்து சேர்ந்த ஏழெட்டுத் தினங்களில் சொன்னேன். அதைக் கேட்டதும் கொஞ்சம் சன்னமாக அவர் ஒரு சிரிப்பு சிரித்தார். பின் மெல்லிய குரலில் சொன்னார். பொதுவாக அய்யர்கள் நாதமுனி என்ற பெயரை வைப்பது கிடையாதாம். அது வைஷ்ணவர்களின் ஓர் ஆச்சாரியனின் பெயராம். அதனால் அந்தப் பெயரை அய்யங்கார்கள்தான் வைத்துக் கொள்வார்களாம். ஆனால் வைஷ்ணவர் அல்லாத இவருக்கு அந்தப் பெயரை வைத்ததற்குக் காரணம் அவருடைய அம்மாவாம். நாதமுனி அய்யரின் அம்மா அய்யங்கார் வகுப்பைச் சேர்ந்தவராம். அவளுக்கு ஆச்சாரியன் நாதமுனியிடம் மிகப் பெரிய மரியாதையும் பக்தியும் உண்டாம். அந்த ஈடுபாட்டில் மகனுக்கு அந்தப் பெயரை வைத்துவிட்டாளாம். நாதமுனி அய்யர் இவ்வளவு மட்டும்தான் சொன்னார். அதற்கு மேல் எதுவும் சொல்லவில்லை.

நானும் அதற்கு மேல் அவரை ஒன்றும் கேட்கவில்லை. ஆனால் ஒரு முக்கியமான கேள்வி மட்டும் எனக்குள் எழும்பி நின்றது. நாதமுனி அய்யரின் அப்பாவுக்கும், அய்யங்கார் பிரிவைச் சேர்ந்த அவரின் அம்மாவிற்கும் அந்தக் காலத்தில் எப்படிக் கல்யாணம் நடந்திருக்க முடியும்? ஏற்பாடு செய்த திருமணமாக நிச்சயம் இருக்க முடியாது. அப்படியானால் அந்தக் காலத்தில் அது காதல் கல்யாணமா? இந்தக் கேள்விக்கு எனக்கு நாதமுனி அய்யர் அறை நண்பராக இருந்த காலம் பூராவுமே பதில் தெரியாமல் போய்விட்டது.

கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் அவர் லாட்ஜில் என் அறை நண்பராக இருந்தார். இயல்பான என்னுடைய மிருதுவான சுபாவமும், மென்மையான கனிவான

பேச்சுகளும், என் கண்ணியமான நடைமுறைகளும் சேர்ந்து நாதமுனி அய்யரின் கூச்சத்தையும் இறுக்கத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக நாளடைவில் நீக்கிவிட்டது. வீட்டை விட்டு வந்து லாட்ஜ் அறையில் தங்கி இருக்கிறோம் என்ற சோக உணர்வும் சிறிது சிறிதாக அவரிடம் மறையத் தொடங்கியது. ஆனால் சோக உணர்வு முற்றிலுமாகவும் காணாமல் போய்விடவில்லை. முற்றிலுமாக காணாமல் போவது சாத்தியமும் இல்லை.

இருந்தாலும் சின்ன சோகத் தோற்றத்தோடேயே நாதமுனி அய்யர் லாட்ஜ் வாழ்க்கையின் வேறுவித அன்றாட நடைமுறைகளுக்குச் சிறிதும் ஒவ்வாத மனநிலையோடு அவரைப் பொருத்திக் கொள்ளவும் பழக்கப்படுத்திக் கொள்ளவும் நிதானமாக முன்வந்து கொண்டிருந்தார்.

## 4

என் அறை நண்பராக நாதமுனி அய்யர் லாட்ஜில் தங்கியிருந்த அந்த இரண்டு வருடங்களில் காலையில் ஆறரை மணி அளவில் தூக்கம் கலைந்து படுக்கையில் இருந்து எழுந்து விடுவார். பல் விளக்கி, நன்றாக முகம் கழுவி சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு மிக மெதுவாக நடந்து - சற்று தூரத்தில் - அவருடைய வயதுக்கு அது சற்று தூரம்தான் - இருக்கும் ரத்னா கேஃப் போய் ரொம்ப ரொம்பச் சூடாக - ரொம்ப ரொம்ப 'ஸ்ட்ராங்'காக ஒரு காப்பியைச் சாப்பிட்டு விடுவார். பக்கத்திலேயே வரிசையாக அடுத்தடுத்து ஹோட்டல்கள் இருந்தாலும் நாதமுனி அய்யர் வெகுதூரம் தள்ளி இருந்த ரத்னா கேஃப்தான் போவார். காப்பி அங்கேதான் மற்ற ஹோட்டல்களைவிட நல்ல சுவையாகவும், 'ஸ்ட்ராங்' காகவும் தருகிறான் என்பார்.

அதுவும் இல்லாமல் எல்லா ஹோட்டல்காரர்களும் விற்கிற அதே நாலணாவிற்குத்தான் ரத்னா கேஃப்காரர்களும் அவர்களின் காப்பிக்கு விலை வைத்திருந்தார்கள். மற்ற ஹோட்டல்காரர்களைவிட ஐந்து பைசா அதிகமாக இருந்தால் கூட ரத்னா கேஃப் போவதற்கு நாதமுனி அய்யருக்குச் சாத்தியம் இருந்திருக்காது. அந்த ஐந்து பைசாகூட அவருக்கு மிகவும் முக்கியமானது. அந்த அளவுக்கு சரியாகக் கணக்குப் பார்த்து பைசா பைசாவாக எண்ணி எண்ணிப் பார்த்துத்தான் நாதமுனி அய்யரின் மகன் தியாகராஜன் அவரின் செலவுகளுக்குப் பணம் கொடுத்து விட்டுப் போவார்.



ஒவ்வொரு மாதமும் இரண்டாம் தேதி அந்தத் தியாகராஜன் சாயந்தர நேரத்தில் லாட்ஜிற்கு வருவார். வந்ததும் நேராக லாட்ஜ் மானேஜரைப் பார்த்து நாதமுனி அய்யரின் அறை வாடகை முப்பது ரூபாயைக் கொடுத்து அதற்கான ரசீதை வாங்கிக் கொள்வார். அப்புறம்தான் வந்து அவரின் அப்பாவை தியாகராஜன் பார்ப்பார். கஷ்டப்பட்டு ஒரு மணி நேரமாவது உட்கார்ந்து நாதமுனி அய்யருடன் அவர் மிக மெல்லிய குரலில் பேசிக்கொண்டிருப்பார். அந்தப் பேச்சில் அந்நியோன்னியமோ ஓர் ஒட்டுதலோ இல்லாத வெறுமை பரந்த சூனியவெளிதான் இருக்கும். பேச வேண்டியதையெல்லாம் பேசிவிட்டு கடைசியில் தியாகராஜன் ஒரு மாதத்திற்குத் தினமும் காலையிலும் இரவிலும் சாப்பாடு சாப்பிடுவதற்கான 'கணபதி மெஸ்' என்ற ஓர் உணவு விடுதியின் அறுபது சாப்பாட்டிற்கான அறுபது டிக்கெட்டுகள் கொண்ட இரண்டு சின்ன புஸ்தகங்களை நாதமுனி அய்யரிடம் கொடுத்துவிட்டுப் புறப்பட்டுப் போவார். முப்பது டிக்கெட்டுகள் அடங்கியது ஒரு புஸ்தகம்.

அந்த 'கணபதி மெஸ்' எங்கள் லாட்ஜ் இருந்த தெருவிற்கு இரண்டு தெருக்கள் தள்ளி இருந்தது. அந்தக் காலகட்டத்திற்கு விலை குறைவான சாப்பாட்டை விநியோகம் செய்துகொண்டிருந்த மிகவும் சாதாரணமான மெஸ் அது.

நல்ல வேலையில் இல்லாத, வேலைக்கு முயற்சி செய் கொண்டிருக்கிற நிறைய இளைஞர்கள் கணபதி மெஸ்ஸிே தான் சாப்பிட்டு வந்தார்கள். சாப்பாடு அங்கே ரொம்ப சுமாராகத்தான் இருக்கும் என்று சொல்வார்கள்.

ஒவ்வொரு நேரமும் காசு கொடுத்துச் சாப் பிடுவதாக இருந்தால் கணபதி மெஸ்ஸில் ஒரு சாப்பாட்டின் விலை ஒரு ரூபாய் இருபத்தைந்து காசுகள். ஆனால் தினசரி காசு கொடுத்துச் சாப்பிடுபவர்கள் மிகவும் அரிதாகத்தான் இருப்பார்கள். பொதுவாக எல்லாருமே முப்பது டிக்கெட் டுகள் அடங்கிய புஸ்தகம் ஒன்றை மாத ஆரம்பத்தி வாங்கி வைத்துக் கொள்வார்கள். மொத்தமாக முப்பது டிக்கெட்டுகள் வாங்கிக் கொள்வதில் முப்பத்தி மூன்று ரூபாய் கொடுத்தால் போதும். அதாவது - தினசரி காசு கொடுத்துச் சாப்பிடுவதாக இருந்தால் ஒரு ரூபாய் இருபத்தைந்து காசுகள் கொடுக்க வேண்டிய அதே சாப்பாட்டுக்கு, மொத்தமாக பணம் கொடுத்து முப்பது டிக்கெட்டுகள் அடங்கிய புஸ்தகத்தை வாங்கிக் கொள்ளும்போது ஒரு ரூபாய் பத்து காசுகள் கொடுத்தால் போதும்.

சாப்பிடுபவருக்கு அதனால் மாதத்திற்கு நான்கு ரூபாய் ஐம்பது காசுகள் மிச்சம்! நாதமுனி அய்யருக்கு அவரின் மகன் மொத்தமாக அறுபது டிக்கெட்டுகளை வாங்கிக் கொடுத்து விடுவதில் ஒரு மாதத்தில் ஒன்பது ரூபாய் சுளையாக மிச்ச மாகிவிடுகிறது! 1968ஆம் வருடம் ஒன்பது ரூபாய் என்பது இன்றைய நாணய மதிப்பில் ஏறக்குறைய நூற்றி எண்பது ரூபாய். இன்று இந்த நூற்றி எண்பது ரூபாய் என்பது ஒரு கீழ்மட்ட நடுத்தர வர்க்கத்தினருக்கு எப்படி ஒரு பெரிய தொகையோ, அதேபோல் அன்றைக்கு நாதமுனி அய்யரின் மகன் தியாகராஜனுக்கு அந்த ஒன்பது ரூபாய் - மிகவும் பெரிய தொகை! -



இப்படி ஒன்பது ரூபாய் மிச்சம் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், மொத்தமாக அறுபது டிக்கெட்டுகளை வாங்கி வந்து நாதமுனி அய்யரின் கையில் தியாகராஜன் கொடுத்து விட்டுப் போய்விடுவதற்கு இன்னொரு காரணம், அவ்வப் போது பணம் கொடுப்பதற்காக வந்து வந்து அப்பாவின் முன்னால் நிற்க வேண்டியதில்லை அவர். ஆனால் மெனக் கெட்டு மெஸ்ஸுக்குப் போய் தியாகராஜன் சாப்பாட்டுக் கான அறுபது டிக்கெட்டுகளை வாங்கி வந்து தராமல், அதற் கான பணத்தை நாதமுனி அய்யரிடம் கொடுத்துவிட்டால் அவரே அவருக்கான சாப்பாட்டு டிக்கெட்டுகளை கணபதி மெஸ்ஸில் வாங்கிக் கொள்வாரே என்ற கேள்வி எனக்குள் எழுந்தது.

எதற்காக இந்தத் தியாகராஜன் கணபதி மெஸ்ஸுக்குப் போய்ச் சாப்பாட்டுக்கான டிக்கெட்டுகளை வாங்கி வந்து கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும்...? எனக்குள் எழுந்த இந்தக் கேள்விகள் நியாயமான கேள்விகள்தான். ஆனால் என் கேள்விகளுக்கான பதில்களைத் தெரிந்துகொள்ள நான் முயலவில்லை. தெரிந்துகொள்ள விரும்பவும் இல்லை...

## 5

தியாகராஜன் பொதுவாக நாதமுனி அய்யரிடம் பணமாக நிறையத் தருவது கிடையாது. அறை வாடகையை நேரிடையாக ஒவ்வொரு மாதமும் அவரே லாட்ஜ் மானே ஜரிடம் கொடுத்து அதற்கான ரசீதை வாங்கிக்கொள்வார். ஒரு மாதம் தினசரி இரண்டு வேளை சாப்பாட்டிற்கான அறுபது டிக்கெட்டுகளை மொத்தமாக அப்பாவின் கையில் கொடுத்து விடுவார். தினமும் காலையில் ஒரு காப்பி சாப்பிடவும் மாலையில் காப்பி சாப்பிடவும் ஒரு மாதத்திற்குத் தேவை யான பதினைந்து ரூபாயை நாதமுனி அய்யரிடம் கொடுத்து,

அதற்கு மேல் மிகத் தேவையான மற்ற தவிர்க்க முடியாத சில்லரைச் செலவுக்காக ஓர் ஐந்து ரூபாயையும் சேர்த்துக் கொடுத்துவிட்டுக் கிளம்பினால், தியாகராஜன் மறுபடியும் அடுத்த மாதம்தான் நாதமுனி அய்யரைப் பார்ப்பதற்கு வருவார்.

மீண்டும் இதே பணவிஷயத்தைச் செயல்படுத்தி விட்டுப் போவார். இடையில் எந்தக் காரணத்திற்காகவும் தியாகராஜன் அவருடைய அப்பாவைப் பார்க்க லாட்ஜிற்கு வரமாட்டார். ஏதாவது மிகவும் அவசியம் என்றால் நாதமுனி அய்யர்தான் பழைய மாம்பலத்தில் இருக்கும் மகனின் வீட்டுக்குப் போய் வருவார். ஆனால் நாதமுனி அய்யரின் இரண்டு மகள்களும் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை அவர்களின் அப்பாவைப் பார்த்துவிட்டுப் போவதற்காக சேர்ந்தே வருவார்கள். வரும்போது அவர்கள் இருவரும் கொஞ்சம் தயங்கியபடியே வருவார்கள். ஆண்கள் மட்டுமே தங்கியிருக்கும் லாட்ஜிற்குள் நுழைகிறோம் என்ற ஒரு சங்கோஜமான பிரக்ஞையுடன் இருவரும் வருவார்கள். வரும் போது இரண்டு மகள்களும் அவர்களின் அப்பாவிற்குப் பிடித்தமான பட்சணங்கள் சிலவற்றைச் செய்து எடுத்து வருவார்கள்.

நாதமுனி அய்யரின் மகள்கள் அவரைப் பார்க்க வருகிற நேரத்தில் நான் அறையில் இருந்தால் உடனே வெளியேறி பக்கத்து அறைகள் ஏதாவது ஒன்றில் போய் இருந்து கொள் வேன். அப்பாவும் பெண்களும் ஏதாவது அவர்களின் குடும்ப விஷயங்களை மனம் விட்டுப் பேசிக்கொண்டிருப்பார்கள். அதற்கு ஓர் இடையூறாக அங்கே நாம் இருப்பானேன் என்ற எண்ணம்தான் நான் அறையை விட்டு வெளியில் போவது... அதை உறுதி செய்வதுபோல அவர்களுடைய பேச்சில் பக்கத்து அறைகளுக்கும் கேட்கிறாற்போல அவர்களின் குடும்ப விவகாரம்தான் பிரதானமாக இருக்கும்.



அதுவும் நாதமுனி அய்யர் அவருடைய மகனையும் மருமகளையும் சிறிது கடுமையாகவே விமர்சனம் செய்து கொண்டிருப்பார். மகள்கள் வந்து பார்த்துவிட்டுப் போகிற அந்த நாட்களில் நாதமுனி அய்யர் இரண்டு விதமான மனோ பாவங்களில் சற்று தத்தளித்தபடி இருப்பார். மகள்களோடு மனம் திறந்து பேசிக்கொண்டிருந்ததாலும், அவர்கள் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போயிருந்த பட்சணங்களாலும் ஒரு மன தளத்தில் சற்று ஆறுதல் பெற்றவராகத் தோன்றுவார்.

அதே நேரம் மகள்களோடு பேசிக்கொண்டிருந்ததில் மனசளவில் மீண்டும் புத்துயிர் பெற்றுவிட்ட சில கோப தாபங்களின் வேகத்தால் மற்றொரு மனதளத்தில் பதட்ட முற்றவராகவும் - சஞ்சலங்களுக்கு ஆளாகியவராகவும் தெரிவார். தொடர்ந்து சில நாட்களுக்கு அதனால் நாதமுனி அய்யர் ஆரம்ப காலத்து நிசப்தமான இறுக்கத்தில் ஆழ்ந்து விடுவார். நான்கு அல்லது ஐந்து நாட்களுக்கு என்னுடன்கூடச் சரியாகப் பேசாமல் இருப்பார். அந்த நாட்களில் நாதமுனி அய்யரின் லாட்ஜ் வாழ்க்கையின் அன்றாட காரியங்களின் கால அட்டவணை யெல்லாம் சிறிது மாறிப்போய்விடும்.

பொதுவாக காலையில் சரியாக ஒன்பதரை மணிக்கு நாதமுனி அய்யர் சாப்பாடு சாப்பிடுவதற்காக மெதுவாக கிளம்பிப் போவார். அதே மாதிரி இரவில் சரியாக ஏழு மணிக்கு சாப்பிடக் கிளம்பிப் போவார். மகள்கள் வந்து பார்த்துவிட்டுப் போன அடுத்த சில நாட்களுக்கு அவர் காலையில் சாப்பிடக் கிளம்புகிறபோது மணி கிட்டத்தட்ட பத்தரை மணியாகிவிடும். இரவில் எட்டு மணியாகிவிடும். பொதுவாக இரவில் ஒன்பது மணி அளவில் படுத்துத் தூங்கி விடும் நாதமுனி அய்யர், மகள்கள் வந்துபோன நாட்களில் இரவு பத்து மணிக்கெல்லாம்கூட மொட்டை மாடியில் போய் தனியாக உட்கார்ந்திருப்பார்.

தினசரி மாலை கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் மெரீனாவில் போய் உட்கார்ந்து காற்று வாங்கிவிட்டு வருபவர், அந்த நாட்களில் சாயந்தர வேளைகளிலும் கால் மேல் கால் போட்டபடி மோட்டுவளையைப் பார்த்தவாறு படுத்துக் கிடப்பார். அப்போதெல்லாம் அவரைப் பார்ப்பதற்கு எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். சில நேரங்களில் சாப்பிடப் போகப் பிடிக்காமல்கூட நாதமுனி அய்யர் மோட்டு வளையைப் பார்த்தவாறு உட்கார்ந்திருப்பார். நான்தான் அவரை எழுந்து போய் சாப்பிட்டு விட்டு வாருங்கள் என்று சொல்லி சாப்பிட அனுப்புவேன். லாட்ஜ் வாழ்க்கையில் 'சாப்பிடுதல்' என்பது அங்கு தங்கியிருப்பவர்கள் ஒவ்வொருத் தரின் மனங்களிலும் மிகவும் அழுத்தமான - முக்கியமான பிரக்ஞையை ஆக்ரமித்துக் கொண்டிருக்கும்.

இத்தனைக்கும் - எங்கே வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் லாட்ஜ்களில் தங்கியிருக்கும் இளைஞர்கள் சாப்பிட்டுக் கொள்ளும் சுதந்திரம் கேட்பதற்கு ஆள் அற்றதாக முழுமை யாகவே இருந்தது. லாட்ஜ் இளைஞர்களும் அந்த சுதந்தி ரத்தை முழுமையாக அனுபவித்துக்கொண்டு இருப்பார்கள். சென்னை திருவல்லிக்கேணியில் தெருவிற்கு இரண்டு லாட்ஜ்கள் இருந்த மாதிரி, இரண்டு தெருக்களுக்கு ஒரு 'மெஸ்'ஸும் இருந்தது. எல்லா மெஸ்களிலும் தொடர்ந்து சாப்பிடும் வாடிக்கையாளர்கள் இருப்பார்கள். சில மெஸ்கள் பிராமண முதலாளிகளால் நடத்தப்பட்டன. சில மெஸ்கள் பிராமணர் அல்லாத முதலாளிகளால் நடத்தப்பட்டன. அதற்கு ஏற்றவாறு மெஸ்களின் வாடிக்கையாளர்களும் இருந்தார்கள். அநேகமாக பெரும்பான்மையான இளைஞர்கள் ஏதாவது குறிப்பிட்ட மெஸ்களில் சாப்பிட்டுக்கொள்வதையே வழக்கப் படுத்திக் கொள்வார்கள். இந்த வழக்கம் அவரவரின் பண



வசதி, அவரவரின் சுவை சார்ந்த அபிப்பிராயம் - இரண்டையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

அநேகமாக எல்லா இளைஞர்களுமே இந்த அடிப் படை வழக்கத்தையே நடைமுறைப்படுத்திக் கொண்டிருந் தாலும், சில இளைஞர்கள் குறிப்பிட்ட ஒரே மெஸ்ஸில் சாப்பிடாமல், அந்தந்த நேரம் எந்த மெஸ்ஸில் சாப்பிடத் தோன்றுகிறதோ அந்த மெஸ்ஸில் போய்ச் சாப்பிடுவார்கள். அதுவும் குறிப்பாக இரவு உணவு சாப்பிடுவதில்தான் நிறைய இளைஞர்கள் எந்த மெஸ் போகலாம் என்று யோசனை செய் வார்கள். பெரும்பான்மையான இளைஞர்கள் காலையில் டிபன் சாப்பிடுபவர்களாக இருப்பார்கள். அந்த டிபனை வழக்கமாகச் சாப்பிடுகிற மெஸ்ஸில் போய் எந்த மறுபரிசீல னையும் இல்லாமல் சாப்பிட்டுவிட்டுப் போய்க்கொண்டே இருப்பார்கள். யோசனையும் பரிசீலனையும் இரவுச் சாப் பாட்டின் போதுதான்.

இரவுச் சாப்பாட்டிற்குத்தான் இளைஞர்கள் சேர்ந்து சேர்ந்து நான்கு ஐந்து பேர்களாக சாவகாசமாகவும் சந்தோஷ மாகவும் தெருக்களில் சென்று கொண்டிருப்பார்கள். இந்த சந்தோஷம் வெளிப்படையான உற்சாகமாகவே மெஸ்களில் அதன் வாடிக்கையாள இளைஞர்களின் நடத்தைகளில் தெரியும். இந்த உற்சாகத்தின் குரல்கள் லாட்ஜ்களின் வராந்தாக்களில் இரவு ஏழரை மணியாகும்போதே பெரிதாகக் கேட்கத் தொடங்கிவிடும்.

'சாப்பிட்டாச்சா?' என்று ஒருத்தரை ஒருத்தர் கேட்டுக் கொண்டிருப்பார்கள். சாப்பிட எங்கே போகலாம் என்று விசாரித்துக்கொண்டிருப்பார்கள். "இன்னிக்கு உங்க மெஸ்ல என்ன காய் போட்டான்?" என்றும் யாராவது யாரையாவது தகவல் தெரிந்துகொள்ள கேள்வி கேட்டுக்கொண்டிருப் பார்கள். சோழன் மெஸ், பாண்டியன் மெஸ், கணபதி மெஸ்,

தஞ்சை மெஸ், மகாலஷ்மி மெஸ் என அணி அணியாக லாட்ஜ்களில் இருந்து இரவு நேரங்களில் இளைஞர்கள் கிளம்பிப்போவது திருவல்லிக்கேணியில் ஒரு குறிப்பிடத் தக்க காட்சியாக இருக்கும்.

எந்த இளைஞர் அணியிலும் சாராமல் தனித்த வயோதிகராகச் சாப்பிடப் போய் வந்து கொண்டிருந்தது நாதமுனி அய்யர் மட்டும்தான். கண் பார்வை செம்மையாக இருந்தாலும் முதுமையான தோஷத்தால் மிக நிதானமாக உற்று உற்றுப் பார்த்தவாறு இரவு நேரங்களில் மெதுவாக அவர் சாப்பிடுவதற்காக 'கணபதி மெஸ்' நோக்கி நடந்து போவது ஒரு துயரச் சித்திரம். அதுவும் காற்றும் மழையுமாக இருக்கும் இரவென்றால் நாதமுனி அய்யரின் லாட்ஜ் வாழ்க்கையின் துர்பாக்கியம் எப்படிப்பட்டதென்று விவரித்துத் தெரியவேண்டியதில்லை.

## 6

திருவல்லிக்கேணி லாட்ஜ் வாழ்க்கை முழுக்க காலை டிபனை ரத்னா கேஃப்பிலும், மதிய உணவை மௌண்ட் ரோடில் என் ஆபீசிற்கு அருகில் இருந்த சியாம்பிரசாத் ஹோட்டலிலும் சாப்பிடுவதை வழக்கமாக வைத்திருந்த நான், என்னுடைய இரவு உணவை திருவல்லிக்கேணி சைடோஜி தெருவில் இருந்த 'சாமாஜி மெஸ்'ஸில் மட்டுமே சாப்பிட்டு வந்தேன். 'சாமாஜி மெஸ்' மிகவும் குறிப்பிடத்தகுந்த முக்கியமான மெஸ். சுவை, சுகாதாரம், விலை போன்ற எல்லாவற்றிலும் முதல்தரமான மெஸ் - சாமாஜி மெஸ்.

அந்த மெஸ்ஸை இரண்டு பிராமண சகோதரர்கள் நடத்தி வந்தார்கள். நாதமுனி அய்யர் சாப்பிட்டுவந்த கணபதி மெஸ்ஸில் இருந்து மற்ற பல பெரும்பான்மையான மெஸ் களிலும் அப்போதைய சாப்பாட்டின் விலை ஒரு ரூபாய்



இருபத்தைந்து பைசா. ஒரு சில மெஸ்களில் சாப்பாட்டின் விலை ஒரு ரூபாய் ஐம்பது காசுகள். இந்த சைடோஜி தெருவில் இருந்த 'சாமாஜி மெஸ்'ஸில் மட்டும்தான் ஒரு சாப்பாட்டின் விலை ஒரு ரூபாய் எழுபத்தைந்து காசுகள். வேறு எந்த மெஸ்ஸிலும் சாப்பாட்டின் விலை இத்தனை கிடையாது. அந்த 1968-ல் ஒண்ணே முக்கால் ரூபாய் கொடுத்து ஒரு சாப்பாடு சாப்பிடுவது என்பது மிகவும் வசதி யான வேலையில் இருப்பவர்களுக்கு மட்டுமே சாத்தியம்.

அன்று அந்த ஒண்ணே முக்கால் ரூபாய் சாப்பாடு என்பது இன்று உள்ள விலைவாசிக்கு குறைந்தது ஐம்பது ரூபாய் வரை இருக்கலாம். ஆனால் ஐம்பது ரூபாய் கொடுத்து இன்று சாப்பிடும் ஹோட்டல்களில்கூட எந்த அளவுக்குச் சுத்தமும் அக்கறையும் பேணப்படும் என்பது தெரியாது. அன்று நான் இரவு உணவு சாப்பிட்டு வந்த சாமாஜி மெஸ் மிகத் துல்லியமான சுத்தத்தையும் சுகாதாரத்தையும் பேணிக் கடைப்பிடித்து வந்தது. உணவு தயாரிப்பதில் எத்தகைய அருமையான ருசியோடு சமைத்துப் பரிமாறுவதை அந்தப் பிராமண சகோதரர்கள் கவனமான சுபாவத்தைக் கொண் டிருந்தார்களோ, அதே அளவு மெஸ்ஸை அதிசுத்தமாக நடத்துவதிலும் கறாரான கொள்கையை வைத்திருந்தார்கள்.

பொதுவாக பல மெஸ்களிலும் சாப்பிடப்போகிற நேரங்களில் பெரிய குரலில் ரேடியோவில் சினிமாப் பாட்டு ஒலித்துக்கொண்டிருக்கும். சாப்பிட வந்த இளைஞர்களின் பேச்சுச் சப்தமும் சிரிப்புச் சப்தமும் அந்தச் சினிமாப் பாட்டை விடப் பெரியதாக இருக்கும். அந்த மெஸ்களின் தரையிலும் சுவர்களிலும் ஈரமும் அழுக்கும் பார்க்கும்போதே பளிச்செனத் தெரியும். சாப்பாட்டின் தரத்தையும் சுவையையும் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

இந்த மெஸ்களில் ஒன்று தவறாமல் சாப்பிடப் போகிறவரின் தலைக்கு மேல் எச்சில் இலைகள் நிரம்பிய

உலகத்தின் அத்தனை அழுக்கும் படிந்த 'பக்கெட்' ஒன்றை அழுக்குப் பிடித்த பையன் ஒருவன் தூக்கியபடி ஓடிக் கொண்டிருப்பான். நாம் சாப்பிட்டு முடிப்பதற்கு முன்பே நம் மேஜையில் 'டோக்கனை' வைத்துவிட்டு அடுத்து அந்த மேஜையில் சாப்பிடப் போகிறவர் நம் முதுகுக்குப் பின்னால் நின்று நண்பர் ஒருத்தருடன் பெருங்குரலில் அவர் வேலை பார்க்கும் ஆபீஸ் விவகாரங்கள் பற்றிக் கத்திப் பேசிக் கொண்டிருப்பார்... பார்த்தால் - அதெல்லாம் சாப்பிடும் இடம் போல் இருக்காது. இன்னொரு கொத்தவால் சாவடி போலத்தான் இருக்கும்.

சாமாஜி மெஸ்ஸைத் தவிர; நாதமுனி அய்யர் சாப்பிட்டு வந்த கணபதி மெஸ் வரை - எல்லா மெஸ்களின் காட்சிகளும் நடைமுறைகளும் இப்படியே இருக்கும். நிறைய தெருக்களில் நுழைகிறபோதே, அந்தத் தெருவில் ஒரு 'மெஸ்' இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டு விடலாம். சாம்பார் வரட்டும்; இங்கே ஒருத்தர் பொரியல் கேட்கிறார்; ஊறுகாய் வர வில்லை... இப்படி ஒரு சப்தம் ஒலிபெருக்கியில் ஒலிப்பது போல மெஸ் இருக்கும் அந்தத் தெரு பூராவும் கேட்கும்.

மெஸ் வாசலில் சாப்பிடப் போகிற, அல்லது சாப்பிட்டுவிட்ட - ஏழெட்டு இளைஞர்கள் எப்போது பார்த்தாலும் நின்று தீவிரமாகப் பேசுகிற மாதிரியான பாவனையைக் காட்டியபடி பக்கத்து வீடுகளில் இருக்கும் சின்ன வயதுப் பெண்களை நோட்டம் விட்டுக் கொண்டிருப் பார்கள். ஜாடையான சங்கேத மொழிகளில் பேசவும் செய்வார்கள்.

சில நேரங்களில் இதைப் பற்றிய புகார்களை பக்கத்து வீட்டுக்காரர்கள் மெஸ் முதலாளியிடம் கொண்டுபோவார்கள். 'மெஸ்'காரர்கள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் முழிப்பார்கள். புகார்களை ஏற்றுக்கொண்டு



சாப்பிட வரும் இளைஞர்களை அவர்களால் உடனே கறா ரான சொற்களால் எளிதாகக் கண்டித்துவிட முடியாது. இளை ஞர்கள் அவர்களுடைய வாடிக்கையாளர்கள். எந்த வியாபாரம் செய்பவர்களாக இருந்தாலும் வாடிக்கையாளர்களைப் பகைத்துக் கொண்டதாகக் கேள்விப்பட்டிருப்போமா...? இதனால் சில 'மெஸ்'காரர்கள் பக்கத்து வீட்டுக்காரர்களின் பகைமைக்கு உள்ளாகி விடுவார்கள்.

இம்மாதிரியான பிரச்னைகள் எல்லாம் கனவில்கூட நினைத்துப் பார்க்க முடியாத இடம் சாமாஜி மெஸ். ஒரு இளைஞன் அதன் வாசலில் நின்று எதிர் வீட்டையோ, பக்கத்து வீட்டையோ நோட்டம் விட்டுக் கொண்டிருப்பதை ஒருநாளும் பார்க்க முடியாது யாரும். 'சாமாஜி மெஸ்' இயங்கும் சப்தம் அதன் வாசலில் சின்னதாகக்கூடக் கேட்காது. அத்தனை பேர் சாப்பிடும் இடம் அப்படியொரு அமைதியோடு இயங்கும்.

இரவு எட்டு மணிக்கெல்லாம் பார்த்தால் சாமாஜி மெஸ் முழுக்க அதன் வாடிக்கையாளர்கள் முழு வீச்சில் சாப்பிட்டுக்கொண்டிருப்பார்கள். சாம்பார் என்றோ ரசம் என்றோ ஒரு கடுகளவு சப்தம் கேட்காது வெளியில். அது அது அதன் பிரகாரப்படி இம்மி பிசகாத வரிசையில் தானாக வந்துகொண்டிருக்கும். நிறைய மெஸ்களில் மாதிரி சாமாஜி மெஸ்ஸில் ரேடியோவில் சினிமாப் பாட்டெல்லாம் கேட்டுக் கொண்டிருக்காது. ஒரு சன்னமான பின்னணி இசைபோல டேப் ரெக்கார்டரில் இருந்து மெலிதாக வீணை இசையோ, வயலின் இசையோ எந்த நெருடலும் இல்லாமல் ஒலித்துக் கொண்டிருக்கும்.

அத்தனை பெரிய தெருவில் அப்படி ஒரு மெஸ் இருக்கிறதென்று யாராவது சொன்னால்தான் தெரியும். அதற்குள் வாடிக்கையாளர்கள் சாப்பிடப் போகும் சப்தமும்

இராது. சாப்பிட்டுவிட்டு வெளியே வரும் சப்தமும் இராது. யாராவது புது வாடிக்கையாளர் வாசலில் சும்மா நின்று கொண்டிருந்தால் சாமாஜி மெஸ் உரிமையாளர் அவரைக் கூப்பிட்டு உடனே 'எந்தக் காரணத்திற்காகவும் வாசலில் நிற்கக் கூடாது' என்பதைக் கறாராகச் சொல்லிவிடுவார். வாடிக்கையாளர் என்ற தாட்சண்யம் எல்லாம் சாமாஜி மெஸ்ஸில் கிடையாது. வருமானத்தைவிட ஒழுங்குதான் முக்கியம் அதன் முதலாளிக்கு.

வருமானத்திற்காக யார் வந்து கேட்டாலும் 'அட்வான்ஸாக' பணம் வாங்கிக்கொண்டு முப்பது டிக்கெட், அறுபது டிக்கெட் என்று சாமாஜி மெஸ் முதலாளிகள் சாப்பாட்டு டிக்கெட்டுகளைத் தூக்கிக் கொடுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். உடனே பணத்தை வாங்கி அடுக்குகிற வேகமெல்லாம் கிடையாது அவர்களிடம். ஒரு வாடிக்கையாளர் தொடர்ந்து ஏழெட்டு மாதங்கள் அங்கேயே தினமும் பணம் கொடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தபின் கேட்டால் மட்டும் அட்வான்ஸாகப் பணம் வாங்கிக்கொண்டு சாப்பாட்டு டிக்கெட்டுகளைக் கொடுப்பார்கள். அதுவும் முப்பது டிக்கெட்டுகளுக்கு மேல் தரமாட்டார்கள்.

இந்த கறார்தனங்கள் நிறைய இளைஞர்களுக்குச் சரிப்பட்டு வராது. சாமாஜி மெஸ்ஸை நடத்திவந்த பிராமண சகோதரர்களின் கறார்தனங்கள் இவை மட்டுமில்லை... இன்னும் சில கண்டிப்பான கறார்தனங்கள் அங்கு சாப்பிடப் போகும் வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தன. எந்தக் காரணத்தைக் கொண்டும் சாப்பிட வருகிறவர்கள் இலையில் சாதத்தைச் சாப்பிடாமல் வீணாக மிச்சம் வைத்து விட்டு எழுந்துவிடக் கூடாது. தம்ளரில் நீர் குடிக்கும்போது எச்சில் பண்ணி குடிக்கக்கூடாது. சாப்பிட அமர்பவர்கள் இலையைக் கழுவி தண்ணீரைத் தரையில் ஊற்றாமல் மேஜையில் மட்டுமே ஊற்ற வேண்டும். அப்போதுதான்



சாப்பிட்ட இலையை எடுக்க வரும் பணியாள் இலையை எடுத்ததும் மேஜையில் இருக்கும் நீரை அப்போதே துணியால் சுத்தம் செய்வது சாத்தியமாக இருக்கும்.

இலையைக் கழுவும் நீரை தரையில் கொட்டினால் அதைத் துடைப்பது என்பது வசதிப்படாத ஒன்று. அதனால் தரையெல்லாம் சொத சொதவென்று ஈரமாகி அசிங்கமாகி விடும். அப்புறம் சாமாஜி மெஸ்ஸுக்கும் மற்ற மெஸ்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும்... சைடோஜி தெருவில் இருந்த சாமாஜி மெஸ்ஸில் கெடுபிடியான சட்டதிட்டங்கள் இவைதான் என்றில்லை; இன்னும் பல இருந்தன. அத்தனையையும் சொல்லவேண்டியதில்லை. ஒரு பானைச் சோற்றுக்கு இரண்டு மூன்று பருக்கைகள் போதும் - பதம் பார்த்துச் சொல்ல...

சாமாஜி மெஸ்ஸின் இந்தக் கெடுபிடிகள் நிறைய இளைஞர்களுக்குச் சரிப்படாது. ஒரு சாப்பாடு சாப்பிடப்போகிற இடத்தில் இத்தனை சட்டதிட்டங்களா என்ற எரிச்சலில் பல இளைஞர்கள் அந்த மெஸ் பக்கம் தலை வைத்துக்கூட படுக்க மாட்டார்கள். சில இளைஞர்கள் இந்தக் கெடுபிடிகளை 'பிராமணத்தனமாக'ப் பார்த்து அங்கலாய்க்கக்கூடச் செய்வார்கள். ஆனால் அந்த இளைஞர்கள் ஒன்றை மறந்து விட்டார்கள். திருவல்லிக்கேணியில் இன்னும் எத்தனையோ பிராமணர்கள் நடத்தும் மெஸ்கள் இருந்தன. நாதமுனி அய்யர் சாப்பிடும் கணபதி மெஸ் ஒரு பிராமணர் நடத்துவதுதான். அந்த மெஸ்கள் எதிலும் எந்தக் கெடுபிடிகளும் கிடையாது. சட்டதிட்டங்களும் கிடையாது. அதே மாதிரி சுத்தமும் கிடையாது. சாமாஜி மெஸ் சாப்பாடு மாதிரியான சாப்பாடும் கிடையாது.

நிஜமாகவே அப்படி ஒரு சாப்பாடு - சாமாஜி 'மெஸ்' காரர்களின் சாப்பாடு. அந்தச் சாப்பாட்டின் சுவையை

நினைத்து சில பிராமணர் அல்லாத இளைஞர்கள் அவர்களின் அங்கலாய்ப்புகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு சட்ட திட்டங்களை மனதில் வைத்துக்கொள்ளாமல் சாமாஜி மெஸ்ஸுக்கு சாப்பிடப் போய்விடுவார்கள். அந்தச் சாப்பாட்டின் வேறு சில சிறப்புகளையும் மகிமைகளையும் சிறிது விளக்கமாகச் சொல்லிவிட்டால், அந்த சாமாஜி மெஸ் சாப்பாட்டுடன் நாதமுனி அய்யருக்கு ஏற்பட்ட ஓர் ஆற்றாமைமிக்க தொடர்பின் இரங்கத்தக்க சம்பவத்தைச் சொல்வதற்கு நேராகப் போய்விடலாம்...

## 7

திருவல்லிக்கேணி லாட்ஜ்களில் நிறைந்து கிடந்த இளைஞர்களின் மத்தியில் சாமாஜி மெஸ்ஸுக்கு ஒரு தனி கீர்த்தி இருந்தது. தனி மரியாதை இருந்தது. நல்ல சம்பளம் கிடைக்கும் பெரிய வேலையில் இருப்பவர்களால்தான் தினமும் அங்கே சாப்பிட வசதிப்படும் என்பது முதல் காரணமென்றால், இரண்டாவது காரணம் சாமாஜி மெஸ்ஸுக்கே உரித்தான தனிச்சிறப்புப் பெற்ற அந்தச் சாப்பாடு. பணவசதி காரணமாக அங்கே சாப்பிட முடியாமல் இருந்தவர்களும் சரி; கெடுபிடிகளால் அங்கே சாப்பிடப் போகப் பிடிக்காமல் இருந்தவர்களும் சரி - சாமாஜி மெஸ்ஸில் சாப்பிடுபவர்களிடம் கிட்டத்தட்ட தினமும்கூட அன்றையச் சாப்பாட்டில் என்னென்ன அயிட்டங்களெல்லாம் பரிமாறப்பட்டன என்பதைக் கேட்டு அறிந்து கொள்வதில் பெரிய ஆர்வம் கொண்டிருந்தார்கள்.

'உங்களுக்கு என்ன ஸார்; டெய்லி சாமாஜி மெஸ் சாப்பாடு...' என்று ஆதங்கத்தோடு சொல்லிக் கொள்ளும் பல இளைஞர்களை லாட்ஜ்களில் பார்க்கலாம். சாமாஜி மெஸ்ஸில் சாப்பிட முடியாத ஆதங்கமும், சாப்பிட



வேண்டும் என்ற ஆர்வமும் லாட்ஜ்களில் இருப்பவர்களிடம் மட்டும்தான் இருந்ததென்றால் - அது மிகவும் சிலாகிக்கக் கூடிய விஷயம் இல்லை.

திருவல்லிக்கேணி பகுதியில் வசித்து வந்த பல பிராமண குடும்பத்தைச் சேர்ந்த ஆண்களுக்கும் சாமாஜி மெஸ்ஸில் சாப்பிடுகிற ஆர்வம் அளவற்றதாக இருந்தது. எப்போதாவது அந்தக் குடும்பங்களில் பெண்கள் இல்லாமல் போக நேர்ந்தால், அல்லது வேறு அசௌகர்யங்கள் ஏற்பட்டு விட்டால் அந்த வீட்டு ஆண்கள் இரண்டொரு வேளைகள் வெளியில் சாப்பிட்டுக்கொள்ள வேண்டிய அவசியம் வரும் போது அவர்கள் சாமாஜி மெஸ்ஸுக்குத் தவிர வேறு எந்த மெஸ்ஸுக்கும் போகமாட்டார்கள். அப்படி இரண்டொரு வேளை சாமாஜி மெஸ்ஸில் சாப்பிடும் சாப்பாட்டை அவர்கள் ஆயுளுக்கும் நினைவில் வைத்திருப்பார்கள். அந்த ஞாபகத்தாலேயே மீண்டும் அங்கே சாப்பிடப்போகும் சந்தர்ப்பத்திற்காக அவர்கள் மனதிற்குள் காத்திருப்பார்கள். சாமாஜி மெஸ்ஸின் சாப்பாட்டு மகிமை அந்த மாதிரி...

மிகப் பலரின் அபிப்பிராயத்தோடு ஒத்துப்போகிற என்னுடைய அபிப்பிராயப்படியும் சொல்கிறேன். சாமாஜி மெஸ்ஸின் சாப்பாடு - ஒரு நடுத்தர பிராமணர்கள் குடும்பத்தின் அருமையான - இதமான கல்யாணச் சாப்பாடு போல இருக்கும். அதுவும் குறிப்பாக கல்யாணத்திற்கு முந்தின நாளின் ஜானவாசச் சாப்பாடுபோல இருக்கும்! முகூர்த்தம் அன்றைய சாப்பாடுகூட கொஞ்சம் அதிகபட்சமாக இருக்கும். கூட்டமும் அதிகமாக இருக்கும். ஜானவாசத்தின் பின் பரிமாறப்படும் சாப்பாடுதான் கச்சிதம்! அந்த ஜானவாசச் சாப்பாடுதான் எனக்குத் தினந்தோறும். தினமும் அந்த அருமையான ருசியான சூடான சாப்பாட்டைச் சாப்பிட்டுச் சாப்பிட்டு நானே ஒரு புது மாப்பிள்ளைபோல உடம்பால்

ஆகி விட்டிருந்தேன். இந்த சாமாஜி மெஸ்ஸுக்கு வேறு எந்த மெஸ்ஸுக்கும் இல்லாத வேறொரு மிகப் பெரிய பெருமையும் இருந்தது.

கல்யாணத்திற்கு முன்னால் லாட்ஜில் தங்கி இருக்கையில் சாமாஜி மெஸ்ஸில் சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்த சில இளைஞர்கள் கல்யாணத்திற்குப் பின், கல்யாணமான சில மாதங்கள் கழித்து எப்போதாவது மெரீனா கடற்கரைக்கு மனைவியுடன் வரும்போது ஞாபகமாக தங்களுடைய மனைவியுடன் ஆசையோடு சாமாஜி மெஸ்ஸுக்கு வந்து அன்றைய இரவுச் சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டு புதிய திருப்தியோடு போவார்கள்! நிஜமாக அன்று அவர்களுக்கு அது ஜானவாசச் சாப்பாடுதான்.

## 8

இத்தனை சிறப்புக்களைப் பெற்ற சாமாஜி மெஸ்ஸில் தினமும் இரவு சாப்பிடுகிற வழக்கம் கொண்டிருந்த எனக்கு வேறொரு வழக்கமும் இருந்தது. பொதுவாக இரவு எட்டு மணிக்கு சாப்பிடப்போகும் நான், அந்த நேரத்தில் லாட்ஜ் அறையில் என்னுடன் யாராவது நண்பர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தால் அவர்களையும் என்னுடன் சாப்பிடுவதற்காக 'கெஸ்ட்'டாக அழைத்துப் போவேன். லாட்ஜிலேயே தங்கியிருக்கும் நண்பர்களாக இருந்தால் அவர்களே 'மெஸ்'ஸில் சாப்பிடுகிறவர்கள்தான் என்பதால் அவர்களை 'கெஸ்ட்'டாக அழைத்துச் செல்ல வேண்டியதில்லை. அது அவசியமும் இல்லை. எனக்கு அப்போது லாட்ஜிற்கு வெளியில் குடும்பத்தோடு திருவல்லிக்கேணியில் வசித்து வந்த சில பிராமண இளைஞர்களும் நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள்.

நான் சாப்பிடக் கிளம்பும் எட்டு மணிக்கு இந்த நண்பர்களில் யாராவது லாட்ஜிற்கு வந்து என்னுடன்



பேசிக்கொண்டிருந்தால் - அவர்களை சாமாஜி மெஸ்ஸுக்கு என்னோடு சாப்பிடுவதற்காக அழைத்துப் போவேன். என்னைப் பொறுத்தவரை இது மிகவும் இயல்பான நட்புக்கு உரித்தானதாக இருக்கும். ஆனால் அந்தத் திருவல்லிக்கேணி பிராமண இளைஞர்களுக்கு இந்த சாமாஜி மெஸ் சாப்பாட்டுச் சம்பவம் இனிமையான அனுபவமாக இருக்கும். அந்த இளைஞர்களின் குடும்பங்களிலும் அது முக்கியத்வமான நிகழ்ச்சியாகப் பேசப்பட்டுக்கொண்டிருக்கும்.

இவ்வளவு முக்கியத்வம் பெற்ற சாமாஜி மெஸ்ஸில் நான் இரவுச் சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டு அறைக்குத் திரும்பும்போதெல்லாம் நாதமுனி அய்யர் என்னிடம் கேட்கும் முதல் கேள்வி : ''என்ன ராம்மோஹன் - இன்னைக்கி உங்க சாமாஜி மெஸ்ல என்ன சாம்பார் பண்ணியிருந்தான்?'' என்பதுதான். அப்புறம் என்ன காய், என்ன ரசம் என்ற கேள்விகளையும் அடுத்தடுத்து கேட்பார். சில நேரங்களில் என்ன சாம்பார் வைத்திருந்தார்கள் என்பது சாப்பிட்டுவிட்டு வந்த அந்த அரைமணி நேரத்தில் எனக்கு மறந்துகூடப் போய் விடும். என்னுடைய ஞாபகமறதி நாதமுனி அய்யருக்கு ஆச்சரியமாக இருக்கும்.

ஆனால் ஒரு விஷயம்; அவர்தான் சாமாஜி மெஸ்ஸில் என்ன சாம்பார், என்ன பொரியல் என்று கேட்டுக் கொண்டிருப்பாரே தவிர, திருப்பி நான் அவருடைய கணபதி மெஸ்ஸில் என்ன ரசம் என்ன கூட்டென்று நாதமுனி அய்யரைக் கேட்பது கிடையாது. நன்றாக இருப்பதைக் கேட்கலாம். நன்றாக இருக்காததை எதற்காகக் கேட்க வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆனால் நாதமுனி அய்யர் நான் கேட்காவிட்டாலும் தினசரி அவருடைய மெஸ்ஸில் சாப்பிட்டதை விசனத்துடன் சொல்லிக்கொண்டிருப்பார். சாம்பார் என்ற பெயரில் பச்சைத் தண்ணீரை

ஊற்றுகிறான் என்பார். ஊனை மோர் என்று சொல்லி முகத்தைச் சுளித்துக்கொள்வார்.

ஒருநாள் நாதமுனி அய்யர் எனக்குத் தெரியாத புதிய தகவல் ஒன்றைத் திடீரென வெளியிட்டார். இருபது வருடங்களுக்கு முன்னால் அவருடைய குடும்பம் திருவல்லிக்கேணியில்தான் இருந்ததாம். அப்போதே இந்த சாமாஜி மெஸ் இருந்ததாம். அந்தக் காலத்திலேயே அது மிகவும் பிரபலமானதுதானாம். அதையெல்லாம் சொன்னபோது அவருடைய ஞாபகம் அந்தக் காலகட்டத்திலேயே பல நிமிடங்கள் ஆழ்ந்துவிட்டாற்போல நாதமுனி அய்யரின் கண்கள் எங்கோ தூரத்தில் லயித்திருந்தன. அந்த மாதிரியான ஒரு தருணத்தில்தான் அவர் ரொம்பவும் சுருக்கமாகச் சொன்னார்.

இப்படி வயதான காலத்தில் திருவல்லிக்கேணி லாட்ஜ் ஒன்றில் வந்து தான் தனியாகத் தங்கி இருப்போம் என்பதை இருபது வருடத்திற்கு முன்பு இதே திருவல்லிக்கேணியில் குடும்பத்தோடு இருந்த நாளில் நாதமுனி அய்யர் நினைத்தே பார்த்தது கிடையாதாம். இதை அவர் கண்களை மூடியவாறு சொன்னார். அவரின் வார்த்தைகளில் கனத்த துயரம் பொதிந்திருப்பது தெரிந்தது. நான் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தேன். நாதமுனி அய்யரும் மேற்கொண்டு எதுவும் சொல்லாமல் மௌனமாகிவிட்டார். அவரின் மௌனத்திற்குள் பெரும் வெப்பம் கனன்று கொண்டிருப்பதை என்னால் உணர முடிந்தது.

## 9

**நா**தமுனி அய்யர் என்னுடைய அறை நண்பராகக் கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் என் அறையில் தங்கியிருந்தார் என்று ஆரம்பத்தில் சொல்லி இருந்தேன். எந்தக் காலமாற்றமும் இல்லாமல் அவருடைய இரண்டு வருட



லாட்ஜ் வாழ்க்கை நத்தையாக ஊர்ந்துகொண்டிருந்தது. ஏற்கனவே நான் சொன்ன மாதிரி காலையில் ஆறரை மணிக்கு மேல் ரத்னா கேஃப் போய் காப்பி சாப்பிட்டுவிட்டு வருவார். ஒன்பதரை மணியானதும் கணபதி மெஸ்ஸில் சாப்பாடு சாப்பிடப் போவார். சாப்பாடு முடிந்து வந்ததும் அறையில் உட்கார்ந்து என்னுடைய ஹிண்டு பேப்பரை எடுத்து முதல் பக்கத்தில் இருந்து கடைசிப் பக்கம் வரை ஒரு செய்தி விடாமல் படித்துக்கொண்டிருப்பார். பிறகு லாட்ஜின் வாசலில் காலை நீட்டி உட்கார்ந்தபடி தெருவை வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பார்.

பன்னிரெண்டு மணியில் இருந்து இரண்டு மணி வரை ஒரு தூக்கம் போடுவார். தூங்கி எழுந்து முந்தின நாள் துணிகளையெல்லாம் துவைத்துக் காயப் போட்ட பின் இரண்டாவதாக ஒரு முறை குளித்துவிட்டு, மூன்று மணியளவில் ரத்னா கேஃப் வரை நடந்து அன்றைய நாளின் இரண்டாவது காப்பியைக் குடித்துவிட்டு வருவார். மறுபடியும் நாலரை மணி வரை லாட்ஜ் வாசலில் உட்கார்ந்து அதே தெருவின் அதே வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருப்பார். பின் அப்படியே எழுந்து மெரீனா பீச் போய் ஆறரை மணிவரை இருந்து காற்று வாங்கிவிட்டு வருவார். வந்ததும் கை கால் முகம் கழுவி சரியாக மணி இரவு ஏழு ஆனதும் ஒரு சாப்பாட்டு டிக்கெட்டை எடுத்துப் பாக்கெட்டில் வைத்துக்கொண்டு கணபதி மெஸ்ஸுக்கு சாப்பிடக் கிளம்பிவிடுவார்.

நான் அறையில் இருந்தால் இரவு ஒன்பதரை மணி வரை பொதுவான விஷயங்கள் பற்றி என்னுடன் பேசிக்கொண்டிருப்பார் - அவ்வளவுதான்; படுக்கையை உதறி விரித்துப் படுத்துக்கொண்டு விடுவார். தூக்கம் வருவதற்கு பன்னிரெண்டு மணி, ஒரு மணி என்றுகூட ஆகும் என்பார்.

இதுதான் நாதமுனி அய்யரின் ஒருநாள் லாட்ஜ் வாழ்க்கைச் சக்கரம். லாட்ஜில் அவர் என்னைத்தவிர வேறு யாரோடும் ஒரு வார்த்தைகூடப் பேசுவது கிடையாது. சொல்லப்போனால் யாருடைய முகத்தையும் அவர் நிமிர்ந்து கூடப் பார்ப்பதில்லை. இதில் நான் வேறு, மூன்று மாதங் களுக்கு ஒரு முறை என்னுடைய ஊருக்குக் கிளம்பிச் சென்று விட்டால் திரும்பி வருவதற்கு ஒரு வாரமாவது ஆகும். பேசு வதற்கு இருந்த ஒரே ஆளாகிய நானும் ஒரு வாரம் இல்லாமல் போகும்போது நாதமுனி அய்யர் லாட்ஜில் மேலும் பெரிய பேசாமடந்தையாக இருந்து கொண்டிருப்பார். அதில் அவருக்கு இன்னொரு பிரச்னை என்னவென்றால் நான் ஊருக்குப் போய்விடும் அந்த ஒரு வாரத்திற்கு நாதமுனி அய்யருக்குப் படிப்பதற்கு ஹிண்டு பேப்பர் இல்லாமல் போய்விடும். ஏனென்றால் - நான் ஹிண்டு பேப்பருக்கு மாதாந்திர சந்தா கொடுத்து அறைக்கு பேப்பர் வரவழைக்கிற ஆள் இல்லை.

தினமும் காலையில் ஆறு மணிக்கு எழுந்து போய் டீ சாப்பிட்டுவிட்டு - வரும்போது அப்படியே 'ஹிண்டு' வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறவன். அதனால் நான் ஊருக்குப் போய்விடும்போது இங்கே நாதமுனி அய்யருக்கு பேப்பர் படிக்க முடியாமல் போய்விடுகிறது. அதை நினைக் கும்போது எனக்கும் சங்கடமாகத்தான் இருக்கும். ஆனால் அந்தச் சங்கடத்தைத் தவிர்ப்பதற்கும் வழியில்லை.

லாட்ஜில் இருந்த பல இளைஞர்களும் என்னைப் போலத்தான்... சரியாக அவர்களும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அவர்களின் ஊர்களுக்குப் போகமாட்டார்கள். தீபாவளி, பொங்கல் என வந்தால் அந்த நேரங்களில் தவறாமல் ஊருக்குக் கிளம்பிச் சென்றுவிடுவார்கள். அதைத் தவிர - எப்போதாவது மூன்று அல்லது நான்கு நாட்கள் என



சேர்ந்தாற்போல விடுமுறை வந்தால் - உடனே கிளம்பிப் போய்விடுவார்கள். திரும்பி வரும்போது அவர்களின் முகங்களில் மூன்று நாட்கள் வீட்டுச் சாப்பாடு சாப்பிட்டு விட்டு வந்திருக்கும் சந்தோஷம் தெரியும். இப்படிப்பட்ட தற்காலிக சந்தோஷத்தைத் தருகிற சந்தர்ப்பங்கள் நாதமுனி அய்யரின் லாட்ஜ் நாட்களிலும் உண்டு. ஆனால் அந்தச் சந்தர்ப்பங்களில் அவருக்கு அந்தத் தற்காலிக சந்தோஷம் கிடைத்ததா என்பதை அவரின் முகத்தில் இருந்து என்னால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

நாதமுனி அய்யர் - அவருடைய மனைவி; அவருடைய அப்பா அம்மா இவர்களின் திவசதிதி நாள் வரும்போது அதிகாலையில் கிளம்பி அவருடைய மகன் வீடு இருக்கும் மேற்கு மாம்பலத்திற்குப் போய்விட்டு வருவார். அத்தோடு சரி. லாட்ஜிற்கு அவர் வந்து சேர்ந்த வருடம் மட்டும் தீபாவளிக்கும் ஆவணி அவிட்டத்திற்கும் அவர் மேற்கு மாம்பலம் போய் வந்தார். இரண்டாவது வருஷம் திவசங் களுக்குப் போய் வந்ததோடு சரி. ஆவணி அவிட்டத்திற்கும், தீபாவளிக்கும் மேற்கு மாம்பலம் போகவில்லை அவர். காரணத்தைக் கொஞ்சம் தயக்கத்தோடுதான் கேட்டேன். ''தயவுபண்ணி - எதுவும் என்னைக் கேக்காதீங்கோ...'' என்று மட்டும் சொல்லி, அதற்கு மேல் எதுவும் சொல்லாமல் நாதமுனி அய்யர் நிசப்தமாக இருந்துவிட்டார். துருவித் துருவிக் கேட்பதற்கு எனக்கும் இஷ்டம் இல்லாததால் நானும் திருப்பி எதையும் விசாரிக்காமல் மௌனமாக இருந்து விட்டேன்.

## 10

நாதமுனி அய்யர் லாட்ஜிற்கு வந்து இரண்டாம் வருட தீபாவளி கழிந்து பத்து நாட்கள் ஆகி இருந்தன. சில நாட்களாகவே அவரின் முகம் ஒரு மாதிரியாக இருந்தது.

ஏதோவொரு ஞாபகத்தில் இருப்பவர் போலவே தெரிந்தார். சற்று ஒய்வற்றுப் போயே இருந்தார். தீபாவளிக்குக்கூட வீட்டுக்குப் போகாமல் லாட்ஜிலேயே இருந்து விட்டதில் மனம் அவருக்கு மிகவும் சஞ்சலத்திற்கு உள்ளாகி விட்டதோ என்ற வருத்தம் வந்தது எனக்கு! ஆனாலும் நாதமுனி அய்யருக்கு எந்தவிதத்தில் என்ன உதவியை என்னால் செய்ய முடியும் என்பதும் எனக்குத் தெரியவில்லை.

ஒருநாள் மாலை மணி ஆறே முக்கால் ஆகி இருந்தது. சிறிது நேரமாகவே என்னிடம் ஏதோ கேட்பதற்கு நினைக்கிறாற் போலவே இருந்தது நாதமுனி அய்யரின் ஒவ்வொரு அசைவும். ஆனால் கேட்பதற்குத் தயக்கமாகவும் இருந்ததால் சில நிமிடங்களுக்கு வெளியே போவதும் உள்ளே போவதுமாக நடந்து கொண்டிருந்தார். பின் ஒருவழியாக தயக்கம் அகன்று அவர் மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார்.

''மிஸ்டர் ராம்மோஹன்! நான் உங்களை ஒண்ணு கேட்டா தப்பா நெனைச்சுட மாட்டேளே...?''

''தப்பா நினைக்கிற அளவுக்கு என்ன கேட்டுடப் போறீங்க... நோ சான்ஸ்; நீங்க என்ன கேட்டாலும் தப்பா நெனைச்சிர மாட்டேன். எதுவா இருந்தாலும் பரவாயில்லை - கேளுங்க சார்...'' என்று நான் ஒருவித சந்தோஷத்துடனேயே சொன்னேன். அந்தக் கணம் எனக்குச் சந்தோஷமாகத் தான் இருந்தது. ஏதோ ஓர் உதவியை நாதமுனி அய்யருக்கு நான் செய்வதற்கான ஒரு கதவு சற்று திறப்பதாக உணர்ந்தது தான் என் சந்தோஷத்தின் காரணம்.

''ரெண்டு மூணு நாளாவே கேட்கணும்னு நினைச்சுண்டு இருந்தேன். ஆனா உங்க ஃப்ரண்ட்ஸ் யாராவது வந்து உங்களோட பேசிண்டே இருந்ததால அவா முன்னாடி கேக்க முடியலை. இன்னைக்கித்தான் அவா யாருமில்லை...''



''அப்ப அவங்க யாரும் வர்றதுக்கு முன்னாடி சொல்லிடுங்க...''

''மறுபடியும் சொல்லிடறேன் மிஸ்டர் ராம்மோஹன்! என்னை நீங்க தப்பா நெனைச்சிடப் படாது...'' - மீண்டும் நாதமுனி அய்யர் தயங்கினார்.

''பயப்படவே பயப்படாதீங்க... நீங்க என்னை என்ன கேட்டாலும் தப்பா நினைக்கவே மாட்டேன்... சொல்லுங்க...''

''இன்னைக்கி மட்டும் எனக்கு நீங்க ஒரு உபகாரம் பண்ணனும்...''

மறுபடியும் சிறிது தயங்கிவிட்டு நாதமுனி அய்யர் சொன்ன விஷயத்தை நான் என்னுடைய வார்த்தைகளில் சொல்கிறேன். தினமும் இரண்டு வேளையும் அவர் சாப்பிடுகிற கணபதி மெஸ்ஸின் சாப்பாட்டு டிக்கெட்டுகள் இரண்டை நாதமுனி அய்யர் எனக்குத் தந்துவிடுகிறார். அவ்வப்போது பணம் கொடுத்துச் சாப்பிடுவதாக இருந்தால் ஒண்ணேகால் ரூபாய் விலையான கணபதி மெஸ்ஸின் ஒரு சாப்பாடு மொத்தமாக மாத ஆரம்பத்தில் பணம் கொடுத்து டிக்கெட்டுகளாக வாங்கிக்கொண்டால் - அப்போது அதே சாப்பாட்டுக்கு ஒருத்தர் ஒரு ரூபாய் பத்துப் பைசா என்ற கணக்கில் கொடுத்தால் போதும்... அந்தக் கணக்கின்படி நாதமுனி அய்யர் எனக்குத் தருகிற அவரின் சாப்பாட்டு டிக்கெட்டுகள் இரண்டுக்கும் அவருக்கு நான் இரண்டு ரூபாய் இருபது பைசா கொடுத்தால் போதும்... சிறிது சங்கடம் பார்க்காமல் நான் அவர் தருகிற டிக்கெட்டுகளை வைத்துக் கொண்டு கணபதி மெஸ்ஸில் போய் இரண்டு வேளை சாப்பிட்டுக்கொள்ள வேண்டும்.

கணபதி மெஸ் சாப்பாடு எனக்குப் பிடிக்காது என்பதெல்லாம் நாதமுனி அய்யருக்கு நன்றாகத் தெரிந்த

விஷயம்தான். இருந்தாலும் அவருக்குச் செய்கிற ஓர் உபகாரமாக சிரமம் பார்க்காமல் அவரின் இந்த வேண்டுகோளை நான் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் நான் தருகிற இரண்டு ரூபாய் இருபது காசுகளை எடுத்துக் கொண்டு போய் அன்று இரவு புகழ் பெற்ற சாமாஜி மெஸ் சாப்பாட்டிற்கு அதன் விலையான ஒண்ணே முக்கால் ரூபாயைக் கொடுத்து நிம்மதியாகச் சாப்பிட்டுக் கொள்வார். சாமாஜி மெஸ்ஸில் சாப்பிடுவதற்கு வேறு வழி தெரியவில்லை. வேறு வழியும் இல்லை - அவருக்கு.

சாமாஜி மெஸ்ஸில் ஒரு வேளையாவது சாப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்பது நாதமுனி அய்யரின் நீண்ட நாள் ஆசை. இதுவரை அவருடைய இந்த ஆசை நிறைவேற வில்லை. நினைத்தவுடன் அங்கே போய்ச் சாப்பிட்டு விடுகிற பணவசதி இல்லாதவர் அவர். இந்த ஒரு தடவை அவர் என்னிடம் கேட்கிற உபகாரத்தை நான் செய்துவிட்டால் போதும். சாப்பிடுகிறவர்கள் அத்தனை பேரும் சாமாஜி மெஸ் சாப்பாடு பற்றி அப்படிச் சொல்கிறார்கள். ஒரு தடவை அந்தச் சாப்பாட்டை என் பெயரைச் சொல்லி இன்று சாப் பிட்டுக் கொள்வதாகக் கூறினார்.

இவை அத்தனையையும் நாதமுனி அய்யர் வேகமாகச் சொல்லி முடித்துவிடவில்லை. நிறுத்தி நிதானித்து சாம வேதம் சொல்கிற மாதிரி மெதுவாக இழுத்து இழுத்துத்தான் சொல்லி முடித்தார். சத்தியமாகச் சொல்கிறேன். நாதமுனி அய்யர் இப்படி ஒரு விஷயத்தைப் பெரிய உதவியாகக் கருதி என்னிடம் கேட்கப் போகிறார் என்பதை நான் கற்பனைகூடச் செய்து பார்த்திருக்கவில்லை. பல நாட்களாக மனதிற்குள் கசிந்து ஊறிப் போய்க் கிடந்த ஆதங்கத்தை ஏதோ ஒரு வேகத்தில் தயங்கித் தயங்கி வெளியிட்டு விட்டாரே தவிர, வெளியிட்டு விட்டதும் நாதமுனி அய்யருக்குச் சின்ன



பதட்டம் வந்து "ஒரு நிமிஷம் இருங்கோ - பாத்ரூம் போயிட்டு வந்துடறேன்..." என்று சொல்லி அவசரமாக அறையை விட்டு வெளியேறிப் போனார்.

எனக்கும் அந்த அவகாசம் ஒரு துணையாக இருந்தது. நாதமுனி அய்யர் பாத்ரூமில் இருந்து வருவதற்காகக் கண்களை மூடியவாறு காத்திருந்தேன். ஐப்பசி மாத வானிலை வெளியே இதமாக இருந்ததுபோலவே என் மனவானிலையும் ஒரு வித நெகிழ்வுடன் நாதமுனி அய்யருக்காகக் கனிந்து இதமாகிப் போயிருந்தது. ஒரு சுவையான உணவுக்காக எப்படி ஒரு மனிதமனம் உள்ளுக்குள் இம்சைப்பட்டிருக்கிறது என்ற நிஜம் என்னைச் சிறிது உலுக்கிவிட்டிருந்தது. எனக்கு மிகவும் சர்வசாதாரணமாக அன்றாட நிகழ்வாக இருக்கிற ஒரு சுவையான சாப்பாடு; என் அருகிலேயே இருக்கிற இன்னொரு மனிதருக்கு இன்றுவரை அடிவானம் போல கிடைத்துவிடாத தொலைக்காட்சியாகவே இருந்து கொண் டிருக்கிறது.

இந்த எண்ணம் என்னுடைய மனதில் கனமாகப் பரவி யதில் ஓர் விசனம் என் உணர்வுகளில் கவிந்தது. அந்தச் சுமையில் கண்களைத் திறக்காமலேயே சாய்ந்திருந்த என்னை "ராம்மோஹன்" - என்ற நாதமுனி அய்யரின் மெல்லிய குரல் கலைத்து கண்களைத் திறக்க வைத்தது. ஒரு வினாடி - என்னுடைய அந்த நிமிட உணர்வோடு நாதமுனி அய்யரின் முகத்தைப் பார்க்க முடியவில்லை. என் முகத்தைக் கவனித்து விட்டு நாதமுனி அய்யர் அவசரத்தோடும் ஒருவித அச்சத் தோடும் கேட்டார்: "நான் எதுவும் உங்களைத் தப்பா கேட்டுடலையே...?"

"நோ சார்... நோ..." என்று நானும் அவசரமாகச் சொன்னேன்.

நான் இப்படிச் சொன்ன நிமிஷமே நாதமுனி அய்யரின் முகத்தில் பளிச்சென ஒரு வெளிச்சம் வந்தது.

''அப்போ இருங்கோ - ரெண்டு டிக்கெட்டை இப்பவே உங்களுக்குத் தந்துடறேன்...'' - என்று சொல்லிக்கொண்டே அவர் அவரின் மேஜையின் டிராயரை வேகமாகத் திறக்கப் போனார்.

''இருங்க சார்; கொஞ்சம் இருங்க...'' என்றேன்.

அதற்குள் நாதமுனி அய்யர் அவரின் கணபதி மெஸ் சாப்பாட்டு டிக்கெட்டுகள் இரண்டைக் கிழித்து என்னிடம் நீட்டிவிட்டார். அதனால் சட்டென்று சற்றுப் பின்னால் நகர்ந்துகொண்டேன் நான்.

''முதல்ல உங்க சாப்பாட்டு டிக்கெட்டை அப்படியே உள்ளே வச்சிடுங்க. நான் அதைப் பணம் குடுத்து வாங்கி, அந்தப் பணத்தை எடுத்திட்டுப் போய் நீங்க சாமாஜி மெஸ்ல சாப்பிடறது என்கிறது என்னோட கேரக்டருக்கு; என்னோட மனோதர்மத்துக்கு சம்மதமில்லாத விஷயம்... ஸாரிங்க நாதமுனி சார்; உங்களோட சாப்பாட்டு டிக்கெட்டை என்னால வாங்கிக்க முடியாது. ஆனா உங்களை இன்னைக்கி சாப் பிடறதுக்கு சாமாஜி மெஸ்ஸுக்கு என்னால அழைச்சிட்டுப் போக முடியும்... வாங்க போகலாம்...''

என்னுடைய இந்த இயல்பான அழைப்பை நாதமுனி அய்யர் உடனே ஏற்றுக்கொள்ளாமல் மறுப்புத் தெரிவித்தார்.

''இல்லை மிஸ்டர் ராம்மோஹன்... ப்ளீஸ்; எனக்காக நீங்க செலவழிக்க வேண்டாம். என் ரெண்டு டிக்கெட்டை மட்டும் பெரிய மனசு பண்ணி நீங்க வாங்கிண்டா போறும். திருப்பியும் சொல்றேன் - எனக்காக நீங்க செலவழிக்கப் படாது... ஏற்கனவே உங்களுக்குச் செலவு ரொம்ப அதிகம்...''



''நோ சார்; நோ... எனக்கு இது செலவே கிடையாது. நீங்களே நிறைய நாள் பார்த்திருக்கிங்க; நைட் சாப்பாட்டுக்கு எத்தனையோ நாள் எத்தனையோ ஃப்ரண்ட்ஸை நான் சாமாஜி மெஸ்ஸுக்கு சாப்பிடறதுக்கு என்னோட 'கெஸ்ட்'டா அழைச் சிட்டுப் போயிருக்கேன். என்னோட அந்த ஃப்ரண்ட்ஸ் யாருமே சாமாஜி மெஸ்ஸுக்கு கெஸ்ட்டா அழைச்சிட்டுப் போகச் சொல்லி என்னைக் கேட்டது கிடையாது. நானேதான் ஆசைப்பட்டு அவுட் ஆஃப் ஃப்ரண்ட்ஷிப் - அவங்களை சாப்பிடறதுக்கு அழைச்சிட்டுப் போயிருக்கேன். ஆனா இப்ப நானே வெட்கப்படற விஷயம் என்னன்னு கேட்டீங்கன்னா - அந்த மாதிரி உங்களை ஒருநாள்கூட என்கூட சாப்பிடறதுக்கு அழைச்சிட்டுப் போலாம்னு எனக்குத் தோணினதே இல்லை என்கிறதுதான்... இப்ப நினைச்சிப் பார்க்கும்போது எனக்கே அவமானமாக்கூட இருக்கு... ஸோ நோ ப்ராப்ளம்; இன்னைக்கி இந்த அவமானத்தைத் துடைச்சிப் போட்டாத் தான் எனக்கே ஈஸியாக இருக்கும். மாட்டேன்னு சொல்லா தீங்க... என்னோட ரெண்டு வருட நண்பர் நீங்க. அதுக்கும் மேல என்னோட ரூம்மேட் நீங்க... இப்ப என்னோட கெஸ்ட்டா என்கூட சாப்பிடறதுக்கு நீங்களும் சாமாஜி மெஸ்ஸுக்கு வர்றீங்க... கிளம்புங்க போலாம்..''

இப்படி ஒரு திருப்பத்தை நாதமுனி அய்யர் எதிரே பாராததால் ஒருவிதமான மகிழ்வான அதிர்ச்சிக்கு உள்ளாகிப் போய் சற்று உதடுகள் துடிக்க நின்றுகொண்டிருந்தார். சன்ன மான கூச்சம் அவருடைய முகத்தில் முலாமிட்டு இருந்தது. மெல்லிய குரலில் சொன்னார் : ''ரெண்டு டிக்கெட்டை என் கிட்டே வாங்கிண்டாலே போறும்... ஐ வில் பி ஹேப்பி.. என்னால வீண் செலவு...''

''கெஸ்ட்டை சாப்பாடு குடுத்து உபச்சாரம் பண்றது வீண் செலவே கிடையாது... அதான் எனக்கு சந்தோஷம்... கிளம்புங்க... மணி ஏழரை ஆயிடுச்சி... ஏழு மணிக்கே

சாப்பிடப் போறவர் நீங்க... கொஞ்சங்கூட கூச்சமே படாதீங்க... வாங்க, போய் சாப்பிட்டுட்டு வந்திடலாம்...''

இவ்வளவு தூரம் நான் சொல்லியும் நாதமுனி அய்யர் அன்று இரவு சாமாஜி மெஸ்ஸுக்கு என்னுடன் சாப்பிடு வதற்குக் கூச்சம் விலகாமலேயேதான் வந்தார்.

## 11

அன்று இரவு சாமாஜி மெஸ் நோக்கி நாதமுனி அய்ய ருடன் நடந்துபோனதே எனக்கு வினோதமாக இருந்தது. என்னுடைய அறை நண்பராக அவர் இருக்கும் இரண்டு வருடங்களில் நானும் அவரும் எதற்காகவும் சேர்ந்து அதற்கு முன் ஒருநாளும் சேர்ந்து எங்கேயும் போனதில்லை. தெருவில் எதேச்சையாகவேகூட சேர்ந்து சிறிது தூரத்திற்குக்கூட நடந்த தில்லை. அதனால் அந்த நடையே புதியதாக இருந்தது. ரொம்ப நிதானமாக இருந்தது. எப்போதும் வேகமாக நடக் கின்ற வழக்கம் கொண்ட நான் அன்று நாதமுனி அய்யரின் மிக மிக வேகம் குறைவான மெதுவான நடைக்கேற்ப மிக மிக வேகம் குறைந்த நடையே நடக்க வேண்டியிருந்தது. ஒரு நிமிடம் - ஏதோ என்னுடைய தாத்தாவை அழைத்துப் போகிறாற்போல இருந்தது எனக்கு...

எத்தனையோ வருஷம் எத்தனையோ நாள் சாமாஜி மெஸ்ஸில் நான் தனியாகவும் சாப்பிட்டிருக்கிறேன். நண்பர் களோடு சேர்ந்தும் சாப்பிட்டிருக்கிறேன். அந்த மெஸ் சாப் பாடு அருமையான ஜானவாசச் சாப்பாடு என்று மொத்தமாக, பொதுவாகச் சொல்வேனே தவிர; ஒரு குறிப்பிட்ட நாளின் மறக்க முடியாத சாப்பாடு என தனியாக எந்த நாளையும் நான் சொல்லிக்கொண்டதும் இல்லை. விசேஷமான ஞாபகத்தில் வைத்துக்கொண்டதும் இல்லை. ஆனால் அன்று நாதமுனி அய்யரைச் சாப்பிட அழைத்துப்போன அந்த நாளையும் நான்



இன்றுவரை மறந்துவிடவில்லை. அன்றைக்கு அவருடன் சாமாஜி மெஸ்ஸில் சாப்பிட்ட சாப்பாட்டையும் மறந்து விடவில்லை.

இத்தனைக்கும் இடையில் முப்பத்தியோரு வருடங்கள் ஓடினது தெரியாமல் ஓடிப்போயிருக்கின்றன. நாதமுனி அய்யரோடு சாப்பிட்ட அன்றைய சாப்பாட்டின் ஒவ்வொரு அயிட்டமும் இப்போதும் என்னுடைய ஞாபகத்தில் சூடு பறந்து கொண்டிருக்கிறது! ஆறிப் போகாமல் சூடான பெட்டிக்குள் வைத்ததைப்போல அப்படியே புதியதாக இருக்கிறது.

வெங்காய சாம்பார், மைசூர் ரசம், உருளைக்கிழங்கு பொடிமாஸ், கத்தரிக்காய் கூட்டு - அதில் சின்னச் சின்னதாக முருங்கைக்காய் துண்டுகள் வேறு; மோர் சாதத்திற்கு தொட்டுக்கொள்ள பச்சைச் சுண்டைக்காய் தொக்கு; இரண்டு எண்ணெய் மினுக்க வறுத்த மோர் மிளகாய்...! நான் தயிர் இல்லாமல் சாப்பிடுவது கிடையாது என்பதால் எனக்கும் நாதமுனி அய்யருக்கும் ஆளுக்கொரு கிண்ணம் தயிர் - எக்ஸ்ட்ரா...! தனக்கு தயிர் வேண்டாம் என்று நாதமுனி அய்யர் அடக்கத்தோடு சொல்லிப்பார்த்தார். அதெப்படி? நான் தயிர் போட்டுக்கொள்ளும்போது, நான் அழைத்துப் போகிற என்னுடைய விருந்தாளிக்கும் சேர்த்துத்தானே நான் தயிருக்கான டோக்கனை வாங்குவேன்... நாதமுனி அய்யருக்கும் சேர்த்து நான் தயிர் டோக்கன் வாங்கியபோது அவர் மிக அதிகமாக சங்கோஜப்பட்டுப்போனார். மிக அதிகமாக பூரித்தும் போனார்.

ஒரு கிண்ணம் தயிரின் விலை - நாலணா. அதையும் சேர்க்கும்போது ஒரு சாப்பாட்டின் விலை இரண்டு ரூபாய் ஆகிவிடுகிறது - இன்றைய நாணய மதிப்பில் சொன்னால் - தோராயமாக அறுபது ரூபாய்...!

இன்று ஓர் ஏழை நண்பரை அறுபது ரூபாய் சாப்பாடு விற்கும் ஹோட்டலுக்கு அழைத்துப்போய் உட்கார வைத்தால் எப்படிப்பட்ட ஒரு பிரமிப்பில் அவர் உட்கார்ந்திருப்பாரோ - அதேமாதிரியான பிரமிப்பில்தான் நாதமுனி அய்யரும் அன்று சாமாஜி மெஸ்ஸில் என்னுடன் உட்கார்ந்திருந்தார். இன்னும் சரியாகச் சொன்னால் - ஒரு பெரிய இடத்துக் கல்யாண பந்தியில் வந்து அமர்ந்தவர்போல அவர் உட்கார்ந்திருந்தார். சாதாரணமாகவே என்னை சாமாஜி மெஸ்ஸில் சிறிது பிரத்யேகமாகக் கவனிப்பார்கள்.

அந்தக் கவனிப்பு அவ்வப்போது நான் அழைத்துப் போகிற என் கெஸ்ட்டுகளுக்கும் கிடைக்கும். அந்தக் கவனிப்பு அன்று நாதமுனி அய்யருக்கு இன்னும் ஒரு படி கூடுதலாகவே கிடைத்தது. அதற்குக் காரணம் அவருடைய முதுமை. பொதுவாக அத்தனை வயதானவர்கள் யாரும் அங்கே சாப்பிட வருவது கிடையாது. அதற்கும் மேல் இந்த வயதானவர் என்னுடைய கெஸ்ட்டாக வந்திருக்கிறார். என்னுடைய பங்கிற்கும் அதற்கு முன்னால் இப்படி ஒரு வயதானவரை நானும் சாப்பிட அழைத்துப் போனதில்லை.

இதெல்லாம் சேர்ந்து சாமாஜி மெஸ்ஸில் அன்று நாதமுனி அய்யரை ரொம்பப் பரிவோடும் கவனித்துக் கொண்டார்கள். மெஸ்ஸிற்குள் அவருடன் நுழைந்ததும் அதன் உரிமையாளர் நாதமுனி அய்யரை 'யார்' என்ற பாவனையில் என்னைப் பார்த்தார். என் நண்பர் என்று மட்டும் சொன்னேன். அறை நண்பர் எனச் சொல்லவில்லை.

அன்று நாதமுனி அய்யர் சாப்பிடுவதையே கவனித்துக் கொண்டிருந்ததால் நான் சரியாகவே சாப்பிடவில்லை. அதற்கும் சேர்த்து அவரே மிகச் சரியாகச் சாப்பிட்டார். வெங்காய சாம்பார் சாதம் இரண்டு முறை சாப்பிட்டார். மைசூர் ரசம் சாதமும் இரண்டு முறை சாப்பிட்டார். ஆனந்தமாகச் சாப்பிட்டார்; மிக அதிகமாகச் சாப்பிட்டார். மிகத் திருப்தியாகச் சாப்பிட்டார். அந்தப் பந்தியில் சாப்பிட்டுக்கொண்டிருந்த முப்பது பேர்களில் சாப்பிட்டு விட்டுக் கடைசியில் எழுந்தது நாதமுனி அய்யர்தான். எப்பவோ நான் சாப்பிட்டு முடித்து விட்டாலும் அவர் சாப்பிட்டு முடிக்கும் வரை எழுந்து கொள்ளாமல் அவர் பக்கத்திலேயே நான் உட்கார்ந்திருந்தேன். சாப்பிட்டு முடித்து நடந்து லாட்ஜ் போய் சேர்வதற்குள் நாதமுனி அய்யர் ஏழெட்டு ஏப்பங்கள் விட்டுவிட்டார்! சாமாஜி மெஸ் சாப்பாட்டை நிஜமாகவே ஒரு கல்யாணச் சாப்பாடுதான் என மனநிறைவுடன் புகழ்ந்தார். கண்டைக்காய் தொக்கு அப்படியே தன்னுடைய மனைவியின் கைபக்குவத்தைக் கொண்டிருந்தது என நினைவுகூர்ந்தார்.



## 12

நாதமுனி அய்யருக்கு வீட்டுச் சமையல் போன்ற ஒரு நல்ல சாப்பாட்டை வாங்கிக் கொடுத்துவிட்ட திருப்தியில் அவரோடு அன்று நீண்ட தெருக்களில் நடந்து லாட்ஜை அடைந்து அறையைத் திறந்து விளக்கு ஸ்விட்சைப் போட்டு என்னுடைய கட்டிலில் உட்கார்ந்தேன். நாதமுனி அய்யர் சட்டென பக்கத்தில் வந்து என் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டார். மிகவும் உணர்ச்சிவசப்பட்டிருந்ததில் அவரின் கைகள் லேசாக நடுங்கின. கண்களில் மெல்லிய நீர்ப்படலம் கலங்கிப் படிந்திருந்தது. வார்த்தைகளால் எதை எதையோ சொல்ல அவருடைய மனம் துடித்தாலும் சொல் எதுவும் நாதமுனி அய்யரின் தொண்டையைவிட்டு வெளிப்படவில்லை. கட்டுப்படுத்த முடியாமல் அவரின் கண்களில் இருந்து இரண்டு மூன்று சொட்டுக் கண்ணீர் கன்னங்களில் உதிர்ந்தது. நானும் பரிவுடன் அவருடைய கைகளைப் பிடித்துக் கொண்டேன்.

''எதுக்காக இவ்வளவு உணர்ச்சிவசப்படறீங்கன்னு தெரியலை...'' என்றேன் கனிவுடன்.

உடனே நாதமுனி அய்யர் அவரைக் கட்டுப்படுத்திக் கொண்டார். விருட்டென கண்ணீரைத் துடைத்தார். கனத்த பெருமூச்சு விட்டார். நன்றியுடன் என்னை நோக்கினார்.

''எப்படி உங்களுக்கு நன்றி சொல்றதுன்னே தெரியலை மிஸ்டர் ராம்மோஹன்... மெனி மெனி தேங்ஸ் ஃபார் யூ... நான் இன்னும் எத்தனை காலம் உயிரோடு இருப்பேனோ தெரியாது... இருக்குற வரைக்கும் உங்களையும் மறக்க மாட்டேன்; இன்னைக்கி நீங்க வாங்கித் தந்தேளே - இந்தச் சாப்பாட்டையும் மறக்கமாட்டேன்... என்ன ஜோரான சாப்பாடு; என்ன அருமையான சமையல்... ரொம்ப நாள் கழிச்சு ஒரு அருமையான சாப்பாடு சாப்பிட்டிருக்கேன் மிஸ்டர் ராம்மோஹன்... சாப்பிடச் சாப்பிட என் ஒய்ஃப்போட ஒவ்வொரு சமையலும் என்னோட ஞாபகத்தில வந்துடுத்து... சுண்டைக்காய் தொக்குல அப்படியே அவளோட கைபக்குவம் தெரிஞ்சது... ஒரு நிமிஷம் - அந்த சுண்டைக் காய் தொக்கை அவளேதான் பண்ணிருக்காளோ என்கிற சந்தேகமே வந்துடுத்து எனக்கு... ரியல்லி வெரி டேஸ்ட்டி... தினத்துக்கும் இப்படி ஒரு மங்களகரமான சாப்பாடு சாப்பிட றதுக்கு நிஜமாவே கொடுப்பினை வேணும் ராம்மோஹன்... மனுஷாளுக்கு இதெல்லாமேகூட ஒரு வரப்பிரசாதம்தான்னு நான் சொல்லுவேன்... இந்த வரப்பிரசாதம் எனக்குக் கிடைக்கலை பாருங்கோ...''

இந்த இடத்தில் நான் சிறிது குறுக்கிட்டேன். ''சாமாஜி மெஸ் சாப்பாடு ஒரு மாதிரியான சுத்தமான ஹோம்லி மீல்ஸ் தான்... நானும் ஒத்துக்கறேன். ஆனா அந்தச் சாப்பாட்டையே வரப்பிரசாதம் என்கிற பெரிய பெரிய வார்த்தைகள்ள சொல் லணுமான்னு தெரியலை...''



இதற்கு நாதமுனி அய்யர் மிகவும் அழுத்தமாகப் பதில் சொன்னார்: ''வரப்பிரசாதம்னு தாராளமா சொல்லலாம் ராம்மோஹன். இதெல்லாமே நாம் வாங்கி வர்ற வரம்தான்... பாருங்கோ - நான் வாங்கிண்டு வந்திருக்கும் வரத்தை... எழுபது வயசாறது எனக்கு; ஒவ்வொரு வேளை சாதத் துக்கும் எட்டுத் தெரு நடந்துபோய் அந்தக் கணபதி மெஸ்ல வெந்ததையும் வேகாததையும் போடறதைச் சாப்பிட்டுட்டு வந்துண்டிருக்க வேண்டியிருக்கு... என் தலையெழுத்து இல்லாம வேற என்ன இது? சொல்லுங்கோ... இப்படி லாட்ஜ்ல வந்து தங்கிண்டு மெஸ்ல சாப்பிட்டுண்டு இருக்குற வயசா ஆறது எனக்கு... நீங்க ஏதோ ஊர் விட்டு ஊர் வந்து சொந்த பிசினெஸ் பண்ணிண்டு இருக்கேள். கல்யாணம் பண்ணிண்டதும் லாட்ஜைக் காலி பண்ணிண்டு போயிடப் போறேள். இங்கே இருக்குற எல்லாருமே அதான் பண்ணப் போறா... என்னைத்தவிர... எனக்கென்ன மனுஷா இல்லையா; குடும்பம் இல்லையா - இப்படி இங்கே வந்து தன்னந்தனியா கிடக்கறதுக்கு... ஒரு புள்ளை இருக்கான். ரெண்டு பொண்ணு இருக்கா... எல்லாருமே நன்னாத்தான் இருக்கா ராம் மோஹன்... யாரும் எதுலேயும் கொறஞ்சு போயிடலை... அவாவா வசதிக்கேத்தபடி இஷ்டம் போலத்தான் இருந்துண்டு இருக்கா. என்னைக் கொண்டு வந்து இந்த வயசுல என் புள்ளை இப்படி ஒரு லாட்ஜ்ல இருன்னு விட்டுட்டுப் போயிட்டானே - நியாயமா இது... சொல்லுங்கோ - நேர்மையான காரியமா இது...''

இந்த இடத்தில் நாதமுனி அய்யர் இரண்டு நிமிடங்கள் நிறுத்தினார். அவரின் உணர்வுப் பிரவாகம் வேறொரு முக்கிய மான திசையை நோக்கித் திரும்பி இருப்பது தெரிந்தது. அதில் குறுக்கிடுகின்ற அவசியம் ஏதும் அந்தக் கணம் எனக்கு இல்லாததால் நான் மௌனமாக அவரைப் பார்த்துக் கொண்டிருந்தேன். நாதமுனி அய்யர் தொடர்ந்து பேசத் தொடங்கினார்.

''நாலைஞ்சு பேர்னு இருக்குற ஆத்ல ஆளுக்கு ஆள்னு நாலுவித அபிப்பிராயம் இருக்கத்தான் செய்யும் ராம் மோஹன்... எல்லாம் அவா சொல்றதுதான் சரி; நான் சொல்ற தெல்லாம் தப்பு... இப்படிப் பேசினா யார் என்ன பண்ண முடியும்... ஒரு சின்ன உதாரணம் சொல்றேன் கேளுங்கோ... என் மாட்டுப் பொண்ணு ஒரு குழம்பு செய்வா... அது நிஜமாவே நன்னா இருந்தாத்தானே நன்னா இருக்குன்னு சொல்ல முடியும் என்னால... நன்னா இல்லாத குழம்பை நன்னா இல்லைன்னு நான் சொன்னா கோவிச்சுக்கறா ராம்மோஹன் - என் மாட்டுப் பொண்ணு... அதுக்காவே அடுத்த நாள் குழம்பை இன்னும் மோசமா அவ செஞ் சுடறா! நேத்திக்கு குழம்பு நன்னாயில்லேன்னு சொன்னதுக்கு இன்னிக்கு குழம்பு ஒரு தண்டனை! இப்படி எந்த ஆத்து லேயாது கேள்விப்பட்டிருக்கேளா... என்னது ரசம் இப்படி யிருக்குன்னு கேட்டா - நன்னா பண்ணித் தர்ற ஆத்துக்கு அப்பப் போய்க்க வேண்டியதுதான்னு சொன்னா என்ன அர்த்தம்... இதானே என் ஆதங்கம்.... என்னோட ஆத்தை விட்டு வேற யாரோட ஆத்துக்குப் போவேனாம் நான்... அதுவும் ஒரு ரசஞ்சாதத்துக்கு...! இதுல என்ன வேதனைன்னு கேட்டேன்னா - ஆம்படையா சொன்னதை அப்படியே ஒரு வார்த்தைத் தப்பாம கிளிப் பிள்ளையாட்டம் என் புள்ளையும் அவபக்கம் சேந்துண்டு என்னைக் கேப்பான்...''

''- அதுவும் என் ஒய்ஃப் இறந்துட்ட அப்புறம் நான் என் புள்ளைகிட்டேயும் மாட்டுப் பொண்ணுகிட்டேயும் பட்டிருக்குற பாடு இருக்கு பாருங்கோ - பகவானுக்குத்தான் தெரியும் அதெல்லாம்... நெறய விஷயங்கள்ள எனக்கும் அவாளுக்கும் இடையில எவ்வளவு அபிப்பிராய பேதம் வரணுமோ - அவ்வளவு அபிப்பிராய பேதங்கள் வந்துடுத்து தான்... இல்லேன்னு சொல்லலை... அதுக்காக நான் அபிப் பிராயமே சொல்லக்கூடாதுன்னா என்ன நியாயம் நீங்களே



சொல்லுங்கோ... அவா அபிப்பிராயத்துக்கு எதிரா நான் ஏதாவது சொன்னா - 'நாங்க சொல்றது இதான். கேட்டுண்டு இருக்கறதா இருந்தா இரு... இஷ்டம் இல்லேன்னா ஏதாவது லாட்ஜ்ல ரூம் பாத்துத் தரேன். ஹாய்யா - உன் இஷ்டத்துக்கு அங்கே போய் இருந்துக்கோ... யாரும் உன்னை எதுவும் கேக்க மாட்டா...' என்கிற ஒரே பாட்டுத்தான்... ஒரு நாளும் நான் சொன்னது கிடையாது - லாட்ஜ்ல ரூம் பாத்துப் போயிட றேன்னு... ஏன்னா - அப்படி செய்துக்கலாம்னே எனக்குத் தெரியாது... ஆனா அவாளுக்குத் தெரிஞ்சிருந்தது. அதான் என்னோட தலையெழுத்து... ஒரு வருஷமா எப்போ பாத்தாலும் உன் இஷ்டத்துக்கு இருக்கறதா இருந்தா லாட்ஜ்ல ரூம் பாத்துத் தரேன்; போயிடுன்னு சும்மா சும்மா ஒருத்தன் சொல்லிண்டே இருந்தா நானும்தான் என்ன பண்ணுவேன் ராம்மோஹன்... சரிடாப்பா - சரிப்படலைன்னா என்னை ட்ரிப்ளிகேன்ல ஒரு ரூம் நீயே பாத்து கொண்டுபோய்ச் சேத்திடுன்னு ஒரு நாள் ரொம்ப முடியாம சொல்லிட்டேன்... அதுக்காகவே காத்திருந்தவனாட்டம் உடனே என்னை இங்கே கொண்டாந்து சேத்துட்டு சாப்பாட்டுக்கும் டிக்கெட் வாங்கித் தந்துட்டுப் போயிட்டான்... வருஷம் பூராவும் லாட்ஜ்ல இருன்னு சொல்லிண்டே இருந்தவன் இவன். ஆனா என் உறவுக்காரா எல்லார்கிட்டேயும் போய் என் பிள்ளை என்ன சொல்லிட்டான் தெரியுமோ - நான்தான் ஆத்ல இருக்க முடியாதுன்னு சொல்லிட்டு லாட்ஜ்க்குக் கிளம்பிப் போயிட்டாப்ல அப்படியே மாத்திச் சொல்லிட்டான்...''

''...சும்மா இந்த வயசுல இப்படி மெஸ்ல சாப் பிட்டுண்டு லாட்ஜ்ல வந்து தங்கியிருக்கோம் என்கிறதே எனக்குத் தாங்கிக்க முடியாத அவமானமா இருந்ததுல இவன் வேற உறவுக்காராகிட்டேயெல்லாம் இப்படிச் சொல்லிண்டு திரியறானே என்கிறதுல இன்னும்தான் எனக்கு அவமானம் ஜாஸ்தி ஆயிடுத்து... அதனால லாட்ஜ்க்கு வந்த அப்புறம்

எனக்கு என் உறவுக்காரா யாரையும் பாக்கவே வெக்கமா போயிடுத்து... இந்த ரெண்டு வருஷத்தில அதனால நான் என் ரெண்டு மூணு உறவுக்காரா ஆத்துக் கல்யாணத்திலகூட போய் கலந்துக்கலை. நெஜமா ராம்மோஹன்; லாட்ஜ்ல நான் ஒரு நரகத்தில இருக்குற மாதிரிதான் இருந்துண்டுருக்கேன்... இங்கே ஒரு நாள் போறது எனக்கு ஒரு யுகம் போறது மாதிரி இருக்கு... ஒருத்தருக்கொருத்தர் எத்தினியோ அபிப்பிராய பேதத்துல இருந்தாலும் ஆத்துல இருக்கறச்சே எனக்கு வேற ஒரு சைக்காலஜிக்கல் செக்யூரிட்டி இருந்தது... இங்கே அந்த செக்யூரிட்டி எனக்கு இல்லை...

''அதனால என்ன ஆயிடறது தெரியுமோ... நைட்ல படுத்தா ரொம்ப நேரத்துக்கு தூக்கமே வர்றதில்லை... எப்பவும் ஏதோ ஒரு பயம்; ஏதோ ஒரு இன்செக்யூரிட்டி... இந்தப் பயம் பகல்ல இன்னும் ஜாஸ்தியாயிடும். பகல் நேரங்கள்ள அநேகமா லாட்ஜே காலியா இருக்கும். என்னைத் தவிர எந்த ரூம்லேயும் யாரும் இருக்க மாட்டா. இத்தினிக்கும் இங்கே உங்களைத் தவிர வேற யார்கிட்டேயும் நான் பேசறது கிடையாது. ஆனாலும் பகல் நேரங்கள்ள யாரும் இல்லாம ரூம் எல்லாம் பூட்டிக் கிடக்கறதைப் பாத்தா அதுவும் ஒருவித பயத்தைத்தான் தரும் எனக்கு. அந்தப் பயம் தாங்காம பகல் நேரங்கள்ள ரொம்ப நாழி லாட்ஜ் வாசல்லேயே உக்காந்து போறவா வர்றவாளை வேடிக்கை பாத்திண்டு இருப்பேன்.:. யாருக்காவது தெரியுமா இதெல்லாம்...''

''...மிஸ்டர் ராம்மோஹன்; பொதுவா வயசான வாளுக்கே அடிமனசில ஒரு பயம் ஒரு இன்செக்யூரிட்டி வரத்தான் செய்யுமாம்... ரொம்ப நாள் முன்னாடி ஒரு டாக்டர் சொல்லியிருக்கார்... ஏழு வருஷத்துக்கு முன்னாடி என் ஒய்ஃப் இறந்து போனப்போ பயமும் இன்செக்யூரிட்டியும் எனக்கு வரத்தான் வந்தது. ஆனா அது கவலைப்படும் படியான பெரிய பயம் கிடையாது. ஆனா இப்போ - லாட்ஜ்



வாழ்க்கையில வந்திருக்கிற பயமும் இன்செக்யூரிட்டியும் என்னை இன்னும் மோசமா பயப்பட வைக்கிறது. - லாட்ஜ் லேயும் இருக்கப் பிடிக்காம; மெஸ் சாப்பாடும் சாப்பிடப் பிடிக்காம - இப்படி ஒரு வாழ்க்கை வாழணும்னு என் தலையில எழுதியிருக்கு பாருங்கோ... நானும் என் கல்யா ணத்துக்கு அப்புறம் எத்தினியோ வருஷம் என் அப்பா அம்மா; ரெண்டு தம்பிகள்; ஒரு பாட்டின்னு ஜாயிண்ட் ஃபேமிலியாத்தான் இருந்திருக்கேன்... எங்களுக்குள்ளேயும் அந்தக் காலத்தில அபிப்பிராய பேதங்கள் எத்தினியோ வந்திருக்கு... கஷ்ட நஷ்டங்கள் வந்திருக்கு... கோபதாபங்கள் கூட வந்திருக்கு ராம்மோஹன்... ஆனா யாரும் யாரையும் ஆத்தைவிட்டுப் போயிடுன்னு ஒரு நாளும் சொன்னது கிடை யாது... தனிக்குடித்தனம் போயிடலாம்னுகூட நினைச்சது கிடையாது...

''என் ஒய்ஃப் சுலோச்சனா - இதே ட்ரிப்ளிகேன்ல தான் பிறந்து வளர்ந்தவ. அவ, அவ மாமியார் மாமனாரை ஒரு நாளாவது ஒரு வார்த்தையாவது தப்பா பேசியிருப் பாளா... மாமனாரையும் மாமியாரையும் மட்டுமில்லை என் ஒய்ஃப் சுலோச்சனா அவ மச்சினர்களையும் உள்ளங்கையில் வச்சுத் தாங்கியிருக்கா... என் மாட்டுப் பொண்ணு என்ன டான்னா ரசம் நன்னா பண்ணித் தர ஆத்தைப் பாத்து போய்க்க வேண்டியதுதான்னு அலட்சியமா பேசறா என்னை... அவ ஆம்படையானோ - லாட்ஜுக்கே போயிடுன்னுட்டான்... உத்தமம்! - ரெண்டு வருஷம் ஓடிப் போயிடுத்து ஓடி... திசை தெரியாம இங்கே கிடக்கேன் இந்த ரெண்டு வருஷமா... திருப்பியும் என் புள்ளையாத்ல போய் அவாகூடல்லாம் சேந்து இருக்கப் போறேனா இல்லையான்னே தெரியலை எனக்கு... ஒருவேளை என் பிராணன் இங்கேயேதான் போயிடப் போறதோ என்னவோ... இதுல இருக்குற வேதனையான விஷயம் என்னன்னு பாருங்கோ... வர்ற

ஒவ்வொரு திவசத்துக்கு மட்டும் நான் தவறாம கிளம்பி என் பிள்ளையாத்துக்கு போயிட்டு வந்திடணும்... திவசத்துக்குத் திவசம் போறதுக்கு நானென்ன பிராமணார்த்த பிராமணனா கேக்கறேன்... கடைசியில இவாளையெல்லாம் பெத்து ஆளாக்கினதுக்கு எனக்குக் கிடைச்ச கதி இதான்... என் மூச்சு அடங்கற வரைக்கும் நான் இங்கேதான் கிடக்கப் போறேன். இப்படியேதான் ஒவ்வொரு வேளை சாப் பாட்டுக்கும் டிக்கெட்டை எடுத்து சட்டைப் பாக்கெட்ல வச்சிண்டு ஓடிண்டு திரியப்போறேன்...''

இதற்கு மேல் பேச முடியாமல் நாதமுனி அய்யர் முற்றிலுமாக உடைந்துவிட்டார். வேட்டியால் முகத்தை மூடிய படி விம்மி விம்மி அழுதார். நான் அவசரமாக எழுந்து போய் அறைக்கதவை சாத்தித் தாழிட்டேன்... ஆனால் வார்த்தையாலோ செயலாலோ அவரை நெருங்கி எந்த ஆறுதலும் சொல்லவில்லை. தேற்றவும் இல்லை. எந்தக் குறுக்கீடும் செய்யாமல் நான் நாதமுனி அய்யரை அழவிட்டபடி அமைதியாக என் கட்டிலிலேயே அமர்ந்திருந்தேன்... பல நிமிஷங்களுக்குத் தன்னை இழந்து அவர் அழுது கொண்டுதான் இருந்தார்.

சூழல் எனக்கு மிகவும் கொடியதாக இருந்தது. அந்தச் சூழலில் என் வயதும் என் அனுபவக் குறைவும் மிகவும் திகைத்துப் போயிருந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் என் அறிவு மலைத்தும் போயிருந்தது. சில நிமிடங்களுக்குப் பிறகு நாதமுனி அய்யர் அவரை சுதாரித்துக் கொண்டும் விட்டார். அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு கதவைத் திறந்து போய் முகத்தைத் தண்ணீரால் நன்றாகக் கழுவி டவலால் துடைத்தபடியே திரும்பி வந்தார். ஒரு முறை முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டார். என்னைச் சின்ன புன்முறுவலுடன் பார்த்தார். 'ஸாரி'



சொன்னார். தன்னை மன்னித்துவிடும்படி திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டார்.

ஏதோ ஓர் உணர்ச்சி வேகத்தில் எதை எதையோ மனம் திறந்து கொட்டி விட்டதாகச் சொன்னார். அதையெல்லாம் மறந்துவிடுங்கள் ராம்மோஹன் என்றார். இந்த மாத வாடகையைக் கொடுத்துவிட்டு, வரப்போகும் மாதத்திற்கான சாப்பாட்டு டிக்கெட்டையும் தந்துவிட்டுப் போக சரியாக இன்னும் எட்டு நாட்களில் அவரின் மகன் தியாகராஜன் வருவார். அப்போது நான் அந்தத் தியாகராஜனிடம் இன்று நாதமுனி அய்யர் பேசிய எதையும் மறந்தும் ஒரு வார்த்தைகூடச் சொல்லி விடக்கூடாதென்று அவர் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்.

லாட்ஜில் இருக்க நாதமுனி அய்யருக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லைதான். ஆனால் அதை வாய் திறந்து மகனிடம் சொல்லவோ, வீட்டுக்கு வந்துவிடுகிறேன் என்று கேட்கவோ அவருக்குப் பிடிக்கவில்லை. அவருக்குள்ளும் ஒரு சுயமரியாதை இருக்கிறது! சுய கௌரவத்தை இழந்து எதையும் மகனிடம் கேட்க நாதமுனி அய்யர் தயாரில்லை... அவர் கேட்க வேண்டாம் என நினைத்து தியாகராஜனிடம் அவர் சார்பாக நான் கேட்டால் அதற்கு எதிர்மறையான பலன்தான் இருக்கும் என்றும் நாதமுனி அய்யர் அவராகவே அபிப்பிராயம் தெரிவித்தார்.

வேத்து மனுஷாளிடமெல்லாம் போய் அவர் அவராத்து சமாச்சாரங்களையெல்லாம் பேசிண்டு திரிவதாக அவருடைய மகன் நாதமுனி அய்யரின் மாட்டுப் பெண்ணிடம் போய்ச் சொல்வானாம்! அப்புறம் அதற்கும் சேர்த்து அந்த மாட்டுப் பெண் பெரியதாகப் பாட்டு வைப்பாளாம்...! வேற ஒரு எழவும் நடக்காதாம்... அதனால் தியாகராஜன் வரும்போது இன்று அவர் பேசியது எதையும் மூச்சு விட வேண்டாம்

என்று நாதமுனி அய்யர் படுத்துக் கொள்ள விரிப்பை விரித்த நிமிஷத்திலும் என்னை மறுபடியும் கேட்டுக்கொண்டார்.

எல்லாம் தன்னுடைய விதியென்று வறண்ட புன் முறுவல் செய்தபடி படுக்கையில் அவர் அன்று படுத்தும் கொண்டார். விளக்கை அணைத்துவிட்டு என் படுக்கையில் நானும் படுத்துக்கொண்டேன். நாதமுனி அய்யர் அன்று நன்றாகத் தூங்கினாரா என்பது எனக்குத் தெரியாது. நான் அன்று இரவு தூங்கவில்லை...

## 13

அன்று இரவு சாமாஜி மெஸ்ஸில் சாப்பிட்ட சம்பவம் எதிரேபாராமல் மிகப் பெரிய முக்கியத்துவத்தைப் பெற்று விட்டது. பல வருட ஒரு கனவுச் சாப்பாட்டை; அதுவும் மறைந்த தன்னுடைய மனைவியின் கைபக்குவத்தின் சாயலைக் கொண்ட அமிர்தம் போன்ற சாப்பாட்டை விருந்து உபச்சாரமாகப் பெற்ற சந்தோஷப் பெருக்கில் தன் வாழ்வின் சில காலகட்டத்தின் சில காட்சிகளையே மனம் திறந்து நாதமுனி அய்யர் கொட்டிவிட்ட நீண்ட வடிவம் மீண்டும் மீண்டும் என் கண்களில் தெரிந்துகொண்டிருந்தது. அந்த வயதுக்கு எனக்கு அதெல்லாம் குடும்ப வாழ்க்கையில் அறிமுகமே இல்லாத பக்கங்கள். கேள்வியே பட்டிராத மானிட அனுபவங்கள்.

எங்கோ ஒரு கோணத்தில் மானிடம் அஞ்சத்தகுந்த தாகத் தெரிந்தது எனக்கு. நாதமுனி அய்யருக்கு என்ன செய்ய லாம் என்பதை என்னை வேகமாக யோசிக்கவும் வைத்தது. லாட்ஜ் வாழ்க்கையில் அவர் சந்தோஷமாக இல்லை என்பது ஆரம்பத்தில் இருந்தே எனக்குத் தெரிந்த விஷயம்தான். ஆனால் இங்கே ஒரு நரக அவஸ்தையில் இருக்கிறார் என்கிற அளவிற்கு நான் அவரை உணர்ந்ததில்லை... அதுதான்



என்னை மிகவும் துக்கமடையச் செய்தது. எழுபது வயதில் ஓர் உடலும் மனமும் தளர்ந்த ஒருவர் இப்படி குடும்பத்தினரை விட்டுத் தனியாக வந்து பாதுகாப்பு இல்லாத மனநிலையில் வாழ்ந்துகொண்டிருப்பது நிச்சயமாக நரகம்தான் என்பதை என் அறிவும் புரிந்துகொண்டது. இந்த நரக அவஸ்தையில் இருந்து எப்படி நாதமுனி அய்யரை மீட்பதென்ற கேள்வியும் அதனால் எனக்குள் எழுந்து கொண்டே இருந்தது. புரண்டு புரண்டு கிடந்தேன்.

தூக்கமும் வராமல் கேள்விக்கு விடையும் கிடைக் காமல் விழித்த படியே நான் கிடந்தபோது நாதமுனி அய்யரிடம் இருந்து சின்னச் சின்ன முனகல் சப்தம் கேட்டது. பின் சுலோச்சனா சுலோச்சனா என்று மிகவும் ஈனக் குரலில் அவர் புலம்புவது கேட்டது. பிறகு அவரிடம் இருந்து எந்தச் சப்தமும் இல்லை. - ஒன்று அவர் தூக்கத்தில் புலம்பியிருக்க வேண்டும். அல்லது தூக்கம் வராமல் மன வேதனையில் மனைவியின் பெயரைச் சொல்லி அரற்றியிருக்க வேண்டும். ஆனால் அதைத் தெரிந்து கொள்ள எழுந்து விளக்கைப் போட வில்லை நான்.

எனக்கு விடை ஒன்று சட்டெனத் தெரிந்துவிட்டது. குடும்பத்தில் கஷ்டம் நஷ்டம் இருந்தாலும், பெரிய அபிப் பிராய பேதம் இருந்தாலும் நாதமுனி அய்யர் தன் மகனோடும் மருமகளோடும் வீட்டில் இருப்பதைத்தான் விரும்புகிறார். லாட்ஜில் இருக்கவும் மெஸ்ஸில் சாப்பிட்டுக் கொண்டிருக் கவும் விரும்பவில்லை அவர். ஆனால் இதை மகனிடம் தெரி விக்கவும் அவருக்குப் பிடிக்கவில்லை. இந்த மனச்சிக்கலில் சிக்கிக் கொண்டு இம்சைபட்டபடி இருக்கிறார். இதை அவருக்குத் தெரியாமல் அவரின் மகனிடம் தனியாகப் பார்த்து நான் சொல்லி நாதமுனி அய்யரை வீட்டிற்கு அழைத்துப் போய் விடும்படிக் கேட்டுக்கொள்ள வேண்டும். இது நாதமுனி அய்யருக்காக மட்டுமில்லை. எனக்காகவும்தான்.

என் அறை நண்பராக இருக்கும் ஒரு வயதான ஜீவன் ஒவ்வொருநாள் பொழுதையும் நரக வேதனையாகக் கழித்துக் கொண்டிருப்பதை கண் எதிரில் உணர்ந்துகொண்டே என்னாலும் சந்தோஷமாக இருக்க முடியாதே... அதனால் மறுநாள் காலையே நாதமுனி அய்யரிடம் எதுவும் சொல்லிக்கொள் ளாமல் அவரின் மகன் தியாகராஜன் பணிபுரியும் பாரிமுனை அரண்மனைக்காரத் தெருவில் இருக்கும் வங்கிக் கிளைக்குப் போய் அவரைப் பார்த்துப் பேசுவதென்று முடிவு செய்தேன்.

இதில் என்னவொரு பெரிய மாற்றம் என்றால், நாத முனி அய்யர் என்னுடைய அறைக்கு வந்து சேர்ந்தபோது அவர் மகன் பணிபுரிந்த அந்த வங்கி தனியார் வசம் இருந்தது. இப்போது அந்த வங்கி இந்தியாவில் மிகப் பெரிய பொரு ளாதாரப் புரட்சியை நடத்திக் காண்பிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு தேசியமயமாக்கப்பட்டிருந்தது.

## 14

மறுநாள் காலை பொழுது விடிந்தபோது லேசாக வெளியில் மழை பெய்துவிட்டிருந்தது. என்றும் இல்லாத மிகப் புதிய நட்புடன் அந்தக் காலையில் நாதமுனி அய்யர் என்னைப் பார்த்துப் புன்னகை செய்தார். முந்தின நாள் இரவு அவருடைய பிரச்சினையைச் சொல்லி என்னைப் போரடித்து விட்டதற்காக என்னிடம் மன்னிப்புக் கேட்டார். நவம்பர் மாதம் ஆரம்பித்ததும் சாப்பாட்டு டிக்கெட் அவரிடம் கொண்டு வந்து தர அவருடைய மகன் வரும்போது அவர் நேற்றுப் பேசிய எதையும் மறந்துகூடச் சொல்லிவிட வேண்டாம் என்பதை மட்டும் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண் டிருந்தார்.

அருமையான வீட்டுச் சாப்பாடு போன்ற சாமாஜி மெஸ் சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டிருக்கும் என்னைப்



போய் நேற்று கணபதி மெஸ்ஸின் மோசமான சாப்பாட்டைச் சாப்பிடச் சொல்லி டிக்கெட் கொடுத்ததற்காகச் சிறிதும் நான் எதிர்பாராத கோணத்தில் நாதமுனி அய்யர் என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டபோது அறையின் சூழலே மாறிப் போயிருந்தது. எல்லா சகுனங்களும் இணக்கமாக இருந்தன. நான் கிளம்பியபோது நாதமுனி அய்யர் எப்போதும் போல கணபதி மெஸ்ஸுக்குச் சாப்பிடக் கிளம்பிப் போய் இருந்தார். நான் என்னுடைய ஆபீசில் போய் சில உடனடி வேலைகளை மட்டும் பார்த்துவிட்டு நேராகப் பாரிமுனையில் தியாகராஜன் பணிபுரியும் வங்கிக்குப் புறப்பட்டுப் போனேன்.

ஊசிமுனை அளவுகூட வங்கியில் என்னை எதிர்பாரா தவர் என்பதால் தியாகராஜன் என்னைப் பார்த்ததும் திடுக் கிட்டுப் போனார். அவருடைய அப்பாவிற்கு என்னமோ ஏதோவென்று நினைத்துவிட்டார். சட்டென்று எழுந்து கொண்டே கேட்டார் : ''அப்பாவோட உடம்புக்கு ஏதாவது...?''

''அவரோட உடம்புக்கு எதுவும் கிடையாது... ஆனா நான் அவரைப்பத்தி உங்ககிட்டே நிறைய பேசறதுக்காக வந்திருக்கேன். எல்லாத்தையும் சொல்றதுக்குக் குறைஞ்சது ஒரு மணி நேரமாவது ஆகும்... சொல்லிட்டுக் கிளம்பி வாங்க... வெளியில போய் நின்னுட்டுப் பேசலாம்...'' என்றேன் - சிறிது முகத்தைக் கடினமாக வைத்தபடி.

தியாகராஜன் உள்ளே ஓடிப்போய் சொல்லிவிட்டு ஒரு நிமிஷத்தில் வந்தார். வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டு விட்டதின் உடனடியான பதில்களில் இதுவும் ஒன்றுபோல் இருந்தது - அவர் வந்த வேகம்...

மௌனமாக இருவரும் நடந்துபோய் தெரு முனையில் நின்றுகொண்டோம். என்ன ஏதுவென்று கேட்பதற்குக்கூடப் பயந்தார் தியாகராஜன். ஒரு சில நிமிடங்கள் முந்தினநாள்

இரவு நடந்த சம்பவத்தின் அத்தனை உள்ளடக்கங்களையும் மனதிற்குள் ஒரு வரிசைக் கிரமத்தில் நினைவுபடுத்திக் கொண்டு பின் அத்தனையையும் மிக நிதானமாக நான் தியாக ராஜனிடம் சொல்லி முடித்தேன். எந்த இடத்திலும் சின்ன குறுக்கீடும் செய்யாமல் தலையைத் தாழ்த்தியபடி அவர் கேட்டுக்கொண்டிருந்தார். - கடைசியாக நான் என்னுடைய அபிப்பிராயத்தைச் சொன்னேன்.

''உங்க ஃபாதர் சொல்ற மாதிரி ஒவ்வொரு குடும்பத் திலேயும் ஒருத்தருக்கு ஒருத்தர் எத்தினியோ அபிப்பிராய பேதங்கள் வரலாம். கஷ்டம் நஷ்டம் ஏற்படலாம்... அதுக் காக யாரும் யாரையும் வீட்டை விட்டு வெளியில போயிடு; உன் இஷ்டத்துக்கு தனியா இருந்துக்க - அப்படின்னு சொல்லிடறது தப்பான அணுகல் என்கிறதுதான் - என்னோட கருத்தும்... அதுவும் இத்தனை வயசான ஒரு மனுஷரை லாட்ஜில கொண்டாந்து விட்டு மெஸ்ல சாப்பிட்டுக்கச் சொல்றது ரொம்பவுமே ஒரு தப்பான நடவடிக்கைன்னு உங்க ஃபாதர் சொல்றதை நானும் ஒத்துக்கறேன் மிஸ்டர் தியாகராஜன்... டோட்டல்லி திஸ் இஸ் ஏ ராங் ஆட்டிட்யூட்னு ஃபீல் பண்றார் அவர்... ரொம்ப அவமானமாகவும் நினைக்கிறார்... தங்களோட மொத்த குடும்பத்துக்கே இது அவமானம்னு கருதுறார்... நரகத்தில இருக்கற மாதிரி வேதனைப்படறார்... எப்படி இருந்தாலும் உங்ககூடச் சேந்து பழைய மாம்பலத்துக்கு வந்து இருக்கத்தான் ஆசைப்படறார். இன்னும் சொல்லப்போனா ஜெயில்ல வந்து தண்டனை பெற்ற கைதி போல தன் நிலைமை இருக்குன்னு சொல்லித் தவிக்கிறார்... ஸாரி; இதுக்கு மேல தாங்கமாட்டார். அவர் பக்கம் தப்பே இருந்தாலும்கூட - இந்த ரெண்டு வருஷ ஜெயில் தண்டனை போதும் அவருக்கு. தொடர்ந்து இது அவருக்கு ஆயுள் தண்டனையா இருந்திடக்கூடாது என்கிறதுதான் என் ஒரே அபிப்பிராயம்...



... ''நான் சொன்ன எல்லாத்தையும் உங்க ஒய்ஃப் கிட்டே போய் பேசுங்க... திடுதிப்னு உங்க ஃபாதர் அவர் பாட்டுக்கு லாட்ஜ்ல ஹார்ட் அட்டாக் மாதிரி எதுவும் வந்து இறந்திட்டார்னு வச்சிக்கோங்க... அது மாதிரியான மோசமான அவமானம் உங்க குடும்பத்துக்கு வேற எதுவும் வரமுடியாது... அதுக்கு மேல ஒரு பழிச் சொல்லும் வர முடியாது. அவரோட ஹெல்த் கண்டிசன் ரொம்ப மோசமா இருக்குன்னு நான் சொல்ல வரலை இப்ப... கடுமையான மன அழுத்தத்தில இருக்கார் உங்க ஃபாதர்... மோசமான 'ஸ்ட்ரெஸ்'தான் என்னிக்குமே - ஆபத்து... சீக்கிரமா வந்து ரூமைக் காலி பண்ணி உங்க ஃபாதரை வீட்டுக்கு அழைச் சிட்டுப் போயிடுங்க... அதான் நல்லது...'' நான் வாட்ச்சில் மணி பார்த்தேன். பகல் ஒரு மணி ஆகியிருந்தது. எனக்கு இது மதிய உணவிற்கான நேரம்...! நான் சொன்ன அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்த தியாகராஜனின் முகம் ஒரு மாதிரியாக இருள் கவிந்து போயிருந்தது. கைக்குட்டையை எடுத்துக் கண்களையெல்லாம் துடைத்துக் கொண்டார். எனக்கு மிகவும் நன்றி சொன்னார். நாதமுனி அய்யர் பற்றிய சில விஷயங்களை ரொம்பவும் உணர்ச்சிவசப்பட்டு, சற்று மனம் வெதும்பிச் சொன்னார். ஆனால் அவற்றையெல்லாம் தான் மறந்து விடுவதாகச் சொன்னார். தன்னுடைய மனைவி பற்றியும் சிறிது பெருமையாகக் கூறிக் கொண்டார்...

நான் இந்த இடத்தில் மட்டும் குறுக்கிட்டு முந்தின நாள் இரவு தூக்கத்தில் முதல் முறையாக நாதமுனி அய்யர் 'சுலோச்சனா சுலோச்சனா' என்று மனைவி பெயரைச் சொல்லிப் புலம்பியதை தியாகராஜனிடம் கூறினேன்... அப்போதும் தியாகராஜன் ரொம்ப உணர்ச்சிவசப்பட்டார். அவரின் அப்பாவின் மேல் நான் எடுத்துக்கொண்ட அக்கறைக்காக மீண்டும் மீண்டும் எனக்கு நன்றி தெரி வித்தார்.

ஒரே ஒரு நிமிஷம் யோசனை செய்துவிட்டு நான் என்னுடைய 'ஐடியா'வை தியாகராஜனிடம் சொன்னேன். ''ஆனா, ஒரே ஒரு விஷயத்தை மட்டும் மறந்துடாதீங்க... நேத்து உங்க ஃபாதர் கொஞ்சம் எதிர்பாராம மனம் திறந்து என்கிட்டே பேசினார் பாருங்க - அது எதையும் தப்பித்தவறிக் கூட உங்ககிட்டே நான் சொல்லிடவே கூடாதுன்னு திருப்பித் திருப்பி நூறு தடவை சொல்லிட்டார் என்கிட்டே. ஸோ - அதை மட்டும் ஞாபகத்தில வச்சிக்கோங்க. நான் வந்து உங்களை மீட் பண்ணியதோ, இதையெல்லாம் பேசி அவரை வீட்டுக்கு அழைச்சிட்டுப் போயிடும்படிச் சொன்னதோ எந்தக் காரணத்தைக் கொண்டும் உங்க ஃபாதருக்குத் தெரிஞ்சிடக் கூடாது. என்னிக்குமே தெரிஞ்சிடக்கூடாது. நீங்களா வந்து ரூமைக் காலி பண்ணிட்டு அவரை வீட்டுக்கு அழைச்சிட்டுப் போயிடறதுன்னு முடிவு பண்ணிட்டதா சொல்லிடுங்க... அதான் நல்லது... சொந்தமா நீங்களேதான் இந்த முடிவை எடுத்ததுன்னு சொன்னாத்தான் உங்க ஃபாதருக்கும் நிம்மதியா இருக்கும்... நான் சொல்லித்தான் நீங்க அந்த முடிவு எடுத்தீங்கன்னா - அது அவரோட மனசில அவ்வளவு பெரிய சந்தோஷத்தையும் நிம்மதியையும் தராது என்கிறது என்னோட அபிப்பிராயம்...''

நான் சொன்னது தியாகராஜனுக்கும் சம்மதத்தைத் தந்தது. உற்சாகத்தைத் தந்தது. ''இப்படிப் பண்ணிடறேன் ராம்மோஹன்...'' என்றார் என் முகத்தைப் பார்த்தபடி.

''சொல்லுங்க...''

''இந்த மாத வாடகையைத் தர்றதுக்காகவும், மெஸ் சாப்பாட்டைத் தர்றதுக்காகவும் எப்பவும்போல வர்ற மாதம் ரெண்டாந்தேதி ஈவினிங் வருவேன் பாருங்கோ - அதே போல வரேன்... வந்து உடனே எங்க ஃபாதரை ரூமைக் காலி பண்ணி கையோட அழைச்சிட்டுப் போயிடறேன்...



ரெண்டு மாத வாடகை மேனேஜர்கிட்ட அட்வான்ஸா இருக்கு. அதிலே இந்த மாத வாடகையைக் கழிச்சுக்கச் சொல்லி பேலென்ஸையும் அப்போவே வாங்கிக்கறேன்... சாப்பாட்டு டிக்கெட்டையும் வாங்க வேண்டியதில்லை என்கிறப்போ - அந்தச் செலவுல பாதி செலவழிச்சாகூட இன்னும் ஒரு பெட்டர் சாப்பாடு சமையல் பண்ணி எங்க ஃபாதருக்கு ஆத்துலேயே நன்னாவே குடுத்துட முடியும்...''

தியாகராஜன் இப்படி உற்சாகமாகச் சொன்னது எனக்குச் சந்தோஷமாக இருந்தது... ''ரொம்ப தேங்க்ஸ் மிஸ்டர் தியாக ராஜன்... கொஞ்சம் பயந்துக்கிட்டேதான் நான் வந்தேன்... உங்க ஃபாதரை இப்படி லாட்ஜ்லேயே இருக்க வைக்கக் கூடாதே என்கிற கவலையோடேதான் வந்தேன்... ஏன்னா - இது நாதமுனி அய்யர் என்ற தனிநபரோட விஷயம் இல்லை. இது உங்களோட குடும்ப விஷயம்... அந்தத் தயக்கந்தான் என்னை ரொம்ப யோசிக்க வைத்தது. அதையும் மீறி நான் கிளம்பி வந்ததுக்குக் காரணம் - நேத்து நைட் எனக்குத் தெரிஞ்ச அவரோட பரிதாபப்படத்தக்க மனநிலைதான். இவ்வளவு தெரிஞ்சதுக்கு அப்புறமும் - இதையெல்லாம் உங்ககிட்டே சொல்லாம இருக்கறது தப்புன்னு எனக்குத் தோணிடுச்சி... அதான் இன்னிக்கே இத்தனை அவசரமா கிளம்பி வந்துட்டேன்...''

''நெஜமா நீங்க கிளம்பி வந்ததுதான் சரியான செயல் மிஸ்டர் ராம்மோஹன்... எங்க அப்பா லாட்ஜல இருக்கார் என்கிறது எனக்கும் அவமானப்படும்படியான சமாச்சாரம் தான். இருந்தாலும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் - வித் யுவர் பர்மிஸன் - நான் சொல்லிக்கிறேன்... லாட்ஜ்ல இந்த ரெண்டு வருஷமா எங்க அப்பாகிட்டே நீங்க பாக்கற ஃபேஸ் இருக்கே - அது சுத்தமா வேற ஒரு கொஞ்சம் பொய்யான ஃபேஸ்...! இங்கே - ஆத்துல அவரோட ஃபேஸே வேற...! சுத்தமா அங்கே வேற மாதிரி இருப்பார்!

அந்த ஃபேஸ் நிச்சயமா உங்களுக்குத் தெரியவே தெரியாத ஃபேஸ்! - இதை நான் கோவத்தோட சொல்லலை... ரொம்ப வருத்தத்தோட சொல்றேன்...''

''இருந்தா இருந்திட்டுப் போறார்...'' என்றேன் நான்...

''அதையும் சேர்த்தேதான் உங்க அப்பா... எழுத்தாளர் ஜெயகாந்தன் 'தவறுகள் குற்றங்கள் அல்ல'ன்னு ஒரு கதை எழுதியிருக்கார்! உங்க அப்பா பக்கம் தவறே இருக்கலாம். அதை நீங்க குற்றமா எடுத்துக்காதீங்க... தப்பு செய்யாத வங்க யாராவது இருப்பாங்களான்னு தெரியலை... தப்புப் பண்றது மனுஷாளோட இயல்புதான்னு நெனைச்சிக்கிட்டு வாழ்க்கையை எல்லாரோடும் வாழ்ந்திட்டுப் போறதுதான் சரியான வழிமுறைன்னு என் மனசுக்குப் படுது... ஸோ - உங்க அப்பாவோட ஃபேஸ் வீட்ல எதுவா இருந்தாலும் அதை ஃபேஸ் பண்ணிட்டுப் போயிட்டே இருங்க தியாக ராஜன்... அப்ப - உங்க அப்பாவோட ஃபேஸும் மாறிடும்...! அதுக்கு அப்புறம் உங்க எல்லாரோட வாழ்க்கையின் ஃபேஸும் ரொம்ப அழகானதா மாறிடும்...! உங்களை வாழ்த்தறதுக்கு நிஜமா எனக்கு வயசு கிடையாது! இருந் தாலும் வாழ்த்தறேன் - விஷ் யு ஏ வெரி ப்யூட்டிஃபுல் ஃப்யூச்சர்... வெரி ப்யூட்டிஃபுல் லைஃப்...''

''தேங்க் யு... தேங்க் யூ வெரிமச்...'' தியாகராஜன் மிகவும் உணர்வுப் பெருக்குடன் கைகுலுக்கினார்.

''ஸோ, நவம்பர் ரெண்டாம் தேதி லாட்ஜ்ல பாப்போம்...'' என்றேன்.

''ஷ்யூர்... அதுக்கு முன்னாடி ஒரு விஷயம்...'' - தியாக ராஜன்.

''சொல்லுங்க...''

''மணி ஒன் தேர்ட்டி ஆயிடுத்து... வாங்கோ - ராம கிருஷ்ணா லஞ்ச் ஹோம்ல போய் சூடா ஏதாவது டிபன்



சாப்பிடலாம். டிபன் சாப்பிட்டுட்டுப் போங்கோ...'' நான் ஒரு நிமிஷம் யோசித்தேன். நான் காலையில் டிபனும் மதியம் சாப்பாடும் சாப்பிடுபவன்... தியாகராஜன் இப்போது டிபன் சாப்பிடக் கூப்பிடுகிறார். யோசனை எனக்கு ஒரே ஒரு நிமிடம்தான்... ''ஓகே... வாங்க போலாம்...'' என்று சொல்லிவிட்டேன். அன்று பகல்; கூட்டம் குமுறிப் போய் கிடந்த ராமகிருஷ்ணா லஞ்ச் ஹோமில் தியாகராஜனின் விருந்தாளியாக டிபன் சாப்பிட்டுக்கொண்டிருந்த நேரத்தில் அதற்கு முந்தின தினம் நாதமுனி அய்யருடன் சாமாஜி மெஸ்ஸில் சாப்பிட்ட இரவுச் சாப்பாடு என்னுடைய ஞாபகத்தில் ஒரு புதுக் கவிதையாகக் காட்சி தந்தது...

## 15

நவம்பர் இரண்டாம் தேதிக்கு முன்பான அந்த ஆறு நாட்களும் எனக்கு மிக வினோதமாக இருந்தன. இறுதிக் காட்சியை மட்டும் எதேச்சையாகப் பார்த்துவிட்ட ஒரு புதிய திரைப்படத்தின் அதற்கு முந்தைய பார்க்காத காட்சிகளின் மத்தியில் உட்கார்ந்திருக்கின்ற நூதனமான பிரமையில் அந்த ஆறு நாட்களும் இருந்தேன். நாதமுனி அய்யரும் அதே போல வேறொருவிதமான மாறிய இரட்டை முகத்துடன் அந்த ஆறு நாட்களும் இருந்துகொண்டிருந்தார். என்னுடன் மிகப் புதிய நட்பும் அவருடைய ஒரு மனதில் ஏற்பட் டிருந்தது. சாமாஜி மெஸ்ஸில் சாப்பிட்டுவிட்டு வந்த இரவு மனசு தாங்காமல் என்னிடம் கட்டுப்பாடுகளை இழந்து பல விஷயங்களை வெளியிட்டுவிட்டோமே என்ற தாமதமான தர்மசங்கடத்தில் வேறொருவிதமான புதிய இறுக்கமும் அவரின் மற்றொரு மனதில் தோன்றி இருந்தது. இதனால் புதிரான ஒரு குழப்பத்தில் இருந்தார்.

எனக்கும் அந்த ஆறு நாட்கள் நாதமுனி அய்யரிடம் ஒரு தர்மசங்கடம் புதிதாக ஏற்பட்டிருந்தது. இரவு சாப்பிடு

வதற்காக சாமாஜி மெஸ்ஸுக்குக் கிளம்புகிறபோது ஒரு மாதிரியாக இருக்கும் எனக்கு. வழக்கமாக அவர் சீக்கிரமாகச் சாப்பிட்டுவிட்டு வந்து, நான் சாப்பிடக் கிளம்பும்போது அறையில் இருப்பார்... அதேபோல் அந்த ஆறு நாட்களும் நாதமுனி அய்யர் நான் சாப்பிடக் கிளம்பின நேரம் அறையில் தான் இருந்தார். சாப்பிட்டுவிட்டு வந்துவிட்டவரை மறு படியும் சாப்பிட வருகிறீர்களாவென்று சும்மா மரியாதைக்குக் கூடக் கேட்க முடியாது. மீறி அப்படிக் கேட்டால் - அது பொய். அந்தப் பொய்யும் எனக்கு வராது... அதற்காக அவர் கணபதி மெஸ்ஸுக்கு சாப்பிடக் கிளம்பும்போதே, பரவா யில்லை - இன்று என்னுடன் சாப்பிட வாருங்கள் என்று சொல்வதும் ஏதோ ஒருவித செயற்கையாகத் தோன்றியது. -

இப்படி அந்த ஆறு நாட்களும் நாங்கள் இருவருமே ஒருவித சிக்கலான அந்நியத்தனத்தோடு ஒருத்தரை ஒருத்தர் முகம் பார்த்துக்கொண்டிருந்தோம்... - அந்தச் சிக்கலில் இருந்து விடுபடப்போகும் நவம்பர் இரண்டாம் தேதிக்காக நான் மட்டும் மனதிற்குள் காத்துக்கொண்டிருந்தேன் - தியாக ராஜனை சந்தித்த சந்திப்பின் இறுதியில் அவர் அவருடைய மனைவியைப் பற்றியும், தகப்பனார் நாதமுனி அய்யரைப் பற்றியும் சொன்ன பற்பல தகவல்களையும் நினைத்துப் பார்த்துக்கொண்டே...

அதற்குள் அந்த நவம்பர் இரண்டாம் தேதியும் வந்து விட்டது. அன்றைய பொழுது விடிந்தபோது நாதமுனி அய்யருக்கு அது மற்றும் ஒரு லாட்ஜ் தினம்தான். ஒரு சாப்பாட்டு டிக்கெட்டை எடுத்துக்கொண்டு கணபதி மெஸ்ஸுக்கு பிடிக்காத சாப்பாட்டைச் சாப்பிடப் போகிற மற்றும் ஒரு இம்சையான நாள்தான்... நான்தான் ரயிலுக் காகக் காத்திருக்கும் பயணி மாதிரி அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். இத்தனைக்கும் ரயில் வந்ததும்



மூட்டையைக் கட்டப்போகிற பயணி நாதமுனி அய்யர்தான்! இது அந்தப் பயணிக்கே தெரியாது! நான் அந்தப் பயணியை வழியனுப்பி வைக்கப் போகிற புதுவிதமான (அறை) நண்பன்...! நினைக்க நினைக்க எனக்கே ஒருவித சோக மாகவும் கருணையாகவும் இருந்தது.

மானிட வாழ்க்கை இப்படியெல்லாம்தான் செல்லும் போலும். யாரும் யாரோடும் நீண்ட காலம் இணைந்திருக்க முடியாது. என் அறை நண்பர் என்ற நிலையில் இருந்து நாதமுனி அய்யர் பிரிந்து போகும் நவம்பர் இரண்டாம் தேதி சீக்கிரமாகவே வந்துவிட்டது. எப்போதும் இரண்டாம் தேதி சாயந்தரம் ஆறு மணி அளவில் வரும் தியாகராஜன் அன்று மாலை நாலரை மணிக்கே வந்து விட்டார். நாதமுனி அய்யருக்கு அதுவே ஆச்சர்யத்தைத் தந்தது. ஆனால் இந்தச் சின்ன ஆச்சரியம் அடுத்து வந்த பெரிய ஆச்சரியத்தில் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது. நாதமுனி அய்யரால் அவருடைய காதுகளையே நம்ப முடியவில்லை. உடனே பெட்டிப் படுக்கையை எடுத்துக்கொண்டு கிளம்பு; அறையைக் காலி பண்ணிவிட்டு வீட்டுக்குப் போய் விடலாம் என்று மகன் சொன்னதைக் கேட்ட அவரால் ஆச்சரியத்தைத் தாங்க முடியவில்லை.

''நெஜமாவாடா சொல்றே தியாகு?'' - என்று சந்தேகத் துடன் கேட்டார்.

''நெஜமாவேதான் அப்பா... லாட்ஜ்ல நீ இருந்த தெல்லாம் போறும்... இதோ - அட்வான்ஸ்ல இந்த மாத வாடகையைக் கழிச்சுக்கச் சொல்லிட்டு - பேலன்ஸ் அமௌண்ட்டை வாங்கிண்டு வந்திட்டேன். ரெண்டு மாச மாவே ஆத்ல நானும் காமாட்சியும் இதைப் பத்தியேதான் யோசிச்சிண்டு இருந்தோம்... ஏதோ நீ இப்படி கொஞ்ச நாள் தனியா ஒரு ரூம்ல இருக்கட்டும்னு தோணித்து. அதுக்காக

ஆயுசுக்கும் நீ இங்கேயே இருக்கணும்னு அவசியம் கிடை யாது. இன்னைக்கே உன்னை ரூமைக் காலி பண்ணி ஆத்துக்கு அழைச்சிட்டுப் போயிடலாம்னு முடிவு பண்ணிட்டேன். - நல்லவேளை; உன் ரூம்மேட் ராம்மோஹனும் ரூம்ல இருக் கார்! வசதியாப் போயிடுத்து! அவராண்டையும் சொல்லிட்டுக் கௌம்பிடலாம் நீ! உனக்கு ராம்மோஹன் ரூம்மேட்டா கிடைச்சதுதான் பெரிய விஷயம். ஆத்து மனுஷராட்டம் உன்னை அவர் பார்த்திண்டார்! மிஸ்டர் ராம்மோஹன்; நான் சொல்றது சரிதானே...?''

தியாகராஜனிடம் இருந்து சரளமாக வெளிப்பட்ட இந்த அர்த்தமுள்ள - அதே நேரம் ஒரு நாடகத்தனமான வெளிப்பாடு என்னைக் கொஞ்சம் அசர வைத்துவிட்டது. உடனே எப்படி மாறி விடுகின்றன மனித முகங்கள்... நாதமுனி அய்யர் மகனின் வெளிப்பாட்டைப் பரிபூர்ணமாக ஏற்றுக்கொண்டார்.

''தியாகு - லட்சத்தில ஒரு வார்த்தை நீ சொன்னது - ராம்மோஹன் மட்டும் இல்லேன்னா நான் இங்கே இந்த ரெண்டு வருஷம் தாக்குப் பிடிச்சிருக்க முடியாது. நெஜமாவே என்னை அவர் ஆத்து மனுஷராட்டம்தான் பாத்திண்டார். அவருக்கு நாம எல்லாருமே தேங்க்ஸ் சொல்லணும்...'' என்று மனநிறைவுடன் சொன்னார்.

உடனே தியாகராஜன் எனக்கு நன்றி சொன்னார். நாதமுனி அய்யரிடமும் மன்னிப்புக் கேட்கிற மாதிரி தன் வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டார். ''நானோ காமாட்சியோ உன் மனசு நோகும்படி நடந்திருந்தா - அதையெல்லாம் மனசில வச்சிக்காதே... மறந்திடு எல்லாத்தையும். இனிமே நீ இருக்கறவரை நன்னா இருக்கணும் - சந்தோஷமா இருக் கணும் - அதான் என்னோட ஆசையும் காமாட்சியோட ஆசையும்.''



உடனே நாதமுனி அய்யரும் மனம் நெகிழ்ந்து பேசி னார். ''எனக்கு மட்டும் என்னடா தியாகு... நானும் இந்த நிமிஷமே எல்லாத்தையும் மறந்திட்டேன். ஏதோ போறாத காலம் - ஆளுக்கொரு பக்கமா நின்னுண்டு இருந்தோம். இனி என் மிச்ச காலம் பூராவும் - எங்கே இருந்தாலும் நாமெல்லாம் ஒண்ணாவே இருப்போம்... இருபதே இருபது நிமிஷம் இரு. எல்லாத்தையும் எடுத்து வச்சிண்டு இதோ கிளம் பிடறேன்...''

நாதமுனி அய்யர் அவருடைய பொருட்கள் ஒவ்வொன் றையும் சேகரித்து கிளம்பத் தயாராகும்வரை நானும் தியாக ராஜனும் ஒருவித செயற்கைத்தனத்தோடு உரையாடிக் கொண்டிருந்தோம். சிற்சில நொடிகள் இருவரும் ஒருத்தரை ஒருத்தர் மௌனமாக அர்த்தத்துடன் பார்த்துக்கொண்டோம். தியாகராஜன் என்னை அவருடைய வீட்டுக்கு ஒருமுறை அவசியம் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவருடைய அப்பாவை மறந்துவிடக்கூடாது என்றார். என்னை அவரின் குடும்பத்தார் மறக்கவே மாட்டார்கள் என்றார். - இதற்குள் நாதமுனி அய்யர் பெட்டி படுக்கையோடு கிளம்ப 'ரெடி'யாகி விட்டார். தியாகராஜன் என்னுடன் கை குலுக்கினார். அவருடைய அப்பாவின் பெட்டியைத் தன் கையில் எடுத்துக் கொண்டார். நாதமுனி அய்யர் தியாக ராஜனிடம் சொன்னார் : ''தியாகு - நீ வாசல்ல போய் இரேன்... நான் ராம்மோஹன்கிட்டே ரெண்டே ரெண்டு வார்த்தை தனியாப் பேசினதும் வந்திடறேன்...''

தியாகராஜன் என்னிடம் விடைபெற்றுக்கொண்டு வாசலுக்குக் கிளம்பிப் போனார். மறு வினாடியே நாதமுனி அய்யர் மன நெகிழ்வுடன் என்னுடைய கைகளைப் பிடித்துக் கொண்டார். தழுதழுத்த குரலில் சொன்னார் : ''நிஜமா நான் இதை எதிர்பார்க்கலை ராம்மோஹன் - என் பிள்ளை இப்படி திடீர்னு மனசு மாறி என்னை ஆத்துக்கு அழைச்சிட்டுப்

போயிடுவான்னு... நிஜமா இது நம்பவே முடியாத மாற்றம் அவன்கிட்டே... எல்லாம் உங்ககிட்டே போன வாரம் மனசைத் திறந்து கொட்டினதுதான் காரணம்... உடனே பகவான் கண்ணைத் திறந்திட்டார். நெனைச்சுப் பார்க்க முடியாத அளவுக்கு என் பிள்ளை மனசையும் என் மாட்டுப் பெண் மனசையும் மாத்திட்டார் பகவான்... அன்னைக்கி மட்டும் என்னை நீங்க சாமாஜி மெஸ்ஸுக்கு சாப்பிட அழைச்சிட்டுப் போகாம இருந்தேள்னு வச்சுக்கோங்கோ - நானும் என் மனசைத் திறந்து உங்ககிட்டே கொட்டியிருக்க மாட்டேன்... என் பேச்சும் பகவான் காதுல விழுந்திருக்காது. அந்த ஒரே ஒரு பேச்சுல என்னோட பிரச்னை முடிவுக்கு வந்திடுத்து. உங்களை நான் மறக்கவே மாட்டேன் ராம் மோஹன்... லைஃப் லாங் மறக்க மாட்டேன்... கண்டிப்பா எங்காத்துக்கு நீங்க ஒருநாள் வரணும்... அதுவும் சாப் பிடறாப்போல வரணும்... கௌம்பறேன் நான்... உங்களுக்கு என் ஆசிர்வாதங்கள்...''

நாதமுனி அய்யர் அறையை ஒருமுறை சுற்றிலும் பார்த்துக்கொண்டபின் என்னிடம் பிரியா விடை பெற்றுக் கொண்டார். நான் வாசல் வரை போய் அவரையும் தியாக ராஜனையும் வழியனுப்பி வைத்தேன். மிக சீக்கிரமாக இருட்டத் தொடங்கி இருந்த அந்த நவம்பர் மாத மாலை நேரத்தில் அவர்கள் இருவரும் பஸ் ஸ்டாப் நோக்கி மெது வாக நடந்து கொண்டிருந்தார்கள். நாதமுனி அய்யர் மட்டும் ஒருமுறை என்னைத் திரும்பிப் பார்த்துக் கையை அசைத்தார்.

## 16

எனக்குப் பெரிய ஆச்சர்யம். நாதமுனி அய்யருக்கு நான் அவருடைய மகனைப் போய் பார்த்துப் பேசியிருக்க வேண்டும்; அதனால்தான் மகன் தியாகராஜன் இந்த



முடிவுக்கு வந்திருக்க வேண்டும் என்ற கடுகளவு சந்தேகம் கூட அவரின் மனசில் ஏற்படவில்லை. அதுதான் என்னை மிகவும் நெகிழ வைத்தது... துயரமும் துர்பாக்கியமும் இணைந்த ஓர் நாடகம் எனக்கு மிகவும் அருகில் நடந்து சுபமாக முடிந்துவிட்டிருந்தது. மூன்று மாதங்களுக்குப் பிறகு நாதமுனி அய்யரைப் பார்த்துவிட்டு வருவதற்காகப் பழைய மாம்பலத்தில் இருந்த அவருடைய வீட்டிற்குப் போய் வந்தேன்... ரொம்பவும் அவர்கள் வற்புறுத்திச் சொன்னதால் அவர்களின் வீட்டில் சாப்பிட்டுவிட்டும் வந்தேன். - அதற்குப் பிறகு நான் நாதமுனி அய்யரைப் பார்க்கவும் இல்லை. எதுவும் அவரைப் பற்றிக் கேள்விப் படவும் இல்லை.

இப்படித்தான் நடந்து விடுகின்றன வாழ்க்கையில். புதிய மனிதர்களின் சந்திப்புகள் நிகழ்வதும், பழகிய மனிதர்களைப் பிரிவதும் மாறிமாறி ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அதேபோல் வாழும் இடங்களும் வேறாகி விடுகின்றன. சூழ்நிலைகளும் அதனால் மாறிப் போகின்றன. தொடர்ந்து பல வருடங்கள் திருவல்லிக்கேணியில் அந்த லாட்ஜில் இருந்த நான் திருமணத்திற்குப் பிறகு கோடம் பாக்கம் வந்துவிட்டேன். நாதமுனி அய்யர் உட்பட - லாட்ஜ் வாழ்க்கையின் பல சம்பவங்களும் அதன் மூலம் கிடைத்த அனுபவங்களும் என் நினைவில் இருந்து அகன்றுகொண்டே வந்தன. காலம் சில ஞாபகங்களை முழுவதுமாகவே அழித்து விட்டது.

முப்பது வருடங்கள் ஓடிப் போய் விட்டன இப்படியே... எனக்கே இப்போது வயது அறுபதாகி விட்டது! வாழ்க்கையின் மாலை நேரத்திற்கு முதுமை என்னைக் கொண்டுவந்து நிறுத்தி இருக்கிறது! அதிகமாக வீட்டை விட்டு வெளியேறாமல் படிப்பதிலும் எழுதுவ திலும் ஈடுபட்டு இருக்கிறேன். வீட்டில் அமர்ந்தபடியே

நண்பர்களைச் சந்திக்கிறேன். ஏதேனும் விசேஷங்கள் நடக்கும்போது போக வேண்டிய இடங்களுக்குப் போய் வருகிறேன். எப்போதேனும் அவசியத்தின் பொருட்டு திருவல்லிக்கேணிப் பக்கம் போக நேரிடும்போது அதைச் சார்ந்த பல ஞாபகங்கள் பொதுவாகவும், சில ஞாபகங்கள் குறிப்பாகவும் மனதிற்குள் வந்து போகுமே தவிர, வேறு எந்தப் பிணைப்பும் அந்தப் பகுதியோடு கிடையாது.

அந்தத் திருவல்லிக்கேணிக்கு நான்கு நாட்களுக்கு முன்பு என் மைத்துனர் சேஷாத்ரி ராஜாவின் மாமனார் எம்.கே.வரதாச்சாரி அவர்களின் ஷஷ்டியப்த பூர்த்தி விழா பார்த்தஸாரதி கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கும் சத்திரம் ஒன்றில் நடந்தபோது என் மனைவி ஹேமாவுடன் போகும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. முகூர்த்தம் முடிந்து, பிற சம்பிர தாயங்களும் விருந்துணவும் ஆகி நாங்கள் விடை பெற்றுக் கொண்டு கோயிலை ஒட்டிய நீண்ட சாலையில் மெதுவாக நடந்துகொண்டிருந்தோம். வானத்தில் நிறைய கிளிகள் சிற கடித்துக் கொண்டிருந்தன. அப்போது சாலையில் தூரத்தில் எனக்கு நேர் எதிராக வயதான மனிதர் ஒருத்தர் மெல்ல நடந்து வந்து கொண்டிருந்தார். தெரிந்த ஒரு சாயலை அந்த வயதானவரிடம் உணர்ந்துகொள்ள முடிந்த எனக்கு உடனே முழுமையாகவும் உணர்ந்து விட முடியவில்லை. ஆனால் அந்த உணர்வு - மிகக் குறுகிய நிமிடம்தான். அடுத்த நிமிடம் எனக்குள் பரிச்சயமான நட்சத்திரம் பளீரென ஒளிர்ந்தது. முப்பத்திரண்டு வருடங்களுக்கு முன்பு நாதமுனி அய்யர் எத்தகைய முதுமையில் எப்படிப்பட்ட தோற்றத்தில் எனக்கு அறிமுகமானாரோ - ஏறக்குறைய அதே முதுமையின் வடிவத்தில் இருந்தார் எனக்கு எதிரில் வந்தவர். ஊன்றிக் கவனித்ததில் ஊர்ஜிதமாகிவிட்டது. அவர் நாதமுனி அய்யரின் மகன் தியாகராஜன்! பார்ப்பதற்கு அச்சு அசலாக அப்பாவின் மறுபிரதியாக இருந்தார்...



அளவற்ற மகிழ்ச்சியோடு நான், அவரை ''ஹலோ மிஸ்டர் தியாகராஜன்'' என்று உரத்தக் குரலில் கூப்பிட்டேன். அவர் பாவம் - நான் யார் என்று தெரியாமல் விழித்தார். உடனே நான் என்னுடைய பெயரைச் சொன்னேன். கொஞ்சம் யோசித்தார். அவருடைய அப்பாவுடன் திருவல்லிக்கேணி லாட்ஜில் 'ரூம்மேட்'டாக இருந்ததைச் சொன்னேன். உடனே என்னை அடையாளம் தெரிந்து தியாகராஜன் பரவசமாகி விட்டார். அவசரமாக எனக்கு 'நமஸ்காரம்' சொன்னார். நான் என் மனைவியை அவருக்கு அறிமுகம் செய்தேன். தியாகராஜன் மிகுந்த மனமகிழ்வோடு என்னிடம் பேசினார். வங்கிப் பணியில் இருந்து அவர் ஓய்வு பெற்று விட்டு எட்டு வருடங்களாகி விட்டனவாம். பதினைந்து வருஷங்களுக்கு முன்பு நங்கநல்லூரில் சொந்த ஃப்ளாட் எண்ணூறு சதுர அடியில் வாங்கி குடியேறிவிட்டாராம். அவருடைய இரண்டு மகள்களும் கல்யாணமாகி அமெரிக்காவில் ஒருத்தியும் ஆஸ்திரேலியாவில் ஒருத்தியுமாக அவர்களின் குடும்பத் தோடு இருக்கிறார்களாம்...

இப்படி இன்னும் சில தகவல்களையெல்லாம் தெரி வித்து விட்டு தியாகராஜன் சிரித்துக்கொண்டே என்னைப் பார்த்துக் கேட்டார் : ''இப்பவும் நான் நங்கநல்லூர்லே தான் இருக்கேன். அங்கே என்னோடேயும் என் ஒய்ஃப் காமாட்சியோடும் ஆத்ல இருக்கறது யார் சொல்லுங்கோ ராம்மோஹன் பார்க்கலாம்...''

எனக்கு ஊகிக்க முடியவில்லை. பதில் சொல்லாமல் மந்தஹாசத்துடன் அவரைப் பார்த்தேன். சில விநாடிகள் கழித்து சிரிப்புடன் சொன்னார் தியாகராஜன். ''நங்கநல்லூர் ஆத்ல எங்ககூட இப்பவும் எங்க அப்பாதான் இருந்திண்டு இருக்கார்! வயசு அப்பாவுக்கு இப்போ நூத்தி ஒன்னு...!''

செய்தியைக் கேட்டதும் நான் பிரமித்துப் போய் விட்டேன். பெரும் இன்ப அதிர்வாக இருந்தது. நாதமுனி அய்யர் இப்போதும் தீவிர நோய் நொடி எதுவும் இல்லாமல் அதீத முதுமையின் கனிவில் - மலர் ஒன்றின் சருகுபோல இருந்து கொண்டிருக்கிறாராம்... கடந்த காலத்தின் பல சம்பவங்களின், மனிதர்களின் ஞாபகங்கள் அவரின் நினைவில் இருந்து அழிந்து போய் விட்டனவாம்... என்னைப் பற்றிய ஞாபகம்கூட இப்போது அவருக்கு இருக்குமா என்பது சந்தேகம்தானாம். இருந்தாலும் நாதமுனி அய்யரைப் பார்க்கக் கட்டாயம் நங்கநல்லூர் வீட்டுக்கு தியாகராஜன் என்னைக் கட்டாயம் வரச்சொன்னார். என் மனைவியையும் அழைத்துவரச் சொன்னார்.

விலக முடியாத பிரமிப்பில் நின்றுகொண்டிருந்த எனக்கு பேச்சே வரவில்லை. எனக்குத் தெரிந்த ஒரு மனிதர் நூறு வயதைத் தாண்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்ற ஆச்சர்யத்தில் இருந்து விடுபடவும் முடியவில்லை. என் ஞாபகத்தில் முப்பது வருடங்களுக்கு முற்பட்ட நாதமுனி அய்யர் சம்பந்தமான சம்பவங்கள் மிக வேகமாக வந்து போயின. எத்தனை சீக்கிரம் வர முடியுமோ அத்தனை சீக்கிரம் தியாகராஜனின் நங்கநல்லூர் வீட்டுக்கு வருவதாகக் கூறினேன். நாதமுனி அய்யரை ஒரு முறை பார்த்தே ஆக வேண்டும் என்பதைத் திரும்பத் திரும்பச் சொன்னேன். சில நிமிடங்களுக்குப் பிறகு தியாகராஜனிடம் விடை பெற மனதே வராமல் விடை பெற்றுக்கொண்டேன்...

சரேலென என் வாழ்க்கை மாலை வேளையில் இருந்து பட்டப்பகல் நேரத்திற்குத் திரும்பிவிட்ட மாதிரி இருந்தது! இனம் தெரியாத பரவச உணர்விலேயே மிதந்து கொண்டிருந்தேன். இன்னும் மூன்று நாட்களில் நாதமுனி அய்யரைப் பார்க்க நங்கநல்லூர் போக இருக்கிறேன். நூற்றியொரு



வயதில் இருக்கும் என் அந்தக் கால அறை நண்பரைக் கட்டாயம் போய் நான் பார்த்தே ஆக வேண்டும். பேச வேண்டும் அவருடன். என்னை அவருக்கு அடையாளம் தெரியவில்லையென்றாலும் பரவாயில்லை. என் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் எதையும் அவருக்கு ஞாபகப்படுத்த முடியாவிட்டாலும் பரவாயில்லை. மீண்டும் என் வாழ்க்கையில் நாதமுனி அய்யரைப் பார்க்கும் சந்தோஷம் போதும் எனக்கு. ஒருவேளை, என்னை அவருக்கு அடையாளம் தெரிந்து, என்னோடு அறையில் இருந்த நாட்களும் கொஞ்சமாவது அவருக்கு ஞாபகம் வந்தால் - நாதமுனி அய்யரிடம் மிக மகிழ்ச்சியோடு சொல்வதற்கு காலத்தை வென்ற மற்றொரு விஷயமும் இருக்கிறது. என்ன தெரியுமா அந்த விஷயம்...? சொல்கிறேன். திருவல்லிக்கேணி சைடோஜி தெருவில் மாபெரும் புகழ்பெற்ற அந்த அறுசுவை சாமாஜி மெஸ் - இன்றும் அதே கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது - புதிய மூன்றாம் தலைமுறையின் கீழ்.

★

# 2. ஜென்ம பூமி

ஆறு இல்லாத ஊர். ஒரு கடற்கரை இல்லாத ஊர். அழகான மலைத்தொடர் இல்லாத ஊர். இப்படியெல்லாம் எனக்கு என்னுடைய ஊரைப் பற்றி அதிருப்திகள் உண்டு. ஆனால் அதை நினைத்து ரொம்பவும் நான் வருத்தப்பட்டதெல்லாம் கிடையாது. எங்கள் ஊரில் மரமே கிடையாது என்பதில்தான் அளவு இல்லாத வருத்தம் இருந்தது எனக்கு. கிட்டத்தட்ட நாற்பது தெருக்களை மட்டுமே கொண்டிருந்த எங்கள் ஊரின் வீடுகளிலும் சரி; வீதிகளிலும் சரி - மருந்துக்குக்கூட மரம் என்பதே கிடையாது. மரம் என்பதைப் பற்றிய சின்ன பிரக்ஞையாவது ஊர்க்காரர்கள் யாருக்காவது இருந்ததா என்பதே சந்தேகம்தான் எனக்கு. அதுவும் இல்லாமல் யார் வீட்டிலும் செடி கொடி மரம் என எதை வளர்க்கவும் இடமும் கிடையாது கொஞ்சமும்...

நான்கு வயதில் அம்மாவையும் ஏழு வயதில் அப்பாவையும் மரணம் என்பதின் மூலம் இழந்து விட்டிருந்த நான், என் அம்மா வழிப் பாட்டியோடு அவளுடைய வீட்டில் இருந்து கொண்டிருந்தேன். என்னையும் அவளையும் தவிர வீட்டில் வேறு யாரும் கிடையாது. சின்ன வயதில் அம்மாவையும் அப்பாவையும் இழந்து விட்டிருந்த என் மனதிற்குள் என் வயதை ஒத்த பையன்களை அவர்களின் அம்மா அப்பாவோடு பார்க்கும்போது - அந்தக் காட்சி எனக்குள் ஒருவிதமான உணர்வலைகளை ஏற்படுத்தும். ஆனால் அந்த அலைகள் மிகவும் பெரியதாக எழும்பி விடாதபடி பாட்டியின் அன்பும் உறவும் என் மனதை மிகவும் கவனமாக அரவணைத்துக் கொண்டிருந்தன. அதனால் பெற்றோர் இல்லாதது பெரிய தனிமை உணர்வு எதையும்



என் மனதில் ஏற்படாமல் பாட்டியின் அரவணைப்பு பார்த்துக் கொண்டது.

ஆனால் - என் தினசரி வாழ்க்கையின் அருகில் மரத்தின் சிறு நிழல்கூட இல்லாமல் இருந்தது - சொன்னால் கேட்பவர்களுக்கு நம்பமுடியாத மிகப் பெரிய தனிமை உணர்வை என் மனதில் ஏற்படுத்தி இருந்தது. ஒரு வருத்தத்தையும் கொடுத்திருந்தது. அந்த வருத்தத்தைக் கடுகளவாவது குறைத்துக் கொள்ளலாம் என்கிற எண்ணத்தில் கொஞ்சம் கொஞ்சம் வெயில் வருகிற வீட்டின் குறுகலான முற்றத்தில் மூன்று தொட்டிகளில் நான் சில செடிகளை வளர்த்து வந்தேன். ஆனால் மனதில் பெரிய பெரிய மரங்கள் வளர்க்க ஆசைப்பட்டுக்கொண்டு அதற்கு வழியில்லாமல் சின்னத் தொட்டிகளில் செடி வளர்ப்பது என்பது கடலுக்கு ஆசைப் பட்டவனுக்கு சின்னதாய் குளம் கிடைப்பது போலத்தான். இருந்தாலும் ஒன்றுமே இல்லாமல் போவதற்கு ஊமைப் பிள்ளை கிடைத்த அம்மாகாரி ஒருத்தியின் சின்ன ஊமை சந்தோஷம் போன்ற உணர்வோடு நான் இருந்தேன்.

ஆனால் இந்த ஊமை சந்தோஷ உணர்வெல்லாம் என்னுடைய பதினான்கோ பதினைந்தோ வயது வரைக்கும் தான். அதற்குப் பிறகு சின்ன பொம்மைகளைப்போல இருந்த தொட்டிச் செடிகளில் திருப்தி பெற்றுக் கொள்கிற பையனாகவே இருந்து கொண்டிருக்க முடியவில்லை என்னால். உயரமாக வளர்ந்த மரங்கள் எனக்குத் தேவைப் பட்டன. மரங்களின் நிழல்களுக்கு ஆசைப்பட்டேன். என் துரதிர்ஷ்டம் - எங்கள் ஊரில் மரங்கள் இல்லை. எந்தத் தெருவிலும் மரங்கள் இல்லை. யாருடைய வீட்டிலும் மரங்கள் இல்லை. என்ன செய்வதென்று தெரியவில்லை எனக்கு. இந்த வெறுமை உணர்வை யாரிடத்திலும் பேசிப் பகிர்ந்து கொள்ளவும் இவ்விஷயத்து அந்நியோன்னியம்

யாரோடும் இல்லை எனக்கு. என்னை இது சஞ்சலப்படுத்திக் கொண்டே இருந்தது.

எங்கள் ஊருக்கு வெளியே சிறிது தூரம் தள்ளி ஆங்காங்கு கருவேலம் மரங்கள் உண்டு. அவற்றில் ஊசி ஊசியாய் முட்களும் மஞ்சள் நிறத்தில் பூக்களும் இருக்கும். முட்கள் நிறைய இருப்பதால் கருவேலம் மரங்களை நெருங்கித் தொட்டு உறவாட முடியாது. அது தவிர ரொம்ப தூரம் தள்ளி இருக்கும் அருப்புக்கோட்டை போகிற சாலையின் இரண்டு பக்கத்திலும் பெரிது பெரிதாகப் புளிய மரங்கள் வரிசையாக இருக்கும். எப்போதாவது கமுதிக்கோ விளாத்திகுளத்துக்கோ பாட்டியுடன் பஸ்ஸில் போகும்போது பார்த்திருக்கிறேன். ஒரு பெரிய புளியமரத்தைப் பார்த்தபோது அதில் லட்சம் இலைகளாவது இருக்கும்போல் தோன்றியது. அதுவும் பஸ் போகிற நீண்ட சாலையில் பச்சைப் பசேல் என லட்சோப லட்ச இலைகளை பெரிய பெரிய வேறுவிதமான மயில் தோகைகளைப்போல விரிவாகக் கொண்டிருந்த அந்தப் புளிய மரங்களின் இரட்டை வரிசையைப் பார்க்கப் பார்க்க சந்தோஷமாக இருக்கும்.

ஆனால் அந்த மர வரிசையைப் பார்க்கிற வாய்ப்புக் கிடைப்பது ஆறு மாதங்களுக்கு ஒரு முறையோ ஏழு மாதங் களுக்கு ஒரு முறையோதான். அதற்கு மேல் அந்தப் பக்கம் பாட்டியுடன் பஸ்ஸில் போகிற சந்தர்ப்பம் வராது. அதே நேரம் மனசுக்கு ரம்மியமான பெரும் மரங்களைப் பார்க்க வேண்டுமானால் அருப்புக்கோட்டைக்குப் போகிற அந்த நெடுஞ்சாலைக்குத்தான் போயாக வேண்டும். வேறு எங்கும் அந்த மாதிரி மரங்கள் கிடையாது.

ஆனால் அருப்புக்கோட்டை போகிற நெடுஞ் சாலையை அடைய குறைந்தது ஒரு மைல் தூரமாவது நான் நடந்து சென்றாக வேண்டும். அந்த வயதில் அவ்வளவு



தூரத்திற்கு ஒரு நாளும் நான் நடந்து பார்த்தது கிடையாது. நடக்க முடியுமா என்பதும் தெரியாது. பஸ்ஸில் போக வேண்டிய வேலை வரும்போது வேறொரு முனை வரை பாட்டியுடன் மாட்டு வண்டியில் போய் இறங்கி, பிறகு பஸ் பிடிப்போம். அந்த இடத்தில் மரங்கள் கிடையாது. கருவேல மரக் காடுதான். சிறிது தூரம் பஸ் ஓடின பிறகுதான் அருப்புக்கோட்டை போவதற்கான பாதை பிரியும். புளியமர வரிசையும் ஆரம்பிக்கும்.

அந்தப் புளிய மரங்களின் வரிசை ஆரம்பிக்கின்ற இடத்திற்கு எப்படிப் போவது - மரங்களைப் பார்ப்பதற்காக? அதுதான் தெரியவில்லை. யோசனை பண்ணிப் பார்த்துக் கொண்டே இருந்தேன். பாட்டியிடம் சொல்லிவிட்டு அருப்புக் கோட்டை போகிற நெடுஞ்சாலைப் பக்கம் நான் போய் வருவது என்பது நடக்கமுடியாத விஷயம். அனுமதிக்கவே மாட்டாள் பாட்டி அதற்கு. என்னை அவள் பொத்திப் பொத்தி ரொம்ப ரொம்ப பாதுகாப்பாக வளர்த்துக்கொண்டிருந்தாள். கணவன், மகள், மருமகன் - இவர்களை மிக அற்ப வயசில் பறிகொடுத்திருந்த அவளுக்கு மரணத்தின் மேல் அளவு கடந்த பீதி இருந்தது. அதுவும் எனக்கு எதுவும் நேரிட்டு விடக்கூடாது என்ற அச்சமும் அக்கறையும் அவளுடைய மனதில் இருபத்தி நான்கு மணி நேரமும் கண் இமைக்காமல் இருந்து கொண்டிருக்கும்.

வீட்டின் மொட்டை மாடிக்குக்கூட என்னை ஏற விட மாட்டாள். தவறி நான் விழுந்துவிட்டால் என்ன பண்ணுவ தென்று பயப்படுவாள். எனக்கு கொசு வலைக்குள் படுத்துத் தூங்குவதென்பது பிடிக்கவே பிடிக்காத சமாச்சாரம். அது என்னேமா - கொசு வலைக்குள் படுத்தால் யாருமே இல்லாத உலகத்திற்குள் தனியாகப் படுத்துக் கிடப்பதைப் போல இருக்கும் - இத்தனைக்கும் கொசு வலைக்குள் பாட்டியும்

தான் எனக்குப் பக்கத்திலேயே படுத்திருப்பாள். கொசு வலை எனக்குத் துணியால் ஏற்படுத்திய ஜெயிலைப் போல இருக்கும். ஊரிலும் அப்படி ஆளைத் தூக்கிக்கொண்டு போகிற மாதிரியான கொசுப் பிரச்சினை இருந்ததாவென்று கேட்டால் - அதுவும் கிடையாது. இருந்தாலும் என்னமோ பயம் பாட்டிக்கு - கொசு கடித்து மலேரியா காய்ச்சல் வந்து விட்டால் என்ன பண்ணுவதென்று... அதே மாதிரி குடிக்கிற தண்ணீரை நன்றாகக் காய்ச்சி கொதிக்க வைத்து பின் அதை ஆற வைத்து வெண்கலப் பாத்திரத்தில் ஊற்றி வைப்பாள். அதைத்தான் நான் குடித்தாக வேண்டும்.

எப்போதும் சிறிது வெதுவெதுப்பாக இருக்கும் அந்தத் தண்ணீரைக் குடிப்பதற்கே பிடிக்காது எனக்கு. ஆனால் என்ன செய்ய முடியும்...? எதுவும் செய்ய முடியாது. காய்ச்சி கொதிக்க வைக்காமல் குடித்தால் பல நோய்கள் வரும் என்று பாட்டி அடித்துப் பேசுவாள். எதனாலும் எந்தச் சின்ன நோயும் வந்துவிடக்கூடாதே எனக்கு... அந்தப் பயம் பாட்டிக்கு. சரி - எனக்கு எந்த நோயும் வரக்கூடாதுதான். பாட்டியின் பயமும் நியாயமானதுதான். ஆனால் காய்ச்சிய நீரை எல்லா வீட்டிலும் போல மண்பானையில் ஊற்றி வைக்க வேண்டியதுதானே. ஏன் வெண்கலப் பாத்திரத்தில் கொட்டி வைக்க வேண்டும்...? சொன்னால் பாட்டி கேட்கவே மாட்டாள்.

மண்பானைத் தண்ணீர் அருந்துவது போன்ற குளிர்ந்த இதமான விஷயம் வேறு எதுவும் கிடையாது என்பது என் அபிப்பிராயம். பாட்டிக்கும் அதேதான் அபிப்பிராயம். ஆனால் மண்பானைத் தண்ணீர் குடிப்பதற்கெல்லாம் எனக்கு வயது இருபதுக்கு மேல் ஆகட்டும் என்ற மற்றொரு அபிப்பிராயமும் பாட்டிக்கு இருந்தது. அவளுடைய மகளுக்கு; அதாவது என்னுடைய அம்மாவிற்கு சின்ன வயதில் மண்



பானை தண்ணீர் குடித்தால் சேராதாம்! உடனே நெஞ்சில் சளி பிடித்துக் கொள்ளுமாம். மண்பானைத் தண்ணீர்தான் காரணம் என்பது தெரியாமல் அதனால் சின்ன வயதில் ரொம்ப நாள் என் அம்மா சளித் தொல்லையில் ரொம்பவும் கஷ்டப் பட்டிருக்கிறாளாம்... எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்த மாதிரி கஷ்டம் எதுவும் எனக்கு வந்துவிடக்கூடாதபடி பாட்டி ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கிறாளாம்.

பாட்டியின் இந்த ஜாக்கிரதையையும் அக்கறையையும் மீறி என்ன செய்ய முடியும் என்னால்... என்னால் முடிந்த தெல்லாம் என்னோடு பள்ளிக்கூடத்தில் ஒன்றாகப் படிக்கிற பையன்களின் வீடுகளுக்கு அவ்வப்போது விளையாடப் போகிறபோது அவர்களின் வீடுகளில் இருக்கும் குளிர்ந்த மண்பானைத் தண்ணீரை ஆசைதீரக் குடிப்பதுதான். இந்தத் தண்ணீர் குடிக்கிற விஷயத்தில் என்னிடம் வழக்கம் ஒன்று இருந்தது. எப்போது தண்ணீர் குடித்தாலும் சரி 'பக்கி' மாதிரி அவசர அவசரமாக மடக் மடக்கென்று வேகமாகக் குடிப்பேன். அதனால் அந்த குடிக்கிற வேகத்தில் தண்ணீரை சட்டை யெல்லாம் கொஞ்சம் வழியவிட்டு ஈரமாக்கி விடுவேன். தண்ணீரை நின்று நிதானமாகக் குடிக்க மாட்டேன். ஆனால் யாருடைய வீட்டிலோ மண்பானைத் தண்ணீரைக் குடிக்கிற போது மட்டும் ரொம்ப உஷாராக இருப்பேன்.

தண்ணீரை எவ்வளவு மெதுவாக நிதானமாகக் குடிக்க முடியுமோ அவ்வளவு நிதானமாக மெதுவாக ஒரு சொட்டுத் தண்ணீர் கூடச் சட்டையில் வழிந்து ஈரமாகி விடாமல் ஜாக்கிரதையாகக் குடிப்பேன்! ஏனென்றால் வீட்டுக்கு நான் வரும்போது என் சட்டையில் ஒரு எட்டணா காசு அளவுக்கு ஈரம் தெரிந்தால் கூட பாட்டியின் நாலணா காசு அளவு இருக்கும் கண்கள் பார்த்துவிடும்! அப்புறம் கொஞ்சம் நேரம் விளையாடக்கூட என்னை எந்தப் பையனு டைய வீட்டிற்கும் போகவிட மாட்டாள் அவள்... அப்புறம்

நான் பெரிய கொசுவலை போல இருக்கும் என்னுடைய வீட்டிற்குள்ளேயேதான் இருக்க வேண்டியிருக்கும் இருபத்தி நான்கு மணி நேரமும்...

இத்தனையையும் எதற்காகச் சொல்கிறேனென்றால் - என் பாட்டிக்கு என் மேல் இருக்கும் அக்கறையும் பாசமும் எப்படிப்பட்டது என்பதை விளக்குவதற்காகத்தான். வீட்டின் மொட்டை மாடியில்கூட ஏற அனுமதிக்காத இந்தப் பாட்டியிடம் சொல்லிவிட்டு எப்படி ஊருக்கு வெளியே எங்கேயோ இருக்கும் அருப்புக்கோட்டை நெடுஞ்சாலையின் புளிய மர வரிசையைப் போய் நான் பார்க்க முடியும் என்பதைக் காட்டுவதற்காகவும்தான். ஆனால் நாட்களும் மாதங்களும் செல்லச் செல்ல அந்த உயரமாக வளர்ந்த புளிய மரங்களை நோக்கிச் செல்லாமல் இருக்க முடியவில்லை என்னால். மரங்கள் அதன் பழமையான கிளைகளாலும் பசுமையான கிளிப்பச்சை நிறமான இலைகளாலும் என்னைக் கூப்பிட்டுக் கொண்டே இருந்தன.

இந்த நேரத்தில் எனக்கு வயது பதினைந்து ஆகிவிட்டிருந்தது. விடுமுறை நாட்களில் பிற்பகலுக்குப் பிறகு பள்ளிக்கூட மைதானத்தில் போய் பந்து விளையாடிவிட்டு வருவதற்கு பாட்டி ரொம்ப நாள் நான் கெஞ்சியதற்குப் பிறகு அனுமதி கொடுத்திருந்தாள். இத்தனைக்கும் பந்து விளையாட்டில் பெரிய ஆர்வமெல்லாம் கிடையாது எனக்கு. நான் ஒருவிதத்தில் தனிமையானவன். ஏதோ ஒரு மாதிரியான மௌனமான என் உலகத்திற்குள் நான் மட்டும் இருந்து கொண்டிருப்பேன். மனிதர்களைவிட அன்றாட பரிவர்த்தனைகளுக்கு எனக்கு மரம் செடி கொடிகளின் நெருக்கமும் அன்னியோந்நியமும் இருந்தால் போதும். அதற்கு வழி இல்லாத வேறு தனிமைதான் இம்சை பண்ணிக்கொண்டிருந்தது என்னை.



அந்தத் தனிமைக்கு உடனே தேவைப்பட்டன அருப்புக் கோட்டை நெடுஞ்சாலையின் புளிய மரங்கள். அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யத்தான் பள்ளிக்கூட மைதானத்தில் போய் பந்து விளையாடப் போகிறேன் என்ற கண்துடைப்பு நாடகம்! அந்த நாடகத்தை இரண்டொரு வாரம் பாட்டிக்கு போட்டுக் காட்டிவிட்டு - பின் பந்து விளையாடப் போகாமல் ஒரே ஓட்டமாக நெடுஞ்சாலையின் புளிய மரங்களை நோக்கி ஓடவேண்டும் என்பதுதான் என்னுடைய ரகசியத் திட்டம். கொஞ்ச நேரம் எல்லாப் புளிய மரங்களின் பக்கத்திலும் நின்று ஆசை தீர அவைகளைப் பார்த்துவிட்டு வேகமாக ஓடி வந்து விடலாம் என்பது என்னுடைய எண்ணம். பாட்டிக்கும் தெரிவதற்கு வழி கிடையாது.

இந்த ரகசியத் திட்டத்தை ஒருநாள் நிறைவேற்றி விட்டேன். பள்ளிக்கூடத்தில் பந்து விளையாடப் போவதாகப் பாட்டியிடம் சொல்லிவிட்டு யாரும் பார்க்காத நேரத்தில் நூறு மைல் வேகத்தில் வேகமாக ஓடத் தொடங்கியவன் அந்த நெடுஞ்சாலையில் போய்த்தான் நின்றேன். எத்தனையோ தடவை பாட்டியுடன் பஸ்ஸில் போனபோது பார்த்த இடம் தான். பார்த்த மரங்கள்தான். ஆனால் அந்த இடத்தில் அந்த மண்ணில் நின்று மரங்கள் எல்லாவற்றையும் ரொம்பப் பக்கத்தில் பார்த்தபோது - இதுவரை பார்த்திராத புத்தம் புதிய உலகத்தைப் பார்ப்பதுபோல இருந்தது.

சாலையின் இரண்டு பக்க ஓரங்களிலும் புளியம் பூக்கள் உதிர்ந்து உதிர்ந்து மண்ணெல்லாம் ஒரு மாதிரியாக 'மெத்து மெத்து' என்று மிருதுவாக இருந்தது. மரக்கிளைகளின் ஊடே புகுந்து வந்த காற்றில்கூட புளியம் பூக்களின் வாசனை கலந்திருந்தது. மண்ணில் கிடந்த புளியம் பூக்கள் சிலவற்றை மெதுவாகக் கையில் எடுத்துப் பார்த்தேன். பெண்கள் காதுகளில் அணியும் அழகான காதணிகள் போல அவை இருந்தன. ஓடி ஓடி சில மரங்களைத் தொட்டுப்

பார்த்தேன். பக்கத்தில் நின்று மரங்களை அண்ணாந்து பார்த்தேன். எல்லாம் சேர்ந்து பெரிய பசுமையான பந்தல் போட்ட மாதிரி இருந்தது. அவசர அவசரமாக சில மரங்களில் சிறிது தூரம் ஏறிப் பார்த்து விட்டுக் குதித்து விட்டேன். அவ்வளவுதான்.

நேரம் வேக வேகமாக ஓடுவது போலிருந்தது. அவசரமாகக் கொஞ்சம் புளியம் பூக்களை அள்ளி சட்டைப் பையில் போட்டுக் கொண்டேன். திரும்பி வீட்டைப் பார்த்து ஓடத் தொடங்கி விட்டேன். வீடு போய்ச் சேர்ந்தபோது என் சட்டை பூராவும் வியர்வையின் ஈரம் நன்றாகத் தெரிகிற மாதிரி பரவிப் போயிருந்தது. பாட்டியைப் பொறுத்தவரை இந்த வியர்வை, பந்து விளையாடிவிட்டு வந்ததில் ஏற்பட்டது!

வீட்டிற்குள் போனதும் முதல் காரியமாய்ச் சட்டைப் பையில் இருந்த புளியம் பூக்களை பாட்டிக்குத் தெரியாமல் உடனே சின்ன டப்பா ஒன்றில் ஒன்றுவிடாமல் எடுத்துப் போட்டு ரகசியமாக ஒளித்து வைத்துவிட்டேன். தப்பித் தவறி சட்டைப் பையில் ஒரே ஒரு பூ இருந்துவிட்டால்கூட சட்டையைத் துவைக்கும்போது பாட்டி பார்த்துவிடுவாள். பிறகு என்னை அவள் ஆயிரம் கேள்விகள் கேட்டு துளைத்து எடுத்து விடுவதற்கு அந்த ஒரு புளியம் பூ போதும்...

அடுத்த சில நாட்களுக்கு புளிய மரங்களைப் போய் பார்த்துவிட்டு வந்திருந்த ஞாபகம் பூ வாசனையாக எனக்குள் மெல்லிசாகக் கமழ்ந்து கொண்டிருந்தது. ஆனால் ஆறு நாட்களுக்குத்தான் மானசீக பூ வாசனை போதுமானதாக இருந்தது. டப்பாவுக்குள் நான் வைத்திருந்த பூக்கள் வாடி காய்ந்து போன மாதிரி மானசீக வாசனையும் உலர்ந்து காணாமல் போய்விட்டது. அதனால் அடுத்த நாள் சாயந்தரம் நான்கு மணிக்கு அந்தப் புளியமரங்களின் கீழ் நின்று கொண்டிருந்தேன்.



முதல் நாள் செய்த மாதிரியே நிறைய மரங்களைத் தடவித் தொட்டுப் பார்த்தேன். ரொம்பவும் பிடித்த ஒரு மரத்தில் ஆசையுடன் ஏறினேன். ஏற கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. விடாமல் சிரமப்பட்டு ஏறினேன். ஒரு அளவுக்கு உயரமான கிளை வரை ஏறிவிட்டேன். போதும் என்று தோன்றியதால் அந்தக் கிளையிலேயே உட்கார்ந்துகொண்டேன். மரத்தின் பிரதான மையப் பகுதியில் சாய்ந்தபடி சுற்றிலும் பார்த்தபோது எனக்கு ஏற்பட்ட சந்தோஷத்திற்கு அளவே கிடையாது.

வாழ்க்கையின் பிடித்தமான உயரத்திற்கு உயர்ந்து விட்ட மாதிரி இருந்தது. இப்படி மரத்தின் மேலேயே இருந்து விட வேண்டும் என ஆசைப்பட்டேன். ஆங்காங்கு பல மரங்களில் இருந்தும் கேட்டுக்கொண்டிருந்த கிளிகளின் மைனாக்களின் சப்தங்கள் எனக்குப் புரியாத சங்கீதம் ஒன்றின் மொழியாக சீரான வெளியில் ஒலித்துக் கொண்டிருந்தன. இதையெல்லாம் கேட்டுக் கொண்டும் பார்த்துக்கொண்டும் வீட்டுக்குப் போகாமல் மரத்தின் மேலேயே உட்கார்ந்திருக்க வேண்டும் போலத்தான் இருந்தது. ஆனால் அது இயலாத சமாச்சாரம்.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை சின்ன கட்டிடம்கூட இல்லாத பூமியை ஒரு நிமிடம் ஆற்றாமையுடன் பார்த்து விட்டு முதல் நாள் மாதிரியே கொஞ்சம் புளியம் பூக்களை மண்ணில் இருந்து அள்ளிச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பிவிட்டேன். ஒரு வித்தியாசம் - முதல் நாள் மாதிரி வீட்டை நோக்கி ஓடவில்லை. ரொம்ப மெதுவாக நடந்தேன் - திரும்பித் திரும்பி புளிய மரங்களைப் பார்த்தபடி...

இந்த வழக்கம் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் மூன்று மாதங்களுக்கும் மேலாக இதமாகச் சென்று கொண்டிருந்தது. அந்தப் புளியமர வரிசையில் குறிப்பிட்ட ஒரு

தூரம்வரை நான் ஏறி உட்காராத மரம் அநேகமாக இருக்காது. எல்லா மரங்களுமே எனக்கு அன்னியோந்நியமாகி விட்டிருந்தன. எந்த மரத்தில் எத்தனைக் கிளைகள் என்பது கூட மனப்பாடமாகிப் போயிருந்தது. மரத்தின் கிளையில் உட்கார்ந்திருப்பது மிகவும் சௌகர்யமான, மிகவும் பிடித்தமான ஆசனம் ஒன்றில் அமர்ந்திருப்பது போன்ற உணர்வை எனக்குத் தரும். என் வீட்டின் மொட்டை மாடியில் இருப்பது போலக்கூட ஒருநாள் தோன்றியது. புளியமரம் எல்லாவற்றிலும் பூக்கள் மறைந்து சின்னச் சின்னதாய் இளம் பிஞ்சுகள் தொங்கின. கொஞ்ச நாட்களில் அந்தப் பிஞ்சுகள் எல்லாம் பருத்து நீண்ட காய்களாக மாறின. ஆனால் ஒருநாள் கூட மரத்தில் இருந்து ஒரு சின்ன காயைக்கூட நான் பறித்ததில்லை. பறிக்க வேண்டும் என்ற எண்ணமும் ஏற்பட்டதில்லை. இப்படிச் சென்றுகொண்டிருந்த புளியமர நாட்களின் இதமான நிலைக்கு ஒருநாள் பிரச்சினை வந்து சேர்ந்தது.

முதுகுளத்தூரில் இருந்து அருப்புக்கோட்டைக்கு ஒரு ஜோலியாக வந்த என் சித்தப்பா அப்படியே எங்கள் ஊருக்கு வந்து என்னையும் 'எப்படி இருக்கிறேன்' என எட்டிப் பார்த்துவிட்டுப் போயிடலாம் என்ற ஆசையில் அவருடைய காரில் புறப்பட்டு வந்திருக்கிறார். அவர் வந்தபோது நேரம் சரியாக நாலரை மணி. - நாலரை மணி என்பது என்னுடைய புளியமர நேரம்! ஆனால் பாட்டிக்கு அது நான் பள்ளிக் கூடத்தில் பந்து விளையாடும் நேரம்! சித்தப்பாவை உட்காரச் சொல்லிவிட்டு பாட்டி பக்கத்து வீட்டுப் பையனை அவசர அவசரமாகக் கூப்பிட்டு என்னை உடனே கையோடு அழைத்துக் கொண்டு வரும்படிச் சொன்னபோது தெரிந்து போய்விட்டது பாட்டிக்கு - நான் பந்து விளையாட வரவில்லை என்பது.

விஷயம் அது மட்டுமில்லை. ரொம்ப நாளாகவே நான் பந்து விளையாட வருவதில்லை என்ற உண்மையும்



உடனேயே தெரிந்துவிட்டது. பாவம் பாட்டி - அந்த நிமிஷம் அவளின் மனசு எப்படிப் பயந்து நடுங்கிப் போனதோ... இல்லையா பின்னே... ஒரு நிமிஷம்கூட அசராமல் பொத்திப் பொத்தி வளர்த்துக் கொண்டிருக்கும் ஒரே அருமைப் பேரன் இல்லையா? நடுங்காமல் என்ன பண்ணுவாள்... பாட்டி அழுதே புலம்ப ஆரம்பித்து விட்டாளாம். நான் எங்கேயும் இல்லை. யாருடைய வீட்டிலும் இல்லை. ஆள் ஆளுக்கு ஒரு திசையில் கிளம்பி விட்டார்கள் என்னைத் தேடி. அந்த நேரத்தில் சித்தப்பா இருந்தது பாட்டிக்கு வசதியாகப் போய் விட்டது. இன்னும் இரண்டு பேரை கூட்டிக்கொண்டு, பாட்டியையும் ஏற்றிக் கொண்டு காரில் கிளம்பி விட்டார் சித்தப்பா. அவருக்கும் எதிர்பாராத தேவையில்லாத பிரச்சினை இது. சும்மா பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தவருக்கு நேரம் சரியில்லை! அவரும் என்னைத் தேடி கிளம்பும்படி ஆகிவிட்டது!

சித்தப்பா வந்ததும் பாட்டிக்கு நல்லதாகப் போய் விட்டது. ஏதோ ஒரு நினைப்பில் அருப்புக்கோட்டை நெடுஞ் சாலைப் பக்கம் காரை மெதுவாக ஓட்டிக்கொண்டு சித்தப்பா வந்தபோது - ஒரு மரத்தின் உச்சாணிக் கிளையில் இருந்து மெல்ல நான் இறங்கிக்கொண்டிருந்தது அவரின் பார்வையில் பட்டுவிட்டது. முதலில் ஒரு நிமிஷம் சித்தப்பா என்னை குரங்கு என்று தப்பாக நினைத்திருக்கிறார்! அப்புறம் பார்த்தால் நான்...

அன்றோடு புளிய மரங்களில் ஏறும் என் நாட்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது. அதே நேரம் என்றோ ஒருநாள் ஆரம்பிக்கப் போகிற வேறொரு வாழ்க்கையின் முடிவு இல்லாத நாட்களின் மானசீக ஆரம்பத்திற்கான முதல் புள்ளியும் அடுத்த சில நாட்களில் இடப்பட்டது.

பாட்டி அப்படி கண்ணீர் வடித்து நான் பார்த்ததில்லை. அப்படியொரு புலம்பல் புலம்பியும் பார்த்ததில்லை.

நிஜமாகவே பாட்டி நடுங்கிப் போய்விட்டாள். பந்து விளையாடப் போவதாகப் பொய் சொல்லிவிட்டு ஊருக்கு வெளியே ரொம்ப தூரம் போய் தினசரி மரத்தில் ஏறித் தனியாக அமர்ந்திருந்தது பாட்டியைப் பயமடைய வைத்துவிட்டது. தினசரி இப்படிப் போய் மரத்தில் ஏறி ஆள் இல்லாத இடத்தில் உட்கார்ந்திருப்பானேன்... ஊருக்குள் விளையாட இடம் இல்லையா... பையன்கள் இல்லையா - விளையாட... மரத்தில் இருந்து கீழே விழுந்து வைத்தால் என்ன செய்வது? கையில் தலையில் ஏதாவது அடிகிடி பட்டால் பாட்டியின் கதி என்னவாகும்? என்ன குறை வைத்தாள் பாட்டி எனக்கு. இப்படி ஒரு காரியத்தையெல்லாம் செய்யலாமா நான்...

இனி ஒரு நாளும் இந்த மாதிரி வேலை எதையும் செய்யாமல் இருக்க வேண்டும் நான். குலதெய்வமான அய்யனார் சாமியின் மேல் 'இனி இப்படியெல்லாம் போய் எந்த மரத்தில் ஏறுகிற வேலையையும் வைத்துக் கொள்ள மாட்டேன்...' என்று என்னை பாட்டி சத்தியம் பண்ணித் தரச் சொன்னாள். சத்தியம் பண்ணிக் கொடுக்கப் பிடிக்கவில்லை எனக்கு. ஆனால் சத்தியம் பண்ணித் தராவிட்டாலும் பயப் படுவாள் பாட்டி. அதற்கும் ஒரு பயம் பயந்து அழுவாள். வேறு வழி இல்லாமல் அவளுக்கு சத்தியம் பண்ணிக் கொடுத்தேன் - மனதிற்குள் மானசீகமாக நெடுஞ்சாலையில் இருக்கும் மரங்களில் ஏறிக்கொண்டே...

பாட்டியின் புலம்பல் நின்றுவிட்டது. என் மனதிற்குள் ஓர் எண்ண ஓட்டம் ஓய்வில்லாமல் புலம்ப ஆரம்பித் திருந்தது. எண்ண ஓட்டத்தின் திசை சரம் சரமாக காய்கள் தொங்கும் புளிய மரங்களை நோக்கி என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. பாட்டியும் என் எண்ண ஓட்டத்தை உணர முடியாதவள் கிடையாது. என்ன ஆனாலும் சரி; என்னை நெடுஞ்சாலை மரங்களின் பக்கம் மட்டும் என்னைப் போக விடுவதாக இல்லை அவள். நான் அழுதே புலம்பினாலும்



கூட இந்த விஷயத்தில் பாட்டி கொஞ்சம்கூட இரக்கம் காட்டுவதாகவும் இல்லை. என்னுடைய மன சந்தோஷத்தை விட என்னுடைய உடம்புக்கும் உயிருக்கும் இருக்கின்ற பாதுகாப்புதான் பாட்டிக்கு முக்கியம்.

இதனால் பாட்டியின் மேல் எனக்குக் கோபமோ மனக்கசப்போ கிடையாது. ஆனால் வாழ்க்கையில் எனக்குப் புதிதாகத் திறந்திருந்த மரங்களின் பிரதேசம் என்னிடமிருந்து கத்தரிக்கப்பட்டு விட்டதில் என் மனதில் வலியையும் துக்கத்தையும் ஏற்படுத்திவிட்டது. கொஞ்ச காலம் புளிய மரங்களின் உயரத்திற்கு அழகாக உயர்ந்திருந்த என் வாழ்க்கை மீண்டும் உயரம் குறைந்த தாழ்வான வாழ்வுக்கு முடங்கிப்போனது தாங்க முடியாத துயரமாக இருந்தது. மரங்கள் வளர்ந்த விரிந்த பிரதேசத்திற்கு இடம் பெயர்ந்திருந்த என் அந்தச் சில மணி நேரங்கள் திரும்பவும் சுற்றிச் சுற்றி காங்க்ரீட் வீடுகளைக் கொண்ட குறுகலான தெருக்களுக்குள் பொருத்தப்பட்டு விட்டன. அதன் இறுக்கம் என்னைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருந்தது. அந்த இறுக்கம் பெரும் மௌனத்திலும் ஆழ்த்திவிட்டது என்னை. பறி கொடுத்து விட்டவன் எப்படி இருப்பானோ - அப்படி இருந்தேன். வீட்டில் நான் கலகலப் பாக இல்லை. பாட்டியுடன் சரியாகப் பேசவும் இல்லை.

இப்படி நான் இருந்தது ஒரு நாளைக்கு இரண்டு நாளைக்கு இல்லை. இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகியும் விலகாத இறுக்கத்தோடும் மன அழுத்தத்தோடுமே இருந்து கொண்டிருந்தேன். அதைப் பார்த்து பாட்டிக்குத் தாங்க முடியாத கஷ்டமாகிவிட்டது. என்ன இப்படி ஆகிவிட்டான் என்று மனவருத்தப்பட்டாள்.

''மரத்தில ஏறக்கூடாதுன்னு உன் நல்லதுக்குத்தானே தங்கச்சாமி சொல்றேன்?'' - என்று ஆதங்கத்தை அடக்கத் தெரியாமல் ஒருநாள் கேட்டு விட்டாள். அப்போது வயது எனக்கு பதினாறை நெருங்கிக்கொண்டிருந்தது. சரியான

வயதில் பாட்டிக்கும் எனக்கும் நடந்த சரியான உரையாடல் அது. பாட்டியிடம் நான் சொன்னேன் : ''அதென்னமோ மரங்களையெல்லாம் பார்த்தா - பார்க்கப் பார்க்க ஆசையா இருக்கு. என்னை என்ன பண்ணச் சொல்றே...?''

''எத்தினியோ பேருக்கு நெறைய மரங்களையும் புல் பூண்டுகளையும் பார்த்தா மனசுக்கு சந்தோஷமாத்தான் தங்கம் இருக்கும்... அதுக்காக இப்பிடி யாரும் மைல் கணக்கா நடந்துபோய் எந்த மரத்தையும் பாத்துக்கிட்டு நிக்க மாட்டான் - அதுவும் ஒத்தையில...''

''நானும் எல்லாரையும் மாதிரியே இருக்கணும்னு அவசியம் எதுவும் கிடையாது பாட்டி. இதை நீ தெரிஞ்சிக்க...''

''எல்லாரையும் மாதிரி இருந்தாத்தேன் நிம்மதி தங்கம்...''

''சரி - அப்பிடியே வச்சிக்க. அதனாலதான் நான் நிம்மதி இல்லாம இருக்கேன்...''

''தங்கச்சாமி கண்ணு - நிம்மதியா இருக்குறதுக்குத்தேன் வழி தேடணும்...''

''மாட்டிக்கிட்டே! அந்த வழியிலதான் போயிட்டு இருந்தேன். போகக்கூடாதுன்னு நீ என் கையைப் பிடிச்சி இழுத்து வீட்ல உக்கார வச்சிட்டே... பெறகு நான் எப்படி நிம்மதியா இருப்பேன்?''

''போய் சும்மா மரத்தைப் பாத்திட்டு அதுல ஏறகிறச் செய்யாம நின்னுட்டு இருந்தாகூட ஒன்னை ஒண்ணும் சொல்ல மாட்டேன் சாமி. - நீபாட்டுக்கு அதுல ஏறி உக்காந்திட்டு இருக்கியே...''

''எனக்கு அவ்வளவு பக்கத்தில மரத்தைப் பார்க்கும் போது சும்மா நின்னுட்டு இருக்க முடியலை பாட்டி. அதுல



ஏற முடியற வரைக்கும் ஏறி உக்காந்தாத்தான் மூச்சே வருது எனக்கு...''

''அதனாலேதான் தங்கம் எனக்குக் குலையே நடுங்குது. கறிவேப்பிலை கொத்து மாதிரி ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு இருக்கே... நீ எனக்கு. ஒனக்கு ஏதாச்சும் ஆச்சின்னா பாட்டி எங்கே போவேன் சொல்லு...''

''எனக்கு ஒண்ணும் ஆவாது பாட்டி... எவ்வளவு பெரிய மரத்தில ஏறினாலும் விழவே மாட்டேன் நான்... சும்மா சொல்றேன்னு நெனைக்காதே... எவ்வளவு பெரிய மரத்தில ஏறினாலும் விழவே மாட்டேன் நான். அப்பா தோள் மேலேயோ - இல்லை; அம்மாவோட தோள் மேலேயோ உக்காந்திட்டு இருக்குற பிள்ளைங்க எங்கேயாச்சும் விழுந்திருக்காங்க என்கிறதை நீ கேள்விப்பட்டிருக்கியா... கேள்வியே பட்டிருக்கமாட்டே... அந்த மாதிரிதான் இதுவும். மரத்தில ஏறி உசரமான கொப்புல உக்காந்திருக்கும்போது எனக்கு என்னோட அம்மா அப்பாவோட தோள் மேலேயோ தலை மேலேயோ உக்காந்திட்டு இருக்குற மாதிரிதான் இருக்கு. ரொம்ப நிம்மதியா மனசுக்கு சந்தோஷமா இருக்கு. - இன்னொரு மாதிரி சொல்லப் போனா - மரத்து மேல ஏறி உட்கார்ந்திருக்கிறது நம்ம வீட்டு மொட்டை மாடியில உக்காந்திட்டு இருக்குற மாதிரி இருக்கு... இதான் நிசம். இதுக்கு மேல என்ன சொல்றதுன்னு தெரியலை எனக்கு. இதுக்கு மேல என்னை எதுவும் சொல்லவும் சொல்லாதே...! அப்பா அம்மா இல்லாம கஷ்டப்படற மாதிரி இன்னைக்கி மரங்களும் இல்லாம கஷ்டப்படறேன்... அவ்வளவுதான்...''

இதைக் கேட்டு ரொம்ப நேரத்துக்குப் பாட்டி அழுது கொண்டிருந்தாள். எதை எதையோ சொல்லிப் புலம்பவும் செய்தாள். அவளின் ஒரு முக்கியமான புலம்பல்தான் என்னுடைய மனசில் பெரிய மின்னல் கீற்றாய் மின்னியது.

பின் மனசிற்குள் மழையாகவும் ஊற்றியது. எனக்குள் மழையாய் பெய்த பாட்டியின் புலம்பல் இதுதான். ''ஒன்னைச் சொல்லி குத்தம் இல்லை சாமி. எல்லாம் நம்ம பூர்வ ஜென்மத்தோட வாசனை. நெழல் மாதிரி ஒன்னைத் தொடர்ந்து வருது. சிவரகோட்டை, அருப்புக்கோட்டை, கமுதின்னு டவுனுக்கு வந்து குடியேறி வியாபாரம் பார்க்க ஆரம்பிச்சதெல்லாம் இந்த ரெண்டு மூனு தலைமுறைக்குள்ளதேன் தங்கசாமி. அதுக்கு முந்தி நம்ம சாதி சனத்தில யாரு இப்பிடி டவுன்ல வெள்ளைச் சட்டையும் வேட்டியுமா இருந்தது... யாருமே இல்லை.

''மூனு தலைமுறைக்கு முந்தி நாமெல்லாம் தின்னவேலி ஜில்லா பக்கம் பனைமரத்தில ஏறி இறங்கிக்கிட்டு அந்தப் பனங்காட்டுக்குள்ளேயே கிடந்தோம். வேற எதுவும் தெரியாது நமக்கு - அந்தப் பனங்காட்டைத் தவிர. பனைமரத்தில இருந்து பைனி எறக்கறது, கருப்பட்டி செய்யிறது, பனைவெல்லம் செய்யிறது, பனை ஓலையில தினுசு தினுசா வீட்டு உபயோகத்துக்கு வேண்டிய தட்டுமுட்டுச் சாமான் செய்யிறது... அதெல்லாந்தேன் நம்மோட தொழிலு. தெரிஞ்ச தொழிலும் அதேன்... வேற தொழில் தெரியாது யாருக்கும். பொறந்ததில இருந்து பூமியில மண்டையைப் போடற வரைக்கும் எல்லாப் பொழைப்பும் இப்பிடிப் பனங்காட்டுக்குள்ளதேன்... பொழுது விடிஞ்சா ஆம்பளைங்களுக்கு ஒசர ஒசரமா இருக்குற பனைமரத்தில ஏறி எறங்குறதுதேன் வேலை. அங்க பனைமரத்தில ஏறாதவனும் இருக்கமாட்டான். ஏறத் தெரியாதவனும் இருக்கமாட்டான்.

''ஆம்பளைப் பிள்ளை பெறந்திட்டா பத்துப் பனிரெண்டு வயசிலேயே அந்தப் பயலுக்கு அப்பன்காரன் பனைமரம் ஏறச் சொல்லித் தந்திருவான். - அதேன் நம்ம வம்சமே... பனைமரத்தில ஏறி பொழச்சதும் நம்ம வம்சம். குடும்பத்துக்கு



ஒரு ஆம்பளை பனைமரத்தில ஏறி பொழச்சதும் நம்ம வம்சம். குடும்பத்துக்கு ஒரு ஆம்பளை பனைமரத்தில இருந்து விழுந்து விழுந்து தேங்கா ஒடைஞ்சி சிதறினாப்பல சிதறி செத்துப் போனதும் நம்ம வம்சம்தேன்... பொழப்பு நல்லா போனாலும் சாவைத் தாங்க முடியலை தங்கசாமி. விழுந்து விழுந்து அத்தினி சாவு. போதும்டி ஆத்தான்னு நம்ம சாதி ஆளுங்க குடும்பம் குடும்பமா பனங்காட்டை விட்டு எங்கேயாச்சும் சிறுசா ஒரு பலசரக்குக் கடையாது வச்சிப் பெழச்சிக்கலாம்னு ஆளுக்கு ஒரு டவுன் பக்கமா கெளம்பி வந்திட் டாக... அப்படி கெளம்பி வந்தவக யாரும் திரும்பி பனங்காட்டுப் பக்கம் போகலை.

மரத்தில ஏறி எறங்குற வேலையையும் மறந்திட்டாக. அப்படி அப்படி போன எடத்திலேயே புள்ளை குட்டிங்களோட தங்கிப்புட்டாக. தங்கினவுக எல்லாம் வயசாகி வயசாகி அங்கேயே மண்டையைப் போட - தலைமுறை மாறி மாறி காலப் போக்குல டவுனுங்கதேன் நம்ம சாதிக்காரகளுக்கு சொந்த மண்ணு மாதிரி ஆயிப்போயிருச்சி. புதுசா வந்த தலைமுறைக்கு பனங்காடுன்னு ஒண்ணு இருந்ததோ இருக்கறதோ தெரியாமலேயே போயிருச்சி. மரம் ஏறி பெழச்ச பெழப்பு ஒண்ணு இருந்ததும் தெரியாம போயிருச்சி - யாருக்கும். - அந்த பூர்வ ஜென்ம வாசனை எங்கியோ உன் ரத்தத்தில ஒட்டிக்கிட்டு விட்ட குறை தொட்ட குறைன்னு கிடக்கோ என்னமோ இப்பிடி கிறுக்குப் பிடிச்சவன் மாதிரி திடீர்னு மரம் மரம்னு அலையுறே... விட்டா மரத்திலே ஏறி நிக்கிறேன்னு சொல்றே... இப்பிடித்தேன் மனசுல படுது எனக்கு. - அந்தக் காலத்தில எந்தப் பனங்காட்டுல எந்த பனைமரத்தில ஏறி விழுந்து செத்து வச்சியோ தெரியலை - இன்னிக்கி ஓடிப் போய் மரத்தில ஏறரேன்னு மூஞ்சியை தூக்கி வச்சிக்கிட்டு வயசான காலத்தில இந்தக் கிழவியை போட்டு உசிரை எடுக்கற...''

இந்த மாதிரியெல்லாம் சொல்லிக்கொண்டு போன பாட்டி இதற்கு மேலும் ஏதேதோ சொல்லிப் புலம்பிக் கொண் டிருந்தாள். முக்கி முணங்கி எதையோ தனக்குத்தானே பேசிக் கொண்டிருந்தாள். ஆனால் அது எதுவும் எனக்குள் போய்ச் சேரவில்லை. வேறு எதுவும் உள்ளே போக முடியாதபடி முன்பின் தெரியாத பனங்காட்டு விஷயங்களால் என் மனசு நிறைந்து போயிருந்தது. என் மூதாதையர்கள் வாழ்ந்த பூமி பனைமரங்கள் நிறைந்த இடம் என்று பாட்டி சொன்ன தகவல் எனக்குள் அகலமான சினிமா காட்சி போல ஓடிக் கொண்டிருந்தது. மரங்களின் மீதும் அவற்றின் மேல் ஏறி உட்கார்கின்ற விஷயத்தின் மேலும் நான் கொண்டிருந்த ஆசை களுக்கு புது அர்த்தமும் புது நியாயமும் கிடைத்து விட்ட மாதிரி இருந்தது. எனக்கு இது சந்தோஷத்தைத் தந்தது.

பாட்டி சொன்ன என் மூதாதையர்களின் பனங்காட்டு வாழ்க்கையைப் பறிகொடுத்துவிட்ட மாதிரியான உணர் வெல்லாம் ஏற்படாமல், எனக்குள் இருந்த இனம் தெரியாத இழப்புணர்வை பாட்டி சொன்ன செய்திகள் சமனம் செய்து விட்டிருந்தது. பயணத்தின்போது நீண்ட தூரத்திற்கு கட்டாந் தரை போன்ற பகுதியில் சென்று கொண்டிருந்த ரயில் சட்டென அழகான இயற்கை வளம் நிறைந்த பிரதேசத்தின் ஊடே செல்லத் தொடங்குகிறபோது ஏற்படுகிற பூரிப்பான மனமாற்றம் போன்ற மனமாற்றம் என்னுடைய மனதில் ஏற்பட்டது.

இந்த மனமாற்றத்தின் வேகத்தில் அருப்புக்கோட்டை நெடுஞ்சாலைக்குப் போய் புளியமரங்களைப் பார்க்கவேண்டும்; அவற்றில் ஏற வேண்டும் என்ற எண்ணங்களெல்லாம் எங்கோ அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. காணாமல் போய் விட்டன. என் மனசு பூராவும் பாட்டி சொன்ன பனங்காடே நிறைந்து போயிருந்தது. அதை நோக்கிச் செல்லவே என் முகம் அந்தத் திசையை நோக்கித் தயாராக இருந்தது.



ஆனால் இந்தத் தயார்நிலை வெளிப்படையாகத் தெரியாமல் எனக்குள் ரொம்ப மௌனம் பதுங்கிக் கொண்டிருந்தது. பல மாதங்களுக்கு என் உணர்வுகளைச் சிறிதும் பாட்டியிடம் காட்டிக்கொள்ளாமல் அமைதியாக இருந்தேன். ஒரு நல்ல நாள் பார்த்து, ஒரு நல்ல நேரம் பார்த்து என்னுடைய ஆசையைப் பாட்டியிடம் வெளியிட்டேன்.

எங்கள் மூதாதையர்கள் வாழ்ந்த பனைமரங்கள் நிறைந்த இடங்களையெல்லாம் போய் ஒரு தடவை பார்த்து விட்டு வரணும் என்றேன். பெரிய பாத்திரம் ஒன்று 'தடால்' என்று கீழே விழுகிற பெரும் சப்தத்தில் திடுக்கிட்டு பயந்து போகிற சின்னப் பிள்ளையைப்போல பாட்டி நான் சொன்னதைக் கேட்டு திடுக்கிட்டுப் போனாள். அவளைப் பொறுத்தவரைக்கும் இது கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதை.

''வேற வேலை இல்லையாடா தங்கசாமி ஒனக்கு... எதுக்கு இப்பப் பிடிச்சி பனங்காட்டைப் போய் பாக்கணும்னு ஆசைப்படறே...?'' என்று என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துக்கொண்டே கேட்டாள்.

''ஒரு ஆசைதான். நம்மோட பூர்வீக இடங்களை யெல்லாம் பாத்திட்டு வரலாமே...''

''பாக்குறதுக்கு என்ன இருக்கு அங்க... மழை பெஞ்சா புளியமரங்களாது பாக்குறதுக்கு பச்சைப் பசேல்னு இருக்கும்... பனைமரத்தில என்ன இருக்கு... யானைக்கால் மாதிரி கறுப்பா பெரிசு பெரிசா சொரசொரன்னு இருக்கும்...''

''யானைக்கால்னே வச்சிக்க பனைமரத்தை. ஆனா உச்சியில மட்டும் செடி முளைச்ச மாதிரி அழகா பனை ஓலை இருக்குமே...''

''அதுல போய் ஏறி உக்காரலாம்னு பாக்குறியா? அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். பேசாம கெட வீட்டுல... பனங்காட்டைப் பாக்கப் போறானாம் பனங்காட்டை...''

''ஒரே ஒருவாட்டி பாட்டி... பாத்திட்டு வந்திடறேன்... நீயும் வேணும்னா கூட வா... நாம ரெண்டு பேருமே போய்ப் பாத்திட்டு வந்திடுவோம்...''

''என்னாலல்லாம் எந்தப் பனங்காட்டையும் வந்து வேலைமெனக்கெட்டு வந்து பாத்திட்டு நிக்கமுடியாது தங்கம்...''

''அப்ப வேற யாரையாவது என்கூட அனுப்பு. அவங்க கூடப் போய்ப் பாத்திட்டு வரேன்...''

பாட்டி ஒரு நிமிஷம் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தாள். ''அப்படியெல்லாம் ஒன்னை யார்கூடேயும் அனுப்ப முடியாது. இன்னும் ரெண்டு தொட்டியில செடி வச்சித் தரேன். பாத்துக்கிட்டு உக்காந்திரு வீட்ல...'' என்றாள்.

எனக்கு பாட்டியின் மேல் முதல் முறையாகக் கோபமும் எரிச்சலும் வந்தது. ''அப்ப எதுக்கு நீ என்கிட்ட பனங்காட்டைப் பத்தியெல்லாம் நீட்டி முழக்கிச் சொன்னே... சும்மா இருந்திருக்க வேண்டியதுதானே - வாயை மூடிட்டு...'' என்று அடக்க முடியாத ஆத்திரத்துடன் கேட்டுவிட்டேன். இப்படி நான் கேட்பேனென்பதை எதிர்பார்க்காத பாட்டி அப்படியே திகைத்துப் போய் விட்டாள். இப்படி ஒருநாளும் பாட்டியை அதற்கு முன் நான் எதற்காகவும் எந்தக் கேள்வியையும் கேட்டதில்லை. அதனால் பாட்டி ஒரு மாதிரி அதிர்ந்தும் போனாள். ''வேற ஒண்ணுமில்லைடா தங்க சாமி. ஒனக்குக் கால் முளைச்சிருச்சி... என்னல்லாம் செய்யப் போறியோ தெரியலை...'' - பாட்டி இதைக் கொஞ்சம் நொந்துபோன குரலில் சொன்னாள்.



''எப்படி வேணுமானாலும் நெனைச்சிக்க... கவலை இல்லை எனக்கு. பனங்காட்டையெல்லாம் போய் ஒரு தடவையாது பாத்திட்டு வரணும் எனக்கு.''

''அங்க போனா நீ எங்கே சும்மா இருப்பே... பனை மரத்தில ஒரு வாட்டி ஏறிப் பாக்கறேன்னு சொல்லுவ...''

''இல்லை பாட்டி; எந்தப் பனை மரத்திலேயும் நான் ஏறமாட்டேன். நம்பி நீ என்னை அனுப்பு. பத்திரமா திரும்பி வந்திடறேன்... என் வார்த்தையை நம்பு...''

''பள்ளிக்கூடத்தில போய் பந்து வெளையாடிட்டு வரேன்னு சொல்லிட்டு அருப்புக்கோட்டை ரோட்டுப் பக்கத்தில புளியமரத்தில ஏறி நின்னவன் வார்த்தையை என்னை நம்பச் சொல்றியாக்கும்?'' - பாட்டியின் இந்த வார்த்தைகள் சவுக்கடிபோல இருந்தன எனக்கு. கோபம் தாங்க முடியாத அளவுக்கு வந்துவிட்டது. ரொம்ப கடுப்போடு அவளுக்குப் பதில் சொன்னேன். ''நியாயந்தான் உன் கேள்வி. ஆனா என்னைக்கோ நான் சொன்னது நம்ப முடியாததா போயிருச்சி என்கிறதால எப்ப நான் சொல்ற தையும் உன்னால நம்ப முடியாதுன்னு சொன்னீன்னா - பிறகு நெசமாவே என்னைக்கி நான் சொல்ற எதுவும் நம்ப முடியாததாவே ஆயிடும் பாத்துக்க...''

பாட்டிக்கு நான் என்ன சொல்கிறேன் என்று சரியாகப் புரியவில்லை. ஆனால் என்னவோ சொல்கிறேன் என்பது மட்டும் புரிந்துவிட்டது. அதனால் ஒரு மாதிரியான பயமும் வந்துவிட்டது. மேற்கொண்டு எதுவும் பேசாமல் வாயை மூடிக்கொண்டு விட்டாள். நானும் அதற்கு மேல் எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்து விட்டேன். அதற்கும் மேல் பாட்டியின் மேல் எனக்குள் இருந்த முக்கியமான ஒன்றும் சடாரென்று மூடிக்கொண்டு விட்டது. என்னை

பாட்டி ஒருவிதமான சிறைக்குள் அடைத்து வைத்திருக்கிறாள் என்று நினைத்தேன். பாட்டியின் அபிப்பிராயத்தில் அது அன்புச் சிறையாகக்கூட இருக்கலாம். இருந்தாலும் சிறை எனக்குச் சிறைதான். - அதனால் ஒரு சிறை அதிகாரிக்கும் ஒரு கைதிக்கும் இடையில் இருக்கும் உறவு எப்படிப்பட்டதாக இருக்குமோ - அப்படிப்பட்ட உறவே எனக்கும் பாட்டிக்கும் இடையே - என்னைப் பொறுத்தவரை நிலவ ஆரம்பித்து விட்டது.

சிறை அதிகாரி அன்போடும் அக்கறையோடும் இருக்கிறார் என்பதற்காக எந்தக் கைதியும் சிறைக்குள் சந்தோஷமாக இருந்துவிட மாட்டான்! இது தெரியவில்லை சிறை அதிகாரிக்கு! - ஆனால் நிலைமை இரண்டு மூன்று மாதங்களுக்கும் மேல் நீடித்துக் கொண்டிருந்ததில் சிறை அதிகாரிக்குத் தெரிந்துவிடும் கட்டாயம் ஏற்பட்டுவிட்டது...! வேறு வழியில்லாமல் அதிகாரி காரியத்தில் இறங்க வேண்டிய தாகியது! ஆனால் ஒன்று; ஒரு கைதி தன்னோடு பேசுவதே இல்லை என்பதற்காக வருத்தப்பட்டு அழுத ஒரே சிறை அதிகாரி உலகத்தில் என் பாட்டி மட்டுமாகத்தான் இருக்க முடியும்...!

பாட்டி தூத்துக்குடிக்கு ஓர் ஆளை அனுப்பி எங்கள் சொந்தக்காரர்கள் இரண்டு பேரை உடனே கிளம்பி வரும்படிச் செய்தாள். அதில் ஒருத்தரின் பெயர் பவுன்ராஜன். இன்னொருத்தரின் பெயர் துரைப்பாண்டியன். இவர்கள் இரண்டு பேருமே தலைமுறை தலைமுறையாக தூத்துக்குடிப் பக்கம் இருந்து வருபவர்கள். அதனால் அவர்களுக்கு இண்டு இடுக்கு விடாமல் அந்த ஏரியா பூராவும் தெரியும். - பாட்டி ஆள் அனுப்பிச் சொல்லிவிட்ட அடுத்த நாளே அவர்களும் 'என்னமோ ஏதோ' என்ற எண்ணத்தில் கிளம்பி வந்து விட்டார்கள்.



பாட்டி அவர்களிடம் விஷயத்தைச் சொன்னதும் அந்த இரண்டு பேருக்கும் ரொம்பச் சப்பென்று போய்விட்டது. அவர்கள் எதிர்பார்த்து வந்த விஷயம் அந்த மாதிரி! என்னைப் பத்திரமாக அழைத்துக் கொண்டு போய் அவர்களுடைய ஊர்ப்பக்கங்களில் இருக்கிற பனங்காடுகளை எனக்கு அந்த பவுன்ராஜனும் துரைப்பாண்டியனும் காட்டிவிட்டு என்னை ஊரில் கொண்டு வந்து விட்டுவிட வேண்டும். இதுதான் பாட்டியின் கோரிக்கை. அதற்கான செலவு பூராவையும் பாட்டி ஏற்றுக்கொள்வாள்... இரண்டு பேரும் ஒரு நிமிஷம் ஏமாற்றத்துடன் முகத்தை வைத்திருந்தபின் சரியென்று தலையை ஆட்டினார்கள். ஆனால் உடனே கிளம்பாமல் இரண்டு நாள் உட்கார்ந்து பாட்டியுடன் ஊர்கதை பூராவையும் பேசித் தீர்த்த பிறகுதான் கிளம்பினார்கள்.

அவர்களுடன் கிளம்பியபோது எனக்குள் உணர்வுகள் பரபரத்தன. இருவரும் என்னை ஆளுக்கொரு பக்கம் கையைப் பிடித்துக்கொண்டு (சிறை அதிகாரியின் உத்தரவு!) முதலில் கோவில்பட்டிக்கு ஒரு பஸ்ஸில் போய் பிறகு அங்கிருந்து வேற பஸ் மாறி தூத்துக்குடிக்கு அழைத்துப் போனார்கள். தூத்துக்குடியில் எனக்கு ஒருநாள் ரெஸ்ட்!

அந்த தூத்துக்குடியில் எனக்கு ஒரு கஷ்டம். அங்கே அக்கம் பக்கம் இருந்தவர்களுக்கெல்லாம் ஆச்சரியம் - பனங் காடுகளைப் பார்க்க வந்திருக்கும் பையனைப் பார்த்து! என்னை முழித்து முழித்துப் பார்த்தார்கள். அவர்களை நான் நிமிர்ந்து பார்க்கவில்லை - மறுநாள் காலையில் சீக்கிரமே எழுந்து குளித்து கருப்பட்டி இடியாப்பத்தை வெண்ணெய் தடவித் தடவி வயிறு நிறைய சாப்பிட்டுவிட்டு பவுன்ராஜனும் துரைப் பாண்டியனும் ஏற்பாடு செய்திருந்த பெரிய வெள்ளைக் கலர் அம்பாஸடர் காரில் நாங்கள் மூன்று பேரும் ஏறிக் கொள்ள - கார் மெதுவாகக் கிளம்பியது.

அப்போது என் மனசுக்குள் ஏற்பட்ட உணர்வுகளை வார்த்தைகளில் சொல்ல வரவில்லை எனக்கு. போன ஜென்மத்தில் நான் பிறந்து வளர்ந்த என்னுடைய பூர்வீக ஊருக்குச் சென்று கொண்டிருக்கிற பரவசமும் பிரமிப்பும் என் மனதில் பொங்கித் ததும்பிக் கொண்டிருந்தன. திருச்செந்தூர் போகிற நீண்ட சாலையில் கார் செல்லத் தொடங்கிய அரைமணி நேரத்திற்குள்ளேயே - கூட்டம் கூட்டமாகப் பனை மரங்கள் உயரமாகத் தெரியத் தொடங்கிவிட்டன. செம்மண் பூமியின் ஓர் செய்தியைத் தெரிவிக்கும் உயிர்க் குழாய்களாய் ஓங்கி வளர்ந்து தெரிந்தன அந்தப் பனை மரங்கள்.

மையமாக ஓர் இடம் பார்த்து கார் நிறுத்தப்பட்டது. உடம்பெல்லாம் சிலிர்க்க நான் அந்தப் பூமியில் இறங்கி நின்றேன். சுற்றி எங்கே பார்த்தாலும் பரந்த நினைவுச் சின்னங்கள் போல பனைமரங்கள் நீக்கமற சூழ்ந்து நின்றன. பனைமரங்களைத் தவிர எதுவும் இல்லை அங்கே. ஆங்காங்கு சின்னச் சின்னக் குடிசைகள் இருந்தன. பனங்காட்டுக்குள் தொழிலையும் வாழ்க்கையையும் கொண்டிருந்த மனிதர்கள் குடிசைகளில் இருந்தார்கள். குடிசைகளில் இருந்த முக்கால் வாசி ஆண்கள் கோவணம் மட்டும் கட்டி இருந்தார்கள். பவுன்ராஜனும் துரைப்பாண்டியனும் ஒரு குடிசையின் எதிரில் மண்ணில் உட்கார்ந்து கொண்டு எதற்காக நாங்கள் வந்திருக்கிறோம் என்பதை குடிசையில் இருந்தவர்களுக்கு சொல்லிக் கொண்டிருந்தபோது நான் ஆசைபோன பக்கமெல்லாம் வேகமாக நடக்கத் தொடங்கி விட்டேன்.

இத்தனைக் காலமும் சிகரக்கோட்டை என்ற ஊருக்குள் நடந்து திரிந்த நான் முதல் முறையாக பூமியில் கால்கள் பதியப் பதிய நடந்து கொண்டிருந்தேன். குறுக்கே சுவர்கள் கிடையாது. வாகனத் தொந்தரவுகள் கிடையாது. காற்றில் எழும்பும் பனை ஓலைகளின் இயல்பான சலசலப்புகளைத்



தவிர வேறு சப்தங்கள் கிடையாது. ஆயிரக்கணக்கான அந்தப் பனை மரங்களின் ஊடே நடந்தேன்.

என்னைச் சுற்றிலும் வளைய விழுகமாக நான் நடக்க நடக்க எல்லாப் பனைமரங்களும் வட்டமாகச் சுழல்வது போன்ற வினோதத் தோற்றத்தைப் பார்த்தபோது என் மனம் சிலிர்த்துக்கொண்டது. மொத்தப் பனங்காட்டுச் சூழலும் இயற்கையாக அமைந்த ஆச்ரமமாகத் தெரிந்தது எனக்கு. அமைதியின் அருள் கரைந்து கிடக்கும் இந்த அற்புதமான ஆச்ரமத்தை விட்டுவிட்டா என் முன்னோர்கள் இரைச்சல்களும் அசுத்தங்களும் குவிந்த அருளும் அழகும் கெட்ட நகரங்களை நோக்கி ஓடி வந்து விட்டார்கள்... இன்னும் சொல்லப் போனால் அரசியல்வாதிகளின் காலடிகளே படாத இந்த ஆழ்நிலை தியானத்தில் அமிழ்ந்தாற்போல இருக்கும் ஆரண்யத்தைவிட்டா என் மனிதர்கள் இடம்பெயர்ந்து வந்து விட்டார்கள்...?

நினைக்க நினைக்கத் தாங்கமுடியவில்லை எனக்கு. பனைமரங்களின் ஒரு மையத்தில் மெய் வருந்தி நின்று விட்டேன். என்னைச் சுற்றிப் பனைமரங்களின் வட்டச் சுழற்சியும் உடனே நின்று போனது. என்னுடைய செய்வினை எதுவும் இல்லாமல் எனக்குள் ஓர் முற்றுப்புள்ளி விழுந்திருந்தது. என் எண்ண நகர்வுகள் முடிந்து போயிருந்தன. என் ஜென்மங்களைத் தாண்டி நான் என்னுடைய பூர்வாச்ரமத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறேன். இந்த ஜென்மத்தின் மிச்ச காலம் எனக்கு இந்தப் பூமிதான். இனி இந்த மண்தான் என்னுடைய உலகம். வாழ்க்கையும் இனி இங்கேதான் எனக்கு. இங்கேயே ஒரு குடிசையைப் போட்டுக்கொண்டு, விதவித உடை என்ற வேஷத்தையெல்லாம் களைந்துவிட்டு, சின்ன கோவணத்தை மட்டும் கட்டிக் கொண்டு பனைமரங்களில் ஏறி இறங்குகிற இயற்கை சார்ந்த தொழில்தான் வாழ்வாக இருக்கப் போகிறது எனக்கு...

இது என் ஜென்மாந்திர முடிவு. இந்த எண்ணத்தில் இனி இரண்டாவது அபிப்பிராயமே இருக்கப் போவதில்லை. ஆனால் இந்த எண்ணத்தை உடனே செயல்படுத்துவது என்பது மட்டும் முடியாத காரியம். பாட்டி என்ற அரண் சிகரக் கோட்டையை விட்டு இந்த மண்ணுக்கு வந்து சேர்வதற்கு என்னை அனுமதிக்கவே அனுமதிக்காது. பனை மர பூமியைப் பார்த்துவிட்டு வர பாட்டி என்ற அரண் என்னை அனுப் பியதே பெரிய விஷயம். அந்தப் பாட்டியிடம் இப்போது போய் இனி என் வாழ்வு இங்கேதானென்று சொன்னால் தாங்குமா அவளுடைய மனசு... கலங்கி கண்ணீரைக் கொட்டிவிடாதா அவளுடைய கண்கள்... அதனால் பாட்டி யிடம் இதை நான் வெளியிடுவதாகவே இல்லை. அதை வெளியிட்டு வயதான காலத்தில் அந்த மனுஷியை அலை மோத வைக்கவும் நான் தயார் இல்லை.

என் எதிர்காலத்தை நான் நிச்சயம் செய்துவிட்டேன். அதை நோக்கிய மானசீக வாழ்க்கையும் இப்போதே என் மனதில் தொடங்கிவிட்டது. அதனால் அதன் நிஜமான தொடக்கத்தைப் பற்றி எனக்கு அவசரம் இல்லை. ஆரம்பம் தாமதமானாலும்கூட அதனால் வருத்தமும் ஏற்படப் போவ தில்லை. பாட்டியின் காலம் முடியும்வரை அமைதியாகக் காத்திருக்கப் போகிறேன். பாட்டியின் காலம் முடிந்த உடனேயே என் பனைமர பூமியில் என் காலம் ஆரம்பித்து விடும். அந்தக் காலத்திற்காகவும் அந்த வாழ்க்கைக்காகவும் எவரிடத்திலும் ஒரு வார்த்தைகூட வெளியிட்டுவிடாமல் நான் காத்திருக்கப் போகிறேன்...

கௌதம புத்தருக்கு போதி மரத்தின் அடியில் ஞானம் பிறந்ததாகப் பள்ளிக்கூடத்தில் சரித்திரப் பாடத்தில் வாசித் திருக்கிறேன். எனக்கும் ஓர் ஞானம் பனைமரங்களின் மையத்தில் கிடைத்திருந்தது. அந்த உவகையுடன் சுற்றிலும்



பார்த்தேன். எல்லாப் பனைமரங்களும் என் குடியேற்றத்திற்காக அமைதியாகக் காத்திருந்தன. கம்பீரமான யானை போன்று நான்கு திசைகளிலும் திரும்பி பனைமரங்களைப் பெரு மிதத்துடன் வணங்கினேன்.

அதற்குப் பிறகும் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் கழித்து எங்கள் கார் தூத்துக்குடியை நோக்கிப் புறப்பட்டது. அந்தப் பனைமர பூமி கோவண மனிதர்கள் அன்பளிப்பாக அள்ளித் தந்த பனம் பழங்கள், பனை ஓலைகளில் கட்டிக் கொடுத்த பிஞ்சு நொங்குகள், கட்டுக் கட்டாக எடுத்துத் தந்த பனங்கிழங்குகள் போன்றவற்றையும் எங்களோடு சேர்ந்து சுமந்துகொண்டு...

கார் கிளம்பிச் சிறிது தூரம் சென்றதும் ''பனங்காட்டைப் பாக்கணும் பாக்கணும்னு பைத்தியக்காரன் மாதிரி ஒத்தைக் கால்ல நின்று குதிச்சிட்டு இருந்தியே - பாத்தாச்சா ஒன் பனங் காட்டை...? தீர்ந்திருச்சா இப்ப ஒன் கரகரப்பெல்லாம்?'' என்று தூத்துக்குடி பவுன்ராஜனும் துரைப்பாண்டியனும் கேட்டார்கள்.

நான் பதில் சொல்லவில்லை...

374451
5454657
சென்னை

# 3. அவர்களின் உலகம்

'அவர்களின் உலகம்' என்று நான் இங்கு குறிப்பிடுவது ஏழு அல்லது எட்டு வயதுக்கு உட்பட்ட சின்னச் சின்ன சிறுவர் சிறுமிகளின் உலகத்தை. இந்த வயதுக் குழந்தைகளின் உலகத்தில் ஏதோ சில இருக்கலாம். ஏதோ சில இல்லாமல் போகலாம். ஆனால் அவர்களின் சின்ன உலகத்தில் விநோதமான அறியாமையென்று ஒன்று இருக்கிறதே - நிஜமாகவே மனதைத் தொடுகிற எழிலான அந்த அறியாமைதான் குழந்தைகள் உலகத்தின் மிகப் பெரிய சிறப்பென்று நான் நினைக்கிறேன். உதாரணத்திற்கு ஒரு சில குழந்தைகளின் ஒரு சில அறியாமைகளை உங்களோடு இங்கே பகிர்ந்து கொள்கிறேன்...

என்னுடைய சகோதரனுக்கு லலிதாம்பிகை என்ற பெயரில் ஒரு மகள் இருக்கிறாள். அதென்னமோ அவளுக்கு அந்த லலிதாம்பிகை என்ற பெயரில் அப்படியொரு அதிருப்தி. அப்படியொரு வருத்தம். இப்படி ஒரு பெயரைப் போய் தன்னுடைய அப்பா தனக்கு வைத்து விட்டாரே என்ற ஆதங்கத்தை சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் சொல்லி வேறு காட்டிக் கொள்வாள். லலிதாம்பிகைக்குத் தெரிந்து அதே ஊரில் எத்தனையோ அழகழகான பெயரெல்லாம் பெண் குழந்தைகளுக்கு இருக்கின்றன. அந்தப் பெயர்களில் எதையாவது ஒன்றை வைத்திருந்தால்கூட சந்தோஷமாக இருந்திருக்கும் அவளுக்கு. பாவம்; இப்படியொரு லலிதாம்பிகை என்ற ஒரு பழைய காலத்துப் பெயரைப் போய் வைத்து விட்டார்கள்! சொல்லிச் சொல்லி ஆற்றிக் கொள்வாள் குழந்தை.



இந்த ஆறாத ஆதங்கம் எல்லாம் லலிதாம்பிகையின் எத்தனையாவது வயதில் என்று நினைக்கிறீர்கள்? ஐந்தாவது வயதில்! அதுவும் பள்ளிக்கூடத்தில் சேர்ந்துவிட்ட பிறகு அவளின் இந்த ஆதங்கங்கள் இன்னும் அதிகமாகித்தான் விட்டன. அவளுடைய வகுப்பில் அவளுடன் படிக்கும் பெண்களுக்கெல்லாம் என்னென்ன தினுசில் எப்படி எப்படியெல்லாம் அழகான பெயர்கள்... நொந்து போய் விட்டாள் லலிதாம்பிகை! அதுவும் அவளின் வகுப்புக்காரி ஒருத்தி சியாமளா என்ற பெயரில் இருந்தாள். லலிதாம்பிகையைப் பொறுத்தவரை அந்த சியாமளா என்ற பெயருக்கு ஈடாக வேறு ஒரு பெயர் கிடையாது! அத்தனை அழகோ அழகாம் அந்தப் பெயர்! சியாமளா என்ற அந்தப் பெயர் தனக்கு ரொம்பப் பிடிக்கும்; ரொம்பப் பிடிக்கும் என்று என்னிடம் லலிதாம்பிகை கண்களில் ஓர் இன்ப மின்னல் மின்ன எத்தனையோ தடவை சொல்லிச் சொல்லி மாய்ந்து போயிருக்கிறாள்.

அதையெல்லாம் பார்த்த நான் ஒருநாள் அவளிடம் சொன்னேன்: ''சரிடா பாப்பா! அதனால என்ன இப்ப? ரொம்பப் பிடிச்சா உனக்கும் அந்த சியாமளாவோட பேரையே மாத்தி வச்சிட வேண்டியதுதானே...?'' இதை நான் சொன்னதும் சில விநாடிகள் லலிதாம்பிகையின் கண்கள் பெரிசாக விரிந்து திகைப்புடன் கொஞ்சமும் நகராமல் என்னையே விழித்துப் பார்த்தன. சில விநாடிகள் கழித்து அவள் அவசரத்தோடு பதட்டத்தோடு என்னிடம் கேட்டது இது : ''ஆ! நான் அவ பேரை வச்சிக்கிட்டா பெறகு அவ என்ன செய்வா?''

லலிதாம்பிகையின் இந்தக் கேள்வி சுத்தமான அறியாமை என்பதைத் தவிர வேறென்ன சொல்லுங்கள்... அந்தச் சியாமளாவின் பெயரை இவளுக்கு மாற்றி வைத்து

விட்டால் சியாமளாவிற்கு அந்தப் பெயர் இல்லாமல் போய் விடுமாம்! பாவம்; அவள் என்ன செய்வாளாம்? வேடிக்கை தான்...

லலிதாம்பிகையின் அறியாமை இப்படி. இனி வேறொரு அறியாமை. இந்த அறியாமையின் பெயர் சர்க்கரை! எதற்குப் போய் அவனுடைய பெற்றோர் அவனுக்கு இப்படியொரு சர்க்கரை என்ற பெயரை வைத்தார்கள் என்ற கேள்வி ஒருநாளும் எனக்குள் ஏற்பட்டது கிடையாது. என்னமோ ஓர் ஆசையில் அந்தப் பெயரை வைத்திருக் கிறார்கள். நாமும் பேசாமல் அந்தப் பெயராலேயே அந்தப் பையனைக் கூப்பிட்டு விட்டுப் போகலாமே... பெயரா முக்கியம்? அவனுடைய அருமையான அறியாமைதானே முக்கியம்... என்னைக் கேட்டால் சர்க்கரை என்ற ஐந்து வயசோ ஆறு வயசோ ஆன அந்தப் பையனின் மறு பெயரே அறியாமை என்றுகூடச் சொல்லலாம். சர்க்கரை அறியா மையின் அப்படியொரு சின்னம்.

சில நேரங்களில் அவனின் அறியாமையை அறிவீனமாக நினைத்துவிட சாத்தியம் அதிகமே உண்டு. இருந்தாலும் யாரும் சர்க்கரையை மட்டும் அப்படி நினைத்துக் கொள்வதே இல்லை. அந்த அளவிற்கு அந்தப் பையனின் அறியாமையில் ஒரு பரிபூர்ணமான நிஷ்களங்கம் இருந்தது. அந்த நிஷ்களங் கத்தால் சர்க்கரையின் அறியாமையை எல்லாருக்கும் பிடிக்கும். அந்த அழகான சர்க்கரையைப் பற்றின இரண்டு விஷயங்களை இப்போது பார்ப்போம்...

முதல் சம்பவம் :

சர்க்கரையை அவனுடைய ஐந்தாவது வயதில் அவனின் அப்பா பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்காக அவனை அழைத்துக் கொண்டு போய் தலைமை ஆசிரியரின் முன்னால் நிறுத் தினார். அது தமிழ் வழிக் கல்வி நிலையம். பள்ளியின்



விண்ணப்பப் படிவத்தைப் பார்த்த தலைமை ஆசிரியருக்கு சர்க்கரை என்ற பெயரை ரொம்பப் பிடித்துப் போய் விட்டது. அதனாலேயோ என்னவோ அவனையும் பிடித்துப் போய் விட்டது. அன்போடு சர்க்கரையின் கையைப் பிடித்துக் கொண்டு ''உன் பெயர் Sugarதானே?'' என்று சிரித்தபடியே தமாஷாகக் கேட்டார். தலைமை ஆசிரியர் மட்டும்தான் சிரித்துக்கொண்டே கேட்பாரா? சர்க்கரையும் சிரித்துக் கொண்டே பதில் சொல்லமாட்டானா? அவனும் சிரித்துக் கொண்டே பதில் சொன்னான்.

''கிடையாது சார்! என் பேரு சர்க்கரை!''

இப்படிச் சொன்ன சர்க்கரைப் பையனை தலைமை ஆசிரியர் உடனே ஆசையாய் தூக்கி கொஞ்ச நேரம் அவரின் மடியில் வைத்துக் கொண்டிருந்ததாகக் கேள்வி...! விஷயம் இத்தோடு முடிந்துவிடவில்லை. தலைமை ஆசிரியர் சர்க்கரையிடம் கேட்டார் : ''என் பெயர் என்னன்னு தெரியுமா உனக்கு?''

''தெரியாது'' என்றான் சர்க்கரை பத்து விரல்களையும் விரித்துக் காட்டியவாறு.

''சொல்லட்டா என் பெயரை?'' தலைமை ஆசிரியர் கேட்டார்.

''நீங்க சொன்னாலும் என்னால தெரிஞ்சிக்க முடியாது சார்!''

''ஏண்டா பையா?''

''நீங்க இங்கிலிஷ்ல சொல்லுவீங்களே...!''

இதைக் கேட்ட தலைமை ஆசிரியர் அந்தப் பள்ளிக் கூடமே இடிந்து விழுகிற மாதிரி அப்படியொரு யானை வேட்டுச் சிரிப்புச் சிரித்தாராம்...!

இனி சர்க்கரைப் பையனின் அறியாமை பொதிந்த இரண்டாவது சம்பவம் -

ஒருநாள் எங்கள் வீட்டு முன் வராந்தாவில் என் தம்பி மகன் ஜோதிகிருஷ்ணா அவனுடைய ஐந்தாறு நண்பர்களுடன் ஏதோ பேசிச் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஜோதிகிருஷ்ணாவிற்கும் விளையாடிக் கொண்டிருந்த பையன்களுக்கும் வயது ஏழு அல்லது எட்டு இருக்கலாம். அவர்களோடு விளையாடிக்கொண்டிருந்த சர்க்கரைக்கு மட்டும்தான் வயசு ஆறு. பல நிமிஷங்களுக்கு பையன்களின் மத்தியில் ஏதேதோ பேச்சும் சிரிப்புமாய் இருந்தது. பிறகு அவர்களின் பேச்சு அவரவர் வீட்டுக் கதவு எண் என்ன என்பதைப் பற்றித் திரும்பியது.

அநேகமாக இரண்டொருவரைத் தவிர மற்ற பையன்களுக்கு அவர்கள் வீட்டுக் கதவு இலக்கம் என்ன என்பது தெரிந்திருந்தது. தெரியாத பையன்கள் உடனே ஓடிப்போய் அவர்கள் வீட்டுக் கதவு எண்ணைப் பார்த்துவிட்டு வந்து சொல்லிவிட்டார்கள். சர்க்கரை ஒருவன்தான் பாக்கி. அவனுக்கோ கதவு எண் என்றாலே என்னவென்று தெரியவில்லை. உடனே என் தம்பி மகன் ஜோதிகிருஷ்ணா எங்கள் வீட்டுக் கதவில் 22 என்று எழுதப்பட்டிருந்த எண்ணை சர்க்கரைக்குக் காட்டி ''இதான் எங்க வீட்டு டோர் நம்பர். இதே மாதிரி உங்க வீட்டுக் கதவிலும் ஒரு நம்பர் எழுதியிருக்கும். ஓடிப்போய் அதைப் பாத்திட்டு வந்து சொல்லு...'' என்று சொன்னான்.

சரியென்று தலையை வேகமாக ஆட்டிவிட்டு ஏழெட்டு வீடு தள்ளி இருக்கும் அவனுடைய வீட்டை நோக்கிக் கிளம்பினான். பொதுவாக எங்கே போனாலும் மெதுவாக நடந்து போவது என்பதெல்லாம் சர்க்கரைக்குத் தெரியவே தெரியாத விஷயம். காற்று போலத்தான் பறப்பான். அதுவும் மோட்டார் சைக்கிளில் பெரும் சப்தத்துடன் படு வேகமாக விரைவது போன்ற பாவனையோடுதான் போவான். அவனுடைய வீட்டுக் கதவு எண் என்ன என்பதைப் பார்த்துவிட்டு வரவும் அதே மானசீக மோட்டார் சைக்கிளில்தான் விரைந்தான். எப்போதும் போன வேகத்தில் வந்து விடுபவன் ஏழெட்டு நிமிடங்கள் சென்றபின்பு திரும்பி வந்தான். உடனே என் தம்பி மகன் ஜோதிகிருஷ்ணா சர்க்கரையிடம் கேட்டான் : ''என்னடா உங்க வீட்டு டோர் நம்பர்?''



''தெரியலைடா...'' - சர்க்கரை கொஞ்சம் அலுப்போடு சொன்னான்.

''தெரியலையா?'' - ஜோதிகிருஷ்ணா.

''ஆமாண்டா...'' குறையாத அலுப்போடு சர்க்கரை.

''ஏன்டா தெரியலைன்னு சொல்றே...?''

''எங்க வீட்டு டோர் நம்பரை இங்லிஷ்ல எழுதியிருக்குடா...!''

இதைக் கேட்ட பையன்களின் கூட்டம் விழுந்து விழுந்தும் சிரித்தது! உருண்டு புரண்டும் சிரித்தது! சிரிக்காமல் வேற என்ன செய்யும்...! சர்க்கரையின் வீட்டு கதவு இலக்கம் 30. இதை அவனுடைய வீட்டுக் கதவை எந்த மொழியின் எழுத்தாலும் எழுதாமல் 30 என்ற எண்ணால்தான் எழுதி வைத்திருந்தது. பின் எப்படி சர்க்கரை 'எங்க வீட்டு டோர் நம்பரை இங்லிஷ்ல எழுதியிருக்குடா...!' என்று அலுத்துக் கொண்டு சொன்னான்? - அதுதான் சர்க்கரை! அப்படி யாரும் எதிரேபாராத தளத்தில் நின்று சொல்வதுதான் அவனின் அழகான அறியாமை...!

லலிதாம்பிகையின் அறியாமை ஆயிற்று. தம்பி சர்க்கரையின் அறியாமை ஆயிற்று. இனி அடுத்து வருவது

காயத்ரியின் இன்னும் கொஞ்சம் வித்தியாசமான அறியாமை. இந்த அறியாமை நடந்து கிட்டத்தட்ட இருபது வருஷமாகிறது. ஆனால் என்னமோ நேற்று நடந்த மாதிரி மனதில் பதிந்து போயிருக்கிறது. காயத்ரிக்கு அப்போது மூன்று வயது. அவள் என்னுடைய தங்கையின் இரண்டாவது மகள். என் தங்கையின் முதல் மகளின் பெயர் செல்வி. என் தங்கையின் கணவர் பாரத வங்கியில் பதவி உயர்வு பெற்று பெரியகுளம் என்ற ஊரில் இருந்து அப்போதுதான் குடும்பத்தோடு சென்னை வந்து சேர்ந்திருந்தார்.

அடிக்கடி நான் என் தங்கையின் வீட்டிற்குப் போய் வந்து கொண்டிருந்தேன். பல நேரங்களில் நாங்கள் கடற்கரை, சினிமா, மகாபலிபுரம் என்று விடுமுறை நாட்களில் எங்கேயாவது போய் வருவதுண்டு. ஒரு சமயம் டிசம்பர் கடைசி வாரம். அன்று ஞாயிற்றுக்கிழமை. நானும் என் தங்கை குடும்பத்தினரும் ஐலண்ட் மைதானத்தில் நடந்துகொண்டிருந்த பொருட்காட்சிக்குப் போயிருந்தோம். மாலை நான்கு மணி அளவில் போய் சுற்ற வேண்டிய அளவிற்கு பொருட்காட்சியைச் சுற்றியாகிவிட்டது. பணத்தைச் செலவழிக்க வேண்டிய அளவிற்கு செலவழித்தும் ஆகிவிட்டது. மணியும் இரவு கிட்டத்தட்ட ஏழேகால் ஆகிவிட்டது. இன்னும் கால் மணி நேரத்தில் வீட்டுக்குக் கிளம்பிவிட வேண்டியதுதான் என்ற எண்ணத்தில் இருந்தோம்.

அன்று பொருட்காட்சியில் கூட்டம் மிக அதிகமாக இருந்தது. அந்த ஏழேகால் மணியில்கூட ஜனக்கூட்டம் கொஞ்சம்தான் குறைந்திருந்தது. நாங்கள் ஏதோ வேடிக்கை பார்த்தபடி நடந்து கொண்டிருந்தோம். திடீரென்று பார்த்தால் என் தங்கை மகள் செல்வியைக் காணோம். நின்ற இடத்தில் இருந்தவாறே சுற்றிலும் பார்த்தோம். செல்வி எங்கள் பார்வையில் தென்படவே இல்லை. எப்படியோ அந்த ஜனக்



கூட்டத்தில் காணாமல் போயிருந்தாள். ஒரு நொடியில் நாங்கள் பதட்டமாகிவிட்டோம். மணி ஏழரையை நெருங்கிவிட்டிருந்தது வேறு எங்களைப் பயப்படச் செய்தது.

எப்படி அந்த ஜனக்கூட்டத்தில் தேடுவது? எந்தத் திசையில் போய்த் தேடுவது? என் தங்கைக்கு அழுகையே வந்துவிட்டது. நடக்கக்கூடாத ஒரு சம்பவம் நடந்துவிட்டால், உடனே மனசுக்குள் நிறைய கற்பனை பயங்கள் வேறு வந்து குவிந்து விடுகின்றனவே... செல்வி ஏழு வயசுக் குழந்தை தானே... யாராவது ஏதாவது பேசி ஏமாற்றி அழைத்துக் கொண்டு போய் விட்டால்? என் தங்கையின் மனசில் இந்தப் பயமும் வேதனையும்தான் போட்டு அவளை அலைக்கழித்தது.

செய்வதறியாமல் செல்வியைத் தேடி ஆளுக்கொரு பக்கமாக ஓடத் தயாராகிவிட்டோம். நான்தான் ஒரு நிமிஷம் எல்லோரையும் நிறுத்தினேன். ''இருங்க இருங்க... எல்லாரும் ஆளுக்கொரு பக்கம் தேடி ஓடினோம்னா எல்லாருமே காணாமப் போயிடுவோம்! நீங்கள்ளாம் இங்கேயே நில்லுங்க. நான் ரெண்டு மூணு நிமிஷத்தில நாலு திசையிலும் கொஞ்ச கொஞ்ச தூரத்துக்கு ஓடிப்போய் முதல்ல பாத்திட்டு வரேன். செல்வி ரொம்ப தூரத்துக்கெல்லாம் போயிருக்க முடியாது... நீங்க இருங்க... நான் இதோ வந்திடறேன்'' என்று சொல்லிவிட்டு - நான் நான்கு பக்கமும் வேகமாக ஓர் ஓட்டம் ஓடிப் பார்த்துவிட்டு வந்தேன். செல்வி எந்தத் திசையிலும் தென்படவில்லை... என் தங்கை தவித்துப் புலம்ப ஆரம்பித்துவிட்டாள். என் தங்கையின் கணவரும் சில நிமிடங்கள் என்னை நிற்க வைத்துவிட்டு அவர் ஓடிப்போய்ப் பார்த்துவிட்டு வந்தார். செல்வியைக் காணோம்.

என்ன செய்வதென்று தெரியாமல் நாங்கள் ஒரு விதமான பேதலிப்புடன் நின்று கொண்டிருந்தபோதுதான் என் தங்கையின் இரண்டாவது மகள் மூன்று வயது காயத்ரியின் முகத்தை நான் தற்செயலாகக் கவனித்தேன். அவளின் முகத்தில் ஏதோ 'திரில்லிங்கான' காட்சி ஒன்றைப் பார்க்கிற மாதிரியான ஒருவித பரவசமான மலைப்பு நிறைந்து போயிருந்தது. ஏதோ ஒன்று அவளுக்குப் புரிகிற மாதிரியும் இருந்தது. ஏதோ ஒன்று புரியாத மாதிரியும் இருந்தது.

ஒருவிதமான ஆவலுடன் காயத்ரி அவளுடைய அம்மாவிடம் கேட்டாள் : ''என்னம்மா?''

''செல்வி காணாமப் போயிட்டாடி...'' என் தங்கை அழுதுகொண்டே சொன்னாள்.

''காணாமப் போயிட்டாளா?'' காயத்ரி சற்று ஆச்சர்யமான தொனியில் கேட்டாள்.

''ஆமா... காணாமப் போயிட்டா... எங்கே போனாள்னு தெரியலை...''

என் தங்கை இப்படிச் சொன்னதும் சில வினாடிகள் மௌனமாக இருந்துவிட்டு காயத்ரி கேட்டாள் :

''அப்படின்னா இனிமே நமக்கு வேற செல்வி வருவாளா?'' என்ன ஒரு அற்புதமான அறியாமை இருந்தால் இப்படி ஒரு கேள்வியை அந்த காயத்ரி பாப்பாவால் கேட்க முடியும்? ஆனால் என் தங்கை அந்த நேரத்தில் அந்த அறியாமையை ரசிக்கின்ற நிலைமையிலா இருந்தாள்? ரசிக்காதது மட்டுமில்லை; காயத்ரியின் அறியாமை அவளை அந்த நேரத்தில் சுளீர் என்று கோபப்படுத்தி வேறு விட்டது. போட்டாள் ஒரு போடு காயத்ரியின் முதுகில்! ''என் பிள்ளையைக் காணோம்னு நானே கலங்கிப் போய் நிக்கிறேன்... வேற செல்வி வருவாளான்னு கேக்குறியேடி



கிறுக்கி மாதிரி...'' என்ற வசவு வேற காயத்ரிக்கு என் தங்கையிடம் இருந்து...

ஆனால் முதுகில் விழுந்த அடியும், வாங்கிக் கட்டிக் கொண்ட வசவும் காயத்ரியின் முகத்தில் நிறைந்திருந்த பரவசமான மலைப்பைக் கடுகளவுகூடக் குறைக்கக் காணோம்!

என் தங்கையின் கணவரும் நானும் மேலும் கால தாமதம் செய்யாமல் உடனடியாக ஒரு தீர்மானத்திற்கு வந்தோம். பொருட்காட்சிக்குள் 'பெவிலியன்' அமைத்துச் செயல்படும் காவல்துறையினரிடம் போய் செல்வி காணாமல் போய்விட்டதை புகார் பண்ணிவிட வேண்டியதுதான். இருட்டி விட்டதால் தாமதமாகும் ஒவ்வொரு நிமிஷமும் ஆபத்து. என் தங்கையையும் காயத்ரியையும் அந்த இடத்தை விட்டு எங்கேயும் நகர வேண்டாம் என்று சொல்லி அங்கேயே நிற்க வைத்து விட்டு நானும் என் தங்கையின் கணவரும் சில அடிதூரம் நடந்து விட்டோம். அப்போது பொருட்காட்சி மைதானம் பூராவும் ஆங்காங்கு பொருத்தி வைத்திருந்த ஒலி பெருக்கிகளில் கீழ்கண்ட அறிவிப்பு ஒலிபரப்பாகியது.

''... செல்வி என்ற ஏழு வயது மதிக்கும்படியான சிறுமி அவளின் பெற்றோர்களைக் கூட்டத்தில் பிரிந்து அழுது கொண்டிருந்தாள். இப்போது அந்தச் சிறுமி காவல்துறையினரின் பெவிலியனில் இருக்கிறாள். அப்பா பெயர் திரு. பாண்டியன் என்றும், அவர் ஸ்டேட் பேங்க்கில் பணிபுரிந்து வருகிறார் என்றும் சிறுமி செல்வி சொல்கிறாள். செல்வியின் பெற்றோர்கள் உடனே காவல் துறையினரின் பெவிலியனுக்கு விரைந்து வந்து அவளை அழைத்துச் செல்லும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்...'' - இந்த அறிவிப்பைக் கேட்டதும் 'அப்பாடா' என்று இருந்தது.

நானும் என் தங்கையின் கணவரும் காவல்துறையினரின் பெவிலியனைத் தேடி ஓட்டமும் நடையுமாய்

விரைந்தோம். நேரம் சரியில்லை என்றால் எல்லாமே சரியில்லாமல்தான் இருக்கும் போல் இருக்கிறது. நாங்கள் இருந்த இடத்திற்கு நேர் கடைசியில் இருந்தது காவல்துறையினரின் பெவிலியன். அந்தத் தூரம் ஓட்டமும் நடையுமாய் போனதில் அத்தனை டிசம்பர் குளிரிலும் எங்களுக்கு வேர்த்து விறுவிறுத்துவிட்டது. பெவிலியனுக்குக் கொஞ்ச தூரத்தில் இருந்தே பார்த்து விட்டோம். செல்வி ஒரு உயரமான மேஜையில் உட்கார வைக்கப்பட்டிருந்தாள். அவளின் ஒரு கையில் பாப்கார்ன் பாக்கெட். இன்னொரு கையில் கோன் ஐஸ்! அழுகையை நிறுத்துவதற்காக காவல் துறையினர் செல்விக்குக் கொடுத்திருந்த உபயம்...!

கோன் ஐஸ்ஸை ருசித்துக் கொண்டிருந்த செல்வியும் எங்களைப் பார்த்துவிட்டாள். அவளுக்கு அருகில் நின்று கொண்டிருந்த போலிஸ்காரரிடம் ''அதோ எங்க அப்பாவும் மாமாவும் வர்ராங்க...'' என்று சந்தோஷத்துடன் கத்திச் சொன்னாள். பக்கத்தில் போனதும் எங்களுக்குத் தெரிந்தது - செல்வியின் கன்னங்களில் இன்னமும் காயாமல் இருந்த கண்ணீர் கறைதான்...

போலிஸ்காரர் முதலில் எங்களுக்குத்தான் 'டோஸ்' விட்டார்! ''என்ன சார் நீங்க இப்படி இருட்டிப் போன நேரத்தில இந்தக் கூட்டத்தில கொஞ்சங்கூட பொறுப்பு இல்லாம ஒரு குழந்தையை விட்டுட்டு உங்க பாட்டுக்குப் போயிட்டீங்களே...! குழந்தை ஏதாவது கேடிப் பயலுங்க கண்ணுல பட்டிருந்தா என்ன ஆவுறது... ஏதோ சட்டுனு என் கண்ணுல பட்டிச்சோ - தப்பிச்சது...'' என்று ஆரம்பித்து பட்டிமன்ற தீர்ப்புச் சொல்கிற நடுவர் மாதிரி பேசித் தீர்த்தார் அந்தப் போலிஸ்காரர். இதுவும் எங்கள் நேரத்தில்தானே சேர்த்தி. பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தோம். பின் அந்தப் போலிஸ்காரர் என் தங்கையின் கணவரிடம் நடந்ததையெல்லாம் ஒரு பேப்பரில் எழுதிக் கையெழுத்திட்டு தரச்



சொன்னார். மற்றொரு பேப்பரில் செல்வியை காவல் துறையினரிடம் இருந்து பத்திரமாக மீட்டுக்கொண்டதையும் எழுதிக் கொடுக்கச் சொன்னார். என் தங்கையின் கணவர் அப்படியே எல்லாவற்றையும் எழுதிக் கொடுத்தார்... பிறகு கொஞ்சம் தணிந்த குரலில் போலிஸ்காரர் செல்வியை பத்திரமாக எங்களிடம் சேர்ப்பித்த வீரச் செயலுக்காக 'மெடல்' ஒன்று கேட்டார்! அவர் கேட்ட ஐம்பது ரூபாய் மதிப்பான மெடலை அவரிடம் கொடுத்துவிட்டு நாங்கள் செல்வியை அழைத்துக்கொண்டு விறுவிறுவென்று நடந்தோம்.

என் தங்கைக்கு மகளைப் பார்த்ததும்தான் உயிரே வந்தது. மகிழ்ச்சிக் கடலின் இரண்டொரு துளிகள் அவளின் கண்களில் திரண்டிருந்தன. ஆனால் இதெல்லாம் இரண்டே இரண்டு நிமிடம்தான். செல்வியின் கையில் இருந்த கோன் ஐஸ்ஸைப் பார்த்ததும் என் தங்கைக்குக் கோபம் வந்து விட்டது.

''இந்த மார்கழி மாச குளிர்ல, ராத்திரி எட்டு மணிக்கு கோன் ஐஸாடி சாப்பிடறது? தூக்கி அதை எறி அந்தப் பக்கம். சளிப் பிடிச்சி காய்ச்சல் வந்தா அது வேற பாடா?'' என்று செல்வியைப் பார்த்து ஒரு கத்து கத்தினாள். செல்வி காணாமல் போனதற்கு வேறு ஒரு சின்ன கத்தல் கத்திவிட்டு ''சரி சரி - பொருட்காட்சி பாத்தது போதும்... கிளம்பலாம் வீட்டுக்கு...'' என்றாள்.

நாங்கள் எல்லாரும் வீட்டிற்குக் கிளம்ப ஆயத்தமானோம். அப்போதுதான் நான் காயத்ரியின் முகத்தைப் பார்த்தேன். செல்வி காணாமல் போய் விட்டாள் என்ற நிமிஷத்தில் இருந்ததே ஒரு திரில்லிங்கான காட்சி ஒன்றைப் பார்க்கிற மாதிரியான பரவசமான மலைப்பு - அது இன்னமும் காயத்ரியின் முகத்தில் அப்படியே நிறைந்து கிடந்தது.

'செல்வி காணாமப் போயிட்டாடி; எங்கே போனாள்னு தெரியலை...' என்று என் தங்கை காயத்ரியிடம் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் சொன்னபோது காயத்ரி 'அப்படின்னா இனிமே நமக்கு வேற செல்வி வருவாளா?' என்று குழந்தைத் தனமாகக் கேட்டாளே - அதுவும் சட்டென என் ஞாபகத்தில் வர நான் காயத்ரியிடம் சின்னதாக ஒரு விளையாட்டு விளையாடினேன். அவளிடம் செல்வியைக் காட்டியவாறு சொன்னேன் : ''காயத்ரி, பாத்தியா... வேற செல்வி வந்தாச்சி நமக்கு...!''

அவ்வளவுதான்! காயத்ரியின் முகத்தில் மேலும் ஒரு பரவசம்! மேலும் இரண்டு மலைப்பு... சும்மாவே அவளுக்கு இரண்டு கண்ணும் கொஞ்சம் பெரிசு! நான் இந்த மாதிரி சொன்னதும் இன்னும் பெரிசாய் முட்டைக் கண்களாய் விரிந்து அகன்றுவிட்டன காயத்ரியின் கண்கள். செல்வியை வைத்த கண்ணை எடுக்காமல் மேலேயும் கீழேயும் பார்த்தாள். பின் இப்படியும் அப்படியும் பார்த்துவிட்டு ஆச்சர்யத்தோடு காயத்ரி சொன்னாள் : ''அய்! நம்ம செல்வி மாதிரியே இருக்கா...!''

போதுமா அறியாமை...?! இல்லை இன்னும் கொஞ்சம் வேணுமா? வேணும்போல இருந்தால் - இதோ இன்னும் சில...

இப்போது என் தங்கை மகள் செல்விக்கு இருபத்தி ஆறு வயதாகிவிட்டது. கல்யாணமாகி பிரகாஷ் என்ற பெயரில் மூன்று வயதில் மகன் இருக்கிறான் அவளுக்கு. அறியாமையில் காயத்ரி என்ற சித்திக்காரிக்கு பிரகாஷ் குறைந்தவனே இல்லை! அவனுடைய வீடு இருக்கும் தெருவில் நாய் ஒன்று இருக்கிறது. அந்த நாய்க்கு பிரகாஷ் பிஸ்கெட் போடுவான். முறுக்குப் போடுவான். எது சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும் அதை அந்த நாய்க்கும் கொஞ்சம்



பிரகாஷ் போடுவான். அதுவும் அவன் போடுவதை வாலை ஆட்டியபடி ஆசையோடு சாப்பிடும். ஒருநாள் அதே மாதிரி பிரகாஷ் அந்த நாய்க்கு சின்ன பிஸ்கட் ஒன்றைப் போட்டான். வழக்கம்போல அதுவும் பிஸ்கெட்டை வாலை ஆட்டிக் கொண்டே சாப்பிட்டது. அது சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருந்த பிரகாஷ் திடீரென அவனுடைய அம்மாவிடம் கேட்டான் : ''ஏம்மா நாய்க்கு கையே இல்லை?!''

அதற்கு அவனுடைய அம்மா சொன்னாள் : ''கேட்டுச் சொல்றேன்!''

உண்மையில் அவள் இதை யாரிடமும் கேட்கவும் இல்லை. சொல்லவும் இல்லை. சும்மா அப்படிச் சொல்லி வைத்தாள். சரியென்று அந்தப் பையனும் அம்மா கேட்டுச் சொல்வாள் என்ற எண்ணத்தில் அவன் பாட்டுக்கு இருந்து விட்டான். அதே நாய் பற்றி அதே பிரகாஷ் பையன் வேறொரு கேள்வியை வேறு ஒரு நாளில் அவனுடைய அம்மாவிடம் கேட்டான். மூன்று வயசு முடிந்ததும் அவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிட்டார்கள். அதனால் காலையில் எட்டு மணிக்குக் கிளம்பிப் போனால் பகல் ஒரு மணிக்குத் தான் பிரகாஷ் பள்ளிக்கூடத்தில் இருந்து வீடு திரும்புவான். அதனால் இடைப்பட்ட அந்த நீண்ட நேரத்திற்கு பிரகாஷ் அந்த நாயைப் பார்க்கமுடிவதில்லை. சாயந்தர வேளையில் தான் அநேகமாக அவனால் அதைப் பார்க்க முடியும். நீண்ட நேரத்திற்குப் பிறகு பார்க்கிறபோது பிரகாஷ் அந்த நாயைப் பார்த்து அன்புடன் சிரிப்பான். அதுவும் அதனுடைய ஸ்டைலில் வாலை ஆட்டும் - பிரகாஷைப் பார்த்ததும். ஆனால் நாய் வாலை ஆட்டியது பிரகாஷ்க்குப் போதவில்லை. அம்மாவைக் கேட்டான் : ''ஏம்மா நாய் என்னைப் பாத்து சிரிக்கவே மாட்டேங்குது?!''

இதற்கும் அவனுடைய அம்மா வழக்கத்தை மாற்றிக் கொள்ளாமல் சொன்ன பதில் : ''கேட்டுச் சொல்றேன்'' என்பதுதான். சொன்னபடி பிரகாஷின் அம்மா யாரிடத்திலும் அதைக் கேட்டுச் சொன்னாளா இல்லையா என்பதைப் பற்றி யெல்லாம் நமக்குக் கவலை இல்லை. நாம் கவலைப்பட வேண்டியதெல்லாம் சிறுவர் சிறுமிகளின் இந்த மாதிரியான கேள்விகளும் பேச்சுக்களும் நிறைய பேருக்கு அறியாமை யாகத் தெரியாமல் கிறுக்குத்தனமாக எரிச்சல்படச் செய் கின்றன. எதையாவது பாவம் அறியாமைத்தனத்தில் கேட்டு வைத்துவிட்டு அம்மா அப்பாக்களிடம் வாங்கிக் கட்டிக் கொள்கிற குழந்தைகளின் வேடிக்கையான விசனமான கதைகளையெல்லாம் இன்னும் எத்தனை எத்தனையோ சொல்லிக்கொண்டே போகலாம். முடிவே கிடையாது அதற்கு. ஆனால் அறியாமைக் கதைகளின் இந்தச் சின்ன தொகுப்பிற்கு முடிவு வேண்டும். அதனால் முத்தாய்ப்பாக ஒரே ஒரு இன்னொரு அறியாமை குட்டிக் கதையை மட்டும் ரத்னசுருக்கமாகச் சொல்லிவிட்டு இந்தத் தொகுப்பை நிறைவு செய்து கொள்கிறேன்.

இந்த அறியாமைக் கதையின் கதாநாயகன் தலைமை ஆசிரியரால் 'Sugar' என்று அழைக்கப்பட்ட அந்தப் பழைய பையன் சர்க்கரைதான். எங்கள் ஊரில் வெயிலுக்கு உகந்த அம்மன் கோயில் என்றொரு கோயில் உண்டு. ஊரில் இருக்கும் கோயில்களிலேயே அந்தக் கோயிலில்தான் ஒரு அமானுஷ்யம் சூட்சுமம் கொண்டிருக்கும். ஒரு நிசப்த மான ஆன்மிக சாந்நியத்தியத்தின் நீரோட்டத்தை சின்ன வயசிலேயே அந்தக் கோயிலின் கல் தளங்களில் என்னுடைய உணர்வுகள் உணர்ந்திருந்தன. ஆட்கள் அதிகம் இல்லாத நேரங்களில் அந்தக் கோயிலுக்குப் போய் வருவது வழக்க மாக இருந்தது எனக்கு. அந்தக் கோயிலில் என்னைக் கவர்ந்திருந்த இன்னொரு விஷயம் - யானை. எங்கள் ஊரில்



அந்த வெயிலுக்கு உகந்த அம்மன் கோயிலில் மட்டும் தான் யானை இருந்தது. அதனால் சின்ன வயசில் அந்தக் கோயிலை நான் யானைக் கோயில் என்று சொல்வேன். அந்த யானையைப் பார்க்கவும் அடிக்கடி நான் அந்தக் கோயிலுக்குப் போய் வருவேன். யானையை நேரம் போவதே தெரியாமல் பார்த்துக் கொண்டிருப்பேன். சின்ன வயதில் பார்க்கப் பார்க்க அலுக்காததாக இருந்தது அந்த யானை எனக்கு. வயதான பிறகும்கூட யானையின் மேல் இருக்கும் வசிகரம் எனக்குள் குறைந்தபாடாக இல்லை. ஒரு நாள் அந்த யானையைப் போய்ப் பார்த்துவிட்டு வரலாமேயென்று கிளம்பினேன். இந்த சர்க்கரை அவனுடைய வீட்டு வாசலில் நின்று கொண் டிருந்தான். என்னைப் பார்த்ததும் ''மாமா - எங்கே போறீங்க நீங்க?'' என்று கேட்டான்.

''யானைக் கோயிலுக்குப் போறேன்டோய்...!'' என்றேன் சிரித்துக்கொண்டே.

''நானும் வரட்டா?'' சர்க்கரை ஆசையோடு கேட்டு விட்டான்.

''சரி வா...'' என்று சொல்லி அவனையும் அழைத்துக் கொண்டு போனேன்.

முதலில் கோயிலில் போய் சாமியைக் கும்பிட்டுவிட்டு யானை கட்டிப்போடப்பட்டிருக்கும் பகுதிக்குப் போய் நின்று கொண்டோம். சப்தம் எதுவும் போடாமல் சர்க்கரை என்னோடு சேர்ந்து சிறிது நேரம் மௌனமாக யானையையே பார்த்துக்கொண்டிருந்தான். பிறகுதான் அறியாமையின் உச்சாணிக் கொம்பில் ஏறி நின்றுகொண்டு அந்த மகா கேள்வியை சர்க்கரை கேட்டான் : ''ஏன் மாமா, யானைக்கு மாத்திரம் பின்னாடி ஒண்ணு முன்னாடி ஒண்ணுன்னு ரெண்டு வால் இருக்கு?''

★

# 4. பூதம்

இன்னும் பதினைந்து நாட்களில் தினகரனுக்கு மதுரையில் கல்யாணம் நடக்க இருக்கிறது. ரசாயனத்தில் முதுகலைப் பட்டம் பெற்றிருக்கும் தினகரன் வேளச்சேரியில் இருக்கும் மருந்துகள் தயாரிக்கும் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து கொண்டு சென்னையில் தனியாக ஒரு லாட்ஜில் தங்கி இருக்கிறான். அவனின் அப்பா, அம்மா மதுரையில் இருக்கிறார்கள். மதுரை அவர்களின் சொந்த ஊர்.

தினகரனுக்கு இப்போது வயது இருபத்தெட்டு. கடந்த ஒரு வருஷமாக அவனின் திருமணத்திற்காக மும்முரமாக பெண் பார்த்தார்கள். சோழவந்தான், சிவகங்கை, மானா மதுரை, அருப்புக்கோட்டையென்று எங்கே எங்கெல்லாமோ போய்ப் பெண் பார்த்து இரண்டு மாதங்களுக்கு முன்புதான் சொந்த ஊரான மதுரையிலேயே தினகரனின் கல்யாணத்திற்குப் பெண் அமைந்தது. பெண்ணின் பெயர் கல்பனா. பார்ப்பதற்கு கல்பனா சுமார் என்று சொல்லும்படியான சாதாரண அழகு இல்லாத பெண்ணாகத்தான் இருந்தாள். ஆனால் சற்று மாநகரத்துக்கு உரிய 'ஸ்டைலான' பெண்ணாக இருந்த அவளைப் பார்த்த உடனே தினகரனுக்கு ரொம்பப் பிடித்துவிட்டது. தினகரனின் சுபாவம் இது. எதையாவது அல்லது யாரையாவது அவனுக்குப் பிடித்துவிட்டால் ஒரேயடியாக ரொம்பப் பிடித்துவிடும். பிடிக்காவிட்டால் அதே மாதிரி ரொம்பவும் பிடிக்காமல் போய்விடும். அநேகமாக எல்லா விஷயத்திலேயுமே தினகரன் இப்படித்தான். கோபம் வந்தால் தலை வெடிக்கிற மாதிரி கோபம் வந்துவிடும். சந்தோஷம் வந்தால் கேட்கவே வேண்டாம். கூரையை இடிக்கிற மாதிரி குதியாய் குதிப்பான். துக்கம் வந்துவிட்டால் கப்பல் கவிழ்ந்துவிட்ட மாதிரி ஒரேயடியாய் துக்கத்திலேயே மூழ்கிப் போய்விடுவான்... இப்படி உச்சம்தான் எதை எடுத்துக்கொண்டாலும்.

இந்த உச்சம் கல்பனாவின் விஷயத்திலும் ஜரூராக வேலை செய்தது. அவளைப் பார்த்துப் பிடித்துவிட்டது என்றவுடனேயே தினகரன் கல்பனாவை மிகவும் நேசிக்கத் தொடங்கிவிட்டான். - இத்தனைக்கும் கல்பனாவைப் பெண் பார்த்தபோது அவனுடைய பெற்றோர்களுக்கு அத்தனை திருப்தி இல்லை. இன்னும் கொஞ்சம் அழகான பெண்ணாகப் பார்க்கலாம் என்றும் நினைத்தார்கள். ஆனால் தினகரனுக்குச் சின்ன தயக்கம்கூட இல்லாமல் கல்பனாவை ரொம்பவும் பிடித்துவிட்டதால் அவனுடைய பெற்றோர்களுக்கு தினகரனின் எண்ணத்திற்கு மாறாக நடக்கும் அபிப்பிராயம் எழாமல் போய்விட்டது. மற்ற சீர்வரிசை வரதட்சணை ஜாதகப் பொருத்தம் அந்தஸ்து போன்ற விஷயங்கள் எல்லாம் முதலிலேயே பேசி முடிவு செய்யப்பட்டு விட்டபடியால் பெண்ணைத் தினகரனுக்குப் பிடித்துவிட்டது என்றதுமே இரண்டு பக்கமும் கல்யாண வேலைகள் ஜரூராக ஆரம்பித்து விட்டன.

காத்துக்கொண்டே இருந்த தினகரன் நிச்சயதார்த்தம் நடந்து இரண்டு வீட்டாரும் தாம்பூலம் மாற்றிக் கொண்ட உடனே கல்பனாவிடம் இருந்து அவளுடைய போட்டோ ஒன்றைக் கேட்டு வாங்கிக்கொண்டான். பத்து நாட்களுக்கு ஒருமுறை இரவு எட்டரை மணிக்கு மேல் பொது தொலை பேசிக் கடையில் இருந்து மதுரைக்கு போன் பண்ணி கல்பனாவுடன் பேசினான். போனில் பேச முடியாத விஷயங்களை அவ்வப்போது கடிதங்களாக எழுதி வருங்கால மனைவிக்கு ஆசையோடு போஸ்ட் செய்து கொண்டிருந்தான். சில சந்தர்ப்பங்களில் கல்பனாவும் அவனுக்குப் பதில் எழுதினாள்.

இப்படி இந்தப் பரிமாற்றங்கள் எல்லாம் இதமான காதல் அனுபவங்களாய் கல்யாண தேதியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தன. தினகரன் சென்னையில் ஆதம்பாக்கத்தில் சுறுசுறுப்பாக வீடு பார்த்து அட்வான்ஸ் கொடுத்துவிட்டான். மதுரையில் அவனுடைய அப்பா கல்யாணத்திற்கு அவர் அழைக்கிற பாணியில் அழைப்பிதழ்கள் அச்சடித்துவிட்டார். தினகரன் சென்னையில் அவனுடைய நண்பர்களை அழைக்கின்ற பாணியில் கல்யாண அழைப்பிதழ்களைத் தனியாக அச்சடித்துக் கொண்டான். கல்பனாவிற்கு முதல் வேலையாக ஒரு அழைப்பிதழை அனுப்பி வைத்தான். உடனே அவளிடம் இருந்து அதற்கு நன்றி தெரிவித்து அழகான 'கார்ட்' ஒன்றும் வந்தது. கல்பனாவிடம் இருந்து தினகரனுக்கு இந்தக் குறுகிய நாட்களில் வந்திருக்கும் இரண்டாவது நன்றி 'கார்ட்' இது.

தினகரனுக்கு சிகரெட் புகைக்கும் பழக்கம் உண்டு. அந்தப் பழக்கத்தைத் தனக்காக உடனே கைவிடும்படி கல்பனா ஒரு கடிதத்தில் அவனிடம் அன்போடு கேட்டுக் கொண்டிருந்தாள். தினகரன் உடனே அவளுடைய அன்புக்குக் கட்டுப்பட்டு புகை பிடிக்கும் வழக்கத்தை நிறுத்திக்கொண்டு விட்டதாகக் கடிதம் எழுதிப் போட்டான். அப்போது, அவனுக்கு அவனுடைய வருங்கால மனைவியிடம் இருந்து வந்தது நன்றி தெரிவிக்கும் முதல் 'கார்ட்'...

தினகரன் வெளியூர்களில் இருக்கும் நண்பர்கள் எல்லோருக்கும் கல்யாண அழைப்பிதழ்களை இருபது நாட்களுக்கு முன்பாகவே தபாலில் அனுப்பி வைத்து விட்டான். சென்னையில் இருக்கும் நண்பர்களை மட்டும் கூடியவரை நேரில் சந்தித்து அழைப்பிதழைத் தர வேண்டும் என்று விரும்பினான். அதன்படி நிறைய நண்பர்களைச் சந்தித்து அழைப்பிதழ்களைக் கொடுத்தும் விட்டான். இன்று சாயந்தரம்



நான்கு மணிக்குக் கிளம்பி அடையார் பகுதியில் இருக்கும் கம்ப்யூட்டர் கம்பெனி ஒன்றில் பணிபுரியும் சரவணகுமார் என்ற நண்பனை அவனுடைய அலுவலகத்திற்கு நேரில் போய் அழைப்பிதழைக் கொடுத்துவிட்டு வரும் எண்ணத்தில் தினகரன் இருந்தான்.

சரவணன் மதுரைக்குப் பக்கத்தில் திண்டுக்கல் என்ற ஊரைச் சேர்ந்தவன். ஆறு மாதங்களுக்கு முன்புதான் கல்யாணமாகி சென்னை புரசைவாக்கத்தில் வீடு பார்த்து மனைவியுடன் குடித்தனம் செய்து கொண்டிருந்தான். கல்யாணம் ஆவதற்கு முன்பு சரவணகுமார் தினகரன் தங்கியிருக்கும் லாட்ஜில்தான் தங்கி இருந்தான். பக்கத்து ஊர்க்காரன், ஒரே ஜாதிக்காரன் என்ற அடையாளங்களால் தினகரனும் சரவணகுமாரும் லாட்ஜ் வாழ்க்கையில் நெருக்கமான நண்பர்களாக இருந்தார்கள். கிட்டத்தட்ட ஒரே நேரத்தில்தான் நண்பர்கள் இருவரின் கல்யாணங்களுக்குப் பெண் பார்க்கும் படலம் அவரவர்களின் குடும்பங்களில் ஆரம்பமாகி சரவணகுமாருக்கு ஆறு மாதத்திற்கு முன்பாக பெண் சென்னையிலேயே அமைந்து கல்யாணம் நடந்து விட்டது. தினகரனுக்கு இப்போதுதான் மதுரையில் நடக்கப் போகிறது.

சென்னையில் நடந்த சரவணகுமாரின் கல்யாணத்திற்கு தினகரன் முதல் ஆளாகப் போயிருந்தான். சரவணகுமாரின் மனைவி மிகவும் அழகானவளாக இருந்தாள். கல்யாணமானதுமே சரவணகுமார் லாட்ஜ் அறையைக் காலி செய்து விட்டான். சரவணகுமாருக்கு முன் தனக்குக் கல்யாணமாகி அவனை முந்திக்கொண்டு லாட்ஜ் அறையை, தான் காலி செய்து போய்விட வேண்டும் என்ற ரகசியமான ஆசை தினகரனின் மனதில் இருந்தது. அவனுடைய ஆசை நிறைவேறவில்லை. சரவணகுமார் முந்திக்கொண்டான்! சரவணகுமார் மனைவியுடன் புரசைவாக்கத்தில் குடியேறியதும்

அவனுடைய வீட்டுக்கு தினகரன் ஒரே ஒரு தடவை மட்டும் போய் வந்தான். அழகான மனைவியுடன் சரவணகுமார் குடித்தனம் பண்ணிக் கொண்டிருக்கிற ஒருவித பெருமித மான அமைப்பைப் பார்ப்பதற்குக் கொஞ்சம் மனதில் பொறாமையாக இருந்ததால் நண்பனின் வீட்டிற்குப் போகப் பிடிக்கவில்லை தினகரனுக்கு! அடிக்கடி ஆபீஸ் நம்பருக்குப் போன் பண்ணி சரவணகுமாருடன் பேசிக்கொள்வான். நேரில் போவதில்லை. மதுரையில் கல்பனாவைப் பெண் பார்த்துக் கல்யாணம் நிச்சயமானவுடன் தினகரன் சரவண குமாருக்கு போன் பண்ணி தனக்குக் கல்யாண தேதி தீர்மானம் செய்யப்பட்டுவிட்டதையும், பெண்ணின் ஊரும் மதுரைதான் என்பதையும் ஆசையோடும் பெருமையோடும் சொன்னான். அந்த நிமிடம் தினகரனின் மனசு திருப்தியில் நிறைந்து வழிந்து கொண்டிருந்தது.

இன்று அந்த நண்பன் சரவணகுமாருக்கு கல்யாண அழைப்பிதழை அவன் பணிபுரியும் ஆபிசிற்கு நேரில் போய்ப் பார்த்துக் கொடுத்துவிட்டு வர தினகரன் தீர்மானம் பண்ணி இருந்தான். அதை முதலிலேயே போன் மூலம் சரவண குமாரிடம் சொல்லியும் இருந்தான். சொன்னபடி சாயந்தரம் நான்கு மணிக்கு தினகரன் அவனின் இரண்டு சக்கர வாக னத்தில் கிளம்பிப் போனான். சரவணகுமார் ஆபீஸ் வாசலில் தினகரனுக்காகக் காத்திருந்தான். அந்தக் கணம் தினகரனுக்கு மனோரம்மியமாக இருந்தது.

''அட்வான்ஸ் வாழ்த்துக்கள் தினகரா...'' என்றபடி கைகுலுக்கிய சரவணகுமார் ''வா - எதிரே இருக்கிற ரெஸ்டாரெண்ட்ல காப்பி சாப்பிட்டுக்கிட்டே - ஒரு இருபது நிமிஷம் வரைக்கும் நாம பேசிட்டு இருக்கலாம். இன்னும் சில வேலைங்க ஆபீஸ்ல முடியாம இருக்கு. அதை முடிச் சிட்டுத்தான் வீட்டுக்குக் கிளம்ப முடியும் நான்...'' என்றான்.



''பரவாயில்லை. இருபது நிமிஷத்தில கிளம்பிடலாம்'' என்றான் தினகரனும்.

நண்பர்கள் இவருவரும் சாலையின் எதிர்புறம் இருந்த ரெஸ்டாரெண்ட்டிற்குள் நுழைந்தார்கள். சரவணகுமார் சர்வரைக் கூப்பிட்டு இரண்டு காப்பி ஆர்டர் கொடுத்தான்.

''ஹலோ - புதுமாப்பிள்ளை ஆகப் போறே... அந்தக் களை இப்பவே உன் முகத்தில வந்திட்ட மாதிரி இருக்கு...'' என்றான் சரவணகுமார்.

''எப்படி இருக்கே சரவணா - நாம மீட் பண்ணியே ரொம்ப நாளாயிடுச்சி... வீட்ல ஒன் மிஸஸ் எப்படி இருக் காங்க?'' - தினகரன் கேட்டான்.

''போத் ஆர் ஃபைன்...''

''விசேஷம் எதுவும்?''

''இதுவரை எதுவுமில்லை... அவசரமென்ன... மெதுவா வரட்டுமே...''

''சரி, நீ என் கல்யாணத்துக்கு அவசியம் வரணும் சரவணா... மதுரைக்கு எப்படி வர்றதுன்னு வராம இருந்திடாதே... அதுமட்டுமில்லை; கல்யாணத்துக்கு ஒன் மிஸஸையும் கூட்டிட்டு வரணும்...'' என்று சொன்னவாறே தினகரன் ஒரு கல்யாண அழைப்பிதழை எடுத்து நீட்டினான். நன்றி சொல்லி அதைப் பெற்றுக்கொண்ட சரவணகுமார் மிக ஆர்வத்தோடு பிரித்துப் பார்த்தான். சட்டென அவனின் புருவங்கள் உயர்ந்தன. அப்போது இருவருக்கும் காப்பி வந்தது.

''அட - இந்தப் பொண்ணா?'' என்று சரவணகுமார் அவனையும் மீறிக் கேட்டுவிட்டான். இந்தக் கேள்வியும் அதில் இருந்த தொனியும் உடனே தினகரனை எறிட்டுப்

பார்க்க வைத்தன. ''தெரியுமா உனக்கு?'' அவசரமாகக் கேட்டான். பதில் சொல்ல சரவணகுமார் சில வினாடிகள் தயங்கினான். பிறகு அவனும் அவசரமாகச் சொன்னான் : ''இவங்க ஃபேமிலியைத் தெரியும்...'' தினகரனின் ஏறிட்ட பார்வை சரவணகுமாரின் மேலேயே பதிந்திருந்தது. சூழ் நிலையில் அரூபமாய் ஒன்று வியாபிப்பது போலிருந்தது தினகரனுக்கு. அவசரப்பட்டு எதையோ வெளிப்படுத்தி விட்ட சரவணகுமார் சட்டென எச்சரிக்கை உணர்வுடன் சமாளிக்கப் பார்க்கிற பாவனை அவனுடைய முகத்தில் தெரிவ தாகவும் தினகரன் உணர்ந்தான். சரவணகுமாரைப் பார்த்துச் சிறிது தயங்கியவாறே கேட்டான் : ''இவங்க ஃபேமிலியை ஒனக்கு எப்படித் தெரியும்? எதுவும் சொந்தமா?''

''இல்லை, இல்லை; சொந்தமெல்லாம் கிடையாது. நம்ம ஜாதிக்காரங்க என்கிறதுல தெரியும்...'' - சரவணகுமார் சொன்னான்.

அந்த வார்த்தையை நம்ப முடியவில்லை தினகரனுக்கு. ''சரவணா, நானுந்தான் அவங்களோட ஜாதிக்காரன். அதுவும் அதே மதுரைக்காரன்; ஆனா இந்தப் பெண்ணைப் பார்க்கிற துக்கான 'அரேன்ஜ்மெண்ட்' ஏற்பாடு பண்றதுக்கு முந்தின நாள் வரைக்கும் எனக்கோ எங்க அப்பா அம்மாவுக்கோ இந்த ஃபேமிலியைத் தெரியாது. அப்படி இருக்கும்போது திண்டுக்கல்காரனான ஒனக்கு - எப்படி இந்த ஃபேமிலியைத் தெரியும்?'' - என்று கேட்டான்.

இத்தனை கறார்தனமாகத் தினகரன் கேட்டது சரவண குமாருக்கு சங்கடமான நெருடலாக இருந்தது. எதிலும் ஒரு வேகம் பெற்றுவிடும் தினகரனின் சுபாவம் அவனுக்குத் தெரிந்ததுதான். அதனால் தானும் அவனைப்போல வேகம் காட்டிவிடாமல் இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.



''சரி, சரி - நீ முதல்ல காப்பியை சாப்பிடு...'' என்றான்.

''சாப்பிடறேன் - அதுக்கு முந்தி நீ என் கேள்விக்குப் பதில் சொல்லு'' என்றான் தினரகன் - கொஞ்சம் தேவை யில்லாத கண்டிப்புடன்.

''ஸாரி தினகரா; ஒனக்குத் தெரியாத ஃபேமிலி என்கிறதால அவங்க எனக்கும் தெரியாத ஃபேமிலியாத் தான் இருக்கணும்னு எப்படி நீ எதிர்பார்க்கிறே - தெரியலை'' - சரவணகுமாரும் கண்டிப்பான குரலில் சொன்னான். அவன் இப்படிச் சொன்னதும் சுபாவப்படி தினகரனின் மனம் மேலும் வேகமடைந்தது. அந்த வேகத்தோடேயே சொன்னான் : ''சரவணா, நான் எவ்வளவு ஷார்ப்னு ஒனக்குத் தெரியும். அந்த ஃபேமிலி ஒனக்குத் தெரிஞ்ச ஃபேமிலி என்கிற அடிப்படையில நீ பேசியிருந்தா - 'அட இவங்க ஃபேமிலியா?' என்கிற மாதிரியான கேள்விதான் ஒன் வாய்ல இருந்து வந்திருக்கும்! ஆனா அந்தக் கேள்வி வரலை உன்கிட்டே இருந்து! 'அட - இந்தப் பொண்ணா'ன்னுதான் கேட்டே நீ! - இந்த ஃபேமிலியை ஒனக்குத் தெரிஞ்சா - அது வேற விஷயம். இந்தப் பொண்ணு ஒனக்குத் தெரிஞ்ச பொண்ணா இருந்தா - அது வேற விஷயம்! ரெண்டும் ஒண்ணு கிடையாது. வேற வேற. நீ கேட்ட டோன் - ஒனக்கு இந்த கல்பனாவைத் தெரியும் என்கிற மாதிரியான டைப்ல இருந்துச்சி...!''

''தினகரா - இதான் உன்கிட்ட ப்ராப்ளம். தேவை யில்லாம அனலைசிஸ் பண்ணுவே எதையும்... நீ இவ்வளவு தூரம் கேட்டதால சொல்லிடறேன் - எனக்கு இந்த ஃபேமிலியைத் தெரியும். அதனால இந்தப் பொண்ணையும் தெரியும்...'' - சரவணன் சின்ன எரிச்சலுடன் சொன்னான்.

''இப்ப நான் அந்த ஃபேமிலியை ஒனக்கு எப்படித் தெரியும்னு கேக்குறதில தப்பு எதுவும் இல்லேன்னு நினைக்கிறேன்...'' - சரவணகுமாரை மேலும் எரிச்சல்படுத்துகிற மாதிரி இருந்தது தினகரன் இப்படிக் கேட்டது.

''இதை நீ சகஜமா கேக்குற மாதிரி தெரியலை. ஏதோ தப்பு இருக்கறதா நெனைச்சிக்கிட்டு சும்மா ஒரு வீம்புக்கு இப்படிக் கேக்குறே நீ...'' - சரவணகுமார் எரிச்சலைக் காட்டியவாறே சொன்னான். தினகரன் சில வினாடிகள் மௌனமாக இருந்துவிட்டு உணர்வுகளின் வேகத்தைச் சிறிது குறைத்துக் கொண்டு சொன்னான் : ''அப்படியெல்லாம் இல்லை. ஜஸ்ட் - தெரிஞ்சிக்கிற ஐடியாலதான் கேக்குறேன்...''

இதற்குப் பதில் சொல்ல சரவணகுமார் வெளிப்படையாகவே சிறிது தயக்கம் காட்டினான்.

''சரவணா - தயக்கம் யாரையும் எதையும் கொஞ்சம் சந்தேகப்பட வச்சிடும்'' என்றான் தினகரன்.

''அப்பச் சொல்லிடறேன். போன வருஷம் என் கல்யாணத்துக்குப் பெண் பார்க்க ஆரம்பிச்ச சமயம் - இந்தப் பொண்ணைப் போய் நாங்களும் பார்த்திருக்கோம். ஏதோ சில லௌகீகங்களோ எதுவோ - எங்களுக்கும் அவங்களுக்கும் சரிப்பட்டு வராம போயிருச்சி... அதனால இந்தப் பெண் ஃபிக்ஸ் ஆகாமப் போயிருச்சி... இதான் விஷயம். இதை உன் கிட்டச் சொல்ல வேண்டாம்னு ஏனோ தோணிச்சி... ஆனா - அட இந்தப் பொண்ணான்னு சட்டுனு அவசரத்தில ஸ்லிப் ஆகி என்னை மீறிக் கேட்டுட்டேன்... அதைக் கேட்டிருக்கக் கூடாது நான்... முன்னே பின்னே தெரியாத கேள்விப்படாத ஃபேமிலி மாதிரி நான்பாட்டுக்கு இருந்திருக்கணும்... ஸ்லிப் ஆகி எதையோ சொல்லிட்டது தப்பாப் போயிருச்சி...'' சரவணகுமார் வேகமான குரலில் சொன்னான்.



''ஸ்லிப் ஆனதுகூடத் தப்பு இல்லை... இப்பச் சொன்ன இந்த விபரத்தை முதல்லேயே சொல்லாம மென்னு முழுங்குனியே - அதான் தப்பு...'' - தினகரன் சொன்னான்.

''ஓகே தினகரா! ஆளை விடு. உன் கல்யாணத்துக்கு நான் வந்திடறேன்... மறுபடியும் சொல்லிடறேன் - உனக்கு என் அட்வான்ஸ் வாழ்த்துக்கள்... காப்பியை சாப்பிடுவோம் - இன்னும் எனக்கு ஆபீஸ்ல வேலை தலைக்கு மேல இருக்கு. போய்ப் பார்த்தாத்தான் - ஏழு மணிக்காவது வீட்டுக்குக் கிளம்ப முடியும்...'' - விஷயத்தை முடித்துவிட்டமாதிரி பேசி எழுந்து விட்டான் சரவணன். ஆனால் தினகரனுக்கு முடிந்து விட்ட மாதிரி இல்லை! ஏதோ பேசப்படாமல் விட்டு விட்ட மாதிரி இருந்தது! ஆனாலும் பேச்சைத் தொடர வழியில்லாமல் அவனும் எழுந்து கொள்ள வேண்டியதாக இருந்தது.

சரவணகுமாரிடம் விடைபெற்றுக்கொண்டபோது கல்யாணத்திற்கு அவனை அழைக்க வந்த நிமிடத்தில் இருந்த உற்சாகம் தினகரனில் வெகுவாகக் குன்றிப் போயிருந்தது. - கடைசியில் சரவணகுமார் சொன்ன தகவல் முழுமையானதுதானா; முற்றிலும் சரியானதுதானா என்ற நெருடல் தினகரனின் அறிவில் ஊர்ந்துகொண்டே இருந்தது. அந்த நெருடல் அவனைச் சிறிது கவலைக்கு உள்ளாக்கியது. கொஞ்ச நேரத்தில் சிறிய கவலை பெரிய கவலையாக மாறியது! சரவணகுமார் இறுதியில் சொன்ன தகவல் நிஜமாக இல்லாமல் பொய்யாக இருக்குமானால்? - என்ற கேள்வி தினகரனுக்குள் 'திடும்' என எழும்பியதில் அவனுடைய கவலை அச்சமாக மாறியது. உடனே சுபாவப்படி தினகரன் நிம்மதியை இழந்துவிட்டான். கண்ணுக்குத் தெரியாத திசையில் இருந்து கண்ணுக்குத் தெரியாத ஆயுதம் ஒன்று திடீரென்று வந்து அவனைத் தாக்கிவிட்டாற்போல இருந்தது. சரவணகுமார் சொன்ன தகவல் பொய்யாக இருக்குமானால்

நிஜம் என்னவாக இருக்கும் என்று தினகரன் நினைத்துப் பார்த்தான். - இது தீவிரமாக யோசிக்க வேண்டிய விஷயமாக மனதிற்குப் பட்டது.

இந்த மனநிலையிலேயே இருந்ததால் தினகரன் இரவு சாப்பிடக்கூடச் செல்லாமல் அவனுடைய அறையில் படுத்தே கிடந்தான். அவன் மணந்துகொள்ளப் போகிறவளை சரவண குமாரும் போய் பெண் பார்த்துவிட்டு வந்திருக்கிறான் என்ற செய்தியே அவனுக்கு ஒவ்வாததாக இருந்தது! 'என்னடா இது - இந்த மதுரைக்கு வந்த சோதனை...' என்று தினகரன் கவலையிலும் வறட்சியாகப் புன்னகை செய்துகொண்டான். அவனுக்கென்று வந்து வாய்க்கிறது பிரச்சினை - வேறு யாருக்கும் வராதவிதத்தில். சொல்லப்போனால் - அவனுக்கே உரித்தான அதீதமான சுபாவத்திற்கு சரவணகுமார் கல்யாணம் செய்து விவாகரத்து செய்துவிட்ட ஒருத்தியை தான் கல்யாணம் செய்துகொள்ளப் போவதாகக்கூடத் தோன்றியது தினகரனுக்கு!

எரிச்சலுடன் வெகு நேரத்திற்குக் கண்களை மூடிய படியே படுத்திருந்தான். முகூர்த்த தேதியை நோக்கி விலை உயர்ந்த சொகுசுப் பேருந்து போல அழகாக விரைந்து கொண்டிருந்த காதல் பயணத்தின் வேகம் சரேலெனக் குறைந்து விட்டாற் போலிருந்தது! சரவணகுமார் தயக்கத்திற்குப் பிறகு சொன்ன செய்தி நிஜம்தானா அல்லது பொய்யா என்பதை எப்படித் தெரிந்து கொள்வதென்று தெரியாமல் குழம்பினான். ரொம்ப நேரம் கழித்து தினகரனின் மூளைக்குள் ரகசியமாக ஒரு கதவு திறந்தது. சில நிமிடங்கள் அந்தக் கதவின் வழியே தெரிந்த காட்சியை மனதிற்குள் பார்த்துக்கொண்டே இருந்தவன் சட்டென்று எழுந்து வெளியில் போய் வழக்க மாகப் பேசுகின்ற பொதுத் தொலைபேசிக் கடையில் இருந்து மதுரைக்குப் போன் பண்ணினான். இந்த நேரத்தில் வெளியூர் போன் என்றால் அது தினகரனிடம் இருந்துதான் என்பது



வழக்கமாகிப்போயிருந்ததால் சிலவரை கல்பனாவே எடுத்தாள்.

''என்ன கல்பனா - சும்மாதான் போன் பண்ணினேன். சாப்பிட்டாச்சா?'' - தினகரன் கேட்டான்.

''சாப்பிட்டாச்சி. நீங்க?''

''இல்லை.''

''மணி ஒன்பதரையாகப் போகுது - இன்னுமா சாப் பிடலை?''

''ஆபீஸ்ல கொஞ்சம் வேலை ஜாஸ்தி. ஒரே டென்ஷன்! எட்டரை மணிக்குத்தான் வந்தேன்... இனிமேதான் போய்ச் சாப்பிடணும்...''

''மெஸ்ல சாப்பாடு இருக்குமா?''

''அதெல்லாம் இருக்கும். பத்து மணிவரை போடு வான்...''

''அப்புறம்? இன்விடேசன் குடுக்குற வேலையெல்லாம் முடிஞ்சதா?'' கல்பனா யதார்த்தமாகக் கேட்ட கேள்வி தினகரனுக்குத் தேவையான கதவைத் திறந்துவிட்டது. தினகரன் அந்தக் கதவுக்குள் தந்திரமாக நுழைந்தான்.

''அநேகமா முடிஞ்சாச்சி. இன்னும் ரெண்டு மூணு பேருக்குத்தான் குடுக்கணும். ஆனா அவங்க யாரும் ஊர்ல இல்லை. அதனால இன்விடேசனை போஸ்ட்ல அனுப்பிர லாம்னு இருக்கேன். கல்பனா - நீ இன்விடேசன் பத்திக் கேட்டதும்தான் ஞாபகம் வருது. முந்தாநாள் நான் ஒரு ஃப்ரண்டுக்கு இன்விடேசன் குடுக்கறதுக்காக அவனோட வீட்டுக்குப் போயிருந்தேன். வீட்ல அந்த என் ஃப்ரண்டோட மாமா ஒருத்தர் திண்டுக்கல்லுல இருந்து வந்திருந்தார். ஜஸ்ட் ஒரு மரியாதைக்காக அவர் கையிலும் ஒரு இன்விடேசன்

குடுத்தேன். இன்விடேசனை படிச்சிப் பாத்திட்டு - அட; இந்தப் பெண்ணா; தெரியுமே இவங்க ஃபேமிலியை யெல்லாம்னு சொன்னார். போன வருஷமோ என்னமோ அவரோட மகனுக்கு உன்னைப் பெண் பார்த்தாங்களாம்... ஏதோ காரணத்தால முடியாமப் போயிருச்சாம்... எனக்கு ஆச்சர்யமா போயிருச்சி - அவர் சொன்னதும்... ஆனா என்ன காரணத்தால மேரேஜ் ஃபிக்ஸ் ஆகாம போயிருச்சின்னு அவரும் சொல்லலை. நானும் கேட்டுக்கலை... மேற் கொண்டும் எதுவும் பேசிக்கலை அவர்கிட்ட... கௌம்பி வந்துட்டேன். ஏன் கல்பனா - அந்தத் திண்டுக்கல் சம்பந்தம் முடியாம போயிருச்சி...?''

''திண்டுக்கல் சம்பந்தமா?'' - உடனே ஞாபகத்திற்கு வந்துவிடாத சந்தேகமான தொனியோடு கல்பனா கேட்டாள்.

''யெஸ். திண்டுக்கல். கரெக்ட்டா போன வருஷம் - கிட்டத்தட்ட இதே மாதம்... அவரோட மகன் பெயர்கூட சரவணகுமார்னு ஏதோ சொன்ன மாதிரி எனக்கு ஞாபகம்...!''

''பேரெல்லாம் எனக்கு ஞாபகத்ல இல்லை! ஆனா - போன வருஷம்; திண்டுக்கல்காரங்கன்னு சொன்னதும் ஞாபகம் வருது... ஏதோ கம்ப்யூட்டர் படிச்சவர்!''

''கரெக்ட் நீ சொல்றது... கம்ப்யூட்டவர் படிச்சவனே தான்...!''

''கம்ப்யூட்டர் படிச்சவரா இருந்தாயென்ன... வேற ஏதோ படிச்சவரா இருந்தாத்தான் என்ன... எனக்கும் உங்களுக்கும்னு முடிச்சுப்போட்டு வச்சிருக்கும்போது - எப்படி வேற ஒருத்தருக்கும் எனக்கும் கல்யாணம் நடக்கும்...?'' - கல்பனா சிறிது உணர்வுவயப்பட்டுக் கேட்டாள்.

ஆனால் தினகரனுக்கு அப்படித் தோன்றவில்லை. தந்திரமாக பேச்சை அவள் மாற்றுவது போலத் தெரிந்தது!



''அது வேற விஷயம் கல்பனா! யாரோட பெண்டாட்டி யையும் யாரும் கொண்டு போயிட முடியாது! நீ எனக்குத் தான். நான் ஒனக்குத்தான்! அதை மாத்த முடியாது. என்னோட ஆச்சர்யம் என்னன்னா - இவ்வளவு அருமையான பொண்ணு நீ...! எது ஒத்து வந்தாலும் ஒத்து வராவிட்டாலும் - உன்னை மருமகளா ஏத்துக்கறதில எது பாவம் அந்த திண்டுக்கல் காரங்க ஃபேமிலியில குறுக்கே வந்திச்சோ தெரியலை...!'' - தினகரன் தந்திரத்தின் உச்சத்தில் நின்றபடி சொல்லிக் கொண்டிருந்தான். கல்பனா அரை நிமிடம் மௌனமாக இருந்துவிட்டுச் சொன்னாள்: ''நெஜமாவே உங்களோட 'காம்ப்ளிமெண்ட்' என்னை ரொம்ப நெகிழ வைக்குது தினகர். ஐ'ம் ப்ரௌவ்ட் ஆஃப் யு... ஆனா - எல்லாருமே எல்லாருக்கும் அருமையானவங்களா பிடிச்சமானவங்களா இருந்திட முடியாது... நீங்க சொன்ன அந்தத் திண்டுக்கல் காரரோட மகனுக்கு என்னைப் பிடிக்காம போயிருச்சி! அதனால அந்த 'அலயன்ஸ்' - முடியலை! அந்த நேரம் கம்ப்யூட்டர் படிச்ச திண்டுக்கல் பையனுக்கு என்னைப் பிடிக்காம போனது மனசுக்குள்ள எனக்குக் கொஞ்சம் வருத்தமாத்தான் இருந்துச்சி! நானும் மனுஷிதானே - இல்லையா? ஆனா - இப்ப எப்பேர்பட்ட ஒருத்தருக்கு என்னைப் பிடிச்சிருக்குன்னு பாக்கறப்ப அன்னைக்கிப் பட்ட வருத்தமெல்லாம் ஒண்ணுமே இல்லை!''

''அப்ப அந்த திண்டுக்கல் சம்பந்தம் முடியாமப் போனதுக்கு அந்தப் பையனுக்கு ஒன்னைப் பிடிக்கலை என்கிறதுதான் காரணமே தவிர வேற ஒண்ணும் காரணம் கிடையாது?'' - தினகரன் கேட்டான்.

''ஆமா...''

ஒப்புக்காக மேலும் எதை எதையோ இரண்டொரு நிமிடங்கள் பேசிவிட்டு ரிசீவரை வைத்தபோது தினகரனின்

முகம் ஏறக்குறைய செத்துப்போயிருந்தது. சரவணகுமார் சொன்னது நிஜமா பொய்யா என்று தெரிந்து கொள்வதற்காக கல்பனாவிற்கு போன் பண்ணினான். இப்போது உண்மை தெரிந்துவிட்டது. உண்மை மிக மோசமான கசப்பாக இருந்தது! - அவனுடைய அதீத இயல்புப்படி தினகரன் மனசுக்குள் வெந்து தணிந்து விட்டான்! அவன் மணந்து கொள்ளப் போகிறவளை அவனையும் முந்தி அவனுடைய நண்பன் போய்ப் பெண் பார்த்துவிட்டு வந்திருக்கிறான் என்பதே தினகரனை நொந்துபோக வைத்திருந்தது. அதே நண்பன் இப்போது கல்பனாவைப் பெண் பார்த்துவிட்டு 'பிடிக்கவில்லை'யென்று சொல்லி எழுந்து போயிருக்கிறான்! பிடிக்கவில்லை என்பதால் வேண்டாம் என்று அவன் நிரா கரித்தவளைப் போய் தினகரன் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறான், நினைக்க நினைக்க ஏமாற்றமாகவும் ஆத்திர மாகவும் இருந்தது அவனுக்கு. தினகரனைப் பொறுத்தவரை - கொடிய ஏமாற்றம் இது. இப்படி ஒரு பின்னணி இருக்கும் என்று அவன் கனவில்கூட நினைத்தவன் இல்லை.

யோசிக்க யோசிக்க ரொம்ப அவமானமாகத் தெரிந்தது. ஏதோ ஒரு கம்ப்யூட்டர் சயன்ஸைப் படித்துவிட்டு எங்கேயோ ஒரு துக்கடா வேலையில் இருக்கும் ஒருத்தன் பார்த்து பிடிக்க வில்லையென்று நிராகரித்த பெண்ணைப் போய் தான் ரொம்பப் பிடித்து விட்டதாகச் சொல்லி நெஞ்சை உயர்த்திய படி கல்யாணம் செய்து கொள்ளப் போவது நிஜமாகவே பெரிய அவமானகரமானது என்று நினைத்தான் தினகரன். நினைத்துப் பார்க்கப் பார்க்க மனதில் அவமான உணர்ச்சியும் அதிகரித்துக்கொண்டே போயிற்று! விஷயத்தை ஒரு நிமிஷம் சரவணகுமாரின் பக்கம் இருந்து தினகரன் எண்ணிப் பார்த்தான். நாம் பார்த்துப் பிடிக்கவில்லையென்று கழித்துக் கட்டியவளை - பாவம் இவன் போய் கட்டிக்கொள்ளப் போகிறான் என்றுதானே சரவணகுமார் பயல் மனசுக்குள்



நினைத்து தினகரனின் மேல் பரிதாபப்பட்டிருப்பான்...? பரிதாபமும் பட்டிருப்பான். மனசுக்குள் சிறிது ஏளனமாக நினைத்துப் பல்லைக் காட்டி இளிக்கவும் செய்திருப்பான்...!

நினைக்க நினைக்க தாங்க முடியவில்லை தினகரனால். அவமான உணர்வில் உடம்பும் மனசும் கூசின. பேசாமல் தூக்குப் போட்டுக் கொண்டு உயிரை விட்டு விடலாம் போன்ற வேகமும் வேதனையும் ஏற்பட்டன. ரெஸ்ட்டாரெண்ட்டில் சரவணகுமார் சொன்ன அரைகுறைத் தகவலோடு அந்த விஷயத்தை விட்டிருக்க வேண்டும். தேவையில்லாமல் கல்பனாவிற்கு போன் பண்ணி துருவித் துருவி நிஜத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ள முயற்சி செய்திருக்கக்கூடாது. அவனைப் பிடித்து ஆட்டும் உணர்வு வேகத்தில் தினகரன் வேண்டாத ஒரு கிணற்றைப் போய் வெட்டினான். கிணற்றில் இருந்து பூதம் கிளம்பி வந்து அவனுடைய தலைமேல் உட்கார்ந்து கொண்டுவிட்டது.

பூதத்தின் கனத்தையும் சுமையையும் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இருந்தாலும் சுமையைக் கீழே தூக்கி எறியாமல் சுமந்துகொண்டே திரிந்தான்! மனதிற்குள் வெம்பி வெடித்துக் கொண்டிருந்தான்! நண்பன் நிராகரித்தவளை மணந்து கொள்ளப் போகிறோமே என்ற அவமான உணர்வு அவனுடைய மனசைப் போட்டு அறுத்துக் கொண்டிருந்தது. - இப்போது எதிர்பாராமல் தினகரனுக்கு சரேலென கல்பனாவைப் பிடிக்காமல் போய் விட்டது! - அவள் மேல் பொங்கி வழிந்துகொண்டிருந்த காதலும் வற்றி வறண்டு போய்விட்டது!

ஆனால் இதனாலெல்லாம் இனிமேல் என்ன செய்ய முடியும்...? கல்பனாவைத் தன்னால் கல்யாணம் செய்து கொள்ள முடியாதென்று சொல்லி அவளை நிராகரிக்கவா முடியும்? வாய்ப்பே இல்லை!

தினகரன் தவித்தான். கலங்கினான். அடிக்கடி சூனியத்தை வெறித்து வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். பிடிக்காமல் போய்விட்ட கல்பனாவோடு அவனுக்கு நடக்கப் போகிற கல்யாணத்தை நிறுத்தவே முடியாது. எங்கேயும் இதற்காகத் தினகரனால் ஓடிப் போகவும் முடியாது! எல்லாம் முடிந்து போய்விட்டது! எவனோ சரவணகுமார் என்ற பயல் வேண்டாம் என்று நிராகரித்த கல்பனா என்பவளின் கழுத்தில் தாலியைக் கட்டியே ஆக வேண்டிய நிர்ப்பந்தமான கல்யாண தேதியை நோக்கிக் கண்ணுக்குத் தெரியாத சக்தியால் தினகரன் இரக்கமே இல்லாமல் இழுத்துச் செல்லப்பட்டுக்கொண்டிருந்தான் - சங்கிலித் தொடராய் எல்லா நிமிஷமும் உதடுகளில் இடைவிடாமல் புகையும் சிகரெட்டோடு! - புகைச்சல் தினகரனின் உதடுகளில் மட்டுமில்லை. சின்ன இடம்கூட விடாமல் மனசு பூராவும்தான். மனதில் மூண்டிருக்கும் கடும் புகைச்சல் கொஞ்சம் கொஞ்சமாகக் காலப்போக்கில் அணைந்து போய்விடுமா? இல்லை - ஒருநாள் பெரும் நெருப்பாய்க் கனன்று எரியத் தொடங்கிவிடுமா? கடவுள்தான் சொல்ல வேண்டும் இதற்கான பதிலை - காலத்தின் மூலம்...

★

# 5. முதல் கதை

**என்**னுடைய முதல் சிறுகதையை நான் எழுதியபோது எனக்குப் பதினான்கு வயது. அப்போது நான் ஒன்பதாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். என் வகுப்பு ஆசிரியராக பொன்னையா என்பவர் இருந்தார். பி.ஏ., பட்டம் வாங்கிய கையோடு ஆசிரியர் பயிற்சிப் பட்டமும் பெற்று எங்கள் பள்ளிக்கூடத்தில் வந்து வேலையில் சேர்ந்தபோது அவருக்கு வயது இருபத்தி மூன்று. எட்டாவது வகுப்புவரை எனக்கு வகுப்பு வாத்தியார்களாக வந்தவர்கள் எல்லாருமே ஐம்பது வயதைத் தாண்டியவர்கள். வயதின் அழுத்தத்தை விட குடும்பக் கஷ்டங்களின் அழுத்தங்களில் சதாசர்வ காலமும் அமிழ்ந்தவர்களாக இருந்ததால் வயதான அந்த வாத்தியார்கள் எல்லாருமே கோபக்காரர்களாகவும், எதற்கெடுத்தாலும் எரிந்து விழுபவர்களாகவுமே காட்சியளித்ததில் அவர்கள் யாரையும் எனக்குப் பிடிக்காமல் போய்விட்டது. அந்த வாத்தியார்களுக்கு நேர் எதிராக பொன்னையா வாத்தியார் இளமையின் உற்சாகத்தன்மையோடு இருந்ததால் அவரைப் பார்த்த உடனே எனக்குப் பிடித்துப் போய் விட்டது.

ஆனால் எனக்குப் பொன்னையா வாத்தியாரைப் பிடித்த அளவிற்கு என்னை அவருக்குப் பிடித்துப் போவதற்கு என் பக்கம் விசேஷமான அம்சம் எதுவும் இல்லை. பொதுவாக வாத்தியார்களுக்கு நன்றாகப் படிக்கிற மாணவர்களைத்தான் பிடிக்கும். நானோ படிப்பில் ரொம்ப ரொம்ப சுமார். மாதப் பரீட்சைகளில் எவ்வளவு குறைச்சலாக மார்க்குகள் வாங்க முடியுமோ அவ்வளவு குறைச்சலாக

வாங்குவேன். அதனால் பொன்னையா வாத்தியாரின் விசேஷ அபிமானம் எதற்கும் தகுதி இல்லாதவனாக நான் இருந்தேன். ஆனால் சிறப்பாகப் படிக்கிற மாணவன் என்ற ரீதியில் எந்த வாத்தியாரின் தனிக் கவனத்திற்கும் உரியவனாக இல்லா விட்டாலும் நான் ஒரு பெரிய இடத்துப் பையன் என்ற வகையில் எல்லா வாத்தியார்களின் விசேஷ கவனத்திற்கும் ஆளாகிப் போயிருந்தேன். அந்த விசேஷ கவனத்தை என்னிடம் காட்டியாக வேண்டிய கட்டாயத்தை உணர்ந்த பொன்னையா வாத்தியாருக்கு அந்தக் கவனத்தை என்னிடம் காட்ட அவ்வளவாக விருப்பம் இல்லாமல் இருந்தது.

அதனால் என்னிடம் ஒருவிதத் தடுமாற்றத்திலேயே தான் பழகிக்கொண்டிருந்தார். நான் நன்றாகப் படித்தால் அவருடைய அபிமானத்திற்குரியவனாக மாறமுடியும் என்பதை ஒருவித ஆதங்கத்தில் ஒருநாள் சொல்லாமல் சொல்லிக் காட்டினார். அதற்குக் காரணம் அவருடைய அறியாமைதான். பொன்னையா வாத்தியார் நினைத்துக் கொண்டபடி நான் படிப்பு வராத மாணவன் இல்லை. பள்ளிக்கூட படிப்பில் எந்தச் சின்ன ஆர்வமும் இல்லாத மாணவன். ஆர்வம் இல்லாததால் பாடங்களை நான் சரியாகப் படிப்பதில்லை. அதனால் பரீட்சைகளை சரியாக எழுதுவதில்லை. அதனால் நல்ல மார்க்கும் வாங்குவதில்லை. இந்த இடத்தில் பொன்னையா வாத்தியாரின் மனம் வேறொரு தடத்தில் இயங்கியது. முயற்சி செய்து என்னை நன்றாகப் படிக்கிற மாணவனாக மாற்றிவிட்டால் அது அவருக்கு ஒரு பாராட்டையோ கௌரவத்தையோ பெற்றுத் தருமேயென்று கணக்குப் போட்டு விட்டார். ஆனால் அவருடைய முயற்சி என்னிடம் பலிக்கவில்லை. படிப்பு விஷயத்தில் தேறவே இல்லை நான்.

இந்தவிதத்தில் நான் பொன்னையா வாத்தியாரின் ஒரு வினோத கவனத்திற்கு உரியவனாகி விட்டிருந்தேன்.



ஆனால் இதெல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டிய அளவிற்குப் பெரிய விஷயம் கிடையாது என்பதைப் போல வேறொரு அனுபவம் எனக்கும் பொன்னையா வாத்தியாருக்கும் இடையில் நடந்துவிட்டது. நானும் அவரும் பரஸ்பரம் ஒருத்தரை ஒருத்தர் கவனத்தில் வைத்திருக்கின்ற மாதிரியான அந்த அனுபவத்தை சுருக்கமாக விவரிக்கிறேன்.

எங்கள் பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு வருஷ மார்ச் மாதத்திலும் மாணவர்கள் எல்லோருக்கும் 'மாணவர் மலர்' என்ற வருடாந்திர சஞ்சிகை ஒன்றை விநியோகம் செய்வார்கள். இதற்காக ஒவ்வொரு மாணவனிடம் இருந்தும் நாலணாவை ஆறு மாதத்திற்கு முன்பாகவே பள்ளிக்கூட நிர்வாகம் வசூல் செய்து கொள்ளும். வருடாந்திர சஞ்சிகையில் பணிபுரியும் ஆசிரியர்களின் பெயர் விபரங்களில் இருந்து, பள்ளிக்கூட ஆண்டு விழா, விளையாட்டு தினம், ஆசிரியர்களின் கட்டுரைகள் வரை ஏராளமான விஷயங்கள் பிரசுரமாகி இருக்கும். பள்ளிக்கூடம் சம்பந்தப்பட்ட சில விழாக்களின் போது எடுக்கப்பட்ட போட்டோக்களும் ஆங்காங்கு அழகாக அச்சிடப்பட்டிருக்கும். இந்த மாணவர் மலரில் இவைகளைத் தவிர மாணவர்கள் எழுதிய கவிதைகளும் கதைகளும் வேறு நிறைய பிரசுரம் செய்யப்படும். இதற்கான கதைகளையும் கவிதைகளையும் டிசம்பர் இறுதிக்குள் மாணவர்கள் எழுதி அவரவர் வகுப்பு ஆசிரியர்களிடம் கொடுத்துவிட வேண்டும் என்று நவம்பர் மாதமே எல்லா வகுப்புகளுக்கும் 'சர்க்குலர்' ஒன்று அனுப்பப்பட்டுவிடும். மாணவர்களிடம் இருந்து வருகின்ற படைப்புக்களை பரிசீலனை செய்து பிரசுரத்திற்குத் தேர்வு செய்யவும் மாணவர் மலரை அழகுறத் தயார் பண்ணவும் மூன்று நான்கு வாத்தியார்கள் அடங்கிய குழு ஒன்றைப் பள்ளிக்கூட நிர்வாகம் அமைத்திருக்கும்.

பொன்னையா வாத்தியாரிடம் நான் ஒன்பதாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த அந்த வருஷ நவம்பர் மாதமும் மாணவர் மலருக்கான படைப்புக்களை மாணவர்களை எழுதித் தரக் கேட்டுக் கொள்கிற 'சர்க்குலர்' ஒவ்வொரு வகுப்பாக வந்தது. இதில் என்ன விசேஷம் என்றால் அந்த வருஷம் மாணவர்களின் படைப்புக்களைப் பரிசீலனை செய்யும் குழுவில் எங்கள் பொன்னையா வாத்தியாரும் ஒருத்தர்.

சர்க்குலர் வந்து போனதும் எந்த வருஷமும் இல்லாத ஒரு சிந்தனை அந்த வருஷம் என் மனதில் சுழன்றுகொண்டேயிருந்தது. மாணவர் மலருக்கு ஏதாவது கதை ஒன்று எழுதிக் கொடுக்கலாமாயென்று இரண்டு மூன்று நாட்களுக்கு யோசனை செய்துகொண்டே இருந்தேன். ஏதாவது எழுத வேண்டும் என்ற உந்துதல் மனதிற்குள் வளர்ந்துகொண்டே இருந்தது. ஆனால் என்ன எழுதுவதென்று தெரியவில்லை. எப்படி எழுதுவதென்றும் தெரியவில்லை. யோசித்துக் கொண்டே இருந்தபோது ஏழாவது வயதிலோ எட்டாவது வயதிலோ நடந்த ஒரு சின்னச் சம்பவம் சட்டென்று என் ஞாபகத்தில் வந்தது. அந்தச் சம்பவத்தை அப்படியே கதை போல எழுதிப்பார்த்தால் எப்படி இருக்கும் என்று தோன்றியது.

என்னுடைய கணக்கு நோட்டுப் புஸ்தகத்தில் இருந்து கற்றையாக நிறைய தாள்களைக் கிழித்து எடுத்துக்கொண்டு அந்தக் கதையை எழுதுவதற்கு மும்முரமாக உட்கார்ந்து விட்டேன். உட்கார்ந்துவிட்டேனே தவிர எழுதுவதற்கு அத்தனை எளிதில் வந்துவிடவில்லை. தப்புத்தப்பாக எழுதினேன். எழுதி எழுதி அடித்தேன். அல்லது எழுதியது பிடிக்காமல் கிழித்துப் போட்டேன். ஆனால் எப்படியும் எழுதியே தீர்வது என்ற உறுதியில் பத்து நாட்கள் வேறு சிந்தனையே இல்லாமல் உட்கார்ந்து ஊசிமுனை அளவு



கூடக் கவனம் பிசகாமல் எழுத நினைத்த கதையை, அழகாக அச்சடித்த மாதிரி எழுதி முடித்துவிட்டுத்தான் அடுத்த வேலையைப் பார்த்தேன். எழுதியதை நானே ஏழெட்டுத் தடவை படித்துப் பார்த்தேன். கதை ரொம்ப திருப்தியாக வந்திருந்தது. எதை எப்படி எழுத வேண்டும் என்று நினைத்திருந்தேனோ அப்படியே வந்திருந்தது கதை.

கதைக்கு 'ஆப்பிள் பழம்' என்ற தலைப்புக் கொடுத்தேன். கதையின் கையெழுத்துப் பிரதியை அழகாக ஓர் ஆபீஸ் கவரில் போட்டு ஒட்டினேன். பெரிய எழுத்தாளனாகி விட்ட பெருமித உணர்வோடு பொன்னையா வாத்தியாரிடம் போய் என் கதை அடங்கிய கவரை நீட்டினேன். மாணவர் மலருக்கு நானெல்லாம் கதை எழுதித் தருவேன் என்பதை எதிரேபார்த்தவரில்லை பொன்னையா வாத்தியார்.

அதனால் உடனே கவரை என்னிடம் இருந்து வாங்கிக் கொள்ளாமல் கொஞ்சம் என்னை அலட்சியமாகப் பார்த்த வாறு கேட்டார்.

''என்னடா இது?''

''மாணவர் மலருக்குக் கதை சார்.''

''யார் எழுதினது?''

''நாந்தான் சார் எழுதியிருக்கேன்.''

பொன்னையா வாத்தியாரின் பார்வையில் இருந்த அலட்சியம் நான் சொன்னதைக் கேட்டு இன்னும்தான் ஜாஸ்தியானது.

''ஏண்டா - உனக்குப் படிப்பே வராது. பரீட்சையில ஒரு கேள்வி கேட்டா அதுக்கே பதில் சொல்லவும் தெரியாது... நீ போய் என்ன கதையை எழுதிடுவே?'' என்றார்.

நான் பதில் சொல்லாமல் பேசாமல் நின்றேன்.

''சரி சரி - மேசை மேல உன் கதையை வச்சிட்டுப் போ...'' என்றார்.

மிகவும் பணிவுடன் கதையை அவருடைய மேஜை மேல் வைத்துவிட்டு நகர்ந்தேன்.

ஒவ்வொரு நாளாகக் கழிந்து கொண்டிருந்தது. பொன்னையா சார் கூப்பிட்டு என் கதையைப் பற்றி ஏதாவது சொல்வாராயென்று எதிர்பார்த்துக்கொண்டே இருந்தேன். பத்து நாட்களுக்கு மேலாகியும் வாத்தியார் ஒன்றும் சொல்லாமலே இருந்தார். கதையைப் படித்துவிட்டாரா இல்லையா என்பதை அவரின் முகத்தில் இருந்து தெரிந்து கொள்ள முடியவில்லை. நான் எழுதிய முதல் கதை அந்த வருட மாணவர் மலரில் வெளியேறியதா; வெளியேற வில்லையா? - இதைச் சொல்வதற்கு முன்; கதையாக எழுதிக் கொடுத்த சம்பவம் எது என்பதை இங்கு நான் கூறிவிடுவது நல்லதென்று நினைக்கிறேன்.

எனக்கு அப்போது ஏழு வயதோ எட்டு வயதோ. எங்கள் வீட்டு வாசலில் உட்கார்ந்து ஆப்பிள் பழம் ஒன்றைத் தின்றுகொண்டிருந்தேன். கிட்டத்தட்ட ஐம்பது வருஷங்களுக்கு முற்பட்ட அந்தக் காலத்தில் ஆப்பிள் பழம் என்பது மிக மிக அரிதான ஆடம்பரமான சமாச்சாரம். விரல் விட்டு எண்ணிவிடும்படியான ஒரு சில குடும்பங்களில் தான் ஆப்பிள் வாங்கிச் சாப்பிடுவதெல்லாம் கட்டுப்படி யாகும். கட்டுப்படியாகிற குடும்பம் எங்களுடையது. ஏதாவது பழங்களையோ அல்லது தின்பண்டங்களையோ வாசலில் உட்கார்ந்து தெருவை வேடிக்கை பார்த்தபடி தின்பது என்பது அப்போது எனக்கு மாற்றிக்கொள்ள முடியாத வழக்கமாக இருந்தது.

ஒரு மாதிரி மஞ்சள் நிறம் கலந்த சிகப்பு நிற ஆப்பிள் பழத்தை கால்வாசி தின்றிருந்தேன். அப்போது எங்கள்



வீட்டுக்கு ஏழெட்டு வீடு தள்ளி ஒரு காம்பவுண்டுக்குள் இருக்கும் சின்னச் சின்ன புறாக்கூடு மாதிரி இருக்கின்ற பல வீடுகளில் ஒன்றில் இருந்து தங்கமணி மெள்ள அசைந்து அசைந்து நடந்து வந்து கொண்டிருந்தாள். அதிகமாகப் போனால் தங்கமணிக்கு ஐந்து வயது இருக்கலாம். ரொம்ப ரொம்ப ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள் அவள். அவளுக்கு அதிக வயதிலும் குறைந்த வயதிலுமாக தங்க மணியோடு பிறந்தவர்கள் ஆறு பேர். அவளுடைய அப்பா தலைமலைச்சாமிக்குக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற கவலையோ பொறுப்போ சிறிதளவும் கிடையாது. அவர்பாட்டுக்கு எப்போது பார்த்தாலும் கருமாதி மடத்தில் உட்கார்ந்து யாருடனாவது சீட்டு விளையாடிக்கொண் டிருப்பார். அல்லது படுத்து உறங்கிக்கொண்டிருப்பார். அதனால் அவருடைய குடும்பம் ஒரு வேளை சாப்பாட்டுக்குக் கூட வழி இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது. தங்கமணியின் அம்மாதான் இரண்டு மூன்று வீடுகளில் பாத்திரம் கழுவி, துணி துவைத்து அதில் வருகிற சொற்ப வருமானத்தில் அவளின் ஆறு பிள்ளைகளையும் காப்பாற்றி வந்தாள். அவளுடைய பிள்ளைகள் யாருக்கும் உடுத்துவதற்குக் கூட நல்ல துணிமணிகள் இல்லாததால் அவர்கள் யாரும் பள்ளிக்கூடத்திற்கும் போகவில்லை. எல்லாருமே சும்மா ஊரைச் சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

தங்கமணியின் கதையும் அதுதான். எந்தக் காலத்தில் துவைத்ததோயென்று சொல்கிற மாதிரியான ஓர் அழுக்குப் பாவாடையைக் கட்டிக்கொண்டு, மேலே சட்டை எதுவும் போட்டுக்கொள்ளாமல் மனம் போனபடி திரிந்து கொண் டிருப்பாள். ஒருநாளும் எண்ணெயையே பார்த்திராத அவளுடைய தலைமுடி செம்பட்டைக் கலரில் ஒரு மாதிரி யாக காய்ந்து தேங்காய் நார்போல இருக்கும். ஊரில் இருக்கும் அத்தனை அழுக்கும் தங்கமணியின் முகத்தில்தான்

பூசப்பட்டிருக்கும். ஆனால் - இவை அத்தனையையும்விட அவளிடம் இருக்கும் குறிப்பிட்டுச் சொல்லும்படியான விஷயம் - அவளின் முகத்தில் எப்போதுமே இடம் பெற்றிருக்கும் இளம் சிரிப்புதான். அந்த இளம் புன்னகை இல்லாமல் தங்கமணியைப் பார்க்கவே முடியாது.

நான் ஆப்பிள் பழத்தை எங்கள் வீட்டு வாசலில் உட்கார்ந்து தின்றுகொண்டிருந்தபோதும் தங்கமணி அதே சிரித்த முகத்தோடு தெருவில் எப்போதும் போல மேலே சட்டை இல்லாமல் கட்டிய அழுக்குப் பாவாடையில் வந்து கொண்டிருந்தாள். அவள்பாட்டுக்கு என்னைத் தாண்டிப் போயிருப்பாள்தான். என்னமோ ரொம்ப இயல்பாக மேற் கொண்டு நடக்காமல் என் எதிரில் நின்றுவிட்டாள். சிரிப்பு மாறாமல் என் கையில் இருந்த ஆப்பிள் பழத்தைப் பார்த்தாள். நான் தங்கமணியைப் பார்த்துக்கொண்டே ஆப்பிளை ஒரு கடி கடித்தேன். அவள் கையை நீட்டிக் காட்டி ''இது என்ன பழம்?'' என்று கேட்டாள்.

''ஆப்பிள் பழம்...'' என்றேன்.

''ரொம்ப இனிக்குமா?''

''ரொம்ப ரொம்ப இனிக்கும்.''

''நான் தின்னதே இல்லை...'' என்றாள்.

நான் அவளைப் பார்த்துக்கொண்டே ஆப்பிளை இன்னொரு கடி கடித்தேன்.

''கொஞ்சக்கோண்டு கடிச்சித் தாயேன். எப்படி இருக்குன்னு தின்னு பாக்குறேன்.''

கேட்டுவிட்டு தங்கமணி என்னையே பார்த்துக் கொண் டிருந்தாள். நான் பார்த்தேன். முக்கால்வாசி ஆப்பிளை நான் தின்றுவிட்டிருந்தேன். கொஞ்சம்தான் மிச்சம் இருந்தது.



அதனால் கடித்துக் கொடுக்காமல் மிச்சம் இருந்ததை அப்படியே தங்கமணியிடம் நீட்டிவிட்டேன். சந்தோஷத் துடன் உடனே ஆப்பிளை வாங்கிக்கொண்டவள் அதைக் கடித்துத் தின்றபடி குதித்துக் குதித்து ஓடினாள்.

அப்போது வெளியில் போய் திரும்பி வந்த என் அப்பா இதையெல்லாம் பார்த்துக்கொண்டே வந்தார் போலிருக்கிறது. வீட்டுப்படி ஏறினதும் என்னை உள்ளே கூப்பிட்டார். ஆப்பிள் பழத்தையெல்லாம் இப்படி யாருக்கும் தூக்கிக் கொடுக்கக்கூடாது. ஆப்பிளோட விலை ரொம்ப ஜாஸ்தி என்று அப்பா என்னிடம் சிறிது கண்டிப்பான குரலில் சொன்னார். ஆனால் ரொம்ப கோபத்தோடு எல்லாம் சொல்ல வில்லை.

''தின்னதே இல்லைன்னு சொல்லிக் கேட்டா... அதான் குடுத்தேன்...'' என்றேன்.

''ஆப்பிள் குடுக்கக்கூடாது... அவ கேட்டாக்கூட உள்ளே போய் கொய்யாப்பழமோ வாழைப்பழமோதான் எடுத்துக் குடுக்கணும்...''

அப்பா இதை ரொம்ப வலியுறுத்தித் திருப்பித் திருப்பிச் சொன்னார். எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது. ஆப்பிள் பழம் கேட்கிறவளுக்கு எப்படி உள்ளே போய் கிறுக்குத்தனமாக கொய்யாப்பழத்தை எடுத்து வந்து கொடுப்பது? ஏதோ புரியாத மாதிரி இருந்ததால் நான் பேசாமல் இருந்து விட்டேன்.

இதன்பின் இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு நான் ஆப்பிள் பழத்தைத் தின்றபடி வாசலில் உட்கார்ந்திருந்தேன். சொல்லி வைத்த மாதிரி அழுக்குப் பாவாடையைக் கட்டிய படி தங்கமணி குதித்துக் குதித்து வந்துகொண்டிருந்தாள். சிரித்துக்கொண்டே என் எதிரில் வந்து நின்றாள். என் கையில்

இருந்த கடித்த ஆப்பிளைப் பார்த்தாள். நான் ஆப்பிளைக் கடிக்காமல் தங்கமணியையே பார்த்துக்கொண்டிருந்தேன். அன்றைக்கு மாதிரியே இன்றைக்கும் அவள் ஆப்பிள் கடித்துத் தரச் சொல்லிக் கேட்டால் என்ன பண்ணுவதென்று யோசித்தேன்.

அப்பா சொன்ன வார்த்தைகள் அப்படியே ஞாபகத்தில் இருந்தன. தங்கமணி ஆப்பிள் கேட்டால் உள்ளே ஓடிப்போய் கொய்யாப்பழம் எடுத்து வந்து தருவதெல்லாம் என்னுடைய இயல்பிற்கு சரிப்பட்டு வராது. எதற்குத்தான் வாசலுக்கு வந்து ஆப்பிள் தின்றோமோ என்ற சங்கடம் வந்தது மனதில். தங்கமணி ஆப்பிள் கேட்டால் கொஞ்சம் கடித்தாவது கொடுத்து விட வேண்டும் என்ற எண்ணமே ஏற்பட்டது. என் அப்பாவும் வீட்டில் இல்லை.

இந்த எண்ணத்தோடு நான் தங்கமணியைப் பார்த்துக் கொண்டே ஆப்பிளைக்கூட கடிக்காமல் இருந்தேன். தங்கமணியோ 'தா'வென்று கேட்காமல், ஆனால் என்னையும் என் கையில் இருந்த ஆப்பிளையும் மாறிமாறிப் பார்த்தவாறு நின்றுகொண்டிருந்தாள். ஒரு சில நிமிடங்கள் இப்படிப் பார்வை பரிமாற்றத்திலேயே நகர்ந்தன. பின் சிரிப்பு மாறாத முகத்தோடு தங்கமணி என்னிடம் ஆப்பிள் பழம் கேட்காமல் குதித்துக் குதித்து ஓடிக்கொண்டிருந்த அவளுடைய ஓட்டத்தைத் தொடர்ந்துவிட்டாள். நான் ஓடுகிற அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். தங்கமணி இன்று ஏன் என்னிடம் ஆப்பிள் பழம் கேட்கவில்லை என்பது புரியாமலேயே வாசலில் உட்கார்ந்திருந்தேன்.

இந்தச் சம்பவத்தைத்தான் அப்படியே கதையாக எழுதி 'ஆப்பிள் பழம்' என்ற தலைப்பும் கொடுத்து மாணவர் மலருக்காக பொன்னையா வாத்தியாரிடம் கொடுத்துவிட்டு ஒவ்வொரு நாளும் காத்துக்கொண்டிருந்தேன். பதினைந்து நாட்களாகியும் வாத்தியார் வாயைத் திறக்கவில்லை. கதை



மாணவர் மலரில் இடம் பெறுமா பெறாதா என்பதும் தெரியவில்லை. இருபது நாட்களும் ஆகிவிட்டன. பொன்னையா சாரிடம் இருந்து ஒரு தகவலும் இல்லை. 'போங்கடா நீங்களும் உங்க மாணவர் மலரும்' என்ற எரிச்சல் வரத் தொடங்கியபோது ஒருநாள் பொன்னையா வாத்தியார் என்னைக் கூப்பிட்டார். ஆசையோடு எழுந்து போனேன். என்னை அவர் ஒருவித ஏளனமான பார்வை பார்த்தார். நமுட்டுச் சிரிப்பு வேறு சிரித்தார். மேஜையில் நான் எழுதிக் கொடுத்த கதை, நான் தந்த அதே கவரோடு இருந்தது.

பொன்னையா வாத்தியார் கேட்டார் : ''இந்தக் கதையை உனக்கு யாருடா எழுதிக் குடுத்தாங்க?''

வாத்தியார் இப்படிக் கேட்பாரென்று எதிரே பார்க்காததால் நான் அதிர்ந்து போய்விட்டேன். ''அய்யய்யோ! யாரும் எழுதித் தரலை சார்...''

''பொய் சொல்லாதடா.''

''சத்தியமா சார். அந்தக் கதையை நாந்தான் சார் எழுதினேன்...''

''பொய் சொன்னினா உதைபடுவே என்கிட்ட... நெசத்தை ஒத்துக்க... யாரோ அழகா எழுதிக் குடுத்ததை அப்படியே பாத்து உன் கையெழுத்துல காப்பி பண்ணி எழுதிக் குடுத்திட்ட...''

''தாய் அறிய நாந்தான் சார் எழுதினேன்.''

''ஆவரேஜ் ஸ்டுடண்ட்டுக்கும் கீழே இருக்கிறவன் நீ. உன்னால இப்படி ஓர் அருமையான கதையை ஆயிரம் குட்டிகர்ணம் போட்டாலும் எழுத முடியாது! அந்தோணியும் கணேசனும் நம்ம வகுப்புலேயே நம்பர் ஒன் மாணவர்கள்! அந்த ரெண்டு பேர் எழுதிக் குடுத்திருக்கிற கதைகளே ரொம்ப ரொம்ப சுமாரா இருக்கு! அப்படி இருக்கும்போது உன்னால

இந்த மாதிரி அருமையா ஒரு கதை எழுத முடியும் என்கிறதை ஒருத்தனாலும் நம்பமுடியாது! யார் கிட்டேயோ எழுதி வாங்கிட்டு நீ எழுதினதா என்கிட்டேயே வந்து காது குத்துறே பார்த்தியா?!''

இதற்கு மேல் என்ன சொல்வதென்பது தெரியாததால் மேற்கொண்டு எதுவும் சொல்லாமல் நான் நின்றேன்.

வாத்தியார் விடவில்லை. அவர் பிடித்த முயலுக்கு மூன்று கால்தான் என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

''நான் என்ன சொல்றேன்னா - யாரு இதை எழுதிக் குடுத்தாங்க என்கிற நெசத்தை ஒத்துக்க - போனா போகுதுன்னு கதையை மாணவர் மலர்ல போடச் சொல்றேன். இல்லை; இதை நாந்தான் சார் எழுதினேன்னு பொய்யையே சொல்லிட்டு இருந்தீன்னா - இப்பவே கதையை எடுத்திட்டு நடையைக் கட்டு! வசதி எப்படி? ஒத்துக்கிறியா நெசத்தை?''

எனக்குக் கோபமும் வந்தது. அழுகையும் வந்தது. ஆனால் இரண்டையும் காட்டிக்கொள்ளவில்லை. கடைசி முறையாகவும் நிஜத்தையே சொன்னேன். ''நெசமாவே 'ஆப்பிள் பழம்' கதையை நாந்தான் சார் எழுதினேன்...''

''நெசத்தை ஒத்துக்கவே மாட்டே... அப்ப உன் கதையை எடுத்துக்கிட்டு நடையைக் கட்டு! மாணவர் மலர்ல போடமுடியாது கதையை...''

கதையை எடுத்துக்கொண்டு தலையைக் குனிந்தவாறு வந்து விட்டேன். என் 'ஆப்பிள் பழம்' கதை மாணவர் மலரில் இடம் பெறாது என்பது ரொம்ப ஏமாற்றமாக இருந்தது. யாரோ எழுதித் தந்ததை நான் எழுதியதாகப் பொய் சொல்வதாக பொன்னையா வாத்தியார் பழி கூறியது ரொம்ப



வேதனையாக இருந்தது. ஏழெட்டு நாட்களுக்கு இந்த ஏமாற்றமும் வேதனையும் இருந்துகொண்டிருந்தன. அப்புறம் நாளாக நாளாக படிப்படியாக இந்த உணர்வுகள் மறைந்தும் போய்விட்டன.

இதற்குப் பிறகு இரண்டு வருடங்கள் அந்தப் பள்ளிக் கூடத்தில்தான் நான் படித்துக்கொண்டிருந்தேன். அந்த இரண்டு வருடங்களும் மாணவர் மலர்கள் வெளிவரத் தான் செய்தன. இரண்டு வருடமும் கதைகள், கவிதைகள், கட்டுரைகள் எழுதித் தரச் சொல்லி மாணவர்களுக்கு சர்க் குலர்களும் வந்தன. அந்த 'சர்க்குலர்கள்' எந்தவிதத்திலும் என் ஆர்வத்தைத் தூண்டவில்லை. பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்பு முடிந்த பிறகும்கூட கதை எழுதுகிற ஆர்வம் எதுவும் எனக்குள் ஏற்படவில்லை. ரொம்ப வருஷம் கழித்து ஏதோவொரு கட்டத்தில்தான் கதை எழுதிப் பார்க்கிற ஆர்வம் எனக்குள் முளைவிட்டது. இதற்குக் காரணம் நான் படிக்க நேர்ந்த சில அருமையான எழுத்தாளர்களின் நல்ல கதை களாக இருக்கலாம். ஆரம்பத்தில் நான் எழுதி அனுப்பிய சில கதைகள் பத்திரிகை ஆபீஸ்களில் இருந்து திருமபித் தான் வந்தன. ஆனால் அதற்காக நான் சோர்ந்து போய் விடவில்லை. திருப்பித் திருப்பி புதிதாக எழுதி அனுப்பிக் கொண்டிருந்தேன்.

ஒருநாள் பிரபல தமிழ் வார இதழ்களில் என்னுடைய சிறுகதைகள் அவ்வப்போது இடம்பெறத் தொடங்கி விட்டன. தொடர்ந்து நான் சிறுகதைகள் எழுதி அனுப்பி, அவை பிரசுரமாகிக்கொண்டிருந்தாலும் ஒன்பதாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது மாணவர் மலருக்காக எழுதிய 'ஆப்பிள் பழம்' என்ற என்னுடைய முதல் கதையை மட்டும் திருப்பி ஒருநாளும் அதே வடிவத்திலோ அல்லது புதிய வேறொரு வடிவத்திலோ எழுதவும் இல்லை. எழுதிப்

பார்க்கிற முயற்சியும் செய்யவில்லை. இன்னும் சொல்லப் போனால் இன்றுவரை என் வாழ்க்கையில் நான் எழுதிய அந்த முதல் கதையை பிரசுரித்துக்கொள்ளவே இல்லை.

இதற்கிடையில் தொடர்கதைகளும் எழுதி பிரபல எழுத்தாளர்கள் வரிசையில் நானும் ஒருவனாக தமிழ் வாசகர்கள் மத்தியில் இடம்பெற்று விட்டேன். யாருடைய பாணியிலும் சாராத அழகு வாய்ந்த தனித்தன்மை கொண்டிருந்த என் எழுத்துக்கள் ஆழமாகவும் விளங்கின. என் எழுத்துக்களுக்கென்று ஒரு வாசகர் கூட்டமே இருந்தது. அவ்வப்போது என் போட்டோக்கள் வேறு பத்திரிகைகளில் வெளிவந்து என்னுடைய ஊர்க்காரர்கள் மத்தியில் எனது பிரபலம் மிகவும் புகழ் பெற்றுவிட்டது. ஊருக்குப் போகிற சமயங்களில் எல்லாம் ஆள் ஆளுக்கு வந்து என் கதைகள் பற்றியெல்லாம் ஆசையோடு பேசப் பார்த்தார்கள்.

அப்படித்தான் ஒரு சமயம் நான் என்னுடைய ஊருக்குப் போயிருந்தபோது தேசபந்து மைதானத்தின் பக்கத்தில் ரொம்ப வருஷம் கழித்து பொன்னையா வாத்தியாரை எதிர் எதிராகப் பார்த்துவிட்டேன். கிட்டத்தட்ட எழுபது வயசை நெருங்கி விட்டிருந்தாலும் நல்ல ஆரோக்கியத்தின் துடிப்பில்தான் இருந்தார். என்னை அடையாளம் பார்த்துக் கொண்டதும் பொன்னையா வாத்தியாரின் முகத்தில் ஏற்பட்ட பூரிப்பைப் பார்க்க வேண்டுமே... பிரியமுடன் என் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டார். என்னுடைய கதைகளைப் படித்து வருவதாகவும், நான் ரொம்பத் திறமையாய் எழுதுவதாகவும் ரொம்பவே புகழ்ந்தார். அவரிடம் படித்த ஒரு மாணவன் இப்படியொரு சிறந்த எழுத்தாளனாக வந்திருப்பது அவருக்கு ரொம்பப் பெருமையாக இருப்பதாகவும் பொன்னையா வாத்தியார் சந்தோஷத்தோடு சொல்லிக்கொண்டார். சிறிது நேரம் பொதுவான ஷேமலாபங்களை ஒருவருக்கொருவர்



விசாரித்துக்கொண்டோம். சாவகாசமாக ஒரு நாள் என்னை அவருடைய வீட்டிற்கும் வரச்சொல்லி வற்புறுத்தினார்.

என்னிடம் பொன்னையா வாத்தியார் கடைசியில் சொன்னது இது :

''அந்தக் காலத்திலேயே நம்ம பள்ளிக்கூட மாணவர் மலருக்கு ஜோரான கதையெல்லாம் எழுதிக் குடுத்தவனாச்சே நீ! மறந்திடாம கண்டிப்பா ஒருநாள் வீட்டுக்கு வந்திட்டுப் போ. உக்காந்து உன்கிட்ட நெறைய பேசணும்....''

★

# 6. கடற்கரையை நோக்கி என்னுடைய நாட்கள்

மற்றவர்களின் அபிப்பிராயப்படி நான் என்னுடைய 23ஆம் வயதில் இருந்து 40ஆம் வயதுவரை சென்னை திருவல்லிக்கேணியில் இருந்திருக்கிறேன். ஆனால் என்னுடைய பார்வையில் 17 வருஷங்கள் நான் சென்னையின் கடற்கரையை ஒட்டி வாழ்ந்திருக்கிறேன். அப்படி வாழ்ந்த நாட்களில் ஒருநாள்கூட நான் கடலையும் கடற்கரையையும் பார்க்காமல் இருந்ததில்லை. எதிர்பாராமல் தொடர்ந்து சில நாட்கள் வெளியூர் போய்விட்டு வந்தால் வந்ததும் முதல் வேலையாக கடலைப் போய்ப் பார்த்துவிடுவேன். ஒரு சமயம் அப்படித்தான் வெளியூர் போய்விட்டு வந்து கடற்கரைக்குப் போனால் கடல் கொஞ்சம் இளைத்தாற்போல் இருந்தது! சிறிது நேரத்திற்குக் கடல் நீரை உள்ளங்கைகளில் அள்ளி வைத்துப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

கடற்கரைக்குப் போகவோ அல்லது அங்கிருந்து திரும்பி வரவோ குறிப்பிட்ட நேரம் காலம் என்று எதுவும் எனக்குக் கிடையாது. விடியற்காலை நான்கு மணிக்குக்கூட தனியாகப் போய் இருளில் புரளும் கடலைப் பார்த்தவாறு நீண்ட நேரம் நின்றுகொண்டிருப்பேன். சுற்றிலும் இருள் கவிந்து கிடப்பதால் அலையில் நிற்பது கடலின் மேல் நிற்பதாகத் தோன்றும். கடற்கரையில் நடந்து செல்வதுபோல இயல்பாய் கடல் மேல் நடந்து செல்லும் நாள் வந்தால் தேவலையென்று தோன்றும்.

கடற்கரையில் தனியாக நிற்கின்ற நேரங்களில் வாழ்க்கையின் எல்லைக் கோட்டுக்கு வந்துவிட்ட எண்ணம்



ஏற்படும். இயற்கையின் சப்தம் தவிர வேறு ஒலிகள் இல்லாத அதிகாலை நேரக் கடற்கரையில் வாழ்வின் முடிவும் மரணத்தின் தொடக்கமும் கலந்து ஒருமித்த காட்சி மெலிதாகத் தெரிந்து கொண்டிருக்கும். அலையோரமாய் நின்றுகொண்டு சில நேரங்களில் நான் மரணத்திற்காக ஏங்கியிருக்கிறேன். இந்த ஏக்கம் தற்கொலைக்கான எண்ணம் இல்லை. இந்த ஏக்கத்தாலோ என்னவோ மரணம் ஒருமுறை எனக்குக் காட்சி தந்திருக்கிறது.

கடற்கரைக்குப் போய்விட்டால் எவ்வளவு நேரமானாலும் வீடு திரும்ப மனசே வருவதில்லை. நீண்ட நேரம் அலையில் நின்றுவிட்டு நகரத் தெருக்களுக்குள் மறுபடியும் பிரவேசிக்கும்போது அசுத்தங்களும் இரைச்சல்களும் உடம்பை அதிர வைத்து விடுவதைத் தாங்கமுடியாமல் மறுபடியும் கடற்கரைக்கே ஓடிப்போய் உட்கார்ந்துவிடுவேன்.

அப்படித்தான் ஒரு சமயம் - அன்று பிற்பகல் இரண்டு மணி இருக்கும். புரட்டாசி மாத வெயில் வெள்ளை மணல் வெளியாகக் கொட்டப்பட்டுக் கிடந்தது. கடலோரத்தில் ஆங்காங்கு பெரிய கடல் ஜீவராசிகள் கரை ஒதுங்கி உயிர் அற்றுக் கிடப்பதுபோல படகுகள் வானம் பார்க்கக் கிடந்தன. பெரும்பான்மையான படகுகள் மிகவும் பழையதாகிப் போயிருந்தன. மனித நடமாட்டமே இல்லாத வெட்ட வெளியாக மட்டும் கடற்கரையும் கிடந்தது. ஒரு படகு கொடுத்த ரொம்பச் சின்ன நிழலில் கடலைப் பார்த்தவாறு தனியாக உட்கார்ந்திருந்தேன்.

சில நிமிடங்களுக்குப் பிறகு எனக்குப் பின்னால் - தூரத்தில் ஒரு சின்னப் பையனின் பேச்சுக் குரலும் ஒரு சின்னப் பெண்ணின் பேச்சுக் குரலும் கேட்டது. கொஞ்சம் கொஞ்சமாகப் பேச்சுக் குரல்கள் அருகில் வருவதை அறிய முடிந்தது. சில நிமிஷங்களில் பன்னிரெண்டு அல்லது பதின் மூன்று வயது மதிக்கும்படியான சின்னப் பெண் ஒருத்தியும்

பத்து வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவனும் எனக்குக் கிட்டத்தட்ட இருபதடி தூரத்தில் இரண்டொரு முறை என்னைப் பார்த்துக்கொண்டே அலைகளை நெருங்கிப் போனார்கள். பின் ஒருவர் கையை ஒருவர் பிடித்தபடி அவர்கள் இருவரும் ஆசையுடன் அலையில் போய் நின்று கொண்டார்கள். பாவாடையும் சட்டையும் அணிந்து கொஞ்சம் பருமனாகத் தெரிந்த அந்தப் பெண்ணின் மற்றொரு கையில் ஏதேதோ திணிக்கப்பட்ட மஞ்சள் நிறப் பை இருந்தது. அவளின் பாவாடைச் சட்டை சில வருஷங்களுக்கு முன்பாக தைத்ததுபோல கொஞ்சம் பழசாகவும் ரொம்ப இறுக்க மாகவும் இருந்தன.

அவர்கள் இருவரும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந் தவர்களைப் போலத் தெரியவில்லை. ஆனால் கொஞ்சம் எளிமையான பின்னணியைக் கொண்டவர்களாகத் தோன்றி னார்கள். அந்த நிமிஷம் அவர்களின் மொத்த மனம் பூராவும் கடலைப் பற்றின ஆச்சர்யமாகவும் சந்தோஷமாகவும் இருந்தது. இடையிடையே என்னையும் பார்த்துக்கொண் டார்கள். கடல் பற்றிய பிரக்ஞை தவிர வேறு எதுவும் அற்ற வனாய் நான் தெரிந்ததில் அவர்களுக்கு நான் இடையூறாக இல்லை. மகிழ்ச்சிப் பெருக்குடன் அவர்கள் பாட்டுக்கு பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்தால் வேறு எங்கோ போய்க்கொண்டிருக்கிற வழியில் கடலைப் பார்த்து விட்டு ஆசையுடன் ஓடி வந்திருக்கிறார்கள் என்பது தெரிந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு எனக்கு ஒரு விஷயத்தை உணர்ந்து கொள்ள முடிந்தது.

உடம்பால் அந்தப் பெண் சிறுமி மாதிரி தெரியவில்லை. மனசில் இருந்த குழந்தைத்தனம்தான் அவளுடைய முக பாவனையையும் சிறுமிக்கு உரியதாய் காட்டிக்கொண் டிருந்தது. அதனால் சுருங்கி இறுகிப் போயிருந்த பாவாடைச் சட்டையிலும் அவளின் இளமையின் தொடக்ககால மலர்ச்சியோ பூரிப்போ தெரியமுடியாததாய் மறைந்துகொண்டிருந்தது.



திடீரென்று அந்தப் பையன் ''அக்கா - கடல்ல குளிக்கலாமா?'' என்று கேட்டான்.

ஒரு நிமிஷம் அந்தப் பெண் துள்ளலுடன் கடலைப் பார்த்தாள். அவளுடைய மனதிலும் ஆசை இருந்திருக்கும் போல. உடனே சரியென்று சொல்லிவிட்டாள். குளிக்க ஆரம்பிக்கும் முன்னால் மட்டும் அந்தப் பெண் சுற்றிலும் ஒரு தடவை பார்த்தாள். என்னைத்தவிர பார்வைக்கு எட்டிய தூரம் வரை யாரும் இல்லை. அப்போதுகூட கரிய தாடியோடும் கறுப்புக் கண்ணாடியோடும் அமர்ந்திருக்கும் என்னுடைய இருப்பு அவளுக்கு இடையூறாகவோ தர்ம சங்கடமாகவோ இல்லை.

அடுத்த நிமிஷம் அக்காவும் தம்பியும் குளிப்பதற்கு ஒருவித அவசரத்துடன் தயாராகிவிட்டார்கள். கையில் வைத்திருந்த மஞ்சள் கலர் பையை கொண்டு போய் ஒரு படகின் கீழே வைத்தாள். அந்தப் பையன் சட்டையை மட்டும் கழற்றி பையின் மேலே போட்டுவிட்டான். பின் அவர்கள் இருவரும் ஒருவர் கையை ஒருவர் ஆசையுடன் பிடித்துக்கொண்டு சின்ன பயமும் கண்களில் தெரிய குளிப்ப தற்காகக் கொஞ்சம் கொஞ்சமாகக் கடலுக்குள் நகர்ந்து முழங் கால் ஆழத்தில் நின்றுகொண்டார்கள். அலைகள் புரண்டு வந்து வந்து அவர்கள் மேல் மோதி அவர்களை நனைக்க நனைக்க பயம் இருவரின் கண்களில் இருந்தும் மறைந்து விட்டிருந்தது. உற்சாகம் பொங்கி வழிந்தது. அலை வரும் போதெல்லாம் எம்பிக் குதித்து விழுந்தார்கள். அலைக்குள் மூழ்கி மூழ்கி எழுந்தார்கள். தண்ணீரில் நனைந்து சூரிய ஒளியும் பிரகாசித்துக் கொண்டிருந்ததில் அந்தப் பெண்ணின் முகத்தில் இருந்த 'சிறுமிக்களை' நீங்கி மாறுபட்டுத் தெரிந்தது. அந்தப் பையனை விட்டு அவள் கடலுக்குள் இன்னும் கொஞ்ச தூரம் போய் பயப்படாமல் குளித்தாள். கடல் நீரின் உப்புச் சுவை அவர்களுக்குச் சிரிப்பாக இருந்தது.

37451

முதலில் அந்தப் பையனுக்குத்தான் குளித்தது போதும் என்று தோன்றிவிட்டது. ''போதும்க்கா; வா போலாம்'' என்று கூப்பிட்டுக்கொண்டே இருந்தான். அவளுக்கு அலையில் இருந்து எழுந்து வர மனம் வரவில்லை. மூக்கைப் பிடித்த வாறு அலைக்குள் மூழ்கி மூழ்கி எழுந்து கொண்டிருந்தாள். ''நான் தலையை தொவட்டப் போறேன்'' என்று சொல்லி விட்டு அந்தப் பையன் தண்ணீரில் இருந்து எழுந்து வந்து விட்டான். படகு ஓரம் வைத்திருந்த பையில் இருந்து ஒரு துண்டை எடுத்து தலையைத் துவட்ட ஆரம்பித்தான். அவனுடைய ஈரக் கால்சட்டையை அணிந்திருந்தபடியே முடிந்தவரைக்கும் நீரைப் பிழிந்து விட்டுக் கொண்டான். பின் சட்டையை எடுத்து மாட்டினான்.

போக வேண்டும் என்ற அவசரம் அவனிடம் தெரிய ஆரம்பித்துவிட்டது. இரண்டு கைகளையும் உச்சந்தலையில் வைத்துக்கொண்டு ''வாக்கா; நேரமாவுது. அக்கா தேடும்'' என்றான். அந்தப் பெண்ணோ அலையில் நின்றவாறு ஆற்றாமையுடன் அவனைப் பார்த்தாள். ''அஞ்சி நிமிசம்டா'' என்றாள். அதற்கு அவன் ''எனக்குத் தெரியாது. நீ கெளம்பு. இல்லன்னா ஒன்னை உட்டுட்டுப் போயிருவேன்'' என்றான். அதனால் அவளுக்கு வேறு வழியில்லை. அவசரமாக இரண்டு மூன்று தடவை தண்ணீரில் மூழ்கி எழுந்துவிட்டு படகை நோக்கி அவளும் வந்து சேர்ந்தாள்.

ஈரச் சட்டையும் ஈரப் பாவாடையும் அவளுக்கு உடம்போடு உடம்பாக ஒட்டிப் போயிருந்ததில் உயிருள்ள கிரேக்க சிற்பம் போல அவள் இருந்தாள். தம்பி வைத்திருந்த துண்டை வாங்கி அவசரப்படாமல் தலையையும் முகத்தையும் துடைத்தாள். நான் எந்த மாற்றமும் இல்லாமல் உட்கார்ந்த தோற்றத்திலேயே இருந்தேன். அவளுடைய பார்வை கடலின் மேலேயே இருந்தது. அந்த வெயிலிலும் ஈர உடையில் அவளுடைய உடம்பு லேசாக வெடவெடத்துக்கொண்டிருந்தது.



இதற்குள் அவளின் தம்பி தூரத்துச் சாலையை நோக்கி நகரத் தொடங்கி இருந்தான். ''இருடா வரேன்'' என்று அவள் குரல் கொடுத்தாள். பையன் தூரத்தில் மணலில் திரிந்து கொண்டிருந்த காக்கைகளை விரட்டிக்கொண்டிருந்தான். அவள் குனிந்து அவளுடைய ஈரப்பாவாடையைக் கொஞ்சம் உயர்த்திப் பிடித்து நீரை நன்றாகப் பிழிந்து விட்டாள். பிறகு அதை நன்கு உதறி விடவும் செய்தாள். ஒரு நிமிஷம் அவளுடைய கண்கள் என்னைப் பார்த்தன. பிறகு சுற்றிலும் ஒரு தடவை பார்த்தாள். அதற்குள் அவளுடைய தம்பி மேலும் சிறிது நகர்ந்து போயிருந்தான். அவள் மறுபடியும் என்னை ஒரு முறை பார்த்தாள். அபாயத்திற்கான தடயம் எதையும் என்னிடம் அவளால் உணர முடியவில்லை. சட்டென்று பட்டன்களை நீக்கி அவள் அவளின் ஈரச் சட்டையைக் கழற்றி விட்டாள். பளீரென்று சூரிய கோளங்கள் கண் எதிரில் இறங்கினாற் போல இருந்தது.

வெகுநேரம் குளித்த கடல் ஈரத்தாலும், சுள்ளென்று காய்ந்த சூரிய ஒளியாலும் அவளின் இளம் மேனியும் வனப்பு குவிந்து கொண்டிருந்த மார்புப் பகுதியும் கழுவி எடுத்த புத்தம் புதிய செப்புக் கலசங்களாகத் துளி களிம்பும் இல்லாமல் மிக சுதந்திரமாகப் பிரகாசத்தை வீசின. சின்னப் பதட்டம்கூட இல்லாமல் அவள் ஈரச்சட்டையை இறுக்கிப் பிழிந்து நன்றாக உதறினாள். சிறு துளிராக இருக்கும்போதே குலை தள்ளிவிட்ட வாழைக் கன்றாக அவள் இருந்தாள். என் பார்வை அவளுடைய இளம் செழுமையை கவனிக்கக்கூடாது என்று எனக்கு உணர்த்துகிற மாதிரியான ஒரு நிலைகுலையாத - அதே நேரம் அறியாமை பாவிய பார்வையை அவளுடைய கண்கள் என் மேல் பதித்திருந்தன. நானும் அதற்கேற்றாற் போல நிலைகலையாத வெற்றுப் பிரக்ஞையாக மட்டும் அமர்ந்திருந்தேன்.

அவள் சட்டையை அணிந்து பட்டன்களைப் போட்டுக் கொண்டாள். சில நிமிடங்கள் வனப்புத் தெரியும் இளம்

மங்கையாய் உருமாறி நின்றவள் மீண்டும் சிறு பெண்ணாகத் தெரிந்தாள். துண்டால் தலையைத் துவட்டியபடி மஞ்சள் கலர் பையையும் ஒரு கையில் எடுத்துக்கொண்டு மெதுவாகத் தம்பியை நோக்கி நடந்தாள். ரொம்ப தூரம் சென்ற பின் ஒருமுறை என்னைத் திரும்பிப் பார்த்தாள். நான் அவளும் அவளுடைய தம்பியும் நின்று குளித்த இடத்தைப் பார்த்தேன். சிறு தடயம்கூட இல்லாமல் புதிது புதிதாக வந்த கடல் அலைகள் அனைத்தையும் புதுப்பித்திருந்தன...

மாயத் தோற்றம் போலக் காட்சியாகி மறைந்துபோன இந்தக் கடற்கரை அனுபவத்தை இதுவரை நான் கதையாகக் கூட எழுதிப் பார்க்க நினைத்ததில்லை. இதே மாதிரி கதை யாக்க முடியாத இன்னொரு மென்மையான அனுபவம் மற்றொரு சமயத்தில் நடந்தது.

அப்போதும் இதேபோல நடுப்பகலில் கடற்கரையில் உட்கார்ந்திருந்தேன். வானத்தின் நீல நிறமே தெரியாமல் கரிய மேகக் கூட்டங்கள் எங்கும் மொய்த்துக் கிடந்தன. மழை வந்தாலும் வரலாம் போல இருந்தது. காற்றும் அதை ஊர்ஜிதம் செய்து கொண்டிருந்தது. என்னிடம் குடை கிடை யாது. பெரிய மழையாக வந்தால் எழுந்து சென்று விடலாம் என்ற நினைப்புடன் இருந்தேன். அப்போது தூரத்தில் சில அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள் கடற்கரையை நோக்கி எதையும் வேடிக்கையாகப் பார்த்தபடி வந்து கொண்டிருந் தார்கள். பயணிகளில் இரண்டு பேர் மட்டுமே பெரியவர்கள். மற்றவர்கள் எல்லோருமே குழந்தைகள்.

குழந்தைகள் ஆணும் பெண்ணுமாக ஏழு பேர் இருந் தார்கள். பலவித வண்ண உடைகளில் வந்து கொண்டிருந்த குழந்தைகள் பார்ப்பதற்கு அழகிய பூக்களைப்போல் இருந்தார்கள். சில நிமிடங்களில் அவர்கள் எல்லோரும் எனக்குச் சிறிது தூரம் போய் குதூகலத்துடன் அலையில் நின்றார்கள். ஏதேதோ பேசிச் சிரித்தார்கள். ஒருவர் மேல் ஒருவர் தண்ணீரை அடித்து விளையாடினார்கள்.



குழந்தைகள் அவர்களின் வாழ்க்கையில் முதல் முறையாக கடலைப் பார்ப்பதுபோல் பார்த்துப் பார்த்துப் பரவசப்பட்டுக் கொண்டிருந்தார்கள். குழந்தைகள் அவர்களின் அப்பாவிடம் கடலைப் பற்றித் துளைத்துத் துளைத்துக் கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அதுவும் ஆளுக்கொரு கேள்வியைக் கேட்டார்கள். அவர்களின் அப்பாவும் பொறு மையாக எல்லாக் குழந்தைகளின் கேள்விகளுக்கும் பதில் சொல்லிக்கொண்டிருந்தார். பின் எல்லாரையும் கடலின் பின்னணியில் நிறைய போட்டோ எடுத்தார். பிறகு அவர்களுக்குள் ஏதோ என்னைப் பார்த்தவாறே பேசிக் கொண்டார்கள். உடனே குழந்தைகளின் அப்பா நட்பான புன்சிரிப்புடன், என்னிடம் வந்து ஆங்கிலத்தில் பேசி அவரை அறிமுகம் செய்து கொண்டார்.

அவருடைய குடும்பத்தில் அவருக்கு மட்டும்தான் இங்கிலிஷ் தெரியும். அவர் மனைவியோடும் குழந்தை களோடும் ஜெர்மனியில் இருந்து இந்தியாவிற்கு சுற்றுலா வந்திருக்கிறார். பத்துக் குழந்தைகள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது அவர்களின் லட்சியம். அவருடைய மனைவியும் குழந்தைகளும் என் பக்கத்தில் உட்கார்ந்து கொள்ள அதை சில போட்டோக்கள் எடுத்துக்கொள்ளும் தன்னுடைய விருப்பத்தைச் சொன்னார். நான் எதிர்பாராமல் கிடைத்த சந்தோஷத்துடன் அவரின் விருப்பத்திற்குச் சம்மதம் சொன்னேன். உடனே அவரின் குழந்தைகள் ஓடி வந்து எனக்கு இரண்டு பக்கத்திலும் ஆசையுடன் உட்கார்ந்து கொண்டார்கள்.

குழந்தைகள் தாடி வைத்த கறுப்புக் கண்ணாடி அணிந்த என் முகத்தை சின்ன மலைப்போடும் அந்தக் கணம் அரும்பிய நட்போடும் பார்த்தார்கள். கொஞ்சம் தள்ளி குழந்தைகளின் அம்மாவும் உட்கார்ந்துகொள்ள அவர் சில போட்டோக்கள் எடுத்துக்கொண்டார். பின் அவர்

வந்து என் பக்கத்தில் அமர்ந்துகொள்ள அவரின் மனைவி போட்டோ எடுத்தார். சிறிது நேரம் குழந்தைகள் ஓடி ஓடி விளையாடிக்கொண்டிருந்தார்கள். குழந்தைகள் எல்லோருமே ஒருவருக்கொருவர் அன்பாக இருந்தார்கள்.

அவருக்கு ஜெர்மனியில் கார் ஏஜென்சி இருக்கிறது. இந்தியா அவருக்கு மிகவும் பிடித்த தேசம். இரண்டாவது முறையாக இந்தியா வந்திருக்கிறார். சென்னையைப் பார்த்து விட்டு காஞ்சிபுரம், ஸ்ரீரங்கம், மதுரை, இராமேஸ்வரம், கன்னியாகுமரி போன்ற இடங்களுக்குப் போகிறார்கள். தேக்கடியில் மட்டும் நான்கு நாட்கள் தங்கி இருக்கப் போகிறார்கள்.

அரைமணி நேரத்திற்கும் மேலாக என் பக்கத்திலேயே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்துவிட்டு கிளம்புவதற்காக எழுந்து கொண்டபோது போட்டோ எடுத்துக்கொள்ள நான் உதவியதற்காக அவர்கள் எல்லோருமே நன்றி சொல்லி என்னுடன் கைகுலுக்கிக் கொண்டார்கள். வெகுதூரம் போய் விட்ட பிறகும்கூட குழந்தைகள் திரும்பிப் பார்த்து சிவந்த கைகளை உயர்த்தி அசைத்தார்கள். எதிர்பாராமல் கிடைத்த உவகை பல நிமிஷங்களுக்குக் காயாத ஈரமாக மனதில் படிந்து போயிருந்தது.

எனக்கு சம்பந்தமே இல்லாத ஒரு திரைப்படத்தின் காட்சி ஒன்றில் நானும் இடம் பெற்றிருந்தாற் போன்ற உணர்வு அந்த நாளின் மிச்ச நேரம் பூராவும் என்னுள் வட்டம் போட்டுக்கொண்டே இருந்தது... இதெல்லாம் கடலின் பின்னணியில் நடந்ததுதான் எனக்குக் கிடைத்த வரம் என்று தோன்றும். இந்த அனுபவத்தை ஒரு கடலோரக் கவிதையாக எழுதிப் பார்க்க நினைத்து முயன்றதில் எங்கேயோ அந்த அனுபவம் கவிதாரூபத்திற்கு வர மறுத்தது. ஆனால் மற்றோர் அனுபவத்தை அனுபவமாகிய நிமிஷத்தில் கவிதை யாகவே கண்டுவிட்டேன். இப்போது அந்த அனுபவமும் அதன் கவிதை வடிவமும்.



கடற்கரையை ஒட்டிய திருவல்லிக்கேணியில் இருந்த 17 வருஷங்களில் சூரியோதய காட்சி என்பது எனக்கு அலையில் நின்றபடிதான் - அநேகமாக. சூரிய உதயத்தைப் பார்க்க முடியாதபடி மழை பெய்துகொண்டிருந்தாலும்கூட குடையைப் பிடித்துக்கொண்டு போய் அதிகாலை கடலைப் பார்த்து அன்றைய நாளை ஆரம்பித்து வைப்பேன். அத்தனை விரிந்த பரப்பளவு கொண்ட கடலின் மேல் மழை பெய்கிற காட்சி நிச்சயமாக மனிதசக்திக்கு அப்பாற்பட்டது. நிஜமாகவே மழைக்கால கடலில் ஓர் ஆக்ரோஷம் கிடக்கும். அதுமட்டு மில்லை; மழையில் கடலின் வண்ணம்கூட மாறிப்போய் விடுகிறது.

ஒருநாள் மழை இல்லாத காலை. சூரியன் இன்னும் கடல் மட்டத்திற்கு வரவில்லை. ஆனால் வானமும் கடற்கரையின் மணல் வெளியும் வெளுத்துவிட்டிருந்தது. சாலையைத் தாண்டி மணல் வெளியில் நடந்துகொண் டிருந்தேன். ராத்திரி முழுக்க மணல்வெளியில் கொட்டி யிருந்த பனியின் குளிர்ச்சி செருப்புப் போட்டுக் கொண்டிராத என் பாதங்களுக்கு ஜில்லென்றிருந்தது. சுத்தமாக மெழுகப் பட்ட தளம் போன்ற கடலோர ஈரப்பகுதியை நான் நெருங் கியபோது வழக்கம்போல சிறிது சிவந்த நிறத்தைக் கொண்ட சின்னச் சின்ன நண்டுகள் விறுவிறுவென்று ஓடி ஆங்காங்கு இருந்த வளைகளுக்குள் நுழைந்துகொண்டன. ராத்திரி பூராவும் மனித நடமாட்டங்கள் இல்லாத சுதந்திரத்தில் அப் பகுதி பூராவும் நூற்றுக்கணக்கான சின்னச் சின்ன நண்டுப் பிள்ளைகள் சுற்றித் திரிந்ததின் அடையாளமாக எந்தப் பக்கம் பார்த்தாலும் மெல்லிய கைரேகைகள் போன்ற நேர்த்தியான வரைகோடுகள் அந்த நண்டுப் பிள்ளைகளின் பிஞ்சு போன்ற கால் பாதங்களால் அழகழகாக இழுக்கப்பட்டிருந்தன.

மழை இல்லாத நாட்களில் எல்லாம் இந்த வரை கோடுகளைப் பார்த்துப் பார்த்து என் மனசு நெகிழ்ந்து போயிருந்தது. பல நேரங்களில் அந்த மெல்லிய வரை

கோடுகளின் மேல் கால் வைக்க மனம் வராத பரவசத்தில் அப்படியே என்னைப் பின்வாங்கிக் கொண்டிருக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு பரவச நிலையில்தான் சட்டென கடலுக்கு மேல் உயரும் சூரியன் போன்று என் மனதில் கண் இமைக்கின்ற விநாடியில் உதித்தது ஒரு கவிதை. அந்தக் கவிதை இதுதான் -

'பொழுது விடிந்து
தினமும் நான்
வருவேனென்று
கடற்கரை மண்ணெல்லாம்
குஞ்சு நண்டுகள்
கோலம் வரைந்திருந்தன...'

அந்தக் காட்சியையும் அதன் அனுபவத்தையும் இந்தச் சின்னக் கவிதைக்கு மேல் வேறு எந்த வழியிலும் இத்தனை அழகாகச் சொல்ல முடியாது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. இதெல்லாம் கடலும் கடற்கரையும் என்னுள் பதப்படுத்திக் கொடுத்த அழகிய படிமங்கள் அன்றி வேறு என்ன? அப்பேர்ப்பட்ட படிமங்களினாலேயே அமைந்திருக்கும் என்னுடைய மனத்தளங்கள் இன்றும் என்னிடம் பத்திரமாகவே வாழ்ந்து வருகின்றன.

நான் கடலின் ஒரு பகுதி யாகவும், கடல் எனதின் ஒரு பகுதியாகவும் கலந்து போயிருப்பதால்தான் இப்படியெல்லாம் இருப்பதாக எண்ணுகிறேன். ஆனால் இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டாலும்கூட எங்கேயோ ஒரு சன்னமான இழையில் நானும் கடலும் இன்னமும் ஒருமிக்காமலும்தான் இருக்கிறோம். கடல் கடல் என்று சொல்லிக்கொண்டு நான் கடலோரமாகவேதான் நின்றுகொண்டிருக்கிறேன்.

கடலுக்குள் இன்றுவரை நான் சென்று பார்க்கவே இல்லை. இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாக மெல்லிசான



பிரிவுக்கோடு என்னையும் கடலையும் பிரித்து நிற்க வைத்திருக்கிறது. அந்தப் பிரிவுக்கோடு தூர்ந்து போக வேண்டும். மரணம் நெருங்கிவிட்ட தருணத்திலாவது நானும் கடலும் சங்கமமாகி விடவேண்டும். என் உடலுக்கு மரணம் நிச்சயமாகிவிட்ட நேரத்தில் மூச்சு அடங்கி விடுவதற்கு முன்பாக என் உடல் கடலுக்குள் வீசி எறிந்துவிடப்பட வேண்டும். உப்புச் சுவையைச் சுவைத்துக் கொண்டே என் உயிர் கடல் என்ற உப்புக் கரைசலுக்குள்ளேயே கரைந்து போய்விட வேண்டும். இது கொஞ்சம் சாத்வீகமான வழி. இதுவே கொடிய வன்முறையில் ஏற்படட்டும் என்றால் என் உடம்பின் மரணம் பெரும் சக்தி ஓங்கிய கன்னங்கரிய திமிங்கலத்தால் ஏற்படட்டும். நிஜமாகவே அது சாபவிமோசனமாக இருக்கும்!

சாபவிமோசனம் என்பது ஒரு வரம். அந்த வரமும் கிடைத்துவிட்டால் ஜென்ம சாபல்யம்தான்! - இப்படி நினைத்துக்கொள்ளுகிற அளவிற்கு என் மனக்கடலுக்குள் திமிங்கலம் கனத்துப்போய்க் கிடக்கிறது. திமிங்கலம் என்று நினைக்கின்றபோதே என் உணர்வுகளில் ஒரு சக்திப் பெருக்கு திரண்டு நிமிர்கோடாக வானத்தையும் ஊடுருவி நிற்கிறது. திமிங்கலம் என்னுடைய மற்றொரு பரிணாம வளர்ச்சியென்றோகூட சில சமயங்களில் எனக்குத் தோன்றும். அதனால்தானோ என்னவோ உலகத்தில் இருக்கும் மற்ற எல்லா ஜீவராசிகளையும்விட திமிங்கலத்தின் மேல் எனக்கு ஈர்ப்பு அதிகம்.

வாழ்ந்தால் திமிங்கலமாக வாழ வேண்டும்! திமிங்கலத்தோடு வாழ வேண்டும்! குறைந்தபட்சம் திமிங்கலத்தின் மினுமினுப்பான முதுகில் சவாரியாவது செய்ய வேண்டும்! திமிங்கலம் என்ன பசுமாடா - சாதுவாக புல் மேய்ந்து கொண்டிருக்க?! கடலின் மையங்களில் நீரைக் கிழித்துக் கொண்டு புயல் வீச்சுடன் விரையும் அதன் முதுகின் மேல்

சவாரி செய்வதும் ரயிலில் 'அப்பர்- பெர்த்'தில் சுகமாகப் படுத்துக்கொண்டு போகிற சாதாரண சவாரியா? சர்வகாலமும் கடலுக்குள்ளேயே மூழ்கிக் கிடப்பதால் களிம்பேறிப் போயிருக்கும் அதன் முதுகில் பத்திரமான சவாரி சில நிமிஷங்களுக்குக்கூடச் சாத்தியமில்லை. எந்த நிமிஷமும் முதுகின் வழவழப்பு வழுக்கி விழவைத்து விடும். விழுந்து விட்டால் போதும் - அடுத்த நிமிஷமே திமிங்கல சமாதி! சுழலும் அதன் வாலே என் உடம்பை உருக்குலைத்து விடும். அல்லது அதன் கூர்மையான பல் இடுக்குகளில் சிக்கி அகம்பாவம் மிச்சமிருக்கும் என் உடம்பு சின்னாபின்னமாக சிதைந்து போய்விடும் சிதைந்து... அடுத்த கணம் திமிங் கலத்தின் பிருமாண்ட உயிருடன் என்னுடைய நுண்ணிய உயிரும் ஒன்றி ஒருமித்துவிடும்.

நானும் திமிங்கல உருவத்தில் மீண்டும் ஒரு கால கட்டம் வரைக்கும் கடலுக்குள் வாழ்ந்து கொண்டிருப்பேன். ஆனால், இதெல்லாம் எளிதில் நடந்து விடக்கூடியவை இல்லையோ; இதெல்லாம் ஒருவித அதீத மனோபாவத்தின் கற்பனையான இம்சைகளோ என்ற கேள்விகள்கூட என் மனதில் தோன்றத்தான் செய்தன. ஆனால் அதற்காக நான் வருத்தப்படவில்லை. பயந்துவிடவில்லை.

அசாதாரணமான நேயம் எனக்குள் நிலா வெளிச்சம் போல் படிந்து கிடக்கிறது. அந்த அசாதாரணம் அசாதாரண மான தளத்திற்கு என் மனதை கையைப் பிடித்து அழைத்துச் செல்கிறது. அதனால் எந்தக் கேள்விக்குறிக்கும் அவசிய மில்லை. எங்கேயோ ஒரு கதவு கடலை நோக்கி எனக்காகத் திறக்கத்தான் செய்யும் என்று நான் நம்பிக்கொண்டிருந்தேன். காத்துக்கொண்டிருந்தேன்.

சரேலென நான் எதிர்பாராத திசையில் ஒருநாள் கதவு திறந்து கொள்ள கடலின் அலை என்னுடைய வீட்டு வாசலில்



வந்து ஆர்ப்பரித்தது. கடல் அலை எந்த உருவத்தில் வந்த தென்று தெரியுமா? - ஒரு மனிதரின் உருவத்தில். அந்த மனிதர் யாரென்று தெரியுமா? நான் திருமணம செய்து கொள்ள நேரிட்ட பெண்ணின் சகோதரர். அவர் ஒரு கப்பல் இன்ஜினியர்! இதைக் கேள்விப்பட்ட நிமிஷம் எனக்குள் ஓர் அலை உயர்ந்து எழும்பியது.

திமிங்கலம் பல் வரிசையைக் காட்டி வாலைச் சுழற்றியது. தண்டவாளத்தில் நின்ற கணமே சேருமிடத்தில் இருந்தேன் என கவிதை ஒன்று நான் எழுதியதுண்டு. அது போல என்னுடைய 'பிரதர் இன் லா' மரீன் இன்ஜினியா என்று அறிந்த கணத்தில் நான் கடலின் மையத்தில் இருந்தேன். - நிஜத்தில் நான் கடல் மையத்தை நெருங்கிவிட்டேன்.

கடல் எனக்கு வழிவிடப் போகிறது. இனி திமிங்கலங்கள் வாழும் சமுத்திரங்களை அடையும் கப்பல் பயணம் எனக்கு எளிதாக சாத்தியப்படப்போகிறது. வருடத்தில் பாதி நாட்கள் சமுத்திரங்களின் மேலேயே வாழும் என் மனைவியின் சகோதரருடன் சாத்தியமாகும்போது நானும் அவருடன் சேர்ந்து மேற்கொள்ளப்போகும் என்னுடைய முதல் கப்பல் பயணமே என்னுடைய இறுதிப் பயணமாக இருக்கும். அதில் சந்தேகமில்லை. - அந்தப் பயணத்தின்போது கடலின் நடுவே ஒருநாள் கப்பலின் தளங்களில் இருந்து நான் யாருக்கும் தெரியாமல் காணாமல் போயிருப்பேன்...

★

# 7. செல்லத்துரை வாத்தியாரும் பம்பாய் கரை வேட்டியும்

பிறந்து இருபத்தி மூன்று வயதுவரை வளர்ந்த ஊராகிய சிகரக்கோட்டையை விட்டு சென்னைக்கு நான் வந்து குடியேறி முப்பத்தைந்து வருடங்களுக்கும் மேலாகி விட்டன. அதனால் அந்த ஊர் மண்ணோடும், ஊரைச் சேர்ந்த யாரோடும் நெருக்கமான தொடர்பு சிறிதும் இல்லாமலேயே போய்விட்டன. இத்தனைக்கும் என் அம்மா இன்னும் சிகரக்கோட்டையில்தான் இருக்கிறார். அவரிடம் இருந்து மாதம் தவறாமல் எனக்குக் கடிதங்களும் வந்து கொண்டுதான் இருக்கின்றன. அம்மாவின் கடிதங்களில் என்மேல் அவர் வைத்திருக்கும் அன்பையும் அக்கறையையும் தவிர ஊரைப் பற்றின தகவல்கள் எதுவும் இருக்காது. ஊரைப் பற்றிய ஒன்றிரண்டு விஷயங்களை எப்போதாவது எனக்குத் தெரிவிப்பது இப்போதும் அங்கேயே இருக்கின்ற என் பள்ளிக்கூட காலத்து நண்பன் 'பழக்கடை' தர்மர்தான்.

தர்மர் எழுதுகிற கடிதங்களில்கூட ஊர் விஷயம் என்பது ரொம்ப ரொம்பக் குறைச்சலாகவே இருக்கும். பொதுவாக அவனுடைய குடும்ப நலன்களைப் பற்றியும், அவனுடைய வியாபார லாபநஷ்டங்கள் பற்றியும் மண்டை மண்டையான எழுத்துக்களில் எழுதியிருப்பான். ஊரில் எனக்குத் தெரிந்தவர்கள் யாராவது இறந்துவிட்டால் அதையும் அவ்வப்போது 'பழக்கடை' தர்மர் அவனின் கடிதங்களில் தெரியப்படுத்துவான். அப்படி ஒரு மரணச் செய்தியை தர்மர் இரண்டு நாட்களுக்கு முன்பு எழுதியிருந்த கடிதத்தில் தெரிவித்திருந்தான்.



நானும் தர்மரும் நான்காவது வகுப்புப் படித்த செல்லத்துரை வாத்தியார், அவரின் 91ஆம் வயதில் ரொம்ப நாள் உடம்பு சரியில்லாமல் இருந்து சிகரக்கோட்டையில் அவரின் பேத்தி ஒருத்தியின் வீட்டில் காலமாகிவிட்டாராம். கடிதத்தில் பழக்கடை தர்மர் செல்லத்துரை வாத்தியாரைப் பற்றிய அவனுடைய சில ஞாபகங்களையும் குறிப்பிட்டு இருந்தான். அதைப் படித்ததும் எனக்கும் எங்கள் செல்லத்துரை வாத்தியார் சம்பந்தப்பட்ட சில விஷயங்கள் ஞாபகத்திற்கு வந்துவிட்டன. - அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கே பகிர்ந்து கொள்கிறேன்...

முதல் வகுப்பில் இருந்து எட்டாம் வகுப்பு வரை சிகரக்கோட்டையில் நான் படித்த ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் செல்லத்துரை வாத்தியார் கொஞ்சம் அதிகமாகவே என்னுடைய ஞாபகத்தில் இருந்து கொண்டிருப்பவர். அவரிடம் நான் நான்காம் வகுப்புப் படித்தபோது செல்லத்துரை வாத்தியாருக்கு அதிகம் இருந்தால் நாற்பத்தைந்து வயது இருக்கலாம். ஆனால் ஷேவ் பண்ணாமல் வளர விடப்பட்டிருந்த கறுப்பும் வெள்ளையும் கலந்த நீண்ட தாடி, வாத்தியாரை கொஞ்சம் வயது ஜாஸ்தியானவராகக் காட்டிக் கொண்டிருந்தது. தலைமுடியையும்கூட அவர் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவைதான் வெட்டுபவராக இருக்கும். பல நாட்களில் செல்லத்துரை வாத்தியாரின் தலைமுடியும் அவரின் தாடியைப் போலவே கன்னாபின்னாவென்று அதே கறுப்பும் வெள்ளையும் கலந்ததாக வளர்ந்து போயிருக்கும். அதைப் பற்றிக் கவலையே இருக்காது வாத்தியாருக்கு.

கண்டபடி வளர்ந்து போயிருக்கும் தாடியையும் தலைமுடியையும் பற்றி எந்த அக்கறையும் இல்லாதவராக இருப்பது போலவே செல்லத்துரை வாத்தியார் அவர் போட்டுக்கொண்டிருக்கும் வேட்டி சட்டையைப் பற்றியும்

கொஞ்சங்கூட கவலையே பட்டுக்கொள்ள மாட்டார். வழக்கமாக மட்டமான கச்சாத் துணியில் தைக்கப்பட்ட வெள்ளை நிற ஜிப்பாவும், ரொம்பவும் விலை குறைச்சலான கைத்தறியில் நெய்த நான்கு முழ புளியங்குடி வேட்டியும்தான் - அவர் எப்போதும் அணிவது. மூன்று நான்கு 'செட்' வைத்திருந்த அந்த உடைகளும் ரொம்ப பழசாகத்தான் இருக்கும். அவற்றையும் சலவைத் தொழிலாளியிடம் கொடுத்து 'வெள்ளாவி' வைத்துச் சலவை பண்ணி வாங்கி அணிந்துகொள்ளும் வழக்கம் செல்லத்துரை வாத்தியாருக்கு ஒருநாளும் கிடையாது. அவருக்கு அது கட்டுப்படி ஆகாத சமாச்சாரம். அதனால் அவருடைய வேட்டி சட்டை துண்டு எல்லாவற்றையும் வாத்தியார் வீட்டிலேயேதான் துவைத்துக் கொள்வார்.

சலவைத் தொழிலாளியிடம் போடாமல் வீட்டிலேயே துவைத்துத் துவைத்து உபயோகப்படுத்திக்கொள்ளும் வெள்ளை நிற பருத்தி ஆடைகள் நாளடைவில் எப்படி அதன் வெண்மை குறைந்து ஒருவித அழுக்குப் பிடித்தாற்போன்ற இளம் மஞ்சள் நிறமாக மாறிப்போய்விடும் என்பதற்கு செல்லத்துரை வாத்தியாரின் உடைகளை உதாரணமாகக் காட்டலாம்... அதுமாத்திரம் இல்லை. ஒரு ஜிப்பாவையும் வேட்டியையும் திங்கட்கிழமை எடுத்து அணிந்து கொண்டால் - அந்த வார சனிக்கிழமை வரை அவை இரண்டையும் செல்லத்துரை வாத்தியார் எந்தக் காரணத்திற்காகவும் மாற்றுவது கிடையாது. அதனால் என்ன ஆகும் தெரியுமா? புதன்கிழமை அல்லது வியாழக்கிழமையே செல்லத்துரை வாத்தியார் பக்கத்தில் வந்தாலே அவருடைய ஜிப்பாவில் இருந்து வியர்வை நாற்றம் 'குப்'பென்று வீசும்.

பனியன் போடாமல் ஜிப்பாவை அணிந்து கொள்வதால் அவரின் ஜிப்பாவில் காய்ந்து போன வியர்வையின்



அடையாளம் திட்டுத் திட்டாகத் தெரியும். பார்ப்பதற்கு அது கொஞ்சம் அசிங்கமாகவும் இருக்கும். பொதுவாக எனக்கு இப்படி வியர்வை நாற்றமடிக்கும் உடைகளோடு யாராவது பக்கத்தில் வந்தாலே பிடிக்காது. அவர்களோடு பேசவும் பிடிக்காது. ஆனால் செல்லத்துரை வாத்தியாரின் அருகில் என்னுடைய இந்த மனோபாவம் ஒருநாள்கூட தலை தூக்கினது கிடையாது. அவரின் அருகில் நின்று பேசிக் கொண்டிருக்கத்தான் ஆசையாக இருக்கும். அதற்குக் காரணம் வாத்தியாரிடம் இருந்த மிக நல்ல குணம்தான். - மிக நல்ல குணம் என்று நான் சொல்வது - வாத்தியார் வித்தியாசம் பாராட்டாமல் எல்லோரிடமும் காட்டுகிற மழை பெய்கிறாற் போன்ற அருமையான அன்பை. அப்படியொரு பேதம் இல்லாத அன்பை எல்லா மனிதர்களிடமும் காட்டுவார்.

நிறைய வாத்தியார்கள் நன்றாகப் படிக்காத, சரியாகப் படிப்பு வராத மாணவர்களிடம் கோபமாக நடந்து கொள்வார்கள். திட்டுவார்கள். பிரம்பால் அடிப்பார்கள். செல்லத்துரை வாத்தியார் நன்றாகப் படிக்காத ஆற்றல் குறைச்சலான பையன்களிடம்தான் மிகுந்த அன்பையும் பரிவையும் காட்டுவார். அப்படியாவது அந்தப் பையன்களை நன்றாகப் படிக்க வைக்க முயற்சி செய்து பார்ப்பார்.

வகுப்பில் மாணவர்கள் ஏதாவது தப்புச் செய்து விட்டால்கூட செல்லத்துரை வாத்தியார் கோபித்துக்கொள்ள மாட்டார். ஒருவித கண்டிப்பான தொனியில் தப்புச் செய்யும் மாணவர்களை தவறை உணரவைக்கிற மாதிரி நடந்து கொள்வார். அதனால் பையன்களும் தங்களின் தவறை உணர்ந்து வாத்தியாரிடம் பணிவுடன் நடந்துகொள்வார்கள். தன் வகுப்பு மாணவர்கள் தனக்கு மரியாதை காட்டினால் போதும்; தனக்குப் பயப்படத் தேவையில்லையென்று ரொம்ப அழகாகச் சொல்வார் செல்லத்துரை வாத்தியார். யார் சொல்வார்கள் இப்படியெல்லாம்?

செல்லத்துரை வாத்தியார் பள்ளிக்கூடத்தில்தான் இப்படி நடந்துகொள்வார் என்பதில்லை. வீட்டில் அவருடைய குடும்பத்தினருடனும் அவர் அந்த மாதிரியேதான் நடந்து கொள்வார்... அதுவும் அவருடைய குழந்தைகளிடம் காட்டுகிற அன்பு; ஆஸ்ரமம் ஒன்றில் ரிஷி ஒருத்தர் அங்கு வளரும் மான்களிடம் காட்டுகிற பரிவு போலவே இருக்கும்... செல்லத்துரை வாத்தியாருக்கு மொத்தம் நான்கு குழந்தைகள் - இரண்டு ஆண் குழந்தைகளும்; இரண்டு பெண் குழந்தை களுமாக. அவர்கள் பன்னிரெண்டு வயதில் இருந்து நான்கு வயது வரை உள்ளவர்களாக; பள்ளிக்கூடத்தில் அவரவர் வயதுக்கு உரிய வகுப்புகளில் படித்துக்கொண்டிருந்தார்கள். செல்லத்துரை வாத்தியாரைப் போலவே அவரின் குழந் தைகள் நான்கு பேரும் ரொம்பக் கறுப்பாக இருப்பார்கள். அதனாலோ என்னவோ அவர்கள் எல்லாருமே நன்றாகக் குளிக்காதவர்கள் மாதிரி எப்போதுமே ஒருவித அழுக்குப் பிடித்தாற்போலவே பார்ப்பதற்குத் தெரிவார்கள்.

ஏற்கனவே நல்ல பணவசதி இல்லாத மோசமான ஏழ்மையின் இறுக்கத்தில் இருந்து கொண்டிருக்கும் செல்லத் துரை வாத்தியாரின் குழந்தைகள் இந்த அழுக்குப் பிடித்தாற் போன்ற கறுப்பு நிறத்தில் மேலும் ஏழைப்பட்டவர்களாக எனக்குத் தெரிவார்கள். வீட்டில் இந்த நான்கு குழந்தை களைத் தவிர வாத்தியாரின் மனைவி, வாத்தியாரின் வயசான ஓர் அப்பா, சின்ன வயதில் 'போலியோ'வால் இரண்டு கால்களும் விளங்காமல் போன ஒரு தம்பியும் செல்லத்துரை வாத்தியாருக்கு இருந்தார்கள். இவர்கள் அத்தனை பேரின் அன்றாடப் பொழுதும் வாத்தியார் ஒருத்தரின் சம்பளப் பணத்தில்தான் ஓடிக்கொண்டிருந்தது.

அந்த 1950-ல் பள்ளிக்கூடத்தில் செல்லத்துரை வாத்தியாரின் சம்பளம் எவ்வளவு என்ற விபரம் பற்றி



எனக்குத் தெரியாது. ஆனால் பொதுவாகவே அப்போது நான் படித்த அந்த ஆரம்பப் பாடசாலையில் ஆசிரியர் பணியில் இருந்தவர்களின் தோற்றத்தில் இருந்தே அவர்களின் பண வசதி அற்ற நிலைமை பார்த்த மாத்திரத்திலேயே தெரியத் தான் செய்தது. செல்லத்துரை வாத்தியாரின் வீட்டில் இந்த பணவசதிக் குறைவு இன்னும் ஜாஸ்தியாகத் தெரிந்தது.

நான் அவருடைய வீட்டிற்குத் தினமும் சாயங்காலம் 'ட்யூஸன்' படிப்பதற்காகப் போகும்போதுதான் செல்லத் துரை வாத்தியாரின் வீட்டு நிலைமையைக் கண்கூடாகப் பார்க்க நேர்ந்தது. அப்போது என்னையும் அறியாமல் என் மனம் நான் பிறந்து வளரும் வீட்டின் பணவசதியையும், வாத்தியாரின் வீட்டுப் பணவசதியையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கஷ்டப்படும். வாத்தியாரின் குழந்தைகளின் மேல் ரொம்ப இரக்கம் வரும். ஆனால் ஒன்று; செல்லத்துரை வாத்தியாரின் குடும்பத்தினரின் முகங்களில்தான் வறுமையின் இறுக்கமும், கண்களில் ஒரு சோகம் கவிந்த ஏக்கமும் படிந்துபோயிருந்ததே தவிர, வாத்தியாரின் முகபாவனை எதிலும் ஒருநாளும் வறுமையான சோகமோ இறுக்கமோ கடுகளவுகூடத் தென்பட்டதில்லை. அதுமாத்திரம் இல்லை.

செல்லத்துரை வாத்தியாரின் முகத்திலும் கணகளிலும் எல்லா நேரமும் ஒரு சிரிப்பு நிரந்தரமான மின்னலைப் போல இருந்து கொண்டே இருக்கும். அவரைப்போல ஓர் உற்சாகமான வேறொரு வாத்தியாரை நிஜமாகவே பார்க்க முடியாது... ஏழெட்டு வாத்தியார்கள் சேர்ந்து நின்று பேசிக் கொண்டிருந்தால் அங்கே செல்லத்துரை வாத்தியாரின் குரல் தான் தனியாக பெரிதாக ரொம்பக் குதூகலமாக ஒலித்துக் கொண்டிருக்கும். வாத்தியாரின் நடையிலேயே ஒரு துள்ளல் இருக்கும்... நிஜம் இது.

ஏழ்மை அவரின் ஆன்மாவைக் கொஞ்சம்கூடத் தொடவில்லை. அதனால்தான் சின்ன மனச்சோர்வுகூட

இல்லாமல் எல்லா நிமிஷமும் பள்ளிக்கூடத்திலும் வீட்டிலும் அவரால் அந்த ஆனந்த உயிரோட்டத்தோடு இயங்க முடிந்தது. - அந்த அருமையான செல்லத்துரை வாத்தியாரோடு எனக்கு ஒரு மறக்க முடியாத அனுபவம் நிகழ்ந்தது. - இப்போது அதை வெளியிடுகிறேன்.

முதல் வகுப்பில் இருந்து எட்டாம் வகுப்பு வரை நான் படித்துக்கொண்டிருந்த ஆரம்பப் பாடசாலையில் ஒவ்வொரு வருஷமும் நான் என் வகுப்பு வாத்தியாருக்கு தீபாவளி சமயத்தில் ஒரு ஜோடி நயம் பம்பாய் கரை எட்டு முழ வேட்டியை தர்மராஜன் செட்டியார் கடையில் வாங்கி தீபாவளி அன்பளிப்புபோலத் தவறாமல் கொடுப்பது உண்டு. ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் நான் படித்த அந்த எட்டு வருஷமும் என் அப்பா இதை ஒரு வழக்கமாக வைத்திருந்தார்.

பள்ளிக்கூட வாத்தியார்களின் மத்தியில் இது மிகவும் ஒரு குறிப்பிடத்தக்க விசேஷமான செய்தி. ஏனென்றால் தீபாவளி அன்பளிப்பாகக் கொடுக்கும் உசத்தியான பம்பாய் எட்டு முழ மில் வேட்டியின் விலை அப்போது - ஒரு ஜோடி பத்து ரூபாய்... அந்த வேட்டியை பெரிய பெரிய பணக் காரர்கள்தான் அந்தக் காலத்தில் வாங்கிக் கட்டுவார்கள். தொட்டுப் பார்த்தால் ஒரு ட்ரேஸிங் பேப்பர் போல அத்தனை நைஸாக இருக்கும் வேட்டி - வெள்ளை வெளேரென்ற நிறத்தில்... (இன்றும் அதே பம்பாய் மில் வேட்டிதான் நான் கட்டுகிறேன். இன்று ஒரு ஜோடி பம்பாய் மில் எட்டு முழ வேட்டியின் விலை நானூறு ரூபாய்...) அதனால் வேட்டி அன்பளிப்பு விஷயம் வாத்தியார்களின் மத்தியில் மிகவும் பரபரப்பானதாக இருந்ததில் ஆச்சர்யமில்லை... அதனால் ஒரு வகுப்பில் படிப்பு முடிந்து பரீட்சைகளில் தேர்ச்சி பெற்றதும், தேர்ச்சி பெற்ற எல்லா வகுப்பு மாணவர்களையும் கலந்து உட்கார வைத்து அடுத்த மேல் வகுப்புக்கு ஏதோ ஒரு



அவர்களின் கணக்குப்படி பிரித்துப் பிரித்து அனுப்புகிற அந்த நிமிஷத்திலேயே மேல் வகுப்பு வாத்தியார்களுக்கு நான் எந்த வகுப்புக்குப் பிரித்து அனுப்பப்படுகிறேன் என்பதில் ஒரு 'திரில்லிங்கான' கவனம் அவர்களுடைய கண்களில் நிறைந்து கிடக்கும்.

சில வாத்தியார்கள் என்னை அவர்களுடைய வகுப்புக்குப் பிரித்துவிட ரகசியமாக ஹெட்மாஸ்டரை அணுகுகிற வேலையைக்கூடச் செய்வார்கள். நான் எந்த வாத்தியாரின் வகுப்புக்குப் பிரித்துவிடப்படுகிறேனோ - அந்த நிமிஷமே இரண்டு முக்கியமான விஷயங்கள் அவருக்கு உத்திரவாதமாகிவிடுகின்றன... முதல் உத்திரவாதம் - தீபாவளி வேட்டி. இரண்டாவது உத்திரவாதம் - ட்யூஸன். ஜூன் முதல் வாரத்தில் பள்ளிக்கூடம் திறந்து, புது வகுப்புக்குப் பிரித்துவிட்டு, புது புத்தகங்கள் கொடுத்து - வாத்தியார்களும் புதிய பாடங்களைச் சொல்லித்தர ஆரம் பிக்கிற வேளையில் - ஜூலை மாதம் முதல் தேதி நான் முதல் ஆளாக புது வாத்தியாரிடம் ட்யூஸன் படிப்பதற்குச் சேர்ந்து விடுவேன்.

மார்ச் மாதம் வரை - ஒன்பது மாதங்களுக்கு என் ட்யூஸன் போகும்... நான்காவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது செல்லத்துரை வாத்தியாருக்கு நான் இரண்டு ரூபாயை மாதாந்தர 'ட்யூஸன்' சம்பளமாய் கொடுத்த ஞாபகம்... மாதம் இரண்டு ரூபாய் வீதம் ஒன்பது மாதங் களுக்கு பதினெட்டு ரூபாய்... செல்லத்துரை வாத்தியாருக்கு மாத்திரம் இல்லை; எந்த வாத்தியாருக்குமே இது மிகப் பெரும் உபரி வருமானம்...

இந்த மிகப் பெரிய உபரி வருமானத்தை செல்லத்துரை வாத்தியாருக்குத் தரவும் நான் தவறவில்லை. தீபாவளிக்கு பம்பாய் மில் வேட்டி - ஒரு ஜோடி வாங்கி அன்பளிப்பாகக்

கொடுக்கவும் தவறவில்லை. வழக்கம்போல அப்பா தர்ம ராஜன் செட்டியார் கடையில் பத்து ரூபாயில் ஒரு ஜோடி வேட்டியை செல்லத்துரை வாத்தியாருக்காக தீபாவளி வருவ தற்கு பத்து நாட்களுக்கு முன்பாகவே வாங்கி அலமாரியில் வைத்துவிட்டார்.

ஒவ்வொரு வருஷ வழக்கம்போல, தீபாவளிக்கு நான்கு நாட்களுக்கு முன்பு அப்பா செல்லத்துரை வாத்தியாரை பள்ளிக்கூடம் விட்ட பிறகு சாயந்தரம் ஐந்து மணிக்கு எங்கள் வீட்டுக்கு வந்து போகும்படி என்னிடம் சொல்லி அனுப்பினார். நானும் அப்பா சொல்லிவிட்ட மாதிரியே, பள்ளிக்கூடத்திற்குப் போனதுமே செல்லத்துரை வாத்தியாரிடம் அதைச் சொல்லிவிட்டேன். வருவதாக வாத்தியாரும் சந்தோஷமாகச் சொன்னார். - அந்தத் தருணம் வாத்தியாருக்கு எத்தனைக்கு எத்தனை புளகாங்கிதமான விஷயமோ, அத்தனைக்கு அத்தனை எனக்கும் அது மிக மிக புளகாங்கித மான விஷயம்.

அழகான விலை உயர்ந்த எட்டு முழ பம்பாய் கரை வேட்டியை அன்பளிப்பாக பெற்றுக் கொள்வதில் என் வாத்தியார் எவ்வளவு சந்தோஷத்தை அடைவாரோ, அதே சந்தோஷத்தை வேட்டியை வாத்தியாருக்குக் கொடுப்பதில் நானும் அடைவேன்... அதுவும் ஒரு சின்ன தாம்பாளத்தில் பூ, பழம் எல்லாம் வைத்து அதில் வேட்டியையும் வைத்து அப்பா வாத்தியாருக்கு கொடுக்கும் காட்சியை எங்கள் வீட்டு ஹாலுக்கும் முற்றத்துக்கும் நடுவே தொங்கவிடப் பட்டிருக்கும் பெரிய திரைக்குப் பின்னால் நின்றபடி பார்த்துக் கொண்டிருக்கும் எனக்கு அந்த நிமிஷம் இனம் பிரிக்கத் தெரியாத நெகிழ்வு ஒன்று என் மனதிற்குள் நிறைந்து போயிருக்கும்.



வாத்தியார் வேட்டி வாங்க வர எங்கள் வீட்டுக்கு வரும் அந்த வருகை அதிகபட்சம் அரைமணி நேரத்திற்கு நீடிக்கும். அந்த அரை மணி நேரத்தில் என் அப்பா வாத்தியாரிடம் அவருடைய குடும்ப ஷேமலாபங்கள் பற்றி அக்கறையோடு கேட்டுத் தெரிந்துகொள்வார். பொதுவாக பள்ளிக்கூடத்தின் வளர்ச்சிச் செயல்பாடுகள் எப்படி இருக்கின்றன என்பதையும் விசாரிப்பார். கடைசியில் என்னுடைய படிப்பெல்லாம் எப்படி இருக்கின்றது என்பதை ஒரு 'மரபு'க்காக வாத்தியாரிடம் கேட்பார். வாத்தியார் அப்பாவின் எல்லா கேள்விக்கும் அடக்கமாகப் பதில் சொல்வார். அதற்கு மேல் இரண்டு பேருக்கும் பேசுவதற்கு எதுவும் இருக்காது... 'சரி - பார்ப் போம்' என்பார் அப்பா. வாத்தியார் என் அப்பாவிற்கு பெரியதாக ஒரு கும்பிடு போட்டுவிட்டு வெளிப்படையாகத் தெரியும் மனநிறைவோடு கிளம்புவார்...

செல்லத்துரை வாத்தியாரின் விஷயத்திலும் இவை அத்தனையும் வார்த்தை பிசகாமல் அப்படியே நடந்தன. வேட்டியை அவர் வாங்கிக் கொண்டு போய், நான்கு நாட்களில் தீபாவளியும் வந்து சென்றுவிட்டது.

தீபாவளி போய் இரண்டு நாட்கள் ஆகியிருந்தன. அப்போது என்னுடைய அப்பாவைப் பார்க்க பரமசிவம் என்பவர் எதற்கோ வந்திருந்தார். அவர் என் அப்பாவின் பஞ்சு வியாபாரத்தில் 'பார்ட்னராக' இருந்த பிச்சைக்கனி என்பவரின் உறவுக்காரர். வந்த காரியத்தைப் பற்றிப் பேசி முடித்துவிட்ட பரமசிவத்திடம் என் அப்பா கேட்டார் - அவர் கட்டியிருந்த வேட்டியைப் பார்த்து - ''என்ன பரமசிவம்; இது தான் தீபாவளி வேட்டியா?''

''ஆமாங்க அண்ணாச்சி...''

''நல்லாயிருக்கே... எங்கே வாங்கினே - நம்ம தர்ம ராஜன் செட்டியார் கடையிலேயா?''

''அய்யோ - அதை ஏன் கேக்குறீங்க... சொன்னா நம்ப மாட்டீங்க... நம்ம பள்ளிக்கூடத்தில ஒரு வாத்தியார் இருக்கார். உங்களுக்கு அவரைத் தெரியுமோ என்னமோ - அவரு பேரு செல்லத்துரை... அவர்கிட்டேதான் இதை வாங்குனேன்...''

இதைக் கேட்டு என் அப்பா அதிர்ந்துவிட்டார். கேட்டுக் கொண்டிருந்த நானும் ஒரு மாதிரி திகைத்துப்போனேன். அப்பா உடனே அந்த பரமசிவத்தைக் கேட்டார் : ''செல்லத் துரை வாத்தியார்கிட்டே வாங்குனியா? அவருக்கு ஏது? இது பாத்தா பழைய வேட்டி போலவும் தெரியலையே...''

''வேட்டி பழசு இல்லைங்க அண்ணாச்சி... புத்தம் புதுசு...''

''புதுசைப் போய் ஏன் விக்கறாரு உன்கிட்ட...?''

''தீபாவளிக்கு அவர்கிட்ட படிக்கிற யாரோ ஒரு பையனோட வீட்ல செல்லத்துரை வாத்தியாருக்கு இந்த வேட்டியில - ஒரு ஜோடி வாங்கி 'தீபாவளி இனாம்' என்கிற மாதிரி குடுத்திருக்காங்க... அதென்னமோ தெரியலை... வாத்தியார் ஆறணா குறைச்சி அப்படியே புதுசா தரேன் னார்... புதுசா கடையில போய் இன்னைக்கி வாங்கப் போனா 'வல்லிசா' பத்து ரூபா இருக்கும்... வாத்தியார் ஆறணா குறைச்சலா தரேன்னு சொல்றாரேன்னு - உடனே ஒன்பது ரூபாவையும் பத்தணாவையும் கொடுத்து வாங்கிட்டேன்... ஆறணா நமக்கு லாபமாச்சே... வேட்டி நல்லாயிருக்கா அண்ணாச்சி...?''

''யாரோ தீபாவளிக்கு வாங்கிக் கொடுத்ததைப் போய் ஏன் வாத்தியார் உனக்கு வித்திட்டார்?'' - அப்பா விடாமல் கேட்டார்.



'அது தெரியலைங்க அண்ணாச்சி...''

அந்த பரமசிவம் போய்விட்டார்... என் அப்பா ஒரு மாதிரியான கோபத்தில் வீட்டில் குறுக்கும் நெடுக்குமாக ரொம்ப நேரத்திற்கு நடந்துகொண்டே இருந்தார். நான் ஒரு வித பயத்துடன் அப்பாவையே பார்த்துக்கொண்டிருந்தேன். நேரம் ஆக ஆக அப்பாவின் முகத்தில் கோபம் அதிகமாகிக் கொண்டிருந்தது.

''நாளைக்குச் சாயந்தரம் உன் வாத்தியாரை என்னை வந்து பாக்கச் சொல்லு...''

இதை அப்பா என்னிடம் கோபமான குரலிலேயே சொன்னார். பயத்துடனே நானும் சரியென்று தலையை ஆட்டிவிட்டேனே தவிர - வாத்தியாரிடம் போய் இதை எப்படிச் சொல்வதென்று தெரியவில்லை எனக்கு. எதற்கு என்று உடனே வாத்தியார் திருப்பிக்கேட்பார். நிஜத்தைச் சொல்லாமல் 'தெரியாது சார்' என்று அவரிடம் பொய் சொல்ல வேண்டும்... என்ன விஷயமாக இருக்கும் என்று வாத்தியாரின் முகத்தில் யோசனையின் ரேகைகள் ஓடும்... தெரிந்தும் தெரியாதவன்போல நான் அவருடைய முகத்தை 'கப்சிப்'பென்று பார்த்தபடி இருப்பேன்... நினைத்துப் பார்க்கவே எனக்குப் 'பாவமா' இருந்தது. என் அப்பாவிற்குக் கோபம் வந்தால் - கொஞ்சம் வேகமாகத்தான் வரும்.

கோபத்தில் செல்லத்துரை வாத்தியாரை அவர் என்ன வெல்லாம் கேட்டுவிடுவாரோ? தாங்கமுடியாத கோபத்தில் அப்பா வாத்தியாரை ரொம்ப மோசமாக ஏதாவது கேட்டு விட்டால் அதைக் கேட்டு செல்லத்துரை வாத்தியார் எத்தனை மனக்கஷ்டப்படுவாரோ - அந்த மனக்கஷ்டம் எனக்கும் தான்... அதற்கு அப்புறம் நான் தினசரி என் செல்லத்துரை வாத்தியாரின் முகத்தைப் பார்த்தாக வேண்டும் - வகுப்பில். அது ரொம்ப ரொம்ப கடினமான நரகமாக இருக்கும்

என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை... காரணம் - அப்படியொரு அழகான நட்பு வாத்தியாரோடு இருந்து கொண்டிருந்தது எனக்கு.

கண்டிப்பாக அந்த நட்பு சிதைந்து போய்விடும். ஆனாலும் எனக்குள்ளும் அந்தக் கேள்வி திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருந்தது. ஆசையாய் நாங்கள் வாங்கிக் கொடுத்த அழகான பம்பாய் கரை எட்டு முழ வேட்டியை ஏன் செல்லத்துரை வாத்தியார் அந்த பரமசிவம் என்பவருக்கு உடனே விற்றுவிட்டார்...?

இந்தக் கேள்விக்கான பதில் மறுநாள் சாயந்தரம் பெரிய பரீட்சையின் 'ரிசல்ட்' தெரிவதுபோலத் தெரிந்துவிட்டது! பெரிய பரீட்சையில் செல்லத்துரை வாத்தியார் பாஸ் ஆகி விட்டார்! வாத்தியார் 'பாஸ்' ஆகிவிட்ட - அந்தப் பெரிய பரீட்சையின் 'ரிசல்ட்'டை கீழே வெளியிடுகிறேன்...

மறுநாள் சாயந்தரம் செல்லத்துரை வாத்தியார் எங்கள் வீட்டுக்கு வரப்போகும் நேரம் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி வந்துகொண்டிருந்தது. வீடே ஒரு மாதிரியான நிசப்தத்தில் மூழ்கிப்போயிருந்தது. நான் ஒருவிதமான அச்சத்தில் இருந்தேன். வாத்தியார் வந்து என் அப்பாவின் கோபத்திற்குப் பதில் சொல்லப்போகிற அந்தக் காட்சியைப் பார்க்க எனக்குப் பிடிக்கவில்லை. வாத்தியார் வராமலேயே இருந்து விடட்டும் என்றுகூட நினைத்தேன். ஆனால் அப்படி வராமல் இருந்துவிட்டால் என் அப்பாவிற்கு வாத்தியாரின் மேல் இருக்கும் கோபம் இன்னும் ஜாஸ்திதான் ஆகும். நிலைமை அப்போது மேலும் மோசமாகும். அப்பாவின் கோபம் என்னையும் கொஞ்சம் பதம் பார்ப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டுவிடும். இந்தக் குழப்பத்தோடும் அச்சத்தோடும் நான் முற்றத்திலேயே நின்றுகொண்டிருந்தபோது ஹாலில் செல்லத்துரை வாத்தியாரின் குரல் கேட்டது.



''வணக்கங்க முதலாளி; என்னை வரச்சொல்லி இருந்தீங்களாம்... தம்பி சொன்னான்...''

அப்பாவிடம் இருந்து உடனே பதில் வரவில்லை. இது கோபத்தின் அடையாளம். கோபமாக இருக்கும்போது சட்டென்று அப்பாவிடம் இருந்து பதில் வராது. அப்பாவிடம் இருந்து பதில் வராததைப் பார்த்ததும் செல்லத்துரை வாத்தியார் பயந்துவிட்டார் போலிருந்தது.

''முதலாளியைப் பாத்தா - என் மேல ஏதோ கோவமா இருக்குற மாதிரி தெரியுது...'' - வாத்தியாரின் குரல் சிறிது தாழ்ந்து பலவீனமாக ஒலித்தது. சுவரில் அடித்த பந்து திருப்பி வந்தாற்போல - உடனே என் அப்பாவிடம் இருந்து பதில் கேட்டது...

''நீ பண்ணியிருக்குற வேலையைப் பாத்தா கோவம் வராம ஒருத்தருக்கு சிரிப்பா வரும்... கேக்குறியே நீயும் தைரியமா...''

''புரியலையே முதலாளி - என் மேல உங்களுக்கு என்ன கோவம்னு... எனக்குத் தெரிஞ்சி எந்தத் தப்பும் செய்யலையே நான்...'' நிஜமாகவே வாத்தியாரின் குரல் புரியாதவரின் பரிதாபக் குரலாகத்தான் இருந்தது.

''தப்பே செய்யலையா? நீயா? ஏதாவது சொல்லிடப் போறேன் - செல்லத்துரை... ஆசை ஆசையா தீபாவளிக்கு நாங்க வாங்கிக் குடுத்த வேட்டியைப்போய் அந்தப் பரம சிவம்கிட்ட ஆறணா குறைச்சி வித்துப்புட்டியாமே... அது தப்பா - தப்பு இல்லையா? நீயே சொல்லு... அது நியாயமா அநியாயமா நீயே சொல்லு...''

அப்பா இப்படிக் கேட்கக் கேட்க முற்றத்தில் நின்று இதைக் கேட்டுக்கொண்டிருந்த என் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. அப்பா கேட்டதுக்கு செல்லத்துரை

வாத்தியாரிடம் இருந்து உடனே பதில் இல்லை. நான் மெதுவாக நகர்ந்துபோய் திரையைக் கொஞ்சமாக விலக்கிப் பார்த்தேன். என் அப்பா இரண்டு கைகளையும் பின்னால் கட்டியபடி நிற்க, வாத்தியார் அவரின் இரண்டு கைகளையும் நெஞ்சில் கட்டியவாறு சிறிது குனிந்தவாறு நின்றுகொண்டிருந்தார். எனக்கு அந்தக் காட்சியைப் பார்க்கவே பிடிக்கவில்லை. செல்லத்துரை வாத்தியார் ஏதோ தப்பு செய்த மாணவன் போலவும், அவரைத் தண்டிக்கத் தயாராக பெரிய வாத்தியார் போல என் அப்பாவும் நின்றுகொண்டிருந்தார்கள்.

''பதில் சொல்லு செல்லத்துரை... நீ செஞ்சிருக்கிற இந்த வேலை சரியா தப்பா...?'' - அப்பா திருப்பியும் கேட்டார்.

''தப்புத்தாங்க முதலாளி...'' செல்லத்துரை வாத்தியார் ரொம்பவும் சின்னக் குரலில் ஒப்புக்கொண்டார். அவரின் தலை குனிந்துவிட்டது.

''தப்புத்தானே... இந்தத் தப்பைப் பாத்துட்டு எனக்கு எப்படி கோவம் வராம இருக்கும் சொல்லு... இந்தத் தப்பை எப்படி என்னால மன்னிக்க முடியும்னும் சொல்லு... நெனைச்சா எனக்கு அவமானமாவே இருக்கு... மெனக்கெட்டு நானே போய் தர்மராஜன் செட்டியார் கடையில இருக்கறதுலேயே நயமான வேட்டியா பாத்து வாங்கிட்டு வந்து குடுத்திருக்கேன். அதைப் போய் இப்படி உடனே பரமசிவத்துக்கு வித்துட்டியே...'' - கேட்டபோதே என் அப்பாவுக்கு மூச்சு வாங்கியது...

''என்னைப் பெரிய மனசு வச்சி மன்னிச்சிடுங்க முதலாளி...'' - வாத்தியார் என் அப்பாவிடம் கெஞ்சினார்.

''பள்ளிக்கூடத்தில பையன்களுக்கு படிப்புச் சொல்லித் தர்ற உன்னை மாதிரியான ஒரு வாத்தியாரை நான் எப்படி மன்னிக்கிறது - சொல்லு...''



''வாத்தியாரை நீங்க மன்னிக்க வேண்டாம் முதலாளி... இந்த ஏழையை நீங்க மன்னிக்கலாம்.''

காலம் ஓர் நிமிடம் ஸ்தம்பித்தது. அப்பா விட்டுக் கொடுக்கவில்லை. ''தப்புச் செஞ்சவன் ஏழையா பணக்காரனான்னு பாக்குறதில்லை நான்... தப்பை மன்னிக்கிறதும் இல்லை...''

இப்போது செல்லத்துரை வாத்தியாரும் விடவில்லை. ''ஏன் அந்தத் தப்பை நான் செஞ்சேன்னு இப்பச் சொல்லிடறேன் முதலாளி. அதைக் கேட்டுட்டு - அப்பறமும் நான் செஞ்சது தப்புத்தான்னு உங்களுக்குப் பட்டதுன்னா - அப்ப நீங்க எனக்கு என்ன தண்டனை குடுத்தாலும் நான் அதை என் மனப்பூர்வமா ஏத்துக்கறேன்...''

மீண்டும் சில விநாடிகள் காலம் நிசப்தமாக இருந்தது. பின் செல்லத்துரை வாத்தியார் என் அப்பா வாங்கித் தந்த ஒரு ஜோடி பம்பாய் வேட்டியையும் பரமசிவத்திற்கு ஆறணா குறைவாக விற்று விட்டதற்கான முழு காரணத்தையும் எதையும் ஒளிக்காமல் அப்படியே சொன்னார். - அதை நான் அப்படியே என்னுடைய கதை மொழியில் சொல்கிறேன்.

செல்லத்துரை வாத்தியாரின் மனைவி எப்போதுமே ஏதாவது ஒரு வியாதியால் அவதிப்பட்டுக் கொண்டிருப்பவர் என்பதை ஏற்கனவே கூறி இருந்தேன். அவருக்குக் கடந்த இரண்டு மாதங்களாக வியாதியின் கடுமை அதிகமாகி அதனால் வாத்தியாருக்கு ஏகப்பட்ட செலவாகிவிட்டது. கொஞ்சம் கொஞ்சமாக வெளியில் நிறையக் கடன்கூட ஏற்பட்டுவிட்டது. இந்த இக்கட்டான நிலைமையில்தான் ஊர் உலகமெல்லாம் தீபாவளி. வாத்தியாரின் வீட்டில் யாருக்குமே தீபாவளிக்கு துணியோ, வேறு எதுவோ - வாங்கிக்கொள்ள சல்லிக்காசு கிடையாது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாங்கள் வாங்கித் தந்த விலை உயர்ந்த நயம் பம்பாய் மில் எட்டு முழ வேட்டி ஒரு

ஜோடி கிடைத்ததில் செல்லத்துரை வாத்தியாருக்கு அளவற்ற சந்தோஷம்தான். ரொம்பப் பெரிய புளகாங்கிதம்தான். ஆனால் வீட்டில் வேறு ஒருத்தருக்கும் தீபாவளிக்கு புதுத்துணி வாங்கிக்கொள்ள முடியாமல் இருந்தபோது தான் மட்டும் எப்படி புத்தம் புதிய வேட்டியைக் கட்டிக்கொள்வதென்ற வேதனையும் சங்கடமும் வாத்தியாருக்கு.

அதற்கும் மேல், பெரும் பணக்காரர்கள் மட்டுமே கட்டிக் கொள்கிற விலை உசத்தியான நயம் பம்பாய் வேட்டியைக் கட்டிக்கொண்டு நிற்க செல்லத்துரை வாத்தியாரின் மனதிற்கே ரொம்பக் கூச்சமாக இருந்தது. அது மட்டுமில்லாமல் இவ்வளவு விலை உயர்ந்த வேட்டியை தினசரி உபயோகத்திற்குப் பயன்படுத்தி பள்ளிக்கூடத்திற்கும் கட்டிக்கொண்டு போக முடியாது. பள்ளிக்கூடத்திற்குக் கட்டிக் கொண்டு போகும் அன்றாட உபயோகத்திற்கு வாத்தியாரிடம் அப்போது நான்கே நான்கு புளியங்குடி நான்கு முழ கைத்தறி வேட்டிகள்தான் இருந்தன. அதனால் அவருக்கு உடனடியாகத் தேவையாக இருந்தது - அந்த மாதிரியான ரொம்ப சாதாரண கைத்தறி வேட்டிகள்தான்...

இவை எல்லாவற்றையும் செல்லத்துரை வாத்தியார் அவரின் மனத்தராசில் நன்றாக எடைபோட்டுப் பார்த்து விட்டுத்தான் நாங்கள் வாங்கித் தந்த ஒரு ஜோடி பம்பாய் வேட்டியையும் பரமசிவத்திற்கு அதன் விலையில் ஆறணாவைக் குறைத்து, ஒன்பது ரூபாய் பத்து அணாவிற்கு விற்றுவிட்டார். அந்த ரூபாயில் வாத்தியார் அவருக்கு கைத்தறி நான்கு முழ வேட்டி ஒரு ஜோடியும், அவருடைய நான்கு குழந்தைகளுக்கும் ஒவ்வொரு புது உடைகளும் தீபாவளிக்காக வாங்கிக்கொண்டார். ஆனால் செல்லத்துரை வாத்தியார் அவருடைய சம்சாரத்திற்கோ, அவருடைய அப்பாவிற்கோ, அவருடைய தம்பிக்கோ புதுத்துணி வாங்கிக்கொள்ள வில்லை. அதற்கான ரூபாய் எதுவும் அவரிடம் இல்லை.



இதுதான் விஷயம். இதில் வாத்தியாரின் தப்பு என்று ஏதாவது இருந்தால் என் அப்பா அவருக்கு எந்தத் தண்டனை வேண்டுமானாலும் தரலாம். செல்லத்துரை வாத்தியார் அதை முழு மனதோடு ஏற்றுக்கொள்வார்...

நாங்கள் யாருமே எதிர்பாராத இந்த மாதிரியான ஒரு கோணத்தில் தன்னுடைய 'தப்பு' பற்றிய விளக்கத்தை செல்லத்துரை வாத்தியார் சொல்லி முடித்தபோது எங்களுடைய வீடு நிசப்தத்தில் உறைந்துவிட்டது. திரை மறைவில் நின்று எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த என் மனதிற்கு என்னமோபோல இருந்தது. அழுகை வரும் போல இருந்தது. லேசாகத் திரையை விலக்கிப் பார்த்தேன். வாத்தியார் இரண்டு கைகளையும் மார்பில் கட்டியபடி ரொம்பப் பணிவாக நின்றுகொண்டிருந்தார். என் அப்பாவோ திகைத்துப்போய் வாத்தியாரையே பார்த்துக்கொண்டிருந்தார். அப்பாவின் அந்த மிகப் பெரிய கண்கள்கூட லேசாகச் சிவந்து போயிருந்தன. சில நிமிடங்கள் கழித்து அப்பா மிருதுவான குரலில் கூப்பிட்டார் : ''செல்லத்துரை...''

''சொல்லுங்க முதலாளி...''

''கொஞ்சம் என் பின்னாடி வா...''

''எங்கே முதலாளி...''

''நம்ம தர்மராஜன் செட்டியார் ஜவுளிக் கடையில போய் உனக்குத் தினசரி பள்ளிக்கூடத்துக்குக் கட்டிட்டுப் போகிற மாதிரி ரெண்டு ஜோடி கைத்தறி வேட்டியும், அப்படியே உன் சம்சாரம், உன் அப்பா, உன் தம்பி - எல்லாருக்கும் ஆளுக்கு ரெண்டு ரெண்டு புதுத்துணியும் நல்லதா பாத்து வாங்கிட்டு வந்திரலாம்...''

''அய்யய்யோ - அதெல்லாம் வேண்டாங்க முதலாளி...'' செல்லத்துரை வாத்தியார் வெட்கத்தோடும் அவசரத்தோடும் மறுத்தார்...

''அட; வான்று சொன்னா - வந்திரனும்...'' - என்று என் அப்பா சிறிது நிஜமான அதட்டலோடும் உரிமையோடும் சொல்ல, வாத்தியாரால் மறுக்க முடியவில்லை. சந்தோஷத்தின் பூரிப்பு முகத்தில் பளிச்சென்று தெரிய செல்லத்துரை வாத்தியார் தர்மராஜன் செட்டியாரின் ஜவுளிக் கடையை நோக்கி மெள்ள என் அப்பாவுடன் நடக்கலானார். அத்தனை நேரமும் திரையின் பின்னாடியே நின்றுகொண்டிருந்த நான் வேகமாக வீட்டின் வாசலுக்கு ஓடிப்போய் என் அப்பாவும் செல்லத்துரை வாத்தியாரும் ஒன்றாக நடந்து போகிற காட்சியை ஆசையோடு பார்த்தேன். வாத்தியார் செய்த 'தப்பு'ம், அதற்கு என் அப்பா அவருக்குக் கொடுத்த 'தண்டனை'யும் என் மனதுக்கு ரொம்ப இதமாக இருந்தது. அவர்கள் இருவருமே அடிப்படையில் அருமையான மனிதர்கள்தான்.

என் அப்பா என்ற அருமையான மனிதர் இறந்து எட்டு வருடங்களுக்கு மேலாகிவிட்டது. செல்லத்துரை வாத்தியார் என்ற அருமையான மனிதர் - இதோ; இப்போது இறந்து போயிருக்கிறார். அதைப் பற்றி பழக்கடை தர்மர் எழுதி இருக்கும் கடிதத்தை எடுத்து மறுபடியும் படித்துப் பார்த்தேன். வாத்தியார் பற்றிய ஞாபகங்கள் மீண்டும் மீண்டும் என் மனதில் தோன்றிக்கொண்டே இருந்தன. புதிய 'பம்பாய் கரை' எட்டு முழ வேட்டி ஒன்றை மானசீகமாக செல்லத்துரை வாத்தியாரின் சடலத்தின் மேல் போர்த்தி அவருக்கு என்னுடைய அஞ்சலியைச் செலுத்தினேன்...

★

# 8. ரத்னவேல் பாண்டியனும் மாரீஸ்வரனும்

என் தாத்தா ரத்னவேல் பாண்டியனின் வெள்ளைக்கார மோகம் பற்றி கதைபோல கொஞ்சம் சொல்லி இருந்தேன். இப்போது அவருடைய மற்றொரு மோசமான குணம் பற்றியும் அதன் தொடர்பில் இன்றுவரை எனக்குள் ஆறாமல் இருக்கும் ஒரு காயத்தைப் பற்றியும் கதைபோலவே சொல்கிறேன். ரொம்பச் சுருக்கமாக ஒரு விஷயத்தை முதலில் குறிப்பிட்டு விடுகிறேன்.

என் தாத்தா ரத்னவேல் பாண்டியனுக்கு பணச்செருக்கு ரொம்ப ரொம்ப ஜாஸ்தி. அவரைவிட பணவசதி குறைந்தவர்கள் யாராக இருந்தாலும் சரி அவர்களை நிமிர்ந்தும் பார்க்கமாட்டார். தப்பித்தவறி திரும்பியும் பார்க்கமாட்டார். எதிர்பாராமல் தெருவில் நேருக்கு நேராக வந்துவிட்டால் கூட முன்பின் தெரியாதவர் போலப் போவார்.

அதையும் மீறி எதிரில் வந்த வசதி குறைவான சொந்தக்காரர் ''கும்பிடறேன் மச்சான்'' என்று நின்று பயபக்தியுடன் அவரிடம் பேசிவிட்டால் ''அடடா - வெயிலு முத்துவா? யாரோன்னு பாத்தேன். கண் பார்வை ரொம்ப மோசமா போயிருச்சி வெயிலு - கண்ணே தெரியமாட்டேங்குது. வரட்டா?'' என்றபடி மேடு பள்ளம் தெரியாமல் ஒரு சின்னக் கல் தடுக்கினால்கூட விழுந்துவிடப் போகிறவர் மாதிரி குருட்டு பாவனையை காட்டியபடி கைகளால் காற்றைத் தடவித் தடவிப் போய்க்கொண்டிருப்பார்.

எதனால் என்று தெரியுமா? அந்த வெயிலுமுத்து என்பவருக்கு சென்ற இரண்டு மூன்று மாதங்களில் துவரை வியாபாரத்திலும் சீரக வியாபாரத்திலும் அநியாய நஷ்டம்

ஏற்பட்டுக் கையைக் கடித்து விட்டது. நஷ்டத்தில் வண்டியை ஓட்டிக் கொண்டிருக்கும் வெயிலுமுத்துவை அடையாளம் தெரிந்து பேசிவிட்டால் ரொம்பப் பெரிய பணவசதிக்காரரான ரத்னவேல் பாண்டியனின் அந்தஸ்தும் கௌரவமும் என்ன ஆவது?

இந்த ரத்னவேல் பாண்டியன் என்ற என் தாத்தாவிடம் தான் ஏழாவது வகுப்பில் என்னுடன் படித்துக்கொண்டிருந்த என் நெருங்கிய சிநேகிதனான மாரீஸ்வரன் சம்பளம் வாங்குகிற சாதாரண வேலைக்காரனாகச் சேர்ந்து வேலை பார்க்கும் சூழ்நிலை திடீரென்று ஏற்பட்டுவிட்டது. அப்போது எனக்கும் மாரீஸ்வரனுக்கும் பன்னிரெண்டு வயசு. தொடர்ந்து மூன்று வருடங்களாகப் பள்ளிக்கூடத்தில் என் வகுப்புக்காரனாக என்னுடனேயே சேர்ந்து படித்துக்கொண்டிருந்த மாரீஸ்வரன் என்னுடைய தெருக்காரனும்கூட. எங்கள் வீட்டிற்கு ஏழு வீடு தள்ளிதான் அவனுடைய வீடும்.

தெருப்பையன்களில் எனக்கு ரொம்பப் பிடித்த சிநேகிதன் மாரீஸ்வரன். பூ மாதிரி மனசு அவனுக்கு. மாரீஸ்வரனுக்குக் கோபம் வந்து நான் பார்த்ததே கிடையாது. அவ்வளவு நல்ல பையன். என்னை மாதிரி மிகவும் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன் இல்லாவிட்டாலும் மாரீஸ்வரன் ஏழைப் பையன் இல்லை. அவனுடைய அப்பா சின்ன முதலீட்டில் வேப்ப எண்ணெய் ஆட்டுகிற வியாபாரம் பண்ணிக்கொண்டிருந்தார். எங்கள் தெருவில் சொந்தமாக சின்னதாய் வீடும் அவருக்கு இருந்தது. ஆனாலும் என்ன?

என் தாத்தாவின் சொத்து சுகம் ஒரு மலை என்றால் மாரீஸ்வரனின் அப்பாவின் சொத்து சுகம் ஒரு மடு. எனக்கு மலையும் ஒன்றுதான் மடுவும் ஒன்றுதான். ஆனால் ரத்னவேல் பாண்டியனாருக்கு? மலை மட்டும்தான் பளிச்சென்று தெரியும். மடு அவரின் கண்ணுக்குத் தெரியவே தெரியாது.



அப்படியொரு சாளேஸ்வரம்! - இந்த சாளேஸ்வரக்காரரிடம் என் சிநேகிதன் மாரீஸ்வரன் எப்படிச் சம்பளம் வாங்குகிற வேலைக்காரனாகச் சேர்ந்தான்? - சொல்கிறேன்.

ஒருநாள் வகுப்பில் பூகோள பாடம் நடந்துகொண்டிருந்தபோது மாரீஸ்வரனின் மாமா வேர்க்க விறுவிறுக்க ஓடி வந்தார். மாரீஸ்வரனின் அப்பா திடீரென்று நெஞ்சுவலி வந்து செத்துப்போய்விட்டதாகச் சொல்லி மாரீஸ்வரனை கையோடு கூட்டிக்கொண்டு போய்விட்டார். அதற்குப் பிறகு மாரீஸ்வரன் பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை. படிப்புப் போதும் என்று அவனுடைய வீட்டார் அவனை நிறுத்தி விட்டார்கள்.

அந்தக் காலத்தில் எங்கள் ஊராகிய சிகரக்கோட்டையின் வழக்கம் இது. சம்பாரித்துக் கொண்டிருக்கும் குடும்பத் தலைவர் செத்துப்போய்விட்டால் அந்தக் குடும்பத்தின் மூத்த பையனை அவன் நான்காவது ஐந்தாவது படித்துக் கொண்டிருந்தால்கூட உடனே பள்ளிக்கூடம் போவதை நிறுத்தி விடுவார்கள். யார் மூலமாவது பெரிய 'முதலாளிமார்'களின் வியாபாரம் நடக்கின்ற கடைகளில் அந்தப் பையனை வியாபார ஜோலிகளைத் தெரிந்து கொள்ளட்டும் என்று சேர்த்துவிடுவார்கள்.

அப்படிச் சேர்த்து விடப்படும் பையன்கள் பத்துப் பன்னிரெண்டு வருஷம் அங்கே உழைத்து வியாபாரத்தின் எல்லா நெளிவு சுளிவுகளையும் தெரிந்துகொண்டு, பின் அந்தக் கடையில் இருந்து விலகிச் சின்னதாய் சொந்த வியாபாரம் ஆரம்பித்து ராத்திரி பகலாய்க் கஷ்டப்பட்டு வாழ்க்கையில் முன்னுக்கு வந்துவிடுவார்கள்.

இந்த 'ஐடியா'வுடன் மாரீஸ்வரனையும் அவனுடைய அப்பா செத்துப்போனதும் அந்த முதலாளிமார் கடை, இந்த முதலாளிமார் கடையென்று ஏழெட்டு கடைகள் ஏறி

இறங்கி கடைசியில் என் தாத்தாவின் கடை ஒன்றில் அவனின் மாமன்கள் சேர்த்துவிட்டார்கள். இந்த விஷயத்தை முதலில் என்னிடம் சொன்னதே என் தாத்தாதான். ''டேய் முருகேச பாண்டியா! ஒன் சிநேகிதக்காரன் மாரீஸ்வரன் நம்ம கடையில சம்பளகாரனா வந்து சேந்திருக்கான்டோய்!'' என்றார். கையில் பற்றி இருந்த காற்றாடியின் இறுக்கமான நூல் பட்டென்று அறுந்துகொண்டாற்போல பகீர் என்றிருந்தது எனக்கு.

இதைச் சொன்னபோது தாத்தாவின் குரலில் இருந்த இளக்காரத் தொனி எனக்கு ரொம்பத் தெரிந்த தொனிதான். ஆனாலும் அன்றைய தொனி என்னுடைய நெஞ்சில் அறை யாக விழுந்தது. மாரீஸ்வரனைப்போல பூ மாதிரியான மனசு உள்ளவன் என் தாத்தாவின் கடையில் மனசு காயப்படாமல் வேலை பார்ப்பது என்பது முடியவே முடியாத விஷயம். என் தாத்தா அவருடைய கடையில் சம்பளம் வாங்குபவர்களை கால் தூசிக்குக்கூட மதிக்கமாட்டார். ஒரு நாயைப்போல நடத்துவார். அடிமை போல வைத்திருப்பார். அதனால் - மாரீஸ்வரன் எங்கள் தாத்தா கடையில் சேர்ந்திருக்கிறான் என்பது தெரிந்ததும் எனக்கு ரொம்ப மனவேதனையாக இருந்தது.

ஏற்கனவே பள்ளிக்கூட வகுப்பில் அவனுடைய அருகாமையை இழந்திருப்பதில் ஏற்பட்டிருந்த தனிமை உணர்வு எனக்குள் மேலும் பல மடங்கு கனமாகிவிட்டது. தாத்தாவின் கடையில் அவன் சேர்ந்துவிட்டது என் இழப்புணர்வையும் எனக்கே புரியாத கோணத்தில் அதிகப் படுத்திவிட்டது. கடைக்குப் போய் அந்தச் சூழ்நிலையில் மாரீஸ்வரன் எப்படி இருக்கிறான் என்பதைப் பார்க்க வேண்டும் போலவும் இருந்தது. போய்ப் பார்ப்பதற்கு கொஞ்சம் பயமாகவும் இருந்தது.



மாரீஸ்வரன் எங்கள் கடையில் சேர்ந்த மூன்றாவது நாள் என்று நினைக்கிறேன். அன்று மகாத்மா காந்தியின் பிறந்த நாள். அதனால் பள்ளிக்கூடம் லீவ். காலை மணி பதினொன்று இருக்கும். எங்கள் வீட்டில் இருக்கும் என் வயதுப் பையன்கள் எல்லாரும் தாத்தாவின் கடைக்குக் கிளம்பினார்கள். எங்கள் ஊரில் பெரிய முதலாளிமார்கள் வீட்டுப் பேரப்பிள்ளைகள் பள்ளிக்கூடம் இல்லாத நாள் ஒன்றில் திடீரென்று கடைக்குக் கிளம்பிப்போய் கொஞ்ச நேரம் சின்னதாக ஓர் ஆட்டம் போட்டுவிட்டு வருவது வழக்கம். அப்படி ஆட்டம் போடுகின்ற பேரப்பிள்ளைகளின் கண்களில் 'இது எங்க தாத்தா கடை' என்ற செருக்கு கண்களில் மின்னிக்கொண்டிருக்கும்.

கொஞ்ச நேரத்திற்கு பேரப்பிள்ளைகள் கடையில் மேலேயும் கீழேயும் சிறிது பயத்தோடும் சிறிது பயம் இல்லாமலும் ஓடிக்கொண்டிருப்பார்கள். கடையில் வேலை பார்க்கும் ஆட்களெல்லாம் பேரப்பிள்ளைகளிடம் தணிந்த குரலில் அன்பு சொட்டச் சொட்டப் பேசிக்கொண்டிருப்பார்கள்.

என் தாத்தா கடையும் இதற்கு விதிவிலக்கு இல்லை. பேரன்களாகிய நாங்கள் ஓர் ஏழெட்டுப் பேர் கடையில் குறுக்கும் நெடுக்கும் ஓடிக்கொண்டிருப்போம். அதிசயமாக அந்த நேரத்தில் தாத்தா எரிச்சல் படாமல் பெரிய இலவம் பஞ்சுத் திண்டில் சாய்ந்தபடி ரசித்துப் பார்த்துக்கொண் டிருப்பார். ஏன் தெரியுமா? அன்னாரின் அருமைப் பேரப் பிள்ளைகள் அவருடைய கடைக்கு வந்திருக்கிறார்களாம்...!

எங்களுடைய இந்த தாத்தா கடை 'விஜயம்' சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கு நீடிக்கும். அதற்கு மேல் இருந்தால் தாத்தாவுக்கும் எரிச்சல் வரத் தொடங்கிவிடும். அதனால் ''ஆட்டம் போட்டதெல்லாம் போதும்டா; திங்கறதைத் தின்னுட்டு ஓடுங்க வீட்டுக்கு'' என்று விரட்ட ஆரம்பித்து

விடுவார். அடுத்த நிமிஷம் 'கடை ஆள்' ஒருத்தருக்கு உத்தரவு பறக்கும். அந்த உத்தரவின்படி கடை ஆள் ஒரு பையை எடுத்துக்கொண்டு பெரிய முதலாளியின் பேரப்பிள்ளைகள் தின்று தீர்க்க போத்தி ஐயரின் கடைக்கு மைசூர் போண்டாக்களும் பஜ்ஜிகளும் வடைகளும் வாங்கி எடுத்து வர ஓர் ஓட்டம் ஓடும்.

போண்டாக்களும் எண்ணெய் மினுக்கும் கத்தரிக்கா பஜ்ஜிகளும் சுடச்சுட வாழை இலையில் கட்டப்பட்டு வரும். இன்னொரு வாழை இலையில் பெரிய முதலாளி வீட்டுப் பேரன்கள் என்பதற்காக விசேஷமான 'கட்டிச் சட்னி' நிறைய வைத்துக் கொடுத்து அனுப்பி இருப்பார் போத்தி ஐயர். எல்லாவற்றையும் 'மொக்கி'த் தள்ளுவோம் நாங்கள்! பின் மகேஸ்வரி ஐஸ் கடையில் இருந்து பெரிய கண்ணாடி தம்ளர்களில் ஐஸ் போட்ட நன்னாரி சர்பத் தளும்பத் தளும்ப வரும். மகேஸ்வரி சர்பத்தான் மங்களம்! நன்னாரி வேர் வாசனையடிக்கிற ஏப்பமாக விட்டபடி வீடு திரும்புவோம்.

அந்த காந்தி பிறந்த நாள் அன்றைக்கும் இதே அட்டவணைதான். ஆனால் எனக்குத்தான் கடைக்குப் போகவே மனசில்லை. இருந்தாலும் என் சிநேகிதன் மாரீஸ்வரனை பார்க்கலாமேயென்று தாத்தா கடைக்குப் போனேன். தூரத்தில் இருந்தே பார்த்துவிட்டேன். மாரீஸ்வரன் கடையின் ஒரு கோடியில் உட்கார வைக்கப்பட்டிருந்தான். பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த வரை அரைக்கால்சட்டை அணிந்து வந்தவன் நாலுமுழ வேட்டியைக் கட்டிக்கொண்டிருந்தான்.

அது சிகரக்கோட்டை பஜார் பெருமக்களின் எழுதப்படாத விதி. ஓர் ஆம்பளைப் பையன் கடைக்குப் போய் விட்டால் பத்து வயசே இருந்தாலும்கூட அவன் வேட்டிதான் கட்டியாக வேண்டும். மாரீஸ்வரனைப் பார்க்கப் பார்க்க



மனசே ஆறவில்லை எனக்கு. தெருவில் ஆட்டம் போட அவனைக் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு ஓடி விடலாம் போல இருந்தது.

மாரீஸ்வரனைப் பார்க்கவே பாவமாக இருந்தது. என்னைப் பார்த்து லேசாகச் சிரித்தான் - ஆனால் யாருக்கும் தெரியாமல். அதனால் எனக்குச் சிரிப்புக்கூட வரவில்லை. - இந்த இடத்தில் என் தாத்தா அவருடைய சொரூபத்தைக் காட்டினார். ''டேய் முருகேசா - பாத்தியா ஒன் சிநேகிதாரனை... ஒன்கிட்டேயே வேலைக்கு வந்திட்டான் பாரு...'' என்று நக்கலாகச் சொன்னார். என் மனம் விம்மியது. மாரீஸ்வரன் என்னிடம் வேலை பார்க்கவா வந்திருக்கிறான்? தாத்தாவின் பித்தலாட்டப் பேச்சைக் கேட்டு என் மனசு பொருமியது. மனசை அதைவிட அதிகம் பொரும வைத்த விஷயம் - தாத்தா வேண்டும் என்றே மாரீஸ்வரனை போத்தி ஐயர் கடைக்கு விரட்டி எங்களுக்கெல்லாம் போண்டாவும் பஜ்ஜியும் வாங்கிவரச் சொன்னதுதான்.

பாவம்; போண்டாவுக்கு ஒரு தரம், பஜ்ஜிக்கு ஒரு தரம் என்று மாரீஸ்வரன் ஓடிவிட்டு ஓடிவிட்டு வந்தான். அவன் என்னமோ ஆசை ஆசையாகத்தான் வாங்கி வந்தான் - சிரித்த முகத்துடன். எனக்குத்தான் ஆதங்கமாகவும் ஆற்றாமையாகவும் இருந்தது. பள்ளிக்கூட வகுப்பிலும் சரி; தெருவில் விளையாடிக் கொண்டிருக்கும்போதும் சரி; என்னிடம் தின்பதற்கு என்ன இருக்கிறதோ அதை மாரீஸ்வரனுக்கும் கொடுக்காமல் நான் தின்றதில்லை. அவனும் அதே மாதிரிதான். என்னிடம் இருக்கும் சாக்லெட்டைக் கடித்து அவனுக்குக் கொடுப்பேன். மாரீஸ்வரன் அவனிடம் இருக்கின்ற சில்லுக் கருப்பட்டியில் பாதியை எனக்குத் தருவான். அந்த மாதிரி இருந்திருக்கிறோம் நாங்கள்.

அன்றைக்கு; அதுவும் மகாத்மா காந்தி பிறந்த நாள் அன்று மாரீஸ்வரன் வேலைக்காரன்போல ஓடிப்போய்

போண்டாவும் பஜ்ஜியும் வாங்கி வந்து கொடுக்கிறான். நான் அதில் கொஞ்சம் கூட அவனுக்குக் கொடுக்கமுடியாத சூழ்நிலையில் இருக்கிறேன். மற்றவர்களுக்கு எப்படியோ - அந்தச் சூழ்நிலையில் எனக்கு போண்டாவும் பஜ்ஜியும் ஒரு துண்டுகூட தொண்டைக்குள் போகவில்லை.

என் சிநேகிதனைப் பார்க்க வைத்து நான் மட்டும் எப்படித் தின்பேன்? சர்பத் வாங்கி வரவும் மாரீஸ்வரன்தான் நான்கு தடவைக்கு மேல் போய் வர வேண்டியதாயிற்று. நல்லவேளை - ஜலதோஷமாக இருப்பதால் எனக்கு சர்பத் வேண்டாமென்று முதலிலேயே சொல்லி விட்டேன். அதனால் என் உயிர் சிநேகிதனைப் பார்க்க வைத்து சர்பத்தும் குடித்த பாவமும் எனக்கு வரவில்லை.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து வந்த ஞாயிற்றுக் கிழமை நானும் மாரீஸ்வரனும் எங்கள் தெருவில் ஆசை ஆசையாகச் சந்தித்துக்கொண்டோம். இந்தச் சந்திப்பு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நடந்தது. ஒவ்வொரு சந்திப்பிலும் எப்போதும்போல 'கள்ளன் - போலீஸ்', நொண்டி, கிட்டி, 'சடுகுடு' என்று எல்லா விளையாட்டையும் தெருப்பையன்களோடு சேர்ந்து நானும் மாரீஸ்வரனும் விளையாடினோம்.

சில சமயங்களில் இந்த ஞாயிற்றுக்கிழமைச் சந்திப்புகளில் மாரீஸ்வரன் அவன் இழந்துவிட்ட பள்ளிக்கூட வாழ்க்கையைப் பற்றி என்னிடம் ஆர்வத்துடன் கேட்டுத் தெரிந்துகொள்வான். அதே மாதிரி சில சமயங்களில் கடையில் அவன் பார்க்கின்ற வேலைகள் பற்றியெல்லாம் சொல்ல ஆரம்பிப்பான். சொல்ல வேண்டாம் என்று நான் மாரீஸ்வரனைத் தடுத்துவிடுவேன். மாரீஸ்வரனும் லேசாகச் சிரித்துவிட்டுப் பேசாமல் இருந்துவிடுவான்.

இப்படி எங்கள் தாத்தா கடையில் வேலைக்குச் சேர்ந்த பிறகும் அவனுக்கும் எனக்கும் இடையில் இருந்து வந்த



சிநேகிதம் எந்தவிதத்திலும் சேதப்பட்டுவிடாமல் நீடித்துக் கொண்டிருந்தபோது ஒருநாள் - எங்கள் தாத்தாவிடம் மொத்தமாகக் கடலை எண்ணெய், நல்ல எண்ணெய், துவரம் பருப்பு, உளுந்தம் பருப்புப் போன்றவற்றை வாங்கி மலையாளத்தில் விற்று நிறையப் பணம் சம்பாரித்துக்கொண்டிருந்த 'பிச்சைக் கனி அண்ணாச்சி'யின் வீட்டில் ஒரு கல்யாணம் வந்தது. கல்யாணத்திற்கு எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களை மட்டும் இல்லாமல் எங்கள் கடைகளில் வேலை பார்க்கின்ற அத்தனை பேரையும் பிச்சைக்கனி அண்ணாச்சி கூப்பிட்டிருந்தார். அதனால் எங்கள் கடை ஆட்கள் எல்லாருமே - மாரீஸ்வரன் உட்பட கல்யாணத்திற்கு வந்துவிட்டார்கள்.

கல்யாணத்திற்கு முந்தின நாள் ராத்திரி ஏழு மணி அளவில் 'பரிசம்' போடுவதாக இருந்தார்கள். நான் சாயங்காலம் ஐந்தரை மணிக்கே என் அப்பா அம்மாவோடு போய் விட்டேன். எப்போதும் போல கால்சட்டை போடாமல் நான் புது பட்டு வேட்டி கட்டி அதற்கேற்ற மாதிரி அந்த வருஷம் பங்குனிப் பொங்கலுக்குத் தைத்த பட்டுச் சட்டையும் போட்டுப் போயிருந்தேன்.

கொஞ்சம் பெரிய இடத்துக் கல்யாணம். அதனால் என் அம்மா என்னுடைய கையில் தங்க வாட்ச், என் சட்டையில் தங்கப் பித்தான்கள், காதுகளுக்கு தங்கக் கடுக்கன்கள், கழுத்தில் டாலர் வைத்த பெரிய தங்கச் சங்கிலி எல்லாம் போட்டு விட்டிருந்தாள். கல்யாண வீட்டுக்குப் போனதும் எனக்கு ஏற்பட்ட பெரிய சந்தோஷம் - நான் போன சிறிது நேரத்தில் அங்கு மாரீஸ்வரனும் வந்ததுதான்.

இன்னொரு பெரிய சந்தோஷம் - அவனும் என்னைப் போலவே டிரஸ் பண்ணிக்கொண்டு வந்திருந்தான். கொஞ்சம் பழசாகிப் போன பட்டு வேட்டியும் பட்டுச் சட்டையும் அணிந்திருந்தான். கழுத்தில் மெல்லிய தங்கச் செயின் போட்டு அதே மாதிரி அவனுடைய அப்பாவின் தங்கப்

பித்தான்களையும் பழைய வாட்ச் ஒன்றையும் கட்டியிருந் தான். நானும் அவனும் குதூகலமாக ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு கல்யாணப் பந்தலை சுற்றிச் சுற்றி வந்தோம். பழையபடி நானும் அவனும் சுதந்திரமாக பள்ளிக் கூட காம்பவுண்டுக்குள் இருப்பது போன்ற உணர்வை அடைந்தோம். - பின் நுழைவாசலை ஒட்டி வாசலை எதிர்நோக்கிப் போடப்பட்டிருந்த நீள பெஞ்சில் உட்கார்ந்து இரண்டு பேரும் கதை பேசிக்கொண்டிருந்தோம்.

அப்போது பந்தலுக்கு வெளியில் எங்கள் வீட்டு ப்யூக் கார் வந்து நின்றது. கார் கதவை ஓடிப்போய் பிச்சைக்கனி அண்ணாச்சி திறந்து விட்டு பயபக்தியோடு வணங்க தாத்தா இறங்கினார். தாத்தாவும் பட்டு வேட்டியில் கட்டிய பஞ்ச கச்சத்தோடும் ஜரிகை போட்ட பெரிய அங்கவஸ்திரத் தோடும் 'வாக்கிங் ஸ்டிக்'கை அலட்சியமாக சுழற்றியபடி ஏழெட்டு பேர் சூழ வந்தார். பிச்சைக்கனி அண்ணாச்சி தாத்தாவுக்கு சந்தனம் கொடுத்தார். தாராளமாக ஒரு பாட்டில் பன்னீரை மழை போல் தெளித்தார்.

அதிர்வேட்டுச் சிரிப்புடன் தாத்தா உள்ளே நுழைந்து கொண்டிருந்தார். என்னையும் மாரீஸ்வரனையும் தாண்டித் தான் தாத்தா போக வேண்டும். அதனால் கொஞ்சம் எரிச்ச லோடு நானும், கொஞ்சம் பயத்தோடு மாரீஸ்வரனும் பேச்சை நிறுத்திவிட்டு எழுந்து நின்றோம். மெதுவாக - அதே நேரம் பணக்கார அட்டகாசத்துடன் நடந்து வந்துகொண் டிருந்த தாத்தா எழுந்து நின்றுகொண்டிருக்கிற என்னையும் மாரீஸ்வரனையும் - முதலில் சாதாரணமாகப் பார்த்தார். பின் ஒரு நிமிஷம் நின்றார். மாரீஸ்வரனையும் என்னையும் மாறி மாறி மேலும் கீழுமாகப் பார்த்தார். ஓர் அதிருப்தி அவரின் முகபாவனையில் அசிங்கமாக வந்தது. வாக்கிங் ஸ்டிக்கால் என்னையும் மாரீஸ்வரனையும் சுட்டிக்காட்டிக்கொண்டே பிச்சைக்கனி அண்ணாச்சியிடம் எகத்தாளமான பெரிய



குரலில் சொன்னார் : ''மொதலாளி வீட்டுப் பயலுக்கும் சம்பளக்காரப் பயலுக்கும் வித்தியாசமே தெரியல...''

இந்தச் சம்பவமும் தாத்தாவின் குரூரமான இந்த வார்த்தைகள் ஒலித்தும் சுமார் நாற்பத்தி நான்கு வருஷங்கள் ஆகிவிட்டாலும் இந்த நிமிஷம் வரை என்னால் அந்தச் சம்பவத்தை மறக்கவும் முடியவில்லை. அந்தக் கொடிய வார்த்தைகள் ஏற்படுத்திய காயத்தை ஆற்றிக் கொள்ளவும் முடியவில்லை - பச்சை ரணமாக அந்தக் காயம் ரத்தம் ஊறிப் போயிருக்கிறது. கல்யாண வீட்டில் நெருப்புத் துண்டுகள் போன்ற அந்த வார்த்தைகளை அலட்சியமாக வாரி வீசி விட்டுப் பணச் செருக்குடன் தாத்தா நகர்ந்து போனபோது நான் அதிர்ச்சியில் இறுகிப் போயிருந்தேன். மாரீஸ்வரன் அப்படியே தலையைத் தொங்கப்போட்டபடி நின்றான். அவனுடைய தோற்றம் மிகவும் தொய்ந்து போயிருந்தது. ஒருவித உள்மன அழுகையோடும் அச்சத்தோடும் நான் மாரீஸ்வரனைப் பார்த்துக் கொண்டிருந்தேன். சில நிமிடங்கள் கழித்து என்னைப் பார்த்து, ''நீ இரு; நான் எங்க வீட்டுக்குப் போயிட்டு அஞ்சு நிமிஷத்தில வரேன்'' என்று சொல்லி வேகமாக அந்த இடத்தைவிட்டு வெளியேறிப் போனான்.

மாரீஸ்வரன் வெளியேறிப் போனதும் பள்ளிக்கூட வகுப்பில் அவன் இல்லாத தனிமை உணர்வு அந்தக் கல்யாண வீட்டிலும் என் மனதில் ஏற்பட்டிருந்தது. வீட்டுக்குப் போன மாரீஸ்வரன் திரும்பி வருவானா என்ற சந்தேகத்தில் மனம் சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்தது. தூரத்தில் 'அவுட்' சிரிப்புச் சிரித்து எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்துக் கொண் டிருந்த தாத்தா என்ற பணக்காரக் கிழவனை வெறுப்புடன் பார்த்தேன். புலி மாதிரி பாய்ந்து அவருடைய 'மூஞ்சி முகரை'யெல்லாம் கடித்துக் குதற வேண்டும் போல இருந்தது.

அப்போது என் தோளில் ஒரு கை மென்மையாகத் தொட்டது. திரும்பிப் பார்த்தேன். மாரீஸ்வரன். பட்டுச் சட்டை பட்டு வேட்டிக்குப் பதிலாக பழசான நாலு முழ வேட்டியும் பழைய துவைத்த சட்டையும் அணிந்து நின்றுகொண்டிருந்தான். அதுமட்டுமில்லை. கழுத்தில் போட்டு வந்திருந்த மெல்லிசான தங்கச் செயினைக் காண வில்லை. சட்டையில் தங்கப் பித்தான்களும் இல்லை. பாவம் - அவற்றையெல்லாம் வீட்டில் கழற்றி வைத்துவிட்டு வந்திருக்கிறான் - ஒரு 'சம்பளக்காரப் பயலுக்கான' தோற்றத்தில். ஆனால் மாரீஸ்வரனின் முகத்தில் கொஞ்சம்கூட கோபமோ துக்கமோ இல்லை. எப்போதும்போல சிரித்த முகத்துடன் இருந்தான். என்னால்தான் சிரிக்கவும் முடியவில்லை. நிமிர்ந்து அவனைப் பார்க்கவும் முடியவில்லை. அவமானம் தாங்காமல் என்னுடைய உணர்வுகள் கூனிக் குறுகின. விசித்திரமாக மாரீஸ்வரன்தான் எனக்கு ஆறுதல் சொல்ல வேண்டி இருந்தது.

ஆனால் ஒன்று - இந்தச் சம்பவம் நடந்த பின் மாரீஸ் வரன் தாத்தா கடையில் ரொம்ப நாட்கள் நீடித்திருக்க வில்லை. ஐந்தாறு மாதங்கள் கழித்து அம்மாவோடும் தம்பி தங்கச்சிகளோடும் தூத்துக்குடிக்குப் போய் விட்டான். அங்கே 'மகமை காம்பவுண்டில்' சின்ன வாடகை வீட்டில் இருந்து கொண்டு கப்பல் கம்பெனி ஒன்றில் சொற்ப சம்பளத்தில் சேர்ந்தான். அவ்வளவுதான்; காலச்சக்கரம் வேகமாகச் சுற்றிவிட்டது. அல்லது காலப்புயல் பலமாக வீசிவிட்டது. சரியாகப் பதினாறே வருஷங்களில் மாரீஸ்வரன் தூத்துக்குடி ஹார்பரில் ஃபார்வேர்டிங் அண்ட் க்ளியரிங் ஏஜென்ஸி ஆரம்பித்து லட்சம் லட்சமாகச் சம்பாரிக்க ஆரம் பித்து விட்டான். அப்புறம் பெரிய சிகரெட் கம்பெனியின் ஏஜென்ஸி, பிரபலமான சோப், தலைக்குத் தேய்க்கிற வாசனை எண்ணெய் போன்றவற்றின் ஏஜென்சியென்று



ஆரம்பித்துக் கோடிக்கணக்கில் சம்பாரித்து தூத்துக்குடியின் 'டாப் டென்' பணக்காரர்களில் அவனும் ஒருவனாகிவிட்டான்.

சுழன்று வீசிய காலப்புயல் மாரீஸ்வரனை பதினாறு வருஷங்களில் கோபுரத்தில் உட்கார வைத்தது போல என் தாத்தா ரத்னவேல் பாண்டியனை அதே காலப் புயல் படுகுழியில் தள்ளி மண்ணைப்போட்டே மூடிவிட்டது. பதினாறு வருஷக் கடைசியில் உயிரை விட்டபோது தாத்தாவிடம் நிஜமாகவே ஒரு பைசாகூட இல்லை. சிகரக் கோட்டையின் 'டாப் மோஸ்ட்' பணக்காரராக இருந்தவர் சாகும்போது 'இன்சால்வென்சி' கொடுத்து 'பாப்பர்' ஆகி விட்டார். அது மட்டுமில்லை. அவருடைய மகன்கள் ஆளுக்கொரு ஊரில் ஆளுக்கொரு கடைகளில் சம்பளக்காரப் பயல்களாகி விட்டார்கள். தாத்தா ஒரு பைசா இல்லாமல் செத்துப் போனதோ அவரின் மகன்கள் சம்பளம் வாங்குகிற வேலைக்காரர்கள் ஆனதோ எனக்குச் சந்தோஷத்தையோ குரூர இன்பத்தையோ கொடுத்து விடவில்லை.

ஆனால் நாற்பத்து நான்கு வருஷங்களுக்கு முன்னால் மாரீஸ்வரனை 'சம்பளக்காரப்பயல்' என்று அவமதித்த அந்த ஈவு இரக்கம் இல்லாத தாத்தாவின் அயோக்கியத்தனத்தை இன்றும் என்னால் மறக்க முடியவில்லை. மன்னிக்கவும் முடியவில்லை. தாத்தாவின் அந்த நடத்தை வெறும் அகம் பாவமானது இல்லை. அது ஒரு படுகொலை. ரொம்ப வருஷத்துக்கு முன்னால் அம்பை என்ற எழுத்தாளர் ''அம்மா ஒரு கொலை செய்தாள்'' என்றொரு கதை எழுதியிருந்தார். அதைப் போன்றதுதான் என் தாத்தாவின் கதையும். அவர் ஒரு கொலை செய்தார். நீதி என்ற முறைப்படி கொலைக்கான தண்டனையை அவர் பெற்றுவிட்டதாகத் தோன்றலாம். ஆனால் அவர் செய்த கொலை கொலைதானே... அந்தக் கொலையுண்ட ஆவேசம் எனக்குள் இன்னும் உயிர் கொண் டிருக்கிறது.

அதனால் இப்போது மாரீஸ்வரனைச் சந்திக்கும் போதுகூட அந்தச் சம்பவத்தைச் சொல்லி உணர்வு வேகம் அடைவது உண்டு. ஆனால் மாரீஸ்வரன் கொஞ்சம்கூட ஆவேசமோ உணர்வு வேகமோ படுவது கிடையாது. மிகவும் தன்மையாகவே இருப்பான். உருக்கத்துடன் என்னை சமாதானப்படுத்துவான். ''என் தாத்தா உன்னையும்தானே படுகொலை செய்தார்... ஏன் உனக்கு மட்டும் ஆத்திரமோ வெறியோ வரமாட்டேன்கிறது?'' என்று ஒருநாள் மாரீஸ்வரனைப் பார்த்துக் கேட்டேன். புன்முறுவலோடு அவன் சொன்னான் : ''உன் தாத்தா என்னையும் படுகொலை செய்தார். கரெக்ட். அந்தப் படுகொலையில் நான் முற்றிலும் மரணமடைந்து முற்றிலும் புதியவனாய்ப் பிறந்துவிட்டேன். உன் தாத்தா கொலை செய்த மாரீஸ்வரன் இஸ் நோமோர். ஸோ - இந்தப் புதிய மாரீஸ்வரனுக்கு கோபமோ வேதனையோ இல்லை...''

மாரீஸ்வரனின் இந்த எளிமையான பதில் என் முன்னால் பிருமாண்டமாக விழுந்தது. அவனுடைய கண்கள் என்னைக் கனிவுடன் பார்த்துக்கொண்டிருந்தன. நட்புடன் அவனுடைய கையைப் பிடித்துக்கொண்டேன். என் உடம்பை ஒருமுறை பலமாக சிலிர்த்து விட்டுக் கொண்டு ரொம்ப உறுதியான குரலில் சொன்னேன் : ''உன்னைப் பற்றிய உண்மையை நீ சொல்லிவிட்டாய். இதோ என்னைப் பற்றிய உண்மையை நானும் சொல்லிவிடுகிறேன். என் தாத்தா உன்னை அவமதித்ததின் மூலம் என்னையும் படுகொலை செய்தார். நானும் செத்து சுண்ணாம்பாகிவிட்டேன்! ஆனால் நான் முற்றிலும் புதியவனாய்ப் பிறக்கவும் இல்லை. பிறப்பதற்கு விருப்பப்படவும் இல்லை!...''

★

# 9. வீடு திரும்பாதவன்

மணிமாறன் ஒரு கடினமான மனிதன். மனித வாழ்க்கை முறை பற்றிய அவனின் எல்லாப் பார்வையும் செல்வபோகம் என்ற கணக்கையும் ஆண் என்ற அடங்காத செருக்கையுமே அடிப்படையாகக் கொண்டிருந்தன. பணத்தால் எதையும் விற்றுவிட முடியும் அல்லது யாரையும் வாங்கிவிட முடியும் என்பது மணிமாறனின் ஆக்ரோஷமான அபிப்பிராயம். அதே போல் ஆண் என்ற ரீதியில் அவன் எதை வேண்டுமானாலும் யாருக்கு வேண்டுமானாலும் செய்வான். அவனை யாரும் எதுவும் கேட்டுவிட முடியாது என்பது அவனுடைய கர்வமான சுபாவம்.

பணப்புழக்கம் மிக அதிகமான குடும்பத்தில் பிறந்து வளர்ந்திருந்த தன்னிச்சையான அனுபவம் மென்மை இல்லாத கடினத்தன்மையான இறுக்கத்தையும், ஆண் என்ற செருக்கு அடக்கம் இல்லாத நடத்தையையும் மணிமாறனின் மனதில் ரொம்பத்தான் ஆழமாக வேரிட வைத்திருந்தன. எதன் மீதும் அல்லது யார் மீதும் அவனுடைய நெஞ்சில் மென்மையான மூலை என்பதற்கு ஒரு ஊசிமுனை அளவிற்குக்கூட இடம் கிடையாது. யாரிடத்திலும் மணிமாறன் அன்பு காட்டியதில்லை. அதே மாதிரி யாரிடத்தில் இருந்தும் அன்பை அவன் எதிர்பார்த்ததும் இல்லை. இருபத்தி இரண்டாவது வயதில் கல்லூரிப் படிப்பு முடிந்தபோது மணிமாறனின் குடும்பத் தொழிலின் பணச் செழிப்பு சட்டென வடிந்து எதிரேபாராத வசதிக்குறைவு வந்து சேர்ந்தபோது பிறந்து வளர்ந்த அந்தக் குடும்பத்தினரின் மத்தியிலேயே இறுகி அந்நியப்பட்டுப் போனவன் அவன்.

படிப்பு முடிந்ததும் சொந்த ஊரான நாகப்பட்டணத்திலேயே அப்பாவின் தொழிலைக் கவனித்துக் கொண்டு, வசதியான குடும்பத்தின் சுகமான வாழ்க்கையை எல்லா உல்லாசத்தோடும் அனுபவிக்கிற தீர்மானத்தில்தான் முதலில் மணிமாறன் இருந்து கொண்டிருந்தான். ஆனால் படிப்பு முடிந்த நேரத்தில் அவனுடைய அப்பாவின் தொழிலில் ஏற்பட்ட பெரும் சரிவு மணிமாறனின் அபிப்பிராயத்தை ஒரே நாளில் மாற்றிவிட்டது.

சரிந்துவிட்ட தொழிலைக் கடுமையாக உழைத்து திரும்பவும் நல்ல நிலைக்குக் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற அவனுடைய அப்பாவின் வைராக்கியத்திற்கும் முயற்சிக்கும் தோள் கொடுத்து உதவ மணிமாறன் தயாராக இல்லை. அதற்கான பொறுமையும் அவனிடம் இல்லை. படிப்புக்கு ஏற்ற நல்ல வேலையைத் தேடிக் கொண்டு சென்னை போய்விட வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் தான் இருந்தான் அவன். பெற்றோர், ஒரு தம்பி, இரண்டு தங்கைகள் என்ற நெருக்கமான வீட்டின் வசதிக்குறைவான கூட்டுக்குடும்ப வாழ்க்கைக்குள் முடங்கிக் கிடப்பதற்கு மணி மாறனுக்கு விருப்பம் கிடையாது. உடனடியாகப் பெரிய வேலை கிடைக்காமல் போனாலும்கூடப் பரவாயில்லை. பொறுப்பின் இறுக்கம் இல்லாத சுதந்திரமான சென்னை வாழ்க்கைதான் அவனுக்கு உடனே தேவையாக இருந்தது.

மணிமாறனின் அதிர்ஷ்டம் - சீக்கிரம் நல்ல வசதியான வாழ்க்கையையே அமைத்துக்கொள்ள ஏற்றதாக தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலேயே - அதுவும் சென்னை கிளையிலேயே வேலை கிடைத்துவிட - மணிமாறன் மனதால் நாகப்பட்டணத்தைத் தலைமுழுகிவிட்டு நிம்மதியாய் சென்னை நகரம் போய்ச் சேர்ந்தான்.

உத்திரவாதமுள்ள வேலை, இரண்டு கை நிறையச் சம்பளம், மிகச் சுதந்திரமான வாழ்க்கை - எல்லாம் சேர்ந்து



மணிமாறனை ஆனந்தக் கடலில் மூழ்கடித்துவிட்டன. அதே நேரம் அவனுடைய குடும்பத்ினரை திரும்பிக்கூடப் பார்க்காமல் வந்துவிட்டான் என்ற கெட்டப் பெயரைப் பெறவும் அவன் விரும்பவில்லை. இந்த நினைப்பில் தம்பி தங்கைகளின் படிப்புச் செலவிற்காக மாதா மாதம் ஆயிரம் ரூபாயை அனுப்பி வைத்துக் கொஞ்சம் நல்ல பெயரை சம்பாரித்துக் கொண்டான். ஆனால் அதற்குமேல் ஒரு பைசா கூட அனுப்பமாட்டான்.

அவனின் எதிர்காலத்திற்காகக் குருவி சேர்ப்பது மாதிரி பணம் சேர்த்துக் கொண்டிருப்பதாக ஒரு பொய்யைப் பெற்றோரின் மனதில் பதிய வைத்துவிட்டு மணிமாறன் ஒரு சின்ன சேமிப்புகூட இல்லாமல் அவனின் சம்பளப் பணம் பூராவையும் இஷ்டத்திற்கு வாரி இறைத்துக் கொண்டிருந்தான். அதிலும் சம்பளப் பணத்தின் பெரும் கணிசமான தொகையை மணிமாறன் பெண் சுகத்திற்காக மட்டுமே அள்ளி விட்டுக் கொண்டிருந்தான்! பணத்தைக் கொடுத்துப் பெறுகிற பெண்சுகத்தில் சுகம் தருகிற அந்த விலைமகளிடம் அந்தச் சுகம் தவிர வேறு பொறுப்பு என்ற பிணைப்பு எதற்கும் இடம் இல்லாதது மணிமாறனின் சுதந்திர இயல்புக்கு ரொம்பவும் ஏற்றதாக இருந்தது. அந்தச் சுதந்திரத்தை விலைப்பெண்களிடம் அவன் தாராளமாகவே அனுபவித்துக்கொண்டிருந்தான்.

சென்னையில் வாய்க்கு ருசியான உணவுகள் விற்கும் விலை உயர்வான ஹோட்டல்கள் எந்த எந்தப் பகுதிகளில் இருக்கின்றன என்பதெல்லாம் மணிமாறனுக்கு எப்படி அத்துப்படியோ அதேபோல எந்த எந்தத் தொகுதிகளில் சுத்தமான, உடல் வனப்பு அதிகமான விலைமகள்கள் வீடுகள் இருக்கின்றன என்பதும் அவனுக்கு அத்துப்படி. சம்பளம் வாங்கியதும் மாதத்தில் முதல் செலவே மணிமாறனுக்கு நல்ல விலைமகள் வீட்டுக்குப் போய் வருவது தான்! அவனுக்கு அது ஒரு சாகசச் செயலாகவே இருந்தது!

அதுவும் இந்த மாதிரியான இடங்களுக்குப் போக ஆசை இருந்தாலும் தைரியம் இல்லாத நண்பர்களை அவ்வப் போது அழைத்துப்போவது அவனுக்கு மகத்தான வீரச் செயலாகவே இருந்தது! நிறைய விலைமகள்கள் வீட்டில் மணிமாறன்தான் பிரதான வாடிக்கையாளன்! அதனால் எப்போதாவது ஆடிக்கும் அமாவாசைக்கும் போகிற வாடிக் கையாளர்களுக்குக் கிடைக்க முடியாத சில சலுகைகள் விலைமகள்கள் வீடுகளில் மணிமாறனுக்கு உண்டு! கொடுக்க வேண்டிய பணத்தில் அவனுக்கு ஐம்பது ரூபாய் தள்ளுபடி நிச்சயம்! அதைவிடப் பெரிய சலுகை என்னவென்றால் - மற்ற வாடிக்கையாளர்களைவிட கூடுதலாகப் பதினைந்து நிமிடங்கள் வரை மணிமாறன் அங்கே இருந்துவிட்டுப் போகலாம்! யாரும் அவனை அவசரப்படுத்தமாட்டார்கள்!

இந்தச் சலுகைகளை மணிமாறன் அவனுடைய ஆண்மை மிக்க பணத்திற்குத் தரப்பட்ட பரிசாக நினைத்து இறுமாப்பு அடைந்து அந்தப் பரிசுகளை மேலும் மேலும் பெற மறுபடியும் மறுபடியும் விலைமகள்களின் வீடுகளுக்குப் போய் வந்துகொண்டிருந்தான்.

இப்படித் தொடர்ந்து இங்கே சென்னையில் மணி மாறன் விலைமகள்களின் வீடுகளில் பல பரிசுகளைப் பெற்றிருக்கும் இந்த எட்டு வருஷங்களில் நாகப்பட்டணத்தில் அவனுடைய அப்பா அவருடைய முயற்சியிலேயே அவரின் இரண்டு பெண்களையும் கௌரவமான இடங்களில் நல்ல நல்ல பையன்களுக்கு நல்லவிதமாகக் கல்யாணம் செய்து கொடுத்திருந்தார். தங்கைகளின் கல்யாணங்களுக்கு மணி மாறன் பெரிய ஒத்தாசையாக இல்லாமல் போயிருந்தாலும் பெண்களின் அண்ணா கல்யாணமே செய்து கொள்ளாமல் சென்னையில் பெரிய பேங்க் வேலையில் இருக்கிறார் என்ற செய்தியே அவனின் தங்கைகளுக்குப் பெரிய பக்கபலமாக இருந்தது!



அதற்காக மணிமாறனும் தங்கைகளின் கல்யாணங் களுக்கு ஒரேயடியாகவும் கையை விரித்துவிடவில்லை. அவனுடைய கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகச் சில ஆயிரம் ரூபாய்களைத் தூக்கி தங்கைகளின் கல்யாணங் களுக்குக் கொடுத்திருந்தான். அதனால் எதிர்பார்த்த மாதிரி கொஞ்சம் நல்ல பெயரையும் தட்டி வந்துவிட்டான்! ஆனால் இந்தக் காரியம் மணிமாறன் எதிரேபார்க்காத எதிர் விளைவு ஒன்றுக்குப் பிள்ளையார் சுழியைப் போட்டு வைத்துவிட்டது அவனுடைய குடும்பத்தில்.

பிறந்த குடும்பத்தில் அவன் ஒட்டாத தாமரை இலைத் தண்ணீர்போல இருந்து கொண்டிருந்ததாலும், இரண்டு மகள்களை முதலில் கரையேற்ற வேண்டிய கட்டாயத்தில் இருந்ததாலும் மணிமாறனின் பெற்றோர் இதுவரைக்கும் அவனுடைய கல்யாணத்தைப் பற்றி எந்தப் பேச்சும் எடுக்காமல் இருந்துவிட்டார்கள். இனியும் அப்படி இருக்கிற அபிப்பிராயம் இல்லை அவர்களுக்கு. அவனுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைக்க வேண்டிய தங்களின் பொறுப்பை குறிப்பிட்டு அடிக்கடி மணிமாறனுக்குக் கடிதம் எழுதத் தொடங்கினார்கள்.

அவனைப் பொறுத்தவரை மணிமாறனுக்கு பெற் றோரின் இந்தக் கடிதங்கள் அவனுடைய வாழ்க்கையின் முதல் ஆச்சர்யம். அவன் இப்படிப்பட்ட கடிதங்களை எதிர் பார்க்கவும் இல்லை. அவனுடைய கல்யாணத்தைப் பற்றி ஒருநாளும் யோசித்துக்கொண்டதும் இல்லை. யோசித்துப் பார்த்ததில் அவனாலும் ஒருத்தியைக் கல்யாணம் செய்து குப்பைக் கொட்ட முடியுமா என்பது அவனுக்கே புரியாத புதிராக இருந்தது. நிஜமாகவே மணிமாறனின் மனதில் கல்யாணம் என்ற ஆசைகளோ கனவுகளோ எப்போதும் ஏற்பட்டது கிடையாது.

படித்து முடித்த பருவத்தில் சரேலென்று அவனுடைய குடும்பத்தில் பணச்செழிப்பு வாடிப் போனபோது அவன் மனதில் இனம் பிரிக்க முடியாத சில முக்கியமான தன்மைகள் அழிந்து போய்விட்டன. பெண் என்கிறவள் கல்யாணம் என்பதின் மூலம் ஆணின் வாழ்க்கைத் துணையாகிறவள் என்கிற குடும்பப் பண்பெல்லாம் அவனிடம் இருந்து அகன்று போயிருந்தது. சென்னையின் கிட்டத்தட்ட ஒன்பது வருஷ வாழ்க்கையில் எந்தப் பெண்ணையும் கல்யாண ஆர்வத்தோடோ அல்லது காதல் வேகத்தோடோ மணிமாறன் பார்த்ததோ அணுகியதோ கிடையவே கிடையாது.

வாளிப்பான பெண் ஒருத்தியைப் பார்த்தால் 'ஓ! இவளுடன் படுக்கையைப் பகிர்ந்துகொண்டால் எவ்வளவு பிரமாதமாக இருக்கும்' என்ற பாலுணர்வுதான் அவனிடம் ஏற்படும். பெண் மணிமாறனுக்கு படுக்கையைப் பகிர்கின்ற உடம்பைக் கொண்டிருப்பவள் மட்டும்தான். பெண் என்கிறவளை அவனுக்குப் பிடிக்குமோ என்னவோ பெண்ணின் உடம்பின் மேல் மணிமாறனுக்குத் தீராத அப்படியொரு தாகம்...

இந்த மனநிலையிலேயே சலனமில்லாமல் ஒன்பது வருஷங்களை சென்னையில் கழித்திருந்தவனுக்கு கல்யாணத்தைப் பற்றி ஊரில் இருந்து திருப்பித் திருப்பி அவனுடைய பெற்றோர் கடிதங்கள் எழுதிக்கொண்டே இருந்ததைப் பார்க்க ஒரு மாதிரி வினோதமாக இருந்தது. இத்தனை வருஷ சென்னை வாழ்க்கையில் அவனுடன் வங்கியில் பணிபுரிகிறவர்கள் வீட்டுக் கல்யாணங்களில் மணிமாறன் எத்தனையோ தடவை எந்த நெகிழ்ச்சியும் இல்லாமல் இயந்திரத்தனமாகக் கலந்துகொண்டிருக்கிறான்.

ஆனால் அவனுடைய கல்யாணத்தைப்பற்றி ஊரில் இருந்து பத்துப் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை



37451

கடிதங்கள் வரத் தொடங்கிய பிறகு சென்னையில் மணிமாறன் ஒரு கல்யாணத்தில் கலந்துகொண்ட போது வழக்கமான இயந்திரத்தனம் அவனுடைய மனதில் கொஞ்சம் கலைந்து போயிருந்தது. ஓர் ஆணும் பெண்ணும் தம்பதிகளாக இணையும் அந்த வைபவத்தை மணிமாறன் முதல் தடவையாக மனசால் பார்த்தான். அவனுடைய மனம் வித்தியாசமான தடத்தில் சற்று இயங்கத் தொடங்கிற்று.

கல்யாணமான சில நண்பர்களின் வீடுகளுக்குப் போய் அவர்களின் குடும்பக் காட்சிகள் சிலவற்றைப் பார்த்துவிட்டு வந்தான். காட்சிகள் மணிமாறனின் நெஞ்சைத் தொட்டனவென்று சொல்லமுடியாது. ஆனால் 'நமக்கென்று ஒருத்தி இருந்தா நல்லாத்தான் இருக்கும் போலிருக்கே!' என்ற எண்ணத்தை அவனுடைய மனதில் ஏற்படுத்தியதென்று சொல்லலாம்! இதைத் தொடர்ந்து 'கல்யாணம் செய்து பார்க்கலாமா?' என்று மணிமாறன் யோசிக்க ஆரம்பித்தான் என்றும் சொல்லலாம்.

ரொம்ப யோசித்துப் பார்த்தபோது கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம் போலத்தான் இருந்தது. ஆனால் அதற்காக மணிமாறன் உடனே அவசரப்பட்டு கல்யாண காரியத்தில் இறங்கிவிடவில்லை. அவனின் தீர்மானத்தை உடனே ஊருக்கு எழுதிப் போட்டு விடவில்லை. உடனே எழுதினால் 'காத்துக் கொண்டு கிடந்திருக்கிறான்' என்று வீட்டில் நினைத்துக் கொண்டு விடுவார்களே! அதனால் ஒரு மாதத்திற்கு வீட்டுக்குக் கடிதமே போடாமல் கிணற்றில் போட்ட கல் போல பேசாமல் இருந்தான்.

அதுவும் இல்லாமல் நிஜமாகவும் மணிமாறன் கல்யாணத்திற்காக காத்துக் கிடந்தவன் கிடையாதே! கல்யாணம் என்பதின் மூலம் எவளோ ஒரு பெண்ணுக்காகக் காத்திருப்பது என்பதெல்லாம் அவனுடைய அகங்காரமான

ஆண்மைக்குச் சரிப்பட்டு வருகிற விஷயமா? இத்தனை வருஷ வாழ்க்கையில் ஒரு பெண்ணுக்காக, அல்லது ஏதோ ஒரு பெண்ணின் காதலுக்காக பஸ் ஸ்டாப்பிலோ, தெரு முனையிலோ, அல்லது ஆபீஸ் வாசலிலோ மணிமாறன் ஒரே ஒரு நிமிஷம்கூடக் காத்து நின்றவனில்லை. மனிதனுக்கு பாலுணர்வுதான் தேவையே ஒழிய காதல் தேவையே கிடையாது என்பது அவனின் அழுத்தமான அபிப்பிராயம். கல்யாண வாழ்க்கை ஆண் பெண்ணின் பாலுறவுச் சுகத்திற் கான வடிகால். இந்த வடிகால் இல்லாத பெண் பாலுறவைத் தேடி வெளிஉலகிற்குச் செல்கிறாளோ இல்லையோ - ஆண் தற்காலிக வெளி வடிகால்களைத் தேடிச் செல்ல நிறையவே சாத்தியம் இருக்கிறது.

மணிமாறன் இதுவரைக்கும் இந்த சாத்திய பாதையில் மட்டும்தான் போய் வந்திருக்கிறான்! மனைவி என்ற பெண் சமைத்துப் போடுவதை வீடு என்ற கட்டிடத்திற்குள் உட்கார்ந்து சாப்பிட வழி இல்லாத ஆண் சாப்பிடுவதற்காக நல்ல ஹோட்டலைத் தேடிப்போய் சாப்பிட்டு வருவதைப் போன்றதுதான் பாலுறவு பெற மனைவி இல்லாதவன் அதற்கான விலைமகள்கள் வீடுகளைத் தேடிப்போவதும் என்பது மணிமாறனின் குற்ற உணர்வே இல்லாத கருத்துக் கணிப்பு!

அவன்தானே அந்தக் கருத்துக் கணிப்பின் முதல் பிரதிநிதி! சாப்பாட்டுக்காக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஹோட்டலுக்குப் போகிறான். பாலுறவு வேண்டும் என்கிற போது ஏதாவது ஒரு விலைமகள் வீட்டுக்குச் செல்கிறான். இருப்பவனுக்கு ஒரே ஒரு வீடு; இல்லாதவனுக்கு எத்த னையோ வீடு என்கிற மாதிரி மணிமாறனுக்குத்தான் எத்தனை வீடு... அக்கம்மா வீடு, ராசக்கா வீடு, பாப்பக்கா வீடு, கபாலி வீடு... இந்த அக்காக்கள் வீடுகளில் அவனுக்கும் தான் பாலுறவைப் பகிர்ந்துகொள்ள எத்தனை எத்தனை



அக்கா மகள்கள்...! ஆரம்ப வேகத்தில் மணிமாறன் இந்த அக்கா மகள்களின் எண்ணிக்கைக்குக் கணக்கு வைத்திருந்தான்! போகப்போக எண்ணிக்கை கணக்கை மீறிப் போய் விட்டதில் கணக்கு வைத்துக்கொள்ள முடியாமல் போய் விட்டது! ஆனால் வேறு ஒரு கணக்குப் போட்டுப் பார்த்தால் இந்த ஒன்பது வருஷத்தில் விலைமகள்களுக்காக மணிமாறன் செலவழித்திருக்கும் பணத்தில், ராஜசெலவில் இன்று அவனுடைய கல்யாணத்தை நடத்திவிடலாம் - தடபுடலாக! கணக்குப் பார்க்காமல் அப்படிச் செலவழித்திருக்கிறான்.

இதை இப்போது கொஞ்சம் கணக்குப் போட்டுப் பார்த்தபோது மணிமாறனுக்கு அதே கொஞ்சம் திகைப்பாக இருந்தது. கொஞ்சம் பயமாகவும் போய்விட்டது. இந்த பயத்தில் கொஞ்ச நாள் எந்த விலைமகள் வீட்டிற்கும் போகாமல் அறையில் மனசை அடக்கியபடி படுத்துக் கிடந்தான். அப்போது சின்னதாக உண்மை ஒன்று மணி மாறனுக்குப் புரிந்தது. அக்கம்மா வீடுகளுக்கும் கபாலி வீடுகளுக்கும் மாறி மாறி ஓடி மனசில் அவன் கொஞ்சம் களைத்துப் போயிருந்தான்! என்ன - மணிமாறனின் மஹா ஆண்மைக்குக் களைப்பா? அவனின் ஆண்மை இதை ஒப்புக்கொள்ள முதலில் பிடிவாதமாக மறுத்துப் பார்த்தது! ஆனால் இந்த ஆண்மையின் 'பாச்சா' எதுவும் அவனுடைய களைப்பின் முன்னால் பலிக்க மாட்டேனென்று சொல்லி விட்டது! வெட்கப்படாமல் மணிமாறன் அவனுடைய களைப்பின் முன்னால் சரண் அடைந்தான்!

இனி எப்படி அவனால் ஒவ்வொரு வேளைச் சாப்பாட்டுக்கும் ஒவ்வொரு ஹோட்டலாக ஏறி இறங்கிக் கொண்டிருக்க முடியாதோ அதேபோல ஒவ்வொரு நேர பாலுறவுத் தேவைக்கும் ஒவ்வொரு 'அக்கம்மா' வீடாகத் தேடித் தேடிப் போய் வந்து கொண்டிருப்பதும் முடியாது. வயிற்றுச் சாப்பாட்டுக்கு ஒரு இடம்; பாலுறவுப் பசிக்கு

ஒரு இடம்; ராத்திரியில் படுத்து உறங்க வேறொரு இடம்... ஒருநாள் வாழ்க்கைக்கு இத்தனை இடங்களா? மணிமாறனுக்குப் போதும் என்றாகிவிட்டது. இனி அவனுக்கு எல்லாமே ஒரே கூரையின் கீழ் கிடைக்க வேண்டும். பாலுறவு, வயிற்று உணவு, இரவுத் தூக்கம் - இந்த மூன்றும் ஒரு வீட்டுச் சுவர்களுக்குள் கிடைத்தாக வேண்டும் அவனுக்கு. இதற்கு அவன் கல்யாணம் செய்துகொண்டு விடுவது ஒன்றுதான் வழி. பின்னால் எப்போதோ வெளிச் சாப்பாடோ, அக்கம்மாக்கள் வீட்டுப் பாலுறவோ வேண்டும்போல இருந்தால் அவ்வப்போது போய் வந்து கொள்ளலாம்...!

கல்யாணத்திற்குப் பெண் பார்க்கச் சொல்லி மணி மாறன் ஊருக்குக் கடிதம் எழுதிப் போட்டான். கடிதத்தில் மறக்காமல் பெண் அவனுடைய ஊர்பக்க கிராமங்களில் பார்க்க வேண்டாம் என்று குறிப்பிட்டு எழுதியிருந்தான். ஊர்பக்கம் பெண் எடுத்தால் தொட்டதுக்கெல்லாம் ஊருக்குப் போய் போய் வந்து கொண்டிருக்க வேண்டும். மணி மாறனைப் பொறுத்தவரை அது ஆபத்து. சும்மா ஊர்பக்கம் போய் வந்து கொண்டிருந்தால் அவனின் பெற்றோர் இது தான் சாக்கு என்று அவனுடன் ரொம்ப ஒட்டிக்கொள்ளப் பார்ப்பார்கள்! அதற்கு இடம் கொடுத்தால் இங்கே கிளம்பி வந்து நிற்பார்கள்! அதெல்லாம் வம்பு!

பெற்றோரின் ஒட்டுதலோ அருகாமையோ இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் இப்போதைய சுதந்திரமான வாழ்க்கை வாழத்தான் மணிமாறனுக்கு ஆசை! ஆனால் ஊர்பக்கம் பெண் பார்க்க வேண்டாம் என்று எழுதினானே தவிர, அவனைப் போல சென்னையில் வந்து குடியேறிவிட்ட அவனுடைய ஊர் பக்கத்துக்காரர்களின் குடும்பங்களில் - இருந்துதான் தனக்குப் பெண் வேண்டும் என்பதை வலி யுறுத்தி எழுதி இருந்தான்.



ஊர்க்கார ஜனங்களாக இருந்தால் வசதி. மணிமாறனின் ஊர்பக்கத்துக்காரர்கள் ரொம்பவும் சாதுகள்; அப்பாவிகள்! சென்னைவாசியாக இருக்கும் அந்த அப்பாவி ஜனங்கள் வீடாகப் பார்த்து பெண் எடுத்தால் ஓர் ஆத்திரம் அவசரம் என்றால் மணிமாறன் கூச்சப்படாமல் மாமியார் வீட்டுக்குக் கிளம்பிப் போய்விடலாம்! அதுவும் மச்சினிகள் இருக்கிற மாமியார் வீடாக இருந்தால் இன்னும் விசேஷம்! மாமியார் வீடு எங்கேயோ ஊர்பக்கம் இருந்தால் ஒவ்வொன்றுக்கும் மூட்டையைக் கட்டிக்கொண்டு பிராட்வே பஸ் ஸ்டாண்டை நோக்கி ஓடிக்கொண்டிருக்க வேண்டும்! சம்பளத்தை யெல்லாம் பஸ்காரனிடம் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டும்! இதையெல்லாம் யோசனை செய்துதான் சென்னைவாசியாக இருக்கும் ஊர்க்காரர்களின் குடும்பத்தில் பெண் பார்க்கச் சொல்லி மணிமாறன் எழுதியது.

அவன் எழுதியதற்கு 'உன் பிரியப்படியே நல்ல பெண்ணாகப் பார்த்துவிடலாம்' என்று உடனேயே மணிமாறனின் அப்பாவிடம் இருந்து பதில் வந்துவிட்டது. மணிமாறனும் அந்த நிமிஷத்தில் இருந்தே ஒரே கூரையின் கீழேயே எல்லாவற்றையும் அவனுக்குத் தரப்போகிற மனைவியை வரவேற்க மனசில் தயாராகிவிட்டான். ஆனால் ஒன்று. இதுவே வேறொரு இளைஞனாக இருந்தால் நமக்குத்தான் கல்யாணத்திற்குப் பெண் பார்க்க ஆரம்பித்து விட்டார்களே - இனிமேல் எதற்கு இந்த அக்கம்மா வீடும் கபாலிசாமி வீடும் என்று ஒழுங்காக இருக்க ஆரம்பித்து விடுவான். மணிமாறன் இதற்கு நேர் எதிராக இருந்தான். கல்யாணம் ஆகி விடுவதற்கு முன் சென்னையில் இன்னும் இருக்கின்ற புதுப்புது அக்கம்மா வீடுகளுக்கும் போய்ப் பார்த்துவிட்டு வந்துவிடலாமேயென்று நினைத்தான். அப்புறம் எப்போது போக முடியுமோ?!

ஒரே கூரையின் கீழ் எல்லாவற்றையும் தரப்போகிற மனைவியின் வருகைக்காகக் காத்துக்கொண்டும், அதே நேரம் புதுப்புது விலைமகள்கள் வீடுகளுக்குப் போய் வந்து கொண்டும் இருந்தபோது ஒருநாள் மணிமாறனின் அப்பாவிடம் இருந்து அவனுக்கு முக்கியமான செய்தியுடன் ஒரு கடிதம் வந்தது. கடிதத்தில் அவர் எழுதியிருந்த தகவல் இது - நாகப்பட்டிணத்தில் இருந்து முப்பது வருஷத்திற்கு முன்னால் அரசாங்க வேலை கிடைத்து நமச்சிவாயம் என்பவர் சென்னைக்குப் புறப்பட்டுப் போனார். அவருக்கு ஒரே ஒரு ம..ளும் இரண்டு மகன்களும். மகள்தான் மூத்தவள். பெயர் கஸ்தூரி. அந்தக் கஸ்தூரிக்கு இப்போது இருபத்தாறு வயது. ஒரு தனியார் கம்பெனியில் வேலை பார்க்கிறாள். பத்து வருஷத்திற்கு முன்னால் நமச்சிவாயம் இருதயக் கோளாறு வந்து பெருவாரியாகச் செலவழித்து வைத்தியம் பார்த்தும் பலன் இல்லாமல் காலமாகிவிட்டார்.

அவர் இறந்த இரண்டாவது வருஷமே அவரின் மனைவியும் சிறுநீரகக் கோளாறு வந்து செத்துப்போனார். இப்போது கஸ்தூரி இரண்டு தம்பிகளுடன் சென்னை சிந்தாதிரிப் பேட்டையில் ஐந்நூறு சதுர அடி உள்ள சின்ன சொந்த வீட்டில் வசித்துக்கொண்டிருக்கிறாள். சிந்தாதிரிப்பேட்டை யிலேயே கஸ்தூரியின் இரண்டு சித்திகளின் குடும்பங்கள் இருக்கின்றன. கஸ்தூரியையும் அவளின் தம்பிகளையும் இந்தச் சித்திகள்தான் கவனித்துக்கொள்கிறார்கள். நமச் சிவாயம் வைத்துவிட்டுப்போன பணம் கொஞ்சமும் அவருடைய மனைவியின் நகைகளும் இருக்கின்றன. அதை வைத்து சித்திகளே பொறுப்பாக இருந்து கஸ்தூரியின் கல்யாணத்தை நல்ல முறையில் நடத்தி வைப்பார்கள்.

கஸ்தூரி மிகவும் லட்சணமான பெண். தாய் தகப்பன் இல்லாத வாழ்க்கையைத் தைரியமாக எதிர்நோக்கி வாழும்



ஒரு வலிமையான பெண். அந்தப் பெண்ணை மணிமாறன் உடனே சிந்தாதிரிப்பேட்டையில் இருக்கும் அவளுடைய வீட்டில் போய்ப் பார்க்க வேண்டும். இவன் பெண் பார்க்கப் போகும்போது கஸ்தூரியுடன் அவளின் சித்திகளும் இருப் பார்கள். பெண்ணை மணிமாறனுக்குப் பிடித்துவிட்டால் - பிறகு மற்ற விஷயங்கள் பற்றிப் பேசி முடிவு செய்ய அவனுடைய பெற்றோர் சென்னை கிளம்பி வருவார்கள்.

கடிதத்தை ஆர்வமாகப் படிக்க ஆரம்பித்த மணி மாறனுக்கு கடிதத்தைப் படித்து முடித்தபோது இந்தச் சம்பந்தம் அப்படியொன்றும் சுவாரஸ்யமாகப் படவில்லை! முதல் காரணம் - அந்த கஸ்தூரிக்கு அப்பா அம்மா இல்லாதது. மாமனார் மாமியார் என்று இருந்தால்தான் மணிமாறன் மாமியார் வீடு என்று போகிற நேரத்தில் வரவேற்பும் உபச்சாரமும் தடபுடலாகக் கிடைக்கும்! அதற்கு ஏற்ற மாதிரி மணிமாறனும் மாமியார் வீட்டில் உட்கார்ந்து 'பந்தா' பண்ணிக்கொண்டிருக்கலாம்! மாமனாரும் மாமியாரும் இருந்தால்தான் மச்சினன்காரர்களும் விழுந்து விழுந்து கவனிப்பார்கள்.

இந்த கஸ்தூரியை கல்யாணம் செய்து கொண்டால் மச்சினன்களை மணிமாறன்தான் கவனித்தாக வேண்டும். அவனுக்கு இது முடியவே முடியாத காரியம். காரணம்! மச்சினன்களாக இல்லாமல் இதுவே மச்சினிகளாக இருந்தால் அவர்களை பொறுப்பாகக் கவனித்துக்கொள்ள மணிமாறன் தயார்! ஒரு மச்சினிகூட இல்லாத இடத்தில் பெண் பார்க்க அவன் தயார் கிடையாது! இந்தக் காரணத்தால் சிந்தாதிரிப்பேட்டை கஸ்தூரியைப் போய் பெண் பார்க்க ஆர்வமே வரவில்லை அவனுக்கு. ஆனால் இந்தக் கார ணத்தைச் சொல்லி இதனால் இந்தப் பெண்ணைப் போய் பார்ப்பதற்குத் தனக்கு விருப்பமில்லையென்று எழுத முடியாது.

போய்ப் பார்த்துவிட்டு வந்து, பின் பெண் தனக்குப் பிடிக்கவில்லையென்று சொல்லி விடலாம். அதுவும் இல்லாமல் மணிமாறன் அவனுடைய கல்யாணத்திற்காக முதல் முதலாகப் பார்க்கப் போகிற பெண் - கஸ்தூரி. அதனால் இந்த முதல் பெண்ணைப் போய் சும்மா பார்த்து விட்டு வந்துவிடலாம். முதல் பெண்ணையே பார்க்காமல் விடுவானேன்?! பந்தாவாகப் போய் இறங்கி கஸ்தூரியை ஓர் அலட்சியப் பார்வை பார்த்துவிட்டு, கஸ்தூரியின் வீட்டில் தருகிற ஸ்வீட், காரம், காப்பியையும் சாப்பிட்டுக் கையைக் கழுவியபடி எழுந்து வந்துகொண்டே இருக்க வேண்டியது தானே... மணிமாறனும் வீட்டுச் சாப்பாடு சாப்பிட்டு எத்தனை நாளாகிவிட்டது...! இப்படிப் பெண் பார்க்கப் போகிற சாக்கில் ஏழெட்டு வீட்டுச் சாப்பாட்டில் கை நனைத்துத்தான் பார்க்கலாமே...!

தேவை இல்லாத இன்னொரு கற்பனையை மணி மாறன் அவனுடைய மனதில் வரைந்து வைத்துக் கொண் டான். இந்தக் கஸ்தூரியை அவன் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவதில்லை. நிராகரிக்கத்தான் போகிறான். குறைந்தது ஒரு தங்கையாவது இருக்கிற வேறு பெண்ணை சீக்கிரத்தில் கல்யாணம் செய்து கொள்ளவும் போகிறான்! அந்தப் பெண்ணுடன் கல்யாணத்திற்குப் பிறகு ஒருநாள் இன்று அவன் நிராகரிக்கப் போகிற கஸ்தூரியின் எதிரில் தெரியாத மாதிரி வந்து நிற்கப் போகிறான்! மணிமாறனுக்குப் பெரிய லட்சியம் இல்லை இது; சும்மா ஒரு ஜாலி...!

ஏற்பாடு செய்து கொண்டபடி மணிமாறன் நண்பர் ஒருவரின் 'டிராவல்ஸ்'ஸில் சொல்லி வரவழைத்துக் கொண்ட அம்பாஸடர் வண்டியில் பிரமாதமாக உடையணிந்து கொண்டு சிந்தாதிரிப்பேட்டையில் இருந்த கஸ்தூரியின் வீட்டில் போய் இறங்கினான். முதலில் அவனுக்கு சிந்தாதிரிப்பேட்டையே பிடிக்கவில்லை! வீட்டு வாசலில் ஒரு சித்தியின் கணவர்தான்



நின்று மணிமாறனை வரவேற்று நாற்காலியில் உட்கார வைத்தார். சம்பிரதாயத்திற்காக சில வார்த்தைகள் பேசினார். ஒரு பெண்மணி மணிமாறனுக்கு சாப்பிட குலோம்ஜாமூனும், உருளைக்கிழங்கு போண்டாவும் கொண்டுவந்து வைத்தாள். ஓசியில் சாப்பிட்டு விட்டுப் போகலாம் என்ற நினைப்பில் தானே கிளம்பி வந்திருக்கிறான்... சாப்பிட்டுவிட்டு சூடாக வந்த காப்பியையும் குடித்துவிட்டு மணிமாறன் எழுந்து நடந்துவிடலாம் என்றுதான் தமாஷாக நினைத்தான்! வந்ததற்கு கஸ்தூரியைப் பார்த்துவிட்டே போகலாமே - காசா பணமா பார்ப்பதற்கு...! - என்ற எண்ணத்தில் அவளைப் பார்ப்பதற்காக மௌனமாகக் காத்திருந்தான் அவன்.

''கஸ்தூரி - இப்படி வாம்மா...'' உள்ளே பார்த்து குரல் கொடுத்தார்கள். அடுத்த நிமிடம் ரொம்ப அழகான அயல்நாட்டு நைலக்ஸ் புடவையில் தலையைக் குனிந்தவாறு திடகாத்திரமான உடம்பாக மெதுவாக நடந்து வந்த கஸ்தூரி மணிமாறனுக்கு எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து தலையை நிமிர்த்தி அவனை நோக்கிய அடுத்த வினாடி கடும் முழக்கத்துடன் மிகப் பெரும் இடி இடித்தாற்போல இருந்தது மணிமாறனுக்கு. அந்தக் கணமே அவனின் மூஞ்சி முழுவதும் ரத்தச் சிவப்பாகிவிட்டது. அவமானத்தில் அவனுக்கு உடம் பெல்லாம் படபடத்தது. கடந்த மூன்று அல்லது நான்கு வருஷங்களில் கோடம்பாக்கம் கபாலி வீட்டில் குறைந்தது பத்துப் பதினைந்து தடவையாவது அவனுடன் படுக்கையைப் பகிர்ந்து கொண்டிருக்கும் அந்த சுபாவா இந்தக் கஸ்தூரி? மணிமாறன் வெறியுடன் பார்த்தான். சந்தேகமே இல்லை - அதே கேடுகெட்ட நாய்தான்! அவமானம் தாங்க முடியாமல் எழுந்து நின்றுவிட்டான் அவன்.

பொங்கி வந்த ஆத்திரத்தின் உத்வேகத்தில் அவளை நோக்கிப் பெரிய சப்தத்துடன் காறித் துப்பிவிட்டான். எதிரே பார்க்காமல் தன்னைப் பெண் பார்க்க வந்திருப்பது கபாலி

வீட்டு வாடிக்கையாளன் என்பது தெரிந்த அதிர்வில் நடுங்கி விட்டிருந்த கஸ்தூரியும் மணிமாறன் காறித் துப்பிய அவமானத்தைத் தாங்கமுடியாமல் முகம் சிவந்து எழுந்து நின்றாள். அவளுடைய உணர்வுகளும் படபடத்தன. குரலை இறுக்கியபடி கூறினாள்: ''மணிமாறன் - இப்படி காறித் துப்புற வேலை எதுவும் இங்கே வேண்டாம்...''

ரொம்ப அழகா பொண்ணு பார்க்க வரச் சொல்லிட்டு இப்படி நீங்க என் மூஞ்சியில காறித் துப்பின மாதிரி செஞ்சா - ஒரு ஆம்பளை நான் மட்டும் திருப்பித் துப்பாம விடுவேனா?'' - மணிமாறன் ஏழெட்டு வீடுகளுக்குக் கேட்கிற மாதிரியான கோபக் குரலில் கேட்டான். கஸ்தூரி கோபத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு சொன்னாள் : ''சரி - பதிலுக்குக் காறி துப்பியாச்சி இல்லையா... கிளம்பலாம் நீங்க. இந்தக் கத்தல் வேலையெல்லாம் வேண்டாம்...''

மணிமாறனுக்கு அங்கே நிற்பதற்கே அவமானமாகத் தான் இருந்தது. ஆனாலும் சுடச்சுட நாலு வார்த்தை கேட் காமல் கிளம்ப அவனுடைய ஆண்மை இடம் தரவில்லை.

''கிளம்பத்தான் போறேன். உக்காந்து இங்கே சம்பந்தமா பேசப்போறேன்! ஆனா இந்த அவமானத்தைத் தாங்க முடியலை என்னால... நேத்து வரைக்கும் தட்டுக் கெட்டுப் போன இடத்துல கேவலமான ஒரு தொழிலைப் பண்ணிட்டு - இன்னைக்கி ரொம்ப யோக்கியமானவ மாதிரி ஒருத்தனை பெண் பார்க்க வரச் சொல்லியிருக்கியே... என்ன நெஞ்சழுத்தம் இருந்தா செய்வே நீ இந்தக் காரியத்தை...?''

''திருப்பி இதே வார்த்தையை நானும் உங்களைக் கேட்டுட முடியும்.''

''கேட்டுத்தான் பாரேன்.''

''கேட்டதாவே வச்சிக்கலாம்!''



''கேட்பே கேட்பே! ஏன் கேட்கமாட்டே... கபாலி வீட்ல தொழில் செய்திட்டு இருந்தது நீதான்! நான் கிடை யாது!''

''இந்தத் தொழில்ல என் வாடிக்கையாளன்தான் என்னோட பார்ட்னர்! பார்ட்னர் இல்லைன்னா இழுத்து மூடற தொழில் இது! மறந்திர வேணாம்!''

''நல்லவ பேசற பேச்சு இல்லை இது! நீ மறந்திராதே இதை!''

''பேசின பேச்சுக்கு பதில் பேச்சு இது! இல்லேன்னா இப்படியெல்லாம் பேசறவ கிடையாது நான்!''

''பெரிய இவ மாதிரி பெண் பார்க்க வரச் சொல் லிட்டியே... உன் லட்சணம் தெரிஞ்சதால தப்பிச்சுக்கிட்டேன் நான்! தெரியாதவனா போயிருந்தா? ஏமாளிச் சோணகிரி யாட்டம் உன் கழுத்தில நானும் தாலியைக் கட்டறதுக்கு தயாராயிருப்பேன்! நீயும் இந்தப் பூமியில பிறந்ததில இருந்தே படிதாண்டாத பத்தினி மாதிரி ஒரு ஆஸ்கர் அவார்ட் வாங்குற நடிப்பை நடிச்சுக்கிட்டே - எனக்கு உன் கழுத்தை நீட்டி யிருப்பே!''

''நீங்க செய்யப் போகிற காரியமும் அதேதானே! உங்க வண்டவாளமே தெரியாத ஒருத்தி உங்களுக்குப் பெண்டாட்டியா வந்து சேரும்போது நீங்களும்தான் அவ கிட்ட பொம்பளையையே முன்னே பின்னே பார்த்திராதவர் மாதிரி ட்ராமா ஆடப் போறீங்க...!''

''ஆம்பளை என்ன ட்ராமா வேணுமானாலும் ஆடலாம்! ஆடவும் செய்வான்! எவளும் கேட்க முடியாது!''

கஸ்தூரி மணிமாறனை கையெடுத்துக் கும்பிட்டாள். ''நன்றி. போயிட்டு வாங்க.''

''போயிட்டேதான் இருக்கேன். போயிட்டு மறுபடியும் திரும்பி வர இது என்ன அந்தக் கபாலியோட வீடா?!'' - மணிமாறன் மிக இடக்காகக் கேட்டான்.

''தெரிஞ்சோ தெரியாமலோ கேட்டுட்ட லட்சத்தில ஒரு கேள்வி. இது நிஜமா கபாலி வீடு கிடையாதுதான். முடிஞ்சாச்சி அந்த வீட்டு வாழ்க்கை. இப்ப அந்த வாழ்க்கை கிடையாது. இனிமேலும் கிடையாது...''

''எப்ப இருந்து இந்த ஞானோதயம்னு தெரியலை...''

''எப்ப இருந்துங்கறது முக்கியம் கிடையாது. ஞானோதயம் வந்திருச்சி என்கிறதுதான் முக்கியம்!''

''இப்படியெல்லாம் பேசறதால கபாலி வீட்ல நீ கெட்டழிஞ்ச வாழ்க்கை நடத்தினது பொய்னு ஆயிடாது...''

''வாழ்க்கை பூரா அந்தக் கெட்டழிஞ்ச வாழ்க்கையே வாழ்ந்திட்டு இருந்தாகணும்னு கட்டாயம் எதுவும் கிடையாது. நீங்க ஒருத்தியைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கலாம்னா நான் மட்டும் ஒரு மனுசனைத் தேடிக் கல்யாணம் செய்துக்கக்கூடாதா? தப்பா அது?''

''தாராளமா ஒருத்தனை தேடிப் பிடிச்சி கல்யாணம் பண்ணிக்க. ஆனா தைரியம் இருந்தா அவன்கிட்ட உன் கபாலி வீட்டு வாழ்க்கையை மறைக்காம சொல்லிட்டு கல்யாணத்தைச் செய் - அப்ப நீ யோக்கியமானவ!''

''சொல்லிடலாம்னு தோணிச்சின்னா தைரியமா சொல்லிட்டே செய்வேன்...! அதுக்கெல்லாம் பயப்படறவ இல்லை நான்!''

''சொல்லிடேன் பார்க்கலாம்.''

''சொல்லிட்டா முகத்தை எங்கே கொண்டு போய் வச்சிப்பே?''



''நிஜத்தைச் சொன்ன பிறகும் உன்னை வந்து ஒருத்தன் கல்யாணம் செய்துப்பான்னு நினைச்சியானா, உன்னைப் போல மடச்சி வேற எவளும் இருக்க மாட்டா!''

''எல்லாம் தெரிஞ்ச மேதாவின்னு நெனைப்பு! கெட்டுப் போன ஒருத்தியை தெரிஞ்சே கல்யாணம் பண்ணிக்கிற ஆம்பளைங்க எத்தனையோ பேர் இருக்காங்க...''

''கண்டிப்பா அவன் ஒரு யோக்கியமான ஆளா இருக்க மாட்டான்!''

''மணிமாறன் மாதிரி!''

கஸ்தூரியிடம் வாங்கின இந்த வார்த்தையின் சவுக்கடியில் மணிமாறன் வெகுண்டு கொந்தளித்துப் போனான். ''வீணா நீ வம்பை விலைக்கு வாங்குறே! இந்த ஜென்மத்தில உனக்குக் கல்யாணமே நடக்க முடியாம பண்ணிடுவேன்!''

''இந்த மிரட்டலுக்கெல்லாம் பயந்திடுவேன்னு நினைக்கிறே பார் - அதான் வேடிக்கை! என் கல்யாணத்தை நடத்திக் காட்றேனா இல்லையானு பார்! தைரியம் இருந்தா உன் கல்யாணத்துக்கு நீ இன்விடேசன் அனுப்பினா என் புருஷனோடேயே உன் கல்யாணத்துக்கு வந்தும் காட்றேன்... தைரியம் இருக்கா உனக்கு - எனக்கு இன்விடேசன் அனுப்பறதுக்கு?''

''பொட்டச்சி உனக்கு இருக்குற தைரியம் ஒரு ஆம்பளையான எனக்கு இருக்காதுன்னு பாக்கறியா? ரெண்டே மாசத்தில அனுப்பி வைக்கிறேன் பார் - இன்விடேசன்...''

''நானும் என் தொழில் அதிபர் புருஷனோட வந்து நிக்கறேன் பார் கல்யாணத்திலே!''

''எவனோ மானங்கெட்ட தொழில் அதிபன் தயாரா இருக்கான் போல! அவன் யாராயிருந்தாலென்ன - என் ஆழ்ந்த அனுதாபம் அந்தப் பயலுக்கு!''

''அதே அனுதாபம்தான் உனக்கும்...''

''என்ன எழவுக்கு எனக்கு உன்னோட அனுதாபம்?''

''பெரிய கற்புக்கரசியா பாத்துத்தான் கல்யாணம் செய்துக்கனும்னு கிடந்து தவிக்கிறே பாவம்...! நான் அப்படிப்பட்டவ கிடையாதுன்னு தெரிஞ்ச விஷயம். அதனால என்னைப் பண்ணிக்க முடியாது உன்னால! இதுவே நான் முன்னே பின்னே தெரியாதவளா இருந்திருந்தா? கபாலி வீட்ல என்னை நீ பாக்காம இருந்திருந்தா - சத்தியமா என்னைக் கற்பு நிறைஞ்சவள்னுதான் நினைச்சிருப்பே! சொல்ல முடியாது - இந்நேரம் தாம்பூலமே மாத்தினாலும் மாத்தியிருப்பே! ஆனா இப்ப நான் சொல்ல வந்தது இதை இல்லை. மறுபடியும் ஒருநாள் வேற எங்கேயோ போய் வேற ஒரு பொண்ணை - முன்னே பின்னே நீ பாத்திராதவளை பெண் பார்ப்பே. அவளைப் பிடிச்சிப் போச்சின்னா அவளையே கல்யாணமும் பண்ணிப்பே. ஒருவேளை - அவளும் கடந்த காலத்தில ஏதோ ஒரு கட்டத்தில தப்புத் தண்டா எதுவும் பண்ணியிருந்தாகூட அது எதுவும் தெரியப் போறது கிடையாது உனக்கு! நீ கல்யாணம் பண்ணிக்கப் போறவளோட கடந்த காலம் உனக்குத் தெரியாமப் போகிற - அந்த ஒரு காரணமே அந்தப் பொண்ணோட ஒழுக்கத்துக்கு உத்திரவாதமாயிடாது! நான் சொல்ல வர்றது இதைத்தான்...''

கஸ்தூரி சொன்ன இதைக் கேட்டு மணிமாறன் செருக்குடன் விரல்களைச் சொடுக்கியபடி ஒரு சவால்போலக் கூறினான்: ''இதை நீ சொல்ல அவசியமே கிடையாது. எனக்கு ஒருத்தியோட மூஞ்சியைப் பார்த்தே சொல்லிட முடியும் - அவ யோக்கியமானவளா இல்லையான்னு...''

''அப்ப மணிமாறன் என்னைக் கல்யாணம் பண்ணிக்க இந்த ஜென்மத்தில சான்ஸ் கிடையாது?''

''எந்த ஜென்மத்திலேயும் கிடையாது!''



''இனிமே பேசறதுக்கு ஒண்ணும் கிடையாது. இடத்தைக் காலி பண்ணலாம்!''

''ஆனா கபாலி வீட்ல எப்பவாவது மீட் பண்றதுல ஆட்சேபணை கிடையாது!''

தேவையே இல்லாத சொல்தான் இது. இருந்தாலும் மணிமாறனின் இந்த வார்த்தையைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் கஸ்தூரி வேகமாக உள்ளே சென்றுவிட்டாள். செருக்கோடும் அலட்சியத்தோடும் அவள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மணிமாறனும் மெதுவாக அந்த வீட்டில் இருந்து வெளியேறினான். சும்மா ஒரு நடிகனுக்கு உரிய தோரணையில் வெளியேறினாலும் உள்ளூர அவனின் தலை தொங்கித்தான் போயிருந்தது. பெண் பார்ப்பதற்கு வந்து இறங்கியபோது உணர்வுகளில் இருந்த மொத்தக் குதூகலமும் கருகிப் பொரிந்துவிட்டிருந்தது. வேகமாக கஸ்தூரியின் உணர்ச்சிகளைக் குத்திக் கிழிக்கின்றாற் போலப் பேசி அவளின் மனசை காயப்படுத்தத் துடித்தானே தவிர - நிஜத்தில் மணிமாறனின் அத்தனை ஆவேச கத்தல்களுக்கும் காரணம் திமிரோ கோபமோ இல்லை. கபாலியின் வீட்டில் பல முறை அவனுடன் படுத்துக்கொண்டிருக்கும் கேடு கெட்ட ஒருத்தியை இப்படி விவரம் தெரியாமல் பெண் பார்க்கப்போய் கேவலப்பட்டுவிட்ட சிறுமையைத் தாங்க முடியாமல்தான் கோபம் என்ற தோற்றத்தில் மணிமாறன் கஸ்தூரியை அப்படி கடித்துக் குதறி விட்டிருந்தான்.

எத்தனை கடித்துக் குதறிவிட்டு வந்து என்ன? பலநாள் ஆனபிறகும்கூட மணிமாறனால் அந்த சிறுமைப்பட்ட உணர்வில் இருந்து மீளமுடியவில்லை. முதல் தடவையாக அவனுடைய கல்யாணத்திற்குப் பெண் பார்க்கப் போன மந்தகாச மனநிலையெல்லாம் அவனுள் சுக்கல் சுக்கலாக உடைந்து நொறுங்கிப் போய்விட்டது. கல்யாணம் என்ற வேகம் அவனுள் ஸ்தம்பித்தே போயிருந்தது. அதனால்

உடனே வேறொரு பெண்ணைப் பார்க்கத் தேவையான அடுத்த ஏற்பாடுகள் எதற்கும் மணிமாறனின் மனம் தயாராக வில்லை. அதுவும் இல்லாமல் கல்யாணத்திற்காக அவன் பார்க்கப்போகிற வேறொரு பெண் அவனுக்கு முன்பின் தெரியாதவளாக இருந்துவிட்டால் - அந்த ஒரே காரணம் அப்பெண் கடந்த காலத்தில் எந்தக் கறையும் இல்லாதவள் என்பதற்கான உத்திரவாதமாகிவிடாது என்று கஸ்தூரி சொன்ன சொல்லும் மணிமாறனின் நினைப்பைவிட்டு அகல மறுத்தது.

உடனே இன்னொருத்தியைப் பெண் பார்க்கிற நப்பாசை கூடப் பட முடியாமல் கஸ்தூரியின் இந்த வார்த்தைகள் அவனைத் தடுத்தாட்கொண்டிருந்ததில் அக்கம் பக்கம்கூடத் திரும்பமுடியாமல் கஸ்தூரியைப் பெண் பார்க்கப்போன கொடிய சம்பவத்தின் ஞாபகத்திற்குள்ளேயே மணிமாறன் வட்டம் போட்டுக் கிடந்ததில் அவனின் மனதில் கஸ்தூரியின் மேல் மானசீகமான போர் மூண்டிருந்தது! போரில் மணிமாறன் கஸ்தூரியைக் கூரிய கத்திகளால் குத்திக் கிழித்தான். துப்பாக்கிகளால் சுட்டுத் தள்ளினான். ஆனால் அவனின் எந்த வன்முறையிலும் கஸ்தூரி பிணமாகவில்லை! அதுதான் மணிமாறனை மேலும் மேலும் ஆக்ரோஷப்படுத்தியது. புறப்பட்டு நேராக சிந்தாதிரிப்பேட்டைக்குப் போய் நிஜமாகவே கழுத்தை நெரித்து கஸ்தூரியைக் கொன்று போட்டுவிட்டு வரலாமா என்றுகூடச் சில நேரங்களில் நினைத்தான்.

வாழ்க்கையில் நடக்கவே கூடாத ஏதோ ஒன்று நடந்து விட்ட சஞ்சலத்தில் இருந்து மணிமாறனால் விடுபடவே முடியவில்லை. கஸ்தூரியைத் தாண்டி அவனின் கல்யாண முயற்சியில் ஈடுபடுகிற மறுமலர்ச்சியும் அவனுக்குள் ஏற்பட வில்லை. பெரிய மனக்குழப்பத்தில் இருந்த அவனை ஊரில் இருந்து விடாமல் வந்த கடிதங்கள் எரிச்சல்தான் படுத்தின. கஸ்தூரியைப் பார்த்துவிட்டு வந்த உடனேயே அவளைப் பிடிக்கவில்லையென்று ஊருக்கு ஒரே ஒரு வரியை எழுதிப் போட்டு விட்டிருந்தான். அவர்களுக்கு என்ன தெரியும்? வேறு பெண்களைப் பற்றிய தகவல்களை மாறி மாறி எழுதிக் கொண்டிருந்தார்கள். அழகான லட்சணமான பெண்ணாம்! ரொம்ப நல்ல குடும்பமாம்! பெண் பெரிய வேலையில் இருக்கிறாளாம்!



கடிதங்களைப் பார்த்துப் பார்த்து ஒருநாள் மணி மாறன் ஊருக்கு ஒரு கடிதம் எழுதிப்போட்டான். விரைவில் அவனுக்கு வங்கியில் பதவி உயர்வு வரப்போவதாகவும், அப்போது வேறு ஊர் மாற்றல் இருக்கும் என்றும் - அதனால் அந்த மாற்றல் ஆன பிறகு அதற்கு ஏற்ற மாதிரி கல்யாணத் திற்குப் பெண் பார்த்துக்கொள்ளலாம் என்றும், அதுவரை தன்னைத் தொந்தரவு செய்யவேண்டாம் என்றும் கொஞ்சம் கடுமையான தொனியில் எழுதியிருந்த கடிதத்தைப் பார்த்த பிறகு ஊரில் இருந்து கல்யாண விஷயமாய் அவனுக்குக் கடிதம் வருவது நின்றது.

இப்படி ஒரு கடிதத்தை எழுதிப்போட்ட பிறகு தான் மணிமாறனுக்கும் கொஞ்சம் 'அப்பாடா' என்று இருந்தது. கொஞ்ச நாளாவது அவனுடைய கல்யாணம் என்ற பிரக்ஞையில் இருந்து விடுபட வேண்டும்போல இருந்தது அவனுக்கு. அந்த அளவுக்குப் பெண் பார்க்கப்போன முதல் அனுபவம் மணிமாறனைக் கலவரப்படுத்திவிட்டிருந்தது. வாழ்க்கையில் வேறு எந்தக் காரியத்தைச் செய்தாலும் செய்யா விட்டாலும் அந்தக் கஸ்தூரியை மட்டும் ஏதாவது ஒரு வழியில் பழிதீர்த்தே ஆக வேண்டும் என்ற வன்மத்தை அந்த அனுபவம் மணிமாறனுக்குள் ஆழமாக விதைத்திருந்தது. அந்த விதையும் மக்கி மடிந்து போகவில்லை. முள்புதராய் வளர்ந்து கிடந்தது. - அதன் இரண்டு மூன்று மாத வளர்ச்சியின் நெடியாய் மணிமாறனின் மனதில் எண்ணம் ஒன்று வியாபித்தது.

கடந்த இந்த மூன்று மாதங்களில் அக்கம்மா வீட்டுப் பக்கமோ கபாலி வீட்டுப் பக்கமோ போக அவன் அறவே மறந்து போயிருந்தான். கஸ்தூரியோடு மானசீகப் போர் செய்து கொண்டிருக்கவே நேரம் சரியாக இருந்து விட்டது மணிமாறனுக்கு! இப்போது கிளம்பிப் போனால் என்ன? குறிப்பாக கபாலி வீட்டுக்கு! அதுவும் குறிப்பாக அங்கே இருக்கும் கஸ்தூரி என்ற சுபாவை நோக்கி!

இந்தக் கோணத்தில் மனம் வேலை பார்க்கத் தொடங்கியதும் மணிமாறன் அவனுடைய அகம்பாவ ஆண்மையை முழுவதுமாகத் திரும்பப் பெற்றுவிட்டான்! கஸ்தூரியைப் பழி வாங்குவதற்கான நூதன வழி கிடைத்துவிட்டது அவனுக்கு. இப்போதும் அவள் கல்யாணத்திற்கெல்லாம் வழி இல்லாமல் கபாலியின் வீட்டில் பழைய வாழ்க்கையையே மேற்கொண்டிருந்தால் மணிமாறன் கிளம்பி அங்கே போய்விடலாம்! ஐந்து நூறு ரூபாய் நோட்டுக்களை கபாலியிடம் வீசி எறிந்து விட்டு கஸ்தூரியின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு ஆறாம் நம்பர் அறைக்குள் போய் கதவைச் சாத்திக்கொண்டால் போதும்! அங்கே மணிமாறனுடன் படுக்கையைப் பகிர்ந்து கொள்ள முடியாது என்றெல்லாம் கஸ்தூரி மூஞ்சியை திருப்பிக்கொள்ள முடியாது! தொழில் தர்மத்தை அங்கு அவள் கடைப்பிடித்தாக வேண்டும்! இல்லாவிட்டால் கபாலி அவளை அடித்தே சாகடித்து விடுவான்!

புதிய மனநிலையில் மணிமாறன் ரொம்ப சுறுசுறுப்பாகி விட்டான். மறுபடியும் கஸ்தூரியைக் கபாலி வீட்டுக் கட்டிலில் சந்திப்பதுதான் அவனின் மானசீகப் போரின் வியூகம்! அவளுடன் ஏற்படுத்திக்கொள்ளப்போகிற புதிய பாலுறவுதான் அவனின் வெற்றி வாகை! கஸ்தூரியை மனைவியாக்கிக் கொள்வதுதான் மணிமாறனுக்குக் கசப்பானது! அவளை விலைமகளாகவே பகிர்ந்துகொள்வது ரொம்ப இனிப்பானது அவனுக்கு!



மணிமாறன் அவசரமாகக் கடவுளைக் கும்பிட்டான்! கஸ்தூரிக்குக் கல்யாணம் ஆகி இருக்கக்கூடாது என்று இறைவனைப் பிரார்த்தித்தான்! வாழ்க்கையில் இன்னும் ஒரே ஒரு தடவை அவளுடன் கட்டிலைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று பகவானை பக்தியோடு துதித்தான். கட்டாயம் கடவுள் அவனுடைய இந்த ஒரே ஒரு பிரார்த்தனைக்கு செவி சாய்ப்பார் என்று எதிர்பார்க்கவும் செய்தான் மணிமாறன்! கல்யாணத்திற்கு நாள் பார்ப்பதுபோல கபாலி வீட்டிற்குப் போக ஒரு நாளும் கிழமையும் பார்த்தான். போக வேண்டிய அந்தக் கிழமைக்கு முந்தின நாள் அவனுடைய வங்கிப் பணியில் ஆழ்ந்திருந்தபோது மணிமாறனுக்குக் கடிதம் ஒன்று வந்தது.

மணிமாறனுக்கு அவன் தங்கியிருக்கும் அறையின் முகவரிக்குத்தான் கடிதங்கள் வரும். வங்கி முகவரிக்கு அநேகமாக வராது! அதனால் சின்ன ஆச்சர்யத்துடன் கடித உறையைக் கையில் எடுத்தான். ஒரு கல்யாண அழைப்பிதழ் அது! உறையின் கீழ் இடதுபுறம் பார்வையைத் தாழ்த்தி மணமக்கள் யார் என்று பார்த்தான். மணிமாறனின் இதயம் ஒரு நிமிடம் நின்றது! அவனின் கண்கள் இரண்டு நிமிடம் மூடிக்கொண்டன! மூன்று நிமிடங்கள் அவனின் மனம் கடலாகக் கொந்தளித்தது! பல்லைக் கடித்தபடி கல்யாண அழைப்பிதழை வாசித்தான். திருநிறைச் செல்வி கஸ்தூரிக்கும் திருநிறைச் செல்வன் கோபாலகிருஷ்ணன் என்பவருக்கும் கல்யாணம்! அதுவும் நாளைக்கு! கஸ்தூரியை மீண்டும் சந்தித்துவிட்டு வர மணிமாறன் குறித்து வைத்திருந்த அந்த அதே - 'நாளைக்கு!'

அவனுக்கு வந்த கண்மூடித்தனமான துவேஷத்தில் கல்யாண அழைப்பிதழைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்துக் குப்பைக் கூடையில் எறிந்தான். ஏமாற்றத்திலும் ஆங்காரத்திலும் உடம்பெல்லாம் நடுங்கியது மணிமாறனுக்கு. படுபாவிக்

கடவுள் - அவனுடைய பிரார்த்தனையைக் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை! பிரார்த்தனையை காதில் போட்டுக் கொள்ளாவிட்டாலும்கூடப் போகட்டும். ஒரு தொழில் அதிபனையே கஸ்தூரிக்குப் புருஷனாக்கிக் கொடுத்துமா கடவுள் மணிமாறனைப் போட்டுக் கிண்டல் பண்ண வேண்டும்?! இதைத்தான் தாங்கிக்கொள்ள முடியவில்லை அவனால்! தாங்கிக்கொள்ள முடியவில்லை என்பதற்காக என்ன செய்ய முடியும்? அழுது ஒப்பாரியா வைக்க முடியும்?!

மணிமாறன் பேச்சு மூச்சு இல்லாமல் அவனுடைய அறையில் முடங்கிப் போய்விட்டான். பொங்கிக் கொந்தளிக்கிற மானசிக சக்திகூட இல்லை அவனுக்கு! கஸ்தூரியை நோக்கி அவன் தொடுத்திருந்த மானசிகப் போரில் படுதோல்வி அடைந்துவிட்டிருந்தான்! நாளைக்குக் கபாலி வீட்டில் கஸ்தூரியைப் பார்க்க முடியாமல் போயிருந்தால்கூட தோற்றுப்போன உணர்வு வராது மணிமாறனுக்கு! நாளைக்கு தியாகராய நகர் போக் ரோடு கல்யாண சத்திரம் ஒன்றில் ஒரு தொழில் அதிபனுடன் அவளுக்குக் கல்யாணம் என்பதுதான் அவனைப் போட்டு ஆயிரம் அம்புகளாகத் துளைத்தெடுத்து விட்டது. இதற்குமேல் தோற்றுப்போக முடியாது மணிமாறன்! அதுவும் போயும் போயும் ஒரு இவளிடம்!

மணிமாறனுக்கு இந்த அவமானத்தில் இருந்து மீள்வதற்கு ஏதாவது செய்ய வேண்டும் போல இருந்தது. ஆனால் என்ன செய்வதென்று தெரியவில்லை! நேராக கஸ்தூரியின் கல்யாணம் நடக்கிற சத்திரத்திற்குப் போய் ஒரு கலாட்டா பண்ணலாமா என்று நினைத்தான்! கடந்த காலத்தில் நிஜத்தில் அவள் என்ன தொழில் செய்து கொண்டிருந்தாள் என்பதை அத்தனை பேர்களின் மத்தியில் போட்டு உடைத்து தூள் பறக்கச் செய்து விடலாமா என்று யோசித்தான்! ஆனால் நிஜமாகவே யோசனை செய்து பார்த்ததில் அதெல்லாம் சினிமாக்கதைகளில்தான் சாத்தியம் என்பது தெரிந்தது!



நிஜ வாழ்க்கையில் அதற்கெல்லாம் வாய்ப்பே கிடையாது! - இரண்டு நாட்கள் மணிமாறன் வேலைக்குக்கூடப் போகாமல் அவனுடைய அறையின் கட்டிலில் கவிழ்ந்தபடி படுத்தே கிடந்தான்.

இந்த இரண்டு நாட்களும் சரியாகச் சாப்பிட்டோமா என்ற பிரக்ஞைகூட இல்லை அவனுக்கு. மனம் பூராவும் கஸ்தூரியிடமே இருந்தது! தொழில் அதிபருடன் அவளின் முதல் இரவு முடிந்துபோயிருக்கும்! 'பாவம் தொழில் அதிபர்' என்று மணிமாறன் வறண்ட புன்னகையுடன் முனகிக் கொண்டான்! கஸ்தூரியுடன் படுக்கையைப் பகிர்ந்து கொண்டிருக்கும் நேரங்களில் கண்டுகளித்திருக்கும் அவளின் அந்த வாளிப்பான நிர்வாண உடம்பின் ஒவ்வொரு அவயத்தையும் மணிமாறன் ஞாபகப்படுத்திப் பார்த்தான்! ஞாபகங்கள் என்னவோ குதூகலத்தைத்தான் தந்தன! தொழில் அதிபர் கோபாலகிருஷ்ணனின் மனைவியின் உடம்பை ஒரு நேரத்தில் புரட்டிப் புரட்டி எடுத்திருக்கும் இறுமாப்பு மணிமாறனின் நெஞ்சில் நிறைந்து கசிந்தது!

அந்த மானசிக சுகத்தில் மூழ்கிப் போயிருந்தவனின் மனதில் கடைசியாக ஒரு வியப்புத் தோன்றியது. சொன்னபடி கஸ்தூரி ஒரு தொழில் அதிபரையே மணந்து கொண்டிருப்பது மணிமாறனை இறுதியில் கொஞ்சம் அசரத்தான் வைத்து விட்டது! நினைத்துப் பார்க்கப் பார்க்க கஸ்தூரியின் நெஞ்சுரம் மணிமாறனை வியக்கவே வைத்தது! துளி பயம் இல்லாமல் அவனுக்குக் கல்யாண பத்திரிகையை அனுப்பி வைத்த அவளுடைய வீரம் அவனை மலைக்கச் செய்தது! நிஜமாகவே இதற்கு ஒரு பயங்கர தைரியம் வேண்டும். அதற்கும்மேல் வேறொரு மாதிரியான நாணயமும் இருக்க வேண்டும்!

நினைக்க நினைக்க மணிமாறன் அவனுடைய சுபாவத்திற்கு நேர் எதிரான சிறிய மனநெகிழ்ச்சிக்கு ஆளானான்!

கஸ்தூரியின் வீரத்தின் மேலும் நாணயத்தின் மேலும் சின்னதாக அபிமானம்கூட அவனுடைய மனதில் துளிர்த்தது! கஸ்தூரி மட்டும் விலைமகளாக அறிமுகம் ஆகாமல் இருந்திருந்தால் அவளைக் கல்யாணம் செய்துகொள்ள எந்த ஆட்சேபணையும் இருந்திருக்காதோ என்னவோ! ரொம்பவும் யோசனை செய்து பார்த்தபோது ஏதோ ஒரு காலகட்டத்தில் ஒருத்தி விலைமகளாக இருந்திருந்தால்தான் என்ன?! கஸ்தூரி அன்றைக்குக் கேட்ட மாதிரி வாழ்க்கை பூராவுமே ஒரு விலைமகள் விலைமகளாகவேதானா இருக்கணும்? அவசியம் கிடையாது என்றுதான் மணிமாறனுக்குத் தோன்றியது!

வாழ்க்கையில் கஸ்தூரி உட்பட அவன் சந்தித்திருக்கும் விலைமகள்கள் அத்தனை பேரையும் வரிசையாக நினைத்துப் பார்த்தான்! அவர்களெல்லாம் இல்லாமல் போயிருந்தால் அவனுடைய பாலுணர்வுப் பீறிடல்கள் எப்படி வடிகால் இல்லாமல் குமுறி தவித்துப் போயிருக்கும்! அவனின் பாலுறவு வாழ்க்கையைக் காப்பாற்றியவர்கள் இந்த விலைப்பெண்கள் தானே! இன்னும் இவனைப்போல ஏராளமான வடிகால் இல்லாத ஆடவர்களைக் காப்பாற்றுவதும் விலைப்பெண்கள் தானே! சென்னையில், மும்பையில், கல்கத்தாவில் என்று ஊர் ஊராக எத்தனை எத்தனை விலைப்பெண்கள்...! இன்னும் நாடு பூராவும் உலகம் பூராவும் எத்தனை லட்சோப லட்ச விலைப்பெண்கள்...! நினைத்துப் பார்க்கப் பார்க்க மணிமாறனுக்கு பிரமிப்பாக இருந்தது! விலைமகள்கள் இல்லாத ஊர் கிடையாது; தேசம் கிடையாது! விலை மகள்கள் இல்லாத ஆண்களின் உலகம் நிஜமாகவே மிகப் பெரிய சூனியமாகத்தான் இருக்கும்!

மணிமாறன் உணர்ச்சிவசப்பட்டு விலைமகள்களின் உலகத்தை ஒருமுறை மானசீகமாக வணங்கினான்! மிகவும் முறைகேடாக நடந்துகொண்டதற்காகக் கஸ்தூரியிடம் மானசீகமாக மன்னிப்பு கேட்டுக்கொண்டான்! அவனுடைய



மனம் லேசாகியது. தோல்வி மனப்பான்மை கரைந்து மறைந்தது. தாமதமாகிவிட்டாலும் சுருக்கமாக இரண்டே இரண்டு வரியில் ஒரு வாழ்த்தை எழுதி அவனுக்குத் தெரிந்த கஸ்தூரியின் சிந்தாதிரிப்பேட்டை வீட்டு முகவரிக்கு அனுப்பி வைத்தான்.

மீண்டும் அவனின் கல்யாணத்திற்குப் பெண் பார்க்கிற மனநிலை மலர்ந்துவிட்டிருந்தது. ஒரு நல்ல விலைமகளாகப் பார்த்து கல்யாணம் செய்யலாமா என்று மணிமாறன் ஒரே ஒரு நிமிஷம் யோசித்துப் பார்த்தான்! ஊஹூம்! எங்கேயோ ஒரு மூலையில் அவனின் மனம் தயங்கியது! பயந்தது! அதெல்லாம் வேண்டாம் என்று மறுத்தது! மணிமாறன் நிஜமாகவே இந்த நிமிஷம் விலைப் பெண்களின் மேல் மிகவும் மரியாதை வைத்திருக்கிறான்! அவர்களுக்காக அனுதாபப்படுகிறான்! வேறு ஏதாவது வழியில் அவர்களுக்கு எந்த உதவி செய்யவும் அவன் தயாராக இருக்கிறான்! கல்யாணம் செய்து கொள்வது என்கிற ஒன்று மட்டும் வேண்டாம்! ஒரு நல்ல ஒழுக்கமுள்ள குடும்பப் பெண்தான் அவனுக்கு வேண்டும்!

மீண்டும் கல்யாணத்திற்குப் பெண் பார்க்க ஆரம்பிக்கச் சொல்லி மணிமாறன் ஊருக்குக் கடிதம் எழுதிப்போட்டான். ஆனால் பெண் பார்க்கிற விஷயத்தில் இப்போது ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்திருந்தான். அவனுடைய ஊர் பக்கத்துக் கிராமங்களில் மட்டுமே பெண் பார்க்கும்படி கடிதத்தில் குறிப்பிட்டிருந்தான். எந்தக் காரணத்திற்காகவும் சென்னை பெண்கள் வேண்டவே வேண்டாம் என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான்!

இன்னொரு விஷயத்தில்கூட தீர்மானமாக இருந்தான் மணிமாறன். கஸ்தூரி ரொம்ப தைரியமாக அவளுடைய கல்யாணத்திற்குப் பத்திரிகை அனுப்பி இருந்தாள். ஆனால்

மணிமாறனுக்கு அவளின் கல்யாணப் பத்திரிகையை பதிலுக்குக் கஸ்தூரிக்கு அனுப்புகிற உத்தேசம் எதுவும் கிடையாது! இனிமேல் எந்த வழியிலும் விலைமகள்கள் உலகத்தோடு எந்தத் தொடர்பு வைத்துக் கொள்ளவும் அவன் தயாரில்லை! இப்போது கஸ்தூரியே அந்த உலகத்தில் இல்லைதான். இருந்தாலும் வேண்டாம்!

ஆனாலும் என்ன? கஸ்தூரியின் வாழ்க்கையில் நடந்து விட்ட ஒரு கல்யாணம் மணிமாறனின் வாழ்க்கையில் நடக்கவே இல்லை! எத்தனையோ ஊர்களுக்குப் போய் எத்தனையோ குடும்பங்களில் அவனும் எத்தனையோ பெண்களைப் பார்த்துவிட்டான். எந்தக் குடும்பத்துப் பெண்ணோடும் அவனுக்குக் கல்யாணம் என்பது நிச்சயிக்க முடியாமல் நழுவிப் போய்க்கொண்டே இருந்தது. ஒரு இடத்தில் பேச்சு வார்த்தையில் ஏதாவது சரிப்பட்டு வராமல் போய்விடும். அல்லது பயந்துவிடும்படி அபசகுனமாக ஏதாவது நடந்துவிடும். அல்லது பெண் பார்க்கப்போன இடத்தில் அந்த நேரம் பார்த்து யாராவது திடீரென்று சிவ லோக பதவி பெற்று விடுவார்கள்!

இன்னொரு சமயம் வெளியூர் ஒன்றுக்கு பெண் பார்ப்ப தற்காக மணிமாறனின் குடும்பத்தினர் பயணம் போன டாக்சி ஒரு விபத்துக்குள்ளாகி மூக்கு முகம் எல்லாம் ரத்தம் வர அடிபட்டு மணிமாறன் உட்பட எல்லோரும் உயிர் பிழைத்ததே தம்பிரான் புண்ணியமாகிவிட்டது! பெண் பார்க்கப் போயே அலுத்துப் புளித்துப் போய்விட்டது மணி மாறனுக்கு!

இதற்கெல்லாம் உச்சக்கட்டமாக வேறொரு அனுபவம் வேறொரு பெண் குடும்பத்தால் மணிமாறனுக்கு நிகழ்ந்து விட்டது. மணிமாறனுக்குப் பெண் கொடுக்க ஆசைப்பட்ட நாகப்பட்டிணத்துக்காரர் ஒருத்தர் ரொம்ப வருஷமாக



சென்னையில் தனியாக இருக்கும் மணிமாறனின் பழக்க வழக்க நடப்பு எல்லாம் எப்படியென்று நான்கு பேரிடம் விசாரித்துப் பார்த்துவிட்டு வரலாம் என்ற அபிப்பிராயத்தில் பஸ் ஏறி சென்னை போனார்.

அன்றைக்குப் பார்த்து மணிமாறன் ஏதோ கொஞ்சம் உடம்பு சரியில்லையென்று வங்கிக்குப் போகாமல் அறையில் இருந்தான். அந்த நேரம் பார்த்து வங்கிக்குப் போன நாகப் பட்டினத்துக்காரர் அங்கு பணியில் இருந்த இரண்டு பேரிடம் மணிமாறனைப் பற்றி விசாரித்துவிட்டார்! விசாரித்தவரின் முகம் பேய் அறைந்தாற்போல ஆகிவிட்டது! அந்த வங்கிக் காரர்கள் இரண்டு பேரும் மணிமாறனுக்கு பாலுறவுத் தொடர்புகள் இருந்த அக்கம்மா வீடுகளைப் பற்றியும் கபாலிகள் வீடுகளைப் பற்றியும் அக்கு வேறு ஆணி வேறாகக் கழட்டிவிடுகிற மாதிரி சொல்லிவிட்டார்கள்!

பாவம் மணிமாறன்! இப்போது அவன் மழைக்காகக் கூட கபாலி வீட்டுப் பக்கம் ஒதுங்குவதில்லை! ஆனால் அதைப் பற்றிக் கவலை கிடையாது யாருக்கும்! ஒரு கட்டத்தில் மழை பெய்தபோதெல்லாம் மணிமாறன் அந்த வீடுகளில்தான் சர்வ சதா நேரமும் கும்மாளம் போட்டிருக்கிறான்! அவனுடைய ஜென்மத்துக்கும் போதாதா இது?

விசாரிப்பதற்கு சென்னை போன நாகபட்டணத்துக் காரர் போன சுவடே தெரியாமல் ஊர் வந்து சேர்ந்துவிட்டார். மணிமாறனின் இந்த வண்டவாளம் எல்லாம் தெரிந்தபிறகு அவனுக்குப் பெண்ணைக் கட்டிக் கொடுக்க பைத்தியக்காரர் இல்லை அவர். கட்டிக் கொடுக்காமல் மட்டும் இருந்துவிட வில்லை நாகப்பட்டிணத்துக்காரர். மணிமாறனின் இந்த அசிங்கம் பிடித்த கதை பூராவையும் கண்ணில் பட்டவர்கள் எல்லாரிடமும் சொல்லித் தீர்த்துவிட்டார் தீர்த்து. சுவரொட்டிதான் ஒட்டவில்லை அவர்! இது போதாதா?

அடுத்த ஆறு மாதத்திற்கு நாகப்பட்டிணத்தில் சந்து பொந்து எல்லாம் மணிமாறனின் இந்த சித்து விளையாட்டுக்கள் பற்றிய பேச்சுக்கள்தான்! பாவம் மணிமாறன்! அவனுடைய கல்யாணக் கதை கந்தல் கோலமாகிவிட்டது! நாகப்பட்டிணத்திலும் சரி; அதன் சுற்று வட்டார பட்டிதொட்டிகளிலும் சரி; அவனுக்குப் பெண் தர நாதி இல்லாமல் போய்விட்டது!

ஆரம்பத்தில் இதைப் பற்றியெல்லாம் மணிமாறன் லட்சியப்படுத்தாமல் அவன்பாட்டுக்குத்தான் இருந்தான்! ஆனால் தொடர்ந்து அவனுக்குப் பெண் தர ஒருத்தரும் முன் வராமல் போனதில் மணிமாறன் கொஞ்சம் எரிச்சலாகிவிட்டான்! எரிச்சல் எத்தனை நாளைக்குத் தொடர்கதையாய் இருந்து கொண்டிருக்கும்... எரிச்சல் பெருங் கோபமாகிவிட்டது! கோபம் ஆவேசமாகியது. ஆவேசம் ஆக்ரோஷமாகியது. என்ன ஆகி என்ன செய்ய? மணிமாறனுக்குப் பெண் கொடுக்க ஒரு குஞ்சு முன்வரவில்லை என்பதுதான்! 'பெண் கொடுக்கப் பிடிக்கலைன்னா போங்கடா தேவடியா மவன்களா!' என்று ஒரு கொந்தளிப்பு கொந்தளித்து பெண் தராதவர்கள் எல்லாரையும் தூக்கி எறிந்தான்! மணிமாறனின் மிகப் பெரிய ஆதங்கம் என்ன தெரியுமா? 'தேவடியாளுங்களுக்கே கல்யாணமாகிறது! தேவடியா வீட்டுக்குப் போனவனுக்கு என்னமோ கல்யாணம் ஆகமாட்டேன் என்கிறது!'

நினைத்துப் பார்த்தபோது இது கடவுள் மணிமாறனுக்கு இழைக்கிற அநீதியாகக்கூடத் தோன்றியது. எத்தனை நாளைக்கு அவன் இந்த அநீதியைத் தாங்கிக்கொண்டிருப்பான்? மணிமாறன் அவனுக்குள் ஒரு தேதியை நிர்ணயம் பண்ணி அந்தத் தேதிக்குள் கல்யாணம் நடந்தாக வேண்டும் என்று கெடு ஒன்று வைத்தான். அந்தத் தேதிக்குள் கல்யாணம் நடக்காமல் போனால் மணிமாறன் இப்போது சிறிது காலமாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒழுக்கமான வாழ்க்கையைத் தலைமுழுகி விடுவான்! மனைவி என்பவள் கிடைக்காமல் போனால்கூட



பாலுறவு சுகம் கிடைத்தாக வேண்டும் அவனுக்கு! தொடர்ந்து ரொம்ப நாள் அது இல்லாமல் மணிமாறனால் இருக்க முடியாது!

கடவுளுக்கு மணிமாறனிடம் இரக்கம் ஏற்படுகிற மாதிரியே இல்லை! அவன் கெடு வைத்த தேதி தாண்டிவிட்டது. கல்யாணமாகிற வழியே தெரியவில்லை. அவ்வளவுதான்; மணிமாறன் கல்யாணக் கதவை இழுத்து மூடி பெரிய பூட்டாகப் போட்டு பூட்டிச் சாவியை எடுத்துவிட்டான்! இனிமேல் அவனுக்குக் கல்யாணமும் தேவையில்லை; கருமாதியும் தேவையில்லை! ஒரே ஒரு கூரையின் கீழ் ஒதுங்கிக் கரை ஏறிவிடலாம் என்று திட்டம் போட்டான்! ஆனால் கடவுளின் திட்டம் அவனுடைய திட்டத்துடன் ஒத்துப்போகவில்லை! அதனால் மணிமாறன் அவனின் திட்டத்தை மாற்றிக் கொண்டு விட்டான்.

இனி மறுபடியும் அவனுக்குப் புகலிடம் அல்லது சரணாலயம் - கபாலிகள் வீடுகள்தான்! இதற்குமேல் தாங்க முடியாது அவனால். எல்லோரையும் போல எல்லா உணர்ச்சிகளும் உள்ள மனிதன்தானே அவனும்! அவனுக்குக் கல்யாணம் செய்து வைக்க கடவுளுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பார்த்தான்! கடவுள் பெரிய இவர் மாதிரி அவன் கொடுத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை! இதற்கு மணிமாறனை யாரும் எதுவும் சொல்லக்கூடாது. அவன் பொறுப்பாளி கிடையாது இதற்கு!

நீண்ட இடைவெளிக்குப் பிறகு மணிமாறன் கபாலி வீட்டுப் பக்கம் பாலுறவு மழைக்காக ஒதுங்கப் போனபோது சிகப்புக் கம்பள வரவேற்பு தரப்பட்டது! ஒன்பது வருஷம் ரெகுலராக வந்து கொண்டிருந்த ரெகுலர் வாடிக்கையாளர் - பெரிய இடைவெளிக்குப் பிறகு மீண்டும் வந்திருப்பதில் கபாலிக்கு ரொம்ப ரொம்ப மகிழ்ச்சி. மணிமாறனுக்கு

அவன் ஒரு பிளேட் முட்டை பிரியாணியும் தந்தூரி சிக்கனும் கொடுத்து உபசரித்ததில் மணிமாறனுக்கும் ரொம்ப ரொம்ப மகிழ்ச்சிதான்! ஆனால் என்ன ஒரு ஆதங்கம் - இதே முட்டை பிரியாணியை மாமியார் வீட்டில் சாப்பிட்டிருந்தால் விசேஷமாக இருந்திருக்கும்? அந்தக் கொடுப்பினைதான் இல்லையே! மணிமாறனுக்கு கபாலி வீட்டுப் பிரியாணிதான்! எப்படியோ பிரியாணி கிடைக்கிறதே! அதற்கும் வழி இல்லாத துரதிர்ஷ்டசாலிகள் எத்தனைப் பேர் இருக்கிறார்கள்... மணிமாறனுக்கு கபாலி பிரியாணி கொடுத்து உபசரித்ததெல்லாம் சந்தோஷமாகத்தான் இருந்தது.

ஆனால் மணிமாறனைப் பார்த்ததும் ''வாங்க மணிமாறன் சார் - வாங்க; தொடர்ந்து ரொம்ப நாள் நீங்க வராததுல உங்களுக்குக் கல்யாணமாயிருச்சோன்னு நெனைச்சேன்...!'' என்று கபாலி சொல்லி வரவேற்றதுதான் மணிமாறனுக்குக் கொஞ்சம் வெட்கக்கேடாக இருந்தது! நிஜமாகக் கல்யாணமாகி இருந்தால் இந்தப் பக்கம் தலை வைத்துப் படுத்திருக்கமாட்டான்தான் அவன்! அதற்கு வக்கு இல்லை மணிமாறனுக்கு! - இந்த வெட்கக்கேடு பீறிட வைத்த கோபத்தையும் ஆக்ரோஷத்தையும் அவன் கபாலி வீட்டுக் கட்டிலில் காட்டினான்.

ஒவ்வொருத்தன் மிகுந்த வேதனையும் துக்கமும் அடைந்தால் குடித்துத் தள்ளுவான் - வேதனையை மறைக்க. கல்யாணம் பண்ணிக் கொள்ள வழி பிறக்காத ஏமாற்றத்திலும் துயரத்திலும் மணிமாறன் அதில் இருந்து தன்னை மறக்க மேலும் மேலும் கபாலி வீட்டிற்கும் அக்கம்மா வீட்டிற்குமாக ஓடி ஒதுங்கிக்கொண்டிருந்தான்.

இதன் மத்தியில் ஒருநாள் அவன் அறையில் தனியாக இருக்கப் பிடிக்காமல் ஒரு சினிமா தியேட்டருக்குப் போய் அவனுடைய 'கைனடிக் ஹோண்டா'வில் இறங்கியபோது வெள்ளை நிற 'சுமோ'வில் இருந்து மணிமாறனின் ஒரு



காலத்துப் படுக்கைத்தோழி கஸ்தூரி பெரிய சீமாட்டிபோல இறங்கினாள். விலை உயர்ந்த உடையிலும் ஆபரணங்களிலும் பார்த்தாலே ஆசைப்படுகிற விதமான தளதளவென்ற தோற்றத்தில் இருந்தாள் கஸ்தூரி... அவளுடன் இறங்கிய மிடுக்கும் கம்பீரமும் கொண்டிருந்தவர்தான் கஸ்தூரியின் தொழில் அதிபர் கணவர் போலிருக்கிறது! பார்த்தாலே தெரிந்தது - பணம் கொழுத்த ஆசாமியென்று! மனுசன் தங்க பஸ்பம் சாப்பிடுவான் போலும்! அப்படியொரு தங்கத்தின் மினுமினுப்பு இருந்தது அவனின் உடம்பில்! அவளைப் பார்க்கப் பார்க்க பொறாமையாக இருந்தது மணிமாறனுக்கு! பொறாமைப்படாமல் இருக்க முடியவில்லை அவனால்! அப்படி ஒரு சினிமா நடிகையாட்டம் இருந்தாள் கஸ்தூரி! ஒரு சினிமா நடிகையைக் கல்யாணம் செய்கிற மாதிரியான அதிர்ஷ்டம் வேறு எதுவுமே கிடையாதே உலகத்தில்! நிஜமாகவே மணிமாறன் மனதிற்குள் கிடந்து புழுங்கினான்!

அவள் கல்யாணம் பண்ணியிருக்க வேண்டியவன்! அநியாயமாக மணிமாறன் அந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விட்டு விட்டான். இனிமேல் வருத்தப்பட்டு என்ன பயன்? ஒரு காலத்தில் அவளுடன் படுக்கையைப் பகிர்ந்து கொண்டிருக்கும் அனுபவங்களை நினைத்து மனதைச் சமாதானம் செய்துகொள்ள வேண்டியதுதான்!

எதிர்பாராமல் சினிமாத் தியேட்டரில் கஸ்தூரியைப் பார்த்துவிட்ட இந்தச் சம்பவத்தில் மணிமாறனின் மனதைக் குத்திக் கிழித்து - கிட்டத்தட்ட ரத்தத்தை வரவழைத்த விஷயம் - அவனைக் கஸ்தூரி ஒரு புழுவைப்போல் பார்த்த அந்தப் பார்வைதான். அவளுடைய பார்வையில் பட்டுவிடக் கூடாது என்றுதான் மணிமாறன் அந்தப் பாடு பட்டான்! அவன் பட்ட பாடு எல்லாம் வீணாகப் போய்விட்டது. கஸ்தூரியின் கண்களில் பட்டுவிட்டான் மணிமாறன்! அவனுடைய கண்ணில் பட்டு விட்டதில் கஸ்தூரி கொஞ்சம்

கூட பயப்பட்ட மாதிரி தெரியவில்லை! அதுமட்டுமா? மணிமாறனைப் பார்த்த மாத்திரத்தில் அவனுக்கு இன்னும் கல்யாணமாகவில்லை என்பதையும் அவள் புரிந்துகொண்டு விட்ட தோரணையும் கஸ்தூரியின் கண்களில் இருப்பதாகத் தோன்றியது. இதுதான் மணிமாறனை ரொம்பவும் இம்சை பண்ணியது! இப்போதெல்லாம் இந்த உணர்வு வேறு அவனைப் போட்டு சில நேரங்களில் வேதனைப்பட வைக்கிறது; அல்லது வெட்கப்பட வைக்கிறது!

பார்க்கிறவர்களுக்கு அவன் கல்யாணமாகி பெண்டாட்டி பிள்ளையோடு வாழ்கிற குடும்பஸ்தன் மாதிரி தெரிய வேண்டும் என்பதுதான் மணிமாறனின் இப்போதைய ஆதங்கம்! பார்ப்பதற்கு அப்படித் தெரிகிறோமா என்பது பற்றி அவனுக்கே சந்தேகம் இருந்ததால் ஒருவித தாழ்வுணர்ச்சி கூட இதனால் சில நேரங்களில் அவனுடைய மனதில் ஏற்படுகிறது! ஒவ்வொரு சமயங்களில் இதனால் ரொம்ப வேண்டிய நண்பர்கள் வீட்டுக் கல்யாணங்களில்கூட மணி மாறன் கலந்துகொள்வதைத் தவிர்த்துவிடுகிறான்! இந்தக் கல்யாணங்களுக்குப் போவதில் இன்னொரு தர்மசங்கடமும் இருக்கிறது. வேண்டியவர்கள் யாராவது ''என்ன மணிமாறன் சார் - நீங்க எப்ப உங்க கல்யாணச் சாப்பாடு போடறதா இருக்கீங்க?'' என்று எரிச்சல் வருகிற மாதிரி அங்கே கேட்டு வைப்பார்கள்! வழி இல்லாமல் மணிமாறன் அவர்கள் முன்னால் அசடு வழிய நின்றாக வேண்டும்! நிஜம் தெரியாமல் ஒருத்தர் ஒரு கல்யாணத்தில் மணிமாறனைப் பார்த்து ரொம்ப ஆதங்கம் காட்டிச் சொன்னார்: ''உங்களோட கல்யாணத்தை ரொம்பத் தான் லேட் பண்ணிட்டு இருக்கீங்களே மணிமாறன்!''

இதைக் கேட்ட மணிமாறனுக்கு கடுப்பாக இருந்தது! கல்யாணத்தை 'லேட்' ஆக்க அவனுக்கு ரொம்பதான் ஆசை! ''போங்கடா டேய்! உங்க வேலையைப் பாத்துப் போங்கடா!''



- என்று பாவம் மனசுக்குள் கிடந்து குமுறிக்கொண்டதற்கு மேல் எதுவும் செய்ய முடியவில்லை அவனால்.

இப்படியெல்லாம் ஏற்கனவே இம்சையில் சிக்கிக் கொண்டிருக்கிற நிலையில்தான் கஸ்தூரியின் கண்ணில் பட்டு விட்டான்!

அன்று அந்த சினிமாவில் இருந்து மணிமாறன் கால்வாசி படத்திலேயே எழுந்து வந்துவிட்டான் என்று சொன்னால் நிறையப்பேர் நம்பக்கூட மாட்டார்கள்! படம் முடிந்து வெளியேறும்போது மறுபடியும் கஸ்தூரியின் கண்களில் பட்டு வைக்க அவன் தயார் இல்லை!

இத்தனைக்கும் கஸ்தூரியின் பார்வையில் படாமல் அவளைப் பார்ப்பதற்கு என்னமோ ஆசைதான் மணிமாறனுக்கு! ஆனால் அந்த ஆசையை நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை அவனால்...

இந்தச் சம்பவம் மணிமாறனின் மனதை மிகவும் பாதித்துவிட்டது. கஸ்தூரிக்குக் கிடைத்துவிட்ட வாழ்க்கை தனக்குக் கிடைக்க முடியாதென்று சாதித்து விட்டதேயென்று மனம் புழுங்கினான். தனக்குக் கிடைத்திருக்கும் வாழ்க்கையின் மேல் ஆவேசப்பட்டான். கிடைக்காத வாழ்க்கையின் மேல் வன்மப்பட்டான்... ஆவேசத்தையும் வன்மத்தையும் தணித்துக் கொள்ள வழக்கம்போல மணிமாறன் அக்கம்மா வீட்டுப் பக்கம் போகத்தான் தயாரானான். - ஆனால் சிறிது யோசித்து விட்டு களத்தை புத்தம் புதிய சூழலுக்கு மாற்ற முடிவு செய்தான். அதைச் செயல்படுத்துகிற காரியத்திலும் உடனடியாக இறங்கிவிட்டான்.

சில வருடங்களுக்கு ஒரு முறை சுற்றுலா போய் வருவதற்கான போக்குவரத்துச் செலவுகளை மணிமாறன் பணிபுரிகிற வங்கி அதன் ஊழியர்களுக்குத் தருவதை ஒரு வழக்கமாக வைத்திருக்கிறது.

அதை உபயோகித்து ஹைதராபாத் போய்விட்டு வரலாம் என முடிவு செய்தான் அவன். ஆனால் தனியாக இல்லை; ஒரு அக்கம்மா வீட்டுத் தோழியுடன்! மணிமாறனின் போக்குவரத்துச் செலவுகளை அவனுடைய வங்கி ஏற்க, தோழியின் போக்குவரத்துச் செலவுகளை மணிமாறன் ஏற்பான்! அவனுக்கே இப்போது கல்யாணமாகி இருந்தால் கூட மனைவியுடன் போவதாகச் சொல்லிவிட்டுத் தோழியுடன் ஹைதராபாத்துக்கு என்ன கல்கத்தாவுக்கே ரயில் ஏறலாம்! தெரியப்போவது கிடையாது வங்கி நிர்வாகத்துக்கு!

இப்போது அதைச் செய்ய முடியாது மணிமாறன்! இன்னும் அவனுக்குக் கல்யாணம் ஆகவில்லை என்பது உலகப் பிரசித்தமான விஷயம்!

எனவே திட்டமிட்டுக்கொண்டபடி மணிமாறன் தோழியின் போக்குவரத்துச் செலவை அவனே ஏற்றுக் கொண்டு அவளுடன் ஹைதராபாத் கிளம்பிவிட்டான். அந்தத் தோழியின் பெயர் - ராமலஷ்மி. ஊர் ராஜமுந்திரி! அக்கம்மா வீட்டைப் பொறுத்தவரை ராமலஷ்மி புத்தம் புதிய வரவு! அதனால் அவளுக்கான தொகை மிக அதிகம்! தொகை முழுவதையுமே மணிமாறன் மொத்த முன்பணமாக அக்கம்மாவின் கைகளில் நூறு ஐம்பது ரூபாய் நோட்டுக் கட்டு ஒன்றாக (பின் நீக்கப்படாத புத்தம் புதிய சலவை நோட்டுக் கட்டு!) திணித்துவிட்டு அந்த ராமலஷ்மியுடன் ஹைதராபாத் கிளம்பிவிட்டான்.

மணிமாறன் ரயில் ஏறிய நேரம் மோசமான எமகண்டமாக, அஷ்டமி திதியாக, சந்திராஷ்டமாக இருந்திருக்க வேண்டும்! இல்லாவிட்டால் அந்த மாதிரியெல்லாம் நடப்பதற்கு வாய்ப்பே இல்லை! பாதிப் பயணத்திலேயே அவனுக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டு உயிரை வாங்கி எடுத்துவிட்டது! வாழ்க்கையில் முதல் முதலாக ஒரு பெண்ணுடன் அவன் செல்கிற ரயில் பயணம் அது! அந்த



முதல் சுகத்தை அனுபவிக்க விட மாட்டேன் என்றார் கடவுள்! டாய்லெட்டுக்கு எழுந்து போய் போய் போதும்டா சாமி என்றிருந்தது மணிமாறனுக்கு. ராமலஷ்மிக்கோ சிரிப்பு சிரிப்பாக வந்தது! அவளுக்கு என்ன போயிற்று... வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ரயில் நின்ற ஒவ்வொரு ஸ்டேஷனிலும் இறங்கிப் போய் வயிற்றுப் போக்கை நிறுத்த ஏதாவது மாத்திரை கிடைக்குமாவென்று பார்த்துவிட்டு வெறுங்கையோடு திரும்பி வந்து கொண்டிருந்த மணிமாறனுக்கு விஷயம் கடைசியில் வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்த கதை மாதிரி ஆகிவிட்டது! ரயிலில் அவன் இருந்த பெட்டியின் வேறொரு பகுதியிலேயே முன் ஜாக்கிரதை மாமா ஒருத்தர் ஒன்றுக்குப் பத்தாக வயிற்றுப் போக்கை நிறுத்த - லோமோட்டில், இமோடியம் போன்ற மாத்திரைகளைக் கையிருப்பில் வைத்திருந்தார்! லோமோட்டில் சின்னப் பசங் களுக்கு! இமோடியம் - அவரைப் போலப் பெரியவர்களுக்கு!

அவரிடம் இருந்து இமோடியம் மாத்திரை ஒன்றை வாங்கி விழுங்கி வைத்த பிறகுதான் மணிமாறனுக்குப் பேச்சே வந்தது! ஆனால் இதிலும் ஓர் எதிர்பார்க்காத சங்கடம். உட்கார்ந்து அந்த ராமலஷ்மியிடம் சகஜமாகப் பேசிக் கொள்ளவும் முடியவில்லை. அவள் சுத்த ராஜமுந்திரியின் தெலுங்குப் பெண். தமிழ் ரொம்பக் கொஞ்சமாக கொச்சை யாகத்தான் பேச வந்தது அவளுக்கு! மணிமாறனுக்கோ தெலுங்கு சுத்தம்! ஹைதராபாத் போகிறோமே - தெலுங் குக்கார பெண்ணாக இருக்கட்டும் என்று பார்த்தான். அது பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கு பிடித்த இப்படியொரு கதையாகிவிட்டது!

குரங்கோடு ஹைதராபாத் போய்ச் சேர்ந்தானோ இல்லையோ - அவனுக்கு ஒரு ஜுரம் வந்து விட்டது. ஜுரம்

அடித்த வேகத்தில் கண்ணைக்கூடத் திறக்க முடியவில்லை அவனால்.

தங்கப்போன ஹோட்டலில் விசாரித்து முதல் காரியமாக மணிமாறன் அருகில் இருந்த டாக்டரிடம் ஓடினான். நினைவு தெரிந்து இப்படியெல்லாம் அவனுக்கு ஜுரமோ வயிற்றுப் போக்கோ வந்தது கிடையாது. ரொம்பப் புதுசாக இருந்தது மணிமாறனுக்கு இதெல்லாம். படு எரிச்சலாகவும் இருந்தது. குஷாலாக இருந்துவிட்டுப் போகலாம் என்று ஆயிரம் ஆயிரமாய் செலவழித்து வந்திருக்கும் இடத்தில் இப்படி ஒன்று மாற்றி ஒன்றாய் உயிரை வாங்குகிறதேயென்று ரொம்ப ஆத்திரப்பட்டான்.

டாக்டர் மணிமாறனுக்கு தெர்மாமீட்டரை வைத்துப் பார்த்தபோது ஜுரம் ரொம்ப அதிகமாகத்தான் இருந்தது. இருந்தாலும்கூட எடுத்த எடுப்பிலேயே எந்த நோயாளிக்கும் அந்த டாக்டர் 'ஜெண்ட்டாமைசின்' ஊசி போடமாட்டார். ஆனால் மணிமாறனுக்கு 'ஹெவிடோஸ்' ஆன அந்த ஊசியைத் தான் போட்டுவிட்டார். பாவம்; இளம் மனைவியுடன் தேன் நிலவு வந்திருக்கிறான்! (மணிமாறன் டாக்டரிடம் அளந்து விட்டிருந்த கதை இது!) ஜெண்ட்டாமைசின் ஊசியைப் போட்டு உடனே அவனின் ஜுரத்தை நார்மலுக்குக் கொண்டு வந்துவிடலாமே... மாத்திரைகளாகக் கொடுத்துக் கொண் டிருந்தால் ஜுரம் நார்மல் ஆக இரண்டு நாட்கள் ஆகிவிடலாம்.

டாக்டர் செய்த காரியம் சரிதான். ஊசி போட்ட இரண்டு மணி நேரத்தில் இருந்து ஜுரம் வேகமாகக் குறைய ஆரம்பித்துவிட்டது. மத்தியானத்திற்கு மேல் நன்றாக வியர்த்து ஜுரம் சுத்தமாக இல்லாமல் போய்விட்டது! மணிமாறனுக்கு அப்போதுதான் மூச்சு வந்தது. - ஆனால் இதெல்லாம் விட்ட குறை தொட்ட குறை என்கிற கதையாகி விட்டது.



சென்னை திரும்பிய பிறகும் அவ்வப்போது மணி மாறனுக்கு ஜுரம் வருவதும், வயிற்றுப் போக்கு ஏற்படுவதும் ஒரு தொடர்கதை என்பது போலத்தான் ஆகிவிட்டது. இதில் நொந்து போனான் மணிமாறன். யாருக்காவது ஏதாவது ஜுரம் வந்துவிட்டால் அவர்களைப் பார்க்கவே பிடிக்காது அவனுக்கு! பக்கத்தில் போனால் தனக்கும் ஒட்டிக்கொள்ளுமோ என்கிற பயத்தில் ஜுரக்காரர்களின் பக்கத்திலேயே போக மாட்டான்! இப்போது அவனுக்கே திருப்பித் திருப்பி ஜுரம்! இதில் அவனின் வலிமையான ஆண் உடம்பேகூட கொஞ்சம் துவண்டு தளர்ந்து போய் விட்டிருந்தது. அவனும் எப்போதும் போல நன்றாகத்தான் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். ஆனால் என்னவோ மணிமாறனின் உடல் எடை குறைந்துகொண்டே வந்தது. - இங்கேதான் மணிமாறன் தப்புப் பண்ணிவிட்டான்.

ஒவ்வொரு சமயம் ஜுரம் வரும்போதோ அல்லது வயிற்றுப்போக்கு ஏற்படுகிறபோதோ அவன் ஒரே டாக்டரிடமே போய் அவனுடைய உடம்பைக் காட்டியிருக்க வேண்டும். புத்தி! நூறு இடம் போய் போய் வந்திருக்கிற அதே புத்தியைத் தான் டாக்டரிடமும் காட்டினான் அவன்! ஒவ்வொரு நேரத்தில் ஒவ்வொரு டாக்டர்! ஒரு மாதம் வராமல் இருந்த ஜுரம் திருப்பியும் வரும்போது சென்ற முறை பார்த்த டாக்டர் சரியாக தனக்கு சிகிச்சை அளிக்கவில்லையென்று மணிமாறன் தப்பாக நினைத்துக்கொண்டதுதான் அதற்குக் காரணம்...

ஆனால் எத்தனை டாக்டர் மாற்றியும் அடிக்கடி மணிமாறனின் உடம்பிற்கு ஏற்பட்டுக்கொண்டிருந்த நோய் எதுவும் முழுக்கவும் குணமடையாமல் அவனைப் போட்டு அலைக்கழித்து ஆயாசப்படுத்திக்கொண்டிருந்தது.

கல்யாணமாகி பெண்டாட்டி இருந்தாலும் சாப்பாடு வீட்டிற்குள்ளேயே கிடைத்துவிடும்! வேளா வேளைக்கு அதையாவது சாப்பிட்டு விட்டு வீட்டிலேயே விழுந்து

கிடக்கலாம்! இப்போது அதற்கும் வழி கிடையாது. என்ன ஜுரம் அடித்தாலும் மணிமாறன்தான் எழுந்து சட்டையை மாட்டிக்கொண்டு கொஞ்சம் தலையையும் வாரிவிட்டுக் கொண்டு ஹோட்டலை நோக்கிப் போகவேண்டும்! -

மணிமாறன் ரொம்ப ரொம்ப பொறுமையை இழந்து கொண்டிருந்தான்! இப்படிப் போட்டு அவனை வதைத்துக் கொண்டிருந்தால் அவனுடைய உடம்பையே மணிமாறன் தீ வைத்துக் கொளுத்தினாலும் கொளுத்தி விடுவான்!

ஆனால் அவனின் மிரட்டலுக்கெல்லாம் மணிமாறனின் உடம்பு பயந்து சரியாகிவிடவில்லை! ஒருநாள் அவனே பயந்து நடுங்கும்படி தொடர்ந்து பேய் இருமல் இரும ஆரம்பித்துவிட்டது! இருமலோடு நிற்காமல் மணிமாறன் காறித் துப்பிய சளியில் நிறைய ரத்தத்தைக் கலந்தும் அவனின் உடம்பு வெளியேற்றியது. மிரண்டுபோன மணிமாறன் ஏற்கனவே போயிருக்கும் பழைய டாக்டரிடம் ஓடினான். அந்த டாக்டர்தான் அவனுடைய உடல்நிலையைப் பார்த்து கொஞ்சம் இல்லை; ரொம்பவே சந்தேகப்பட்டார். மணி மாறனின் துரதிர்ஷ்டம் - டாக்டரின் சந்தேகம் நிஜமாகி விட்டது. எல்லாவிதமான மருத்துவ சோதனைகளுக்கும் உட்படுத்திக்கொண்ட மணிமாறனின் ஆண்மை மிகுந்த ரத்தத்தில் மனித இனத்தையே இன்று அரித்து அழித்துக் கொண்டிருக்கும் உயிர்கொல்லி நோயின் கிருமிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதைத் தெரிந்த நிமிஷத்தில் மணி மாறன் உடைந்து சிதறிப் போனான் சிதறி.

நிஜம் நெஞ்சில் உறைக்க உறைக்க அவனின் மொத்த ஆண்மையின் அகம்பாவமும் திரண்டு பொங்கியது. எவள்? எவள்? எந்தத் தேவடியா மகள் அவனின் ரத்தத்தில் இந்தக் கொடிய கிருமிகளைத் தானம் செய்தாள்? மணிமாறனின் அறிவால் அதைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. வெறியுடன்



ஒவ்வொருத்தியாய் நினைத்துப் பார்த்தான். எவள் என்று அவனால் தீர்மானிக்கவே முடியவில்லை.

பாவம் மணிமாறன்! பாதுகாப்பான, மிகவும் விலை உயர்வான இடங்களுக்குத்தான் பார்த்துப் பார்த்துப் போனான்! அப்படிப் போயும் நோய் அவனைப் பிடித்துக்கொண்டு விட்டது. என்ன செய்வான் மணிமாறன்; என்ன செய்வான்... பொங்கிப் பொங்கி வெடித்தான். அவனுக்குத் தெரிந்த அத்தனை விலைமகள்களையும் ஆங்காரத்துடன் சபித்தான்! சரேலென ஒரு நிமிடம் கஸ்தூரியை நினைத்துப் பார்த்தான். இந்த நோயை அவனுக்குக் கொடுத்தது கஸ்தூரியாகவே இருக்குமானால்? மணிமாறன் மானசிகமாக நரசிம்ம அவதாரம் எடுத்தான்! மடியில் அள்ளிப்போட்டு தேவடியா மகள் கஸ்தூரியை நார் நாராகக் கிழித்தான்! அந்த ஆங்கார வெறி நிலையிலும் மின்னல்போல ஓர் இன்பம் மணிமாறனின் நெஞ்சில் மின்னியது.

நோயை ஈந்தவள் கஸ்தூரியாகவே இருக்கும்பட்சத்தில் இப்போது அவளும்தானே இதே நோயால் வெளிப்படையாகப் பாதிக்கப்பட்டிருப்பாள்...! அந்த வேதனையிலும் அந்த நினைப்பே மணிமாறனுக்கு ஒரு சாதனையாய் இருந்தது! அவனுடைய உயிரோடு விளையாடி விட்டவளும் உயிரோடு போராடிக்கொண்டிருப்பாள் என்பது சற்று ஆறுதலையும் தந்தது!

ஆனால் இந்த அற்ப ஆறுதல் எல்லாம் கறிக்கு உதவாத ஏட்டுச்சுரைக்காய்க்குத்தான் சமானம்! எவள் நோயாளியாக இருந்தால் என்ன? இல்லாவிட்டால்தான் என்ன? மணி மாறன் நோயாளியாகிவிட்டான்! அவன் பிழைக்கமாட்டான்! - எந்தப் பாடுபட்டாலும்...! இந்த உண்மை கூரிய வாளாக அவனுடைய நெஞ்சை அறுத்து எறிந்து கொண்டிருந்தது. அவனின் உடம்பு பூராவையுமே பெரும் அச்சம் இறுக்கமாகக்

கவிந்திருந்தது. இந்தக் கனமான அச்சத்தில் மணிமாறனுடைய அகம்பாவம் எல்லாம் நசுங்கிப் போய்விட்டன. அவனுள் எப்போதுமே தலைதூக்கி நிற்குமே ஓர் ஆண்மை - அந்த ஆண்மையெல்லாம் இருந்த சுவடு தெரியவில்லை!

ஒரு காலத்தில் விலைமகள்களின் வீடுகளுக்கு நண்பர்களை அவனுடைய செலவில் அழைத்துப் போவதை ஓர் தீரச் செயலாகவே நினைத்து இறுமாந்திருக்கும் அதே மணிமாறன் நோயின் அச்சத்தில் அலறி அலறி கண்ணீர் வடிக்கிறான் இன்று. அவனை ஏன் என்று கேட்க ஆள் இல்லாமல், அவனுக்கு இரக்கம் காட்ட நாதியில்லாமல் தனியாகக் கிடந்து தவிக்கிறான்.

ஒரு கட்டத்திற்குமேல் வங்கிப் பணிக்கும் போக முடியவில்லை. நாளாக நாளாக மணிமாறனால் நோயின் வெளிப்படையான தாக்கத்தோடு மற்ற ஆரோக்கியமான மனிதர்களின் மத்தியில் நிற்கக்கூட முடியவில்லை. மனிதர்களும் அவனைப் பார்த்தாலே பயந்து விலகிக் கொள்ளத்தான் தயாராக இருந்தார்கள். - ஒரே இந்த நோயில் மணிமாறனின் மொத்த வாழ்க்கையும் தொலைந்துபோய் விட்டது. வேறு புகலிடமே இல்லாமல் அவனும் இந்த உயிர்க் கொல்லி நோய்க்கு ஆளானவர்களுக்கு சிகிச்சை தந்து, பராமரிக்கிற மருத்துவமனையின் நோயாளிகளோடு நோயாளியாக அனுமதிக்கப்பட்டுவிட்டான்.

ஒற்றைக் கட்டிலின் மேல் எதிர்காலம் தெரியாத உடம்பாய் மன அனாதையாய்க் கிடந்தான். தேதியும் நாளும் தெரியாமல் அவனுடைய நாட்களைக்கூட எண்ண இயலாமல் மருத்துவமனையிலேயே கிடந்தான். நாசப்பட்டுப் போன நகராத வாழ்வை நினைத்து நினைத்து புத்தி புழுங்கிப் போயிருந்த அந்த மருத்துவமனை வாழ்க்கையிலும் மணிமாறனுக்கு ஒரு தீபாவளி நாள் வந்தது! தீபாவளி நாள் இனிப்பு

ந்தது. தீபாவளி நாள் பட்சணம் வந்தது. எல்லாவற்றுக்கும் மலாக முனையில் மஞ்சள் தடவிய புது நான்கு முழ பாவளி வேட்டி ஒன்றும் எல்லோருக்கும்போல அவனுக்கும் கிடைத்தது.

பெட்டி பெட்டியாக இப்படி நிறைய எடுத்து மருத்துவமனையில் உயிர்க் கொல்லி நோய்க்கு உள்ளான ஒவ்வொரு நோயாளிக்கும் கருணையோடு கொடுத்து, அன்புடன் ஆறுதலும் சொல்லி மனிதநேயத்தோடு எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்ட அந்த நபர் யாரென்று நினைக்கிறீர்கள்? சிந்தாதிரிப்பேட்டை கஸ்தூரிதான்! வேறு யாருமில்லை!

கணவரோடும் குழந்தையோடும் வந்திருந்த கஸ்தூரிக்கு நோயின் கோரப் பிடியில் சிக்கி உருக்குலைந்து போயிருந்த மணிமாறனைச் சிறிதுகூட அடையாளம் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் உடல் வற்றி, உயிர் குன்றிப்போய்க் கிடந்த அந்த ஈனப்பிரக்ஞை நிலையிலும் மணிமாறனுக்குக் கஸ்தூரியைத் தெரிந்துவிட்டது.

முன்பு ஒரு சமயம் சினிமா தியேட்டரில் எதிர்பாராமல் இதே கஸ்தூரியைப் பார்க்க நேரிட்டபோது மணிமாறனுக்குள் ஏற்பட்ட வெட்கக்கேடான கூச்சமும், தாழ்வுமனப் பான்மையின் அவமான உணர்வும் இப்போதும் அவனுள் எழுந்தன. ஆனால் அதைவிட மிகப் பலமடங்கு அதிகமாக! ஒரு வித்தியாசம் - தியேட்டரில் கஸ்தூரி மணிமாறனைப் பார்த்துவிட்டாள். இங்கே பார்த்தும் அடையாளம் தெரியாமல் நகர்ந்துவிட்டாள். மணிமாறனுக்கு இது சிறிய சந்தோஷத்தைத் தந்தது என்று சொல்லலாம்!

இச்சிறிய சந்தோஷம்தான் மணிமாறனுக்கு இந்த ஜென்மத்தில் கிடைத்த கடைசி சந்தோஷம்! அதே நேரம்

அவன் கற்பனை செய்து பார்த்த மாதிரி - அவனுக்கு வந்திருக்கும் இந்த உயிர்க் கொல்லி நோய் கஸ்தூரியிடம் இருந்து வந்திருக்கவில்லை!

ஏனென்றால் கஸ்தூரி பயங்கரமான ஆரோக்கியத்தில் இருக்கிறாள்! பார்த்த நிமிஷமே தெரிந்த இந்த உண்மை மணி மாறனுக்குப் பெரிய ஏமாற்றத்தையும்தான் தந்தது! இந்த ஏமாற்றம் அவனுடைய வாழ்க்கையின் கடைசி ஏமாற்றம் என்பதைச் சொல்லவேண்டியதில்லை...!

★

37451
5454657
கொளத்தூர், சென்னை - 99.